ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு

தமிழ் சிங்கள

# இலக்கிய உறவு

දෙමළ සිංහල සාහිත්‍ය සම්බන්ධතාව

Tamil Sinhala Literary Relationship & Interaction




தமிழ்மணி புலவர் த. கனகரத்தினம் (பீ.ஏ.)இலண்டன் கல்வி டிப்புளோமா

ටී. කනකරත්නම් (බී.ඒ.)ලන්ඩන්

T. KANAGARATNAM (B.A. LONDON)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு

# தமிழ் - சிங்கள இலக்கிய உறவு

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY

495441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு

# தமிழ் – சிங்கள இலக்கிய உறவு

# දෙමළ – සිංහල සාහිත්‍ය සම්බන්ධතාව

'தமிழ்மணி' புலவர்
மயிலங்கூடல் த. கனகரத்தினம் பி. ஏ. (இலண்டன்) கல்வி டிப்ளோமா
(முன்னாள் தமிழ்ப் பாடநூற் பகுதித் தலைவர்,
பதிப்பாசிரியர், இந்நாள் ஆலோசகர், விரிவுரையாளர்
துணைச் செயலர் – கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

வெளியீடு
சாந்தி நிகேதன்
&
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

495441

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு - 1996

Copy Right Reserved

அச்சுப் பதிப்பு:

யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்.
48B, புளூமெண்டால் வீதி,
கொழும்பு 13.

அட்டை வடிவமைப்பு: 'சுதா' ஏ. யேசுதாசன்

ISBN - 955-96153-1-9

விலை: ரூ 130/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

திருவாட்டி இராணி பொன்னையா

தோற்றம் 12.04.1930 மறைவு 13.09.96

செங்கதிர் உதயம் செய்யச் சேயோனும்
சேந்தனும் மொட்டென அரும்பப்

பங்கய மெனவே மலர்ந்த வாழ்வும்
பாங்குடன் நிறைந்து மகிழ

எங்கள் இன்முகம் காணா தேங்கி
இனிய சமாதா னநன்னாள்

இங்கு உதிக்க நோற்றவென் தங்கை
இராணிக்கே சமர்ப்பணம் இந்நூல்

*ஆசிரியர்*

UNIVERSITY OF PERADENIYA 3-7-1998 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIV... 3-7-1998 LIBRARY

# முன்னுரை

இலங்கை நாட்டின் உத்தியோக மொழிகளாகிய தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள இலக்கியங்களிலே பல ஒருமைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவ்வாறே மொழி, கலாசாரம், சமயம், வரலாறு, சமூகவியல் ஆகியனவற்றிடையேயும் தொடர்புகளையும் ஒற்றுமைகளையும் காண்டல்கூடும். இவற்றிற்கெல்லாம் தமிழ்-சிங்கள மொழிகளிடையே நிலவிவரும் நீண்டகாலப் பாரம்பரிய தொடர்பும் வரலாற்று, கலாசாரத் தொடர்புகளுமே காரணங்களாகும்.

தமிழ்மொழி இனிமையானது; பழைமையானது; 2000 வருடங்களுக்கு மேற்பட்ட சங்ககாலப் பெருமையுடையது; இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது. இவ்வாறாய வளம்பொருந்திய இலக்கியங்களின் செல்வாக்கு, சிங்கள மொழியிலும் செறிந்திருப்பதைக் காணலாம்.

சிங்கள இலக்கியங்களின் பொற்காலம் 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டையடுத்த (கோட்டே இராசதானிக்காலம்) கோட்டைக் காலமாகும். அக்காலத்தில் தமிழும் சிங்கள மன்னர்களாலே போற்றப்பட்ட வரலாற்றை நாம் காண்கிறோம். தமிழும் சிங்கள இலக்கியங்களை வளஞ்செய்து நின்றது.

அன்றியும், பண்டைக்காலச் சிங்கள மன்னர்களும், சிங்களப் புலவர்களும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். தமிழையும் போற்றி ஆதரித்தனர். சிங்கள பிரிவேனாக்களிலே தமிழும் ஒரு பாடமாகப் போதிக்கப்பட்டு வந்தது. சிங்கள மன்னர்கள் தமிழ்க் கன்னிகைகளை மணந்தமுறையில் இனத்தொடர்பும் இருந்து வந்தது. அவர்கள் இந்து சமயத் தெய்வங்களையும் தம் வழிபடு தெய்வங்களாகக் கொண்டனர்; அவைகளுக்குக் கோவில்களும் சமைத்தனர். புதுவருடக் கொண்டாட்டம், பெரஹரா விழாக் கொண்டாட்டம் போன்றவற்றிலும் மாதா, பிதா, குரு வணக்கம் ஆகியவற்றிலும் தமிழ், சிங்களவரிடையே பல கலாசார ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

தமிழிலுள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை, இராமாயணம் போன்ற காப்பிய நூல்கள் திருக்குறள், வாக்குண்டாம், நல்வழி, நீதிவெண்பா போன்ற நீதிநூல்கள் வீரசோழியம் போன்ற இலக்கண நூல்கள், சிங்களத்திலுள்ள காவியசேகர, கவிசிலுமின, குத்தில காவியம், குசஜாதக போன்ற காவியங்கள், செலலிஹினி சந்தேச, கோகில சந்தேச, பறவி சந்தேச, கிரா சந்தேச போன்ற காவியங்கள் சுபாஷித, உலோகோபகாரய போன்ற நீதிநூல்கள் சிதத் சங்கரா போன்ற இலக்கண நூல்கள் பாளி மொழியிலுள்ள தம்மபதம், வடமொழியிலுள்ள மேகதூதம், வால்மீகி இராமாயணம் என்பனவற்றிடையேயுள்ள ஒருமைப்பாடுகள் ஓர் ஒப்பீட்டு இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-7-1992
LIBRARY

ஆய்வாக இக்கட்டுரைகள் வாயிலாகச் சான்றுகளுடன் ஆராயப்பட்டுள்ளன.

இலங்கை நாட்டில் வாழும் தமிழ்-சிங்கள மக்களின் ஒற்றுமைக்கும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் இலக்கியம் சிறந்த பாலமாக அமைகிறது. நாட்டின் சமாதானத்திற்கும் சுபிட்சத்திற்கும் இது வழிகோலும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும்.

இப்பெரும் இலட்சிய நோக்குடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இலக்கியங்களிற் காணப்படும் ஒருமைப்பாடுகளை விளக்கும் நிகழ்ச்சியாக 'சங்கமம்' என்ற பெயரில் ஒரு வருடகாலமாக (1987-1988) தொடர் பேச்சுக்களாக நிகழ்த்தி வந்தேன். இப்பேச்சுக்களுக்கு நாடளாவிய வகையில் நல்ல வரவேற்பும் பாராட்டும் கிடைத்தன. அதனைத் தொடர்ந்து இவற்றைக் கட்டுரைகளாக்கி நூலுருவில் வெளியிட விரும்பினோம். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளராகவிருந்த திரு. வி. ஏ. திருஞானசுந்தரம், கொழும்புத் தமிழ்ச்சங்கத்தினர் மற்றும் ஆராய்ச்சியிலீடுபட்டுள்ள அறிஞர்கள் அனைவரும் இவ்விடயத்தில் அதிக அக்கறைகாட்டி ஊக்கமளித்தனர்.

வானொலிப் பேச்சுக்களைக் கட்டுரைகளாக்கி நூலுருவிலே தமிழ், சிங்கள மொழிகளில் வெளியிடுவதற்குரிய அனுமதியையும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் மகிழ்ச்சியுடன் அளித்தனர்.

இந்நாட்டின் சமய, கலாசார ஒற்றுமைக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் சமாதானத்திற்கும் பணியாற்றிவரும் இந்து சமய, கலாசார, தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு இவைபோன்ற நூல்களைத் தெரிந்தெடுத்து வெளியிடுவதில் மிக ஆர்வங்கொண்டிருந்தது. இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களும், பணிப்பாளர், (அந்நாள்) செயலாளர் எஸ். ஸி. மாணிக்கவாசகர் அவர்கள், பணிப்பாளர் க. சண்முகலிங்கம் அவர்கள், உதவிப் பணிப்பாளர் எம். நஹியா ஆகியோர் இந்நூலை அமைச்சின் வெளியீடாக வெளியிட முயற்சி எடுத்தனர். எனினும், நிதிக் குறைவால் இந்நூல் அமைச்சின் வெளியீடாக வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. பின்னர், பணிப்பாளர் க. சண்முகலிங்கம் அவர்களின் ஆலோசனைப்படி அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் நூல் வெளியீட்டுப்பகுதியை நாடினோம்.

நூலுக்குரிய கட்டுரைகள் அடங்கிய தட்டெழுத்துப் பிரதியை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன மதிப்பீட்டுச் சபைக்குச் சமர்ப்பித்தோம். அதனை நன்கு ஆய்ந்து, நலன்கண்டு தெரிவு செய்த மதிப்பீட்டுச்சபை நூலினை விதந்துரைத்தது. இவ்விதந்துரையின்பேரில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் எமது 31 ஆய்வுக் கட்டுரைகளையும் தமிழ் சிங்கள இலக்கிய உறவு என்ற பெயரில் தமது வெளியீடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட முன்வந்தது. எனினும், நூல் வெளிவரும் நிலையில் புதிதாக வந்த ஆலோசனைச் சபையினர் ஆய்விலுள்ள உண்மைத் தகவல்களை மாற்றவேண்டுமென விரும்பினர். "சிங்கள சுபாஷித ஆசிரியர் ஔவையாரின் மூதுரை, நல்வழி நூல்களைப் படித்து அவற்றின் கருத்தைச் சிங்கள மொழியில் கவிசெய்துள்ளார்" போன்ற ஒப்பீட்டு ஆய்வுக் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சிங்கள அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளும் இக்கருத்தை ஆய்வு நூலாக்கத்தில் மாற்ற வேண்டுமென்று அவர்கள் விரும்புவது எவ்வாறு பொருந்தும்? எனவேதான் கற்றறிந்த உலகின் முன் எமது ஆய்வை எழுத்துவடிவிலும் முன்வைக்கும் நோக்கோடு இந்நூல் வெளியிடப்பெறுகிறது.

குணம் நாடிக் குற்றமும் நாடி, மிகை நாடி மிக்க கொள்க.

இந் நூலாக்கத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை அவ்வப்போது வழங்கிய அன்பர் டி. பேமதாஸ பி. ஏ. (இளைப்பாறிய ஆராய்ச்சி உத்தியோகத்தர்) அவர்களுக்கு எமது நன்றி. வானொலிப் பேச்சுக்களைக் கட்டுரைகளாகத் தொகுப்பதற்கும் திருத்தமாக வெளியிடவும் உடனிருந்து உதவியளித்த பாரியார் திலகவதி கனகரத்தினம் அவர்களுக்கும் வாசகநேயர்களின் பாராட்டுக்கள் உரியனவாகுக.

நூலுக்குரிய வண்ண அட்டைப்படத்தை அழகுறத் தீற்றி உதவிய அன்பர் திரு. ஏ. யேசுதாசன் - 'சுதா' அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி. நூலினை நவீன இயந்திரசாதனங்களுடன் அழகாக அச்சிட்டு வெளியிட உதவிய அனைவருக்கும் எமது நன்றி.

இந்நூல் தமிழ், சிங்கள மொழியறிந்த அனைவரதும் வரவேற்பைப் பெறுமென எதிர்பார்க்கின்றோம். அதற்கிசையத் தமிழிலும் சிங்களத்திலும் பாடல்கள், விளக்கங்கள் அச்சிடப்பெற்றுள்ளன. நாட்டின் இனஒற்றுமை, சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கும் தமிழ் சிங்கள மொழி இலக்கிய ஆய்வினை விரிவாக மேற்கொள்வதற்கும் இத்தகைய நூல்கள் நீண்டகாலம் நின்று பயன்தருவனவாக; எமது குருவாகிய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்த்துவது போன்று இவை ஆன்மநேய ஒருமையைச் சுரந்து நிலைத்து வாழ்வனவாகுக.

**த. கனகரத்தினம்**

**10A, 42ஆம் லேன்**
**'சாந்திநிகேதன்'**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு 06.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை

பக்கம்

**I இலக்கிய சங்கமம்**

1. நீதி இலக்கியங்கள் I 03
2. நீதி இலக்கியங்கள் II 08
3. நீதி இலக்கியங்கள் – பொதுமை 13

**II சமய கலாசாரப் பண்புகள்**

4. சமய கலாசார ஒற்றுமை I 19
5. சமய கலாசார ஒற்றுமை II 24
6. சமய ஆர்வம் 28
7. திருமால் வழிபாடு 32
8. மஹசென் – கதிர்காமக்கந்தன் 37
9. வழிபடு தெய்வங்கள் – நாத தெய்வம் 41

**III வரலாற்றுக் கண்ணோட்டம்**

10. வரலாற்றுக் கண்ணோட்டம் I 49
11. வரலாற்றுக் கண்ணோட்டம் II 54
12. மன்னர் வரலாறு 59

**IV கவிதைப் பண்புகள்**

13. இயற்கை வர்ணனை I 65
14. இயற்கை வர்ணனை II 70
15. உவமை அணி – உருவக அணி 74
16. அணி – தற்குறிப்பேற்ற அணி 79
17. உருவகம் – கம்பரும் இராகுலரும் 83
18. கவிஞனின் உணர்ச்சிப் பெருக்கு 88
19. சிருங்காரரசம் 93
20. மாலைக்கால வர்ணனை 98
21. இலக்கியப் புலவர்களும் அவையடக்கமும் 103
22. அவையடக்கமும் கவிமரபும் 107

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V சிறந்த காவியங்கள், இலக்கியங்கள்
23. தூது காவியங்கள் 113
24. மணிமேகலை 118
25. சிலப்பதிகாரமும் பத்தினி வழிபாடும் 123
26. குத்தில காவியம் (குத்தில காவ்ய) 128
27. தம்மபதமும் திருக்குறளும் 133
28. இலக்கண நூல்கள் 139
29. தமிழ், சிங்களப் பொதுச் சொற்கள் – வைத்திய நூல்கள், ஜாதகக் கதைகள் 144
30. கதை ஊற்றுக்கள் 149

VI மொழிபெயர்ப்பு நூல்கள்
31. தமிழ், சிங்கள இலக்கியப் பரிவர்த்தனை 155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

# இலக்கிய சங்கமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி இலக்கியங்கள் I

நாட்டில் உணவுப் பயிர்களை ஊட்டி வளர்ப்பவை வளமான ஆறுகள். அவை உயிர் வாழ்வனவற்றிற்கு உண்ணக் குடிக்க நீர் வழங்குவனவாகவும் பயன்படுகின்றன. வளமாகப் பொங்கிப் பாய்ந்து வரும் ஆறுகள் கடலுடன் கலப்பதைச் சங்கமம் என்போம். இச்சங்கமம் புனிதமான புண்ணிய இடமாகப் போற்றப்படுகிறது. இச்சங்கமத்தில் ஆழ்ந்து சுழியோடுமிடத்துப் பொன்னும் மணியும் முத்தும் சங்கும் வேறு கடல்படு திரவியங்களும் கிடைக்கின்றன. எனவே, செழிப்பிற்கும் சிறப்பிற்கும் இச்சங்கமம் இடனாக விளங்குகின்றது. பல்வேறு மொழி இலக்கியங்களை ஆறுகளுக்கும் அறிவினைக் கடலுக்கும் உவமித்தால் இவ்விலக்கியங்கள் கலக்குமிடத்தை இலக்கியச் சங்கமம் எனக் கொள்ளலாம் அல்லவா? தமிழ்மொழி இலக்கியங்கள் சிங்கள மொழி இலக்கியங்கள், வடமொழி இலக்கியங்கள், பாளிமொழி இலக்கியங்கள் போன்ற பல்வேறு மொழி இலக்கியங்கள் கலப்பதால் எவ்வாறு அறிவுவளம் பெறுகின்றது. சிந்தனைகள் சீர்பெறுகின்றன; பண்பாடுகள் பரிணமிக்கின்றன; சாதி, சமயப் பூசல்கள் மறைந்து மெய்ஞ்ஞானம் மேம்படுகிறது; வேற்றுமையிலும் ஒற்றுமை மிளிர்கிறது. இனிய இலக்கிய பாலம், சமூகங்களை இணைக்கின்றது என்பவற்றை ஆராய்வதே எமது நோக்கமாகும். மேலும் தமிழ், சிங்கள மொழி இலக்கிய இலக்கண விடயங்களிடையே உண்டாகிய செல்வாக்கினை எடுத்துக் காட்டுவதும் எமது நோக்கமாகும். மிகப் பரந்துபட்ட இவ்விடயத்தை நீதி இலக்கியங்கள், தூது காவியங்கள், மகாகாவியங்கள், வைத்திய இலக்கண நூல்கள், மொழி பெயர்ப்பு இலக்கியங்கள் உவமை உருவக அணிகள் சமய கலாசார ஒற்றுமை என்ற பிரிவுகளில் ஆராய முயன்று வருகிறோம்.

தமிழ் மொழி சங்ககால இலக்கியங்களைக் கொண்ட மூத்த மொழி. இலக்கண இலக்கிய மணமுடன் எழுத்துமொழி பேச்சுமொழியாகப் பல்லாண்டு காலம் வழக்கிலுள்ள மொழி. தமிழ் மொழி போன்று பழைமையான மொழிகளாகக் கருதப்படும் வடமொழி, இலத்தீன் ஆகிய மொழிகள் இன்று பேச்சு வழக்கற்ற மொழிகள். உலகிலே ஐந்து கோடிக்கு மேற்பட்ட மக்களாலே பேசப்படும் மொழியாகத் தமிழ்மொழி தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. சிந்துவெளி நாகரிக காலம் கி. மு. 5000 வரையில் என ஆராய்ச்சியாளர் நிறுவி யுள்ளனர். இவ்வாராய்ச்சியின் பயனாகத் தமிழ்மொழிக்கும் தமிழ் எழுத்துக்கும் 7000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை உண்டென்பதை உலகறியும். சிந்துவெளியில் வழங்கிய எழுத்துக் களினின்றே பிராமி எழுத்துக்களும் தமிழ் எழுத்துக்களும் தோன்றியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர் ஆராய்ச்சியாளர். மேலும், இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளின் எழுத்துக்களும் பிராமியினின்றே பிறந்தவை என்பர். பின்னர், அசோக மன்னன் காலத்தில் பிராமி எழுத்துக்கள் பரம்பின. புத்த மதத்ததுடன் பிராமி எழுத்து முறையும் இலங்கைக்கு வந்ததெனின் சிங்கள மொழியும் பிராமி வடிவிலிருந்தே பிறந்ததாகிறது. இவ்வாறு எழுத்து வரிவடிவிலும் தமிழ் சிங்கள மொழிகளில் நிறைந்த ஒற்றுமையை நாம் காண்டல் கூடும். இதுவும் மொழி எழுத்துக்களின் ஒரு சங்கமமேயாகும்.

மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கு பற்றியும் பெரியோர் நூல்களை எழுதினர். இவையெல்லாம் நீதியின்பால் அமைவன. எனினும், பொருட்பகுதியைப் பற்றி எழுந்த நூல்களையே நீதி நூல்கள் எனப் பெரியோர் வழங்குவர். இம்முறையில் தமிழிற் சிறந்த நீதிகளை வழங்கிய புலவர்கள் பலர். இவர்களுள் தெய்வத் திருவள்ளுவர் முன்னணியில் விளங்குகிறார். திருக்குறள் என்னும் நீதிக் களஞ்சியத்தை அறம், பொருள், இன்பம் என்பன விளங்க உலகத்துக்கு அளித்த பொய்யாமொழிப் புலவர் அவர். வடமொழியில் வழங்கும் **தர்ம சாத்திரம், மனுஸ்மிருதி, சாணக்கிய நீதிசாத்திரம், நீதிரத்ன, நீதிசர, நீதிபிரதீப, பஞ்சதந்திரம், ஹிதோபதேசம்** என்பனவும் நீதிநூல்களே. பாளி மொழியில் புத்தபகவான் அருளிய தம்மபதமும், ஜாதகக் கதைகளும் நீதியைப் புகட்டும் நூல்களாகத் திகழ்கின்றன. பண்டை நீதிநூலார் தம் அநுபவத்திற் கண்ட உண்மைகளைச் சூத்திர வடிவிலும் செய்யுள் வடிவிலும் யாத்துள்ளனர்.

மக்கள் வழக்கவொழுக்கங்கள் மாறுபடுதல் இயல்பே. மகா பாரதத்திற் கண்ட சில அறங்கள் இக்காலத்துக்குப் பொருந்தாமல் விடலாம். நீதிகளைக் காலநோக்கில் கொள்ளுதலும் தள்ளுதலும் செய்தல் வேண்டும். ஆனாலும், பெரியோர் வாக்கில் அமைந்த நீதிகள் எக்காலத்துக்கும் பொருந்துவனவாகவே இருக்கும். எனவே, 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதைக் கடைப்பிடித்து மனம்போன போக்கில் செய்யத்துணிதலும் நன்றன்று. அத்துடன் எம்மொழியில் அமைந்தன வெனினும் காய்தல் உவத்தல் இன்றிக் கொள்வன கொள்ளல் சிறந்த பண்பாகும்.

நீதி இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் தமிழ் சிங்கள நீதி இலக்கியங்களில் பல ஒற்றுமைகளைக் காண்கிறோம். தமிழின் செல்வாக்கு மேலோங்கி நிற்பதும் புலனாகிறது. பெரும்பாலும் இவ்வாறாய செல்வாக்கிற்குத் தமிழின் வியாபகமே காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். சிங்களப் புலவர்களும் தமிழைக்கற்ற பண்டிதர்களாக விளங்கினார்கள். அரசர்களும் அயராது ஆதரவு நல்கினார்கள். இதனால், தமிழும் தழைத்தது. சிங்களப் புலவர்களாலும் சீராகப் போற்றப்பட்டது. இந்த நிலை கோட்டைக் காலத்தில் அதாவது சிங்கள இலக்கிய பொற்காலத்தில் மாட்சியுற்று - செழிப்படைந்திருந்தது. ஆனால், சீதாவக்கை காலத்தில் சிங்கள இலக்கியம் சமயம் என்பன குன்றிவந்தன. அதே நேரத்தில் இந்து சமயத்தின் செல்வாக்கு மட்டும் மேலோங்கிநின்றமைக்குச் சான்றுகள் உண்டு. வயிரவர் (වයිරව) கோவில்கள், பகுறி (බහුරි) ஆதிய இந்து நாட்டியங்கள் பெருவழக்குப் பெற்றன. அரிட்டகீவெண்டு பெருமாள் போன்ற இந்துமதப் பெரியார்கள் அரச சபையிற் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். முதலாவது இராசசிங்கன் இந்து சமயத்தைத் தழுவியவனாக விளங்கினான். அக்காலத்தில் சிங்கள இலக்கியத்தை ஓரளவு காப்பாற்றியவர் அழகியவண்ணமுகவெட்டியும் அவரது தந்தை தர்மத்துவஜ பண்டிதருமாவர்.

தமிழ்மொழி, சிங்கள இலக்கியத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தமையையும் இங்கு தமிழ்ப் பண்டிதர் வாசஞ் செய்தமையையும் **அழகியவண்ணரது சுபாஷித** என்ற நீதிநூலும் சேவல்விடுதூது என்ற தூது காவியமும் தெளிவுபடுத்துகின்றன. அழகியவண்ணமுகவெட்டியும் தர்மத்துவஜ பண்டிதரும் தமிழ்மொழியிலும் துறைபோகியவர்களாக மிளிர்ந்தார்கள். சுபாஷித என்ற நீதி நூலொன்றே அதற்கு நல்ல சான்றாக அமைகின்றது. அழகியவண்ண, சுபாஷித என்ற நீதி இலக்கியத்தைச் செய்கையில் பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலுள்ள கருத்துக்களை நன்கு தழுவியிருக்கிறார். அதனை அவரே தமது நூலின் தொடக்கத்திற் தெளிவாகப் பின்வருமாறு கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| පහල | පොරණ ඉසිවර මුවෙනි මනන | ද |
| දෙමල | සකු මගද නොහසල සතට ද | ද |
| පුවල | නිති සත ගත පද අරුත් ලෙ | ද |
| සිහල | බසින් සැකෙවින් කියමි පද බැ | ද |

ஔவையார் என்ற புலவரால் தமிழில் இயற்றப்பட்ட மூதுரை, நல்வழி என்பன சிறந்த நீதிநூல்களாகப் போற்றப்படுகின்றன. இவற்றிலிருந்தும் நீதி வெண்பாவிலிருந்தும் எடுத்த நீதிக்கருத்துக்கள் அவ்வாறே சுபாஷித என்ற நூற்பாடல்களிலும் ஒலிப்பதைக் காணலாம். ஆனால், அவர் திருக்குறள், நாலடியார் அறநெறிச்சாரம் என்ற நூல்களிலிருந்து கருத்துக்களை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியவண்ணமுகவெட்டி மூதுரையிலிருந்து எடுத்துள்ள கருத்துக்கள் சிலவற்றை ஆராய்வோம். செய்ந்நன்றியைப் பற்றிவரும் பாடல் இது. நாம் ஒருவருக்கு நன்றி செய்யுமிடத்துப் பலனை எதிர்பாராது செய்தல் வேண்டும். தென்னைக்கு நாங்கள் நீர் விடுகின்றோம். இளந்தென்னை வேரினால் நீரை உறிஞ்சிக் குடிக்கிறது. அதே தென்னை பெரிய மரமாக வளர்ந்தபின் உருசியான இளநீரைத் தனது தலையிலே சுமந்துநின்று எங்களுக்கு அளிக்கின்றது. இது பலனை எதிர்பாராமல் செய்த நன்றிக்குக் கிடைக்கும் பரிசாகும். இக்கருத்தினைக் கொண்ட ஔவையாரின் மூதுரைப் பாடலை முதலிற் பார்ப்போம். அடுத்து அதே கருத்தினை அச்சொட்டாகக் கொண்டு சுபாஷிதவில் வரும் சிங்களப் பாடலையும் பார்ப்போம்.

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்றுதரும் கொல்என வேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

இனி சுபாஷிதவில் வரும் பாடல்:

සත් ගුණයුත් සතන්හට වැඩ කළොත් සරු
අත් පිට දියුණුවැමැපල දේයැ තිර තුරු
වත් කළ දිය නෙරළු තුරු මුලට පිය කරු
දෙත් මුදුනින් පැලරස රැගෙන අම යුරු

(45)

இவ்வாறே பல பாடல்களில் நெருங்கிய கருத்தொற்றுமையைக் காண்டல் கூடும். தமிழில் உவமை எவ்வாறு கையாளப்பட்டிருக்கிறதோ அவ்வாறே சிங்கள மொழியிலும் கையாளப்பட்டிருக்கிறது. இதுபோல மூதுரையில் இன்னும் பல பாடல்களை உதாரணமாக எடுத்துக் காட்டலாம். விரிவஞ்சி விடுக்கின்றோம். இனி, நல்வழியில் வரும் ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

இப்பாட்டின் கருத்து பாடலிலிருந்து இலகுவாக விளங்குகிறது. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் பயனுள்ள வழியில் செலவழியாது புதைத்து வைத்தல் கூடாது. அப்பணத்தை அறவழியில் செலவிடுதல் வேண்டும். வீணாகப் புதைத்து வைத்தால் உயிர்போன பின் அப்பணம் ஒருவருக்கும் பயன்படாது. இதனை அறிவுறுத்தப் புலவர் மரணத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அப்பணத்தை யார்தான் அனுபவிப்பார் என்று கேட்டு, செய்ய வேண்டிய நற்செயலையும் குறிப்பாகச் சொல்லிக் காட்டுகிறார்.

இதே கருத்தினையே உவமையொன்றையும் சேர்த்து, நேரான அறிவுறுத்தல்களுடன் சுபாஷிதவில் அழகியவண்ண முகவெட்டி கூறுவதையும் பார்ப்போம்.

තැන තැන නිදන් කොට නො තබා හැමදිනම
කව බොව යදින් හට දන් දෙව වඩා පෙ ම
මිහි බැඳි බිඟුන් හට වන දෙය දැක දැක ම
තව තව ලොබින් දන රැස්කර තබනුකි ම

(95)

இப்பாடலில் நல்வழிப் பாடற் கருத்துத்தான் சிறிது மாறுபட்ட வடிவிலே கூறப்படுகிறது. தேனீக்கள் பாடுபட்டுத் தேடித் தேனைச் சேகரித்து வைத்து ஈற்றில் அதனை இழப்பதை உவமையாகக் காட்டுகிறார் சுபாஷித ஆசிரியர். அத்தோடு பணத்தைப் புதைத்து வையாமல் என்றும் நன்றாக உண்ணுங்கள்; குடியுங்கள்; யாசகர்களுக்குத் தருமம் செய்யுங்கள் என்ற அறிவுரையையும் அழகாக எடுத்துரைக்கிறார். எவ்வாறாயினும் ஔவையாரும் அழகியவண்ணரும் ஒரே கருத்தை - நீதியை உலகுக்குப் புகட்டியிருப்பதில் ஒற்றுமை இருப்பது வெளிப்படையன்றோ!

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி இலக்கியங்கள் II

இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு மொழிக்கும் வளமான ஒரு பொற்காலம் உண்டு. இந்தியாவை ஆண்ட குப்த மன்னர் காலம் வடமொழியெனும் சமஸ்கிருத மொழியின் பொற்காலம் என்பர். மகாகவி காளிதாசனின் இலக்கியவளம் மிளிர்ந்த பொற்காலம் அது. சிங்கள மொழி இலக்கியங்களுக்குக் கோட்டைக்காலம் பொற்காலம் எனப்படும். இக்கோட்டைக் காலத்தில் தமிழ் மொழியும் போற்றப்பட்டதென்றால், பௌத்த கல்விநிலையங்களிற் கற்பிக்கப் பட்டதென்றால் அக்கால மன்னனாகிய 6 ஆவது பராக்கிரமபாகு போன்ற அரசர்களும் ஸ்ரீ இராகுல தேரர் போன்ற புலவர்களுமே காரணகர்த்தாக்களாகின்றனர். அவ்வாறே சீதாவக்கை காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது இராஜசிங்க மன்னனும் அழகியவண்ண முகவெட்டியும் தர்மத்துவஜ பண்டிதரும் காரண கர்த்தாக்களாவர். தொட்டகமுவ விஜயபாகு பிரிவேனையில் அமைந்திருந்த பாடத்திட்டத்தில் தமிழும் இடம்பெற்றிருந்த தென்பதை வரலாற்று இலக்கியச் சான்றுகள் வாயிலாக அறிகின்றோம். (**පවසත් සකු මගද එළු දෙමළ කිවි නළු**) பவசத் சக்கு மகத எலு தெமள கிவி நளு - என்ற பாடலின் அடி அதனைத் தெளிவாய் எடுத்துக்காட்டுகிறது. இப்பிரிவேனையிற் கல்விகற்ற சிங்களப் புலவர்கள் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். சுபாஷித என்ற நீதி இலக்கிய கர்த்தாவாகிய அழகியவண்ண முகவெட்டி தமிழ்ச்சூழலில் வாழ்ந்தவர். அவரது புரவலராகிய சீதாவக்கை முதலாவது இராசசிங்கனும் இந்து மதத்தைத் தழுவியவனும் தமிழ் முதலாம் 18 மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவனுமாக விளங்கினான். இதனை சேவல்விடுதூது (**සැවුල් අස්න**) செவுல் அஸ்ன என்ற காவியத்தில் வரும் (**දසට දෙසෙහි බස සියබස මෙන් හසළ**) தஸட்ட தெஸெஹி பஸ ஸியபஸ மென் ஹஸல - என்று ஒரு கவியின் அடி தெளிவாகக் குறிப்பிடுகிறது. இங்கே குறிப்பிட்ட 18 நாடுகளில் தமிழ் நாடும் ஒன்றாகும். முதலாவது இராசசிங்க மன்னனின் புலவர் சபையில் வீற்றிருந்த புலவர்களும் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலன்றித் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார்களென்பதைச் சேவல்விடுதூது எடுத்துக் காட்டுகிறது.

| | | |
|---|---|---|
| ගැඹුරු | සකු මගද හෙළු දෙමළෙහි පුරු | දූ |
| සොඳුරු | සඳ ලකර වියරණ දත් කිවි | දූ |
| මියුරු | අරුත් යොදමින් කවි බැඳි විරි | දූ |
| අතුරු | නොව කියති සබතුරෙහි පරසි | දූ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ගැඹුරු – (கெம்புறு) ஆழமான, සොඳුරු – (ஸொந்துறு) அழகிய, සඳ – (ஸந்த) சந்தன, ලකර – (லகற) அலங்காரம், දත් – (தத்) அறிந்த, කිවිඳු – (கிவிந்து) செய்யுட் புலவர், මියුරු – (மியுறு) இனிமையான, අරුත් – (அறுத்) கருத்து, අතුරුනොව – (அத்துறு நொவ) இடையீடு இல்லாமல், සබතුරෙහි – (ஸபதுறெஹி) கூட்டத்தில், පරසිදු – (பறஸிது) பிரசித்தப்பட்ட)

அச்சிங்களப் புலவர்கள் சமஸ்கிருதம், பாளி, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் ஆழமான அறிவைக் கொண்டிருந்தார்கள். அதனையே ගැඹුරු සකු මගද හෙළු දෙමළෙහි පුරුදු (கெம்புறு ஸக்கு மகத ஹெளு தெமளெஹி புறுது) என்ற அடி விளக்கி நிற்கின்றது.

இனி நீதி வெண்பாவில் வரும் ஒரு செய்யுளை எடுத்துக் கொள்வோம் பிறப்பால் மக்களில் உயர்வு தாழ்வு பாராட்ட முடியாது என்பதை விளக்குவது அச்செய்யுள்.

**"தாமரைபொன் முத்துச் சவரன்கோ ரோசனைபால்**
**பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா – தாமழன் மற்**
**றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்**
**எங்கே பிறந்தாலு மென்".**

நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் - எக்குடியிற் பிறந்தாலும் நல்லோரே. அவர்கள் பிறப்பை இழிவாகக் கருதி ஒருவரும் எள்ளி நகையாடுவதுமில்லை. தாமரைப்பூ, பொன், முத்து, சாமரை, கோரோசனை, பால், தேன், பட்டு, புனுகு, சவ்வாது, நெருப்பு ஆதியன பிறந்த இடத்தை யாரும் எள்ளி நகையாடுவதில்லை. தாமரை சேற்றில் வளர்ந்து மலர்கிறது. முத்து கடல்வாய்ச் சிப்பியிலிருந்து உதிக்கிறது. கோரோசனை பசுவிலிருந்தும் புனுகு, நாவி - புனுகு பூனையிலிருந்தும் பிறக்கின்றன. பிறந்த இடங்கள் போற்றப்படும் இடங்கள் அல்லாவிடினும் அப்பொருட்கள் மேலாக மதிக்கப்படுகின்றன. அவை பிறந்த இடத்தைப் பார்த்து அவற்றைத் தள்ளி வைப்பவர் இல்லை. அதற்குப் பதிலாக அவற்றிற்கு உயர்ந்த இடத்தையே அளிக்கின்றனர். "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்" என்றே அதிவீர ராமபாண்டியரது வெற்றிவேற்கையும் கூறுகின்றது. இனி, மேலே குறிப்பிட்ட நீதிவெண்பா என்ற நீதி இலக்கியக் கருத்தைச் சிங்கள சுபாஷித ஆசிரியர் எவ்வாறு தருகிறார் என்பதைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| නොමින් | මහ පිනැතියෙක් පසිඳු මෙදිය | ත |
| කුලෙන් | අඩුව උපනත් ලොව නැණැතිස | ත |
| නොසිත් | අදර බුහුමන් වඩමින් පුද | ත |
| මඩින් | උපන් ඉඳුවර පලදිනෙව්ම | ත |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මෙදියත – (மெதியத) இந்த உலகத்திலே, – පසිඳු (பஸிந்து) பிரசித்தமான, නොමින් -(நொமின்) அளவில்லாத, මහ පිනැතියකු -(மஹ பினெதியகு) நிறைந்த புண்ணியவான். කුලෙන් අඩු වැ උපනත් - (குலென் அடுவெஉபனத்) தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும், ලොවැ – (லொவெ) உலகிலே, – නැණැති සත (நெனெத்தி ஸத) அறிவு நிறைந்தவனாவான், තොසින් – (தொஸின்) மகிழ்ச்சியோடும்,අදර බුහුමන් වඩමින් – (அதற புஹுமன் வடமின்) அன்போடு மிக்க மரியாதையோடும், – පුදන (புதன) போற்றப்படுவான், (எவ்வாறெனில்) මඩින් උපන් ඉඳුවර – (மடின் உபன் இந்துவற) சேற்றில் முளைத்த ஆம்பல், මත – (மத) முடியில், පළඳින - එවි (பளந்தின எவ்) அணியப்பட்டவாறாய்.

அழகியவண்ண முகவெட்டி இப்பாடலில் 'சேற்றில் முளைத்த தாமரை முடியில் ஏறி அலங்காரம் செய்கிறது; அதுபோன்று தாழ்ந்த குலத்திலே பிறந்தாலும் அறிவுடையார் மேலிடத்தில் வைத்து மரியாதை செய்யப்படுகின்றார்கள்; வணங்கப்படுகிறார்கள் என்று கூறுகிறார். மேலே கூறப்பட்ட இரு பாடல்களிலும் எடுத்துக்கொண்ட பொருளும் உவமையும் ஒத்துச் செல்வதைக் காண்கிறோம். இது போன்ற **நீதிவெண்பாப் பாடல்கள்** பலவற்றைத் தழுவி அழகிய வண்ண முகவெட்டி சுபாஷிதவிற் பாடியிருக்கிறார். சுபாஷித ஆசிரியர், நீதிவெண்பா ஆசிரியரைப் போன்று தாமரை, பொன், முத்து, என்ற பதினொரு பொருள்களின் பிறப்பையும் குறிப்பிட வில்லை. சேற்றில் முளைத்து முடியில் விளங்கும் - முடியை அலங்கரிக்கும் ஆம்பல் மலரையே உவமானமாகக் காட்டுகிறார். '**මඩින් උපන් ඉඳුවර මතැ (මුදුනෙහි)**' - (மடின் உபன் இந்துவற மதெ, **පළඳින එවි** – பளந்தின எவ் என்று அழகாகக் கூறுகிறார். இந்த **ඉඳුවර** - இந்துவற என்பது **මහනෙල්** – மஹனெல் பூ. இதுதான் எமது நாட்டுத் தேசிய மலர் என்பதும் மனங்கொள்ளத் தக்கது. 'நல்லோர்கள் எங்கே பிறந்தாலும் என்' என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறிய நீதி வெண்பாக் கருத்தினை சுபாஷித ஆசிரியர் மூன்று அடிகளில் விரிவாகக் கூறியுள்ளார். எங்கே பிறந்தாலும் எள்ளாரே என்பதிலிருந்து தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் அறிவுடையோர் போற்றப் படுவார்கள். உயர்ந்த இடத்தில் வைக்கப்படுவார்கள்; இகழப்பட மாட்டார்கள். இதனைச் சுபாஷித ஆசிரியர் **කුලෙන් අඩුවැ උපනත්**, **අදර බුහුමන් වඩමින්**, **පුදන** – அடுவ உபநத் அதற புஹுமன் வடமின், புதத என்றார். அன்போடும் மரியாதையோடும் பூஜிக்க அதாவது - போற்றப்படுவார் என்பது பொருளாகும். மேலும் தமிழ்ப்பாடலி லுள்ள எதுகை, ஓசை நயங்கள் போல சிங்களப் பாடலிலும் அடிதோறும் **නොමින්**, **කුලෙන්**, **තොසින්**, **මඩින්**– நொமின், குலென்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொளின், மடின் என்றும் அடி ஈறுகள்தோறும் දියත, සත, පුදත, මත – தியத, ஸத, புதத, மத என்றும் வருவனவற்றையும் ஓசைநயமாக இரசிக்கலாம்.

கண்டி மன்னர் ஆட்சிக்காலத்தில் முக்கியமான இலக்கிய முயற்சியாக றணஸ்கல்லவின் லோகோபகார (ලෝකෝපකාරය) என்ற நீதி நூல் சிறந்து விளங்குகின்றது. ஆசிரியர் தமிழ், பாளி, சமஸ்கிருதம் ஆதிய நூல்களிலிருந்து கருத்துக்களைத் தெரிவுசெய்துள்ளார். சுபாஷிதவை அளித்த அழகியவண்ண முகவெட்டியிலும் பார்க்க றணஸ்கல்ல தேரர் தமிழிலே மிகவும் துறைபோகியவராகக் காணப்படுகிறார். இவர் திருக்குறள் முதலாம் உயர்ந்த நீதி நூல்களை ஆராய்ந்து கற்றவராகக் காணப்படுகிறார். அண்மைக் காலத்தில் சிறந்த தமிழ் அறிஞராய் விளங்கிய ஹிஸ்ஸல்லே தர்மரத்தின தேரரும் லோகோபகார ஆசிரியர் திருக்குறட் கருத்துக்களை ஆண்டுள்ளமைபற்றி விரிவாக விளக்கியுள்ளார் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இனி, திருக்குறளில் புதல்வரைப் பெறுதல் என்ற அதிகாரத்தில் வரும் குறட்பாக்கள் சிலவற்றை ஆராய்வோம்.

தமது பிள்ளைகளின் சிறிய கைகள் அளாவிய உணவு பெற்றோருக்கு அமிர்தத்திலும் இனிமையானது என்ற கருத்தைக் கொண்ட குறட்பாவை முதற்கண் எடுத்துக்கொள்வோம்.

**அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்**
**சிறுகை யளாவிய கூழ்** **(குறள் 64)**
**(மக்கட்பேறு – 4)**

இதே கருத்தை மையமாகக் கொண்டு சிங்கள மொழியிலுள்ள லோகோபகார ஆசிரியர் கூறும் பாடலையும் பார்ப்போம்.

**ඇම රසයටම වැඩි - රසයකි සුරන් බුදිනේ**
**ඊටත් වැඩි රසෙකි - තමා දරුවන් හැණු සුබොජුන්**
**(09)**

திருக்குறளில் வரும் அமிழ்தினை இவரும் ඇම රසය - අමාරසය என்றே சிறப்பிக்கின்றார்கள். கூழ் என்பதனை සුබොජුන් – ஸுபொஜுன் அதாவது நல்ல போஜனம் என்றும் சிறுகை அளாவிய என்பதனை තමා දරුවන් ඇණු - තමාගේ දරුවන් විසින් අණින ලද - தமா தறுவன் எணு என்றும் ஒரே கருத்திற் கூறிய பாங்கு இரசிக்கத்தக்கதாகும்.

அடுத்ததாக ஒரு தந்தையானவர் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன என்பதைத் திருவள்ளுவர் திருக்குறளில் எவ்வாறு விளக்குகிறார் என்பதைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தந்தை மகற்காற்று நன்றிய வையத்து
முந்தி யிருப்பச் செயல்' (குறள் – 67)
(மக்கட்பேறு – 7)

தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க உதவியைத், திருக்குறள் அழகாக, நயமாகக் கூறுகிறது. அந்த நல்ல உதவி என்னவென்றால் கற்றவர் கூட்டத்தில் தன்மகன் முந்தியிருக்குமாறு செய்தலாகும். அவனைக் கல்வியில் மேம்படச் செய்தல்மூலமே அவ்வாறு செய்தல் கூடும். இனி, இதனை லோகோபகார ஆசிரியர் எவ்வாறு பாடியுள்ளார் என்பதனையும் பார்ப்போம்.

දෙගුරුන් විසින් තම දරුවන්ට - දෙන නොමඳ දන නම්
වි ය තු න් සබාමැද - ඉන්ට ඉදිරිව සිල්ප දෙනු මැයි

இப்பாடலில் சொல்லுக்குச் சொல் பொருளுக்குப் பொருள் பொருத்தமுற அமைகின்றன. முந்தியிருப்பச் செய்தற்கு வேண்டியதனையும் லோகோபகார ஆசிரியர் ඉදිරිව ඉන්ට සිල්ප දෙනුමැයි - සිල්ප – ஸில்ப என்பது கல்வி அளித்தல் என்று நயம்படக் கூறியுள்ளார். திருவள்ளுவர் கூறிய நன்றி - நல்ல உதவியை றணஸ்கல்ல தேரர் නොමඳ දන නම් - நொமந்த தன நம் - அதாவது குறையாத தனம் - செல்வம் என்று வர்ணித்துள்ளார். அத்துடன் அவையத்து என்று ஆழ்ந்த கருத்தை වියතුන් සබා මැද – அதாவது கற்றோர் சபை நடுவே என்று கருத்துத் தவறாது கூறியமை நயக்கத்தக்கது. அழகியவண்ண முகவெட்டி தழுவிய நல்வழி, மூதுரை ஆதிய தமிழ் நீதிநூல்களையும் றணஸ்கல்ல தேரரும் தமது உலோகோபகார நீதிநூலில் தழுவியிருக்கிறார். இவ்வாறு கண்டிக் காலத்தில் பல்வேறு சிறந்த இலக்கியங்களையும் தழுவி எழுதிய பண்டிதராக றணஸ்கல்ல தேரர் விளங்குகிறார். தமிழின் செல்வாக்குப் பெற்ற சிங்கள நீதிநூல்கள் இன்றும் சிறந்த படைப்புக்களாகக் கற்றோராலும் பொது மக்களாலும் போற்றப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி இலக்கியங்கள் – பொதுமை

சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் கோட்டைக்காலம். கோட்டை இராசதானியாக விளங்கிய காலம். அதற்குக் காரணம் ஆறாவது பராக்கிரமபாகு இலக்கிய வளர்ச்சிக்காக ஆற்றிய அருந்தொண்டெனலாம். மன்னனின் மரணத்தின்பின் பூத்துக்காய்த்துப் பழுத்திருந்த சிங்கள இலக்கிய விருக்ஷம் சரிந்து விழுந்தது என்பர் இலங்கை வரலாற்று ஆசிரியர். சீதாவக்கை காலத்தில் சிங்கள இலக்கியம் தேய்வுற்றது. எனினும், அரிட்ட கீ வெண்டு பெருமாள், முதலாவது இராசசிங்க மன்னன் என்பவர்களால் தமிழின் செல்வாக்கும் இந்து மதத்தின் செல்வாக்கும் மேலோங்கி நின்றன. **சேவல்விடுதூதில் (සැවුල් අස්නෙන්) (சவுல் சந்தேச)** குறிப்பிட்டவாறு மஹிந்தாலங்கார, குணாலங்கார என்னும் இரு பிக்குகள் சிங்கள இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றினர். 'ராஜரத்னாகரய' என்ற இதிகாச நூலைச் செய்த 'அபயராஜபிரிவேனை'த் தலைமைப் பிக்குவாகிய வில்கம்பாயே தேரர் இன்னொருவராவர். இவர்களோடு சீதாவக்கை காலத்தில் சிங்கள இலக்கியத்தைச் சீரழியாது காப்பாற்றிய பெருமை அழகியவண்ண முகவெட்டி என்ற புலவர்க்கே உரியதாகும்.

அழகியவண்ண முகவெட்டி தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர். அவர் பாடிய சுபாஷித (**සුභාෂිතය**) என்ற நீதி நூலே அதற்குச் சான்று. இந்நூலைச் செய்த அவர் சமஸ்கிருத, பாளி நீதிநூல்களை மட்டுமன்றி தமிழ் நீதிநூல்களையும் தழுவியே பாடியுள்ளார். அப்புலவர் ஔவையாரின் **மூதுரை, நல்வழி** என்ற நீதிநூல்களையும் **நீதிவெண்பா, நாலடியார்** என்ற நீதிநூல்களையும் தழுவி, சிங்களத்தில் பாடியுள்ளார். அவர் தமிழ் நீதிநூல்களைப் படித்து, சுபாஷித என்ற நூலைச் செய்தமைபற்றி ஒரு பாடலில் கூறுகிறார். மேலும், தமிழ் தெரியாதவர்களுக்குத் தமிழிலுள்ள அரிய நீதிகளைத் தெரிவிப்பதற்காகவே அந்த நூலைச் செய்ததாகவும் கூறுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

පහල පොරණ ඉසිවර මුවෙනි මතන ද
දෙමල සකු මගද නොහසල සතට ද ද
පුවල නිති සත ගත පද අරුත් ලෙ ද
සිහල බසින් සැකෙවින් කියමි පද බැ ද

**නොහසල** – (நொஹஸல) படிப்பறியாத-தமிழ், சமஸ்கிருத, பாளி மொழிப் படிப்பறியாத **සතට දද** – (ஸதட்ட தத) பாமர மக்களுக்காக இந்நூலைப் பாடுகிறேன் என்றார் புலவர். பண்டைய புலவர்கள் முனிவர்கள் பாடிய நீதி நெறிகளை **අරුත් ලෙද** – (அறுத் லெத) -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து மாறுபடாமல் பாடுகிறேன் என்று சுபாஷித என்ற நூலை அழகாகச் சுவைபடச் சிங்களத்திற் பாடியிருக்கிறார்.

தமிழ் மூதுரையிலுள்ள ஒரு பாடலையும் சிங்கள சுபாஷிதவில் வரும் பாடல் ஒன்றையும் முதற்கண் எடுத்துக்கொள்வோம். இவற்றில் நீதிநூற் கருத்துக்கள் மட்டுமன்றி உதாரணங்கள் உவமானங்கள் என்பனவும் ஒரே விதமாக அமைந்திருப்பதைக் கண்டு நயக்கலாம். இப்பாடல்கள் நல்லாருக்கும் பொல்லாருக்கும் செய்யும் உபகாரம் பற்றி எவ்வாறு கூறுகின்றன என்பதைப் பார்ப்போம்.

சுபாஷித-பாடல்:

නැණැති    දනන් මඳ ගුණයක් කළ  ද
පවති    ගලැකෙටූ අකුරක් මෙන් නිබ  ද
විමති    දනන් හට කළ කිසි ගුණ නොම  ද
එනැති    වේය දියැ පිටැ ඇඳි ඉරක් ලෙ  ද

නැණැති - (நெணெத்தி) என்றால் නුවණ ඇති - (நுவண எத்தி) புத்திக்கூர்மையுள்ள, அறிவுள்ள, දනන් හට -(தனன் ஹட்ட) மனிதர்களுக்கு என்பது பொருள், சிறு உதவி செய்தாலும் ගලැකෙටූ - (கலெகெட்டு) අකුරක් මෙන් -(அக்குறக் மென்) - கல்லில் எழுதிய எழுத்துப் போல் නිබඳ පවති - (நிவந்த பவதி) என்றும் அழியாமல் மனத்தில் நிற்கும். විමති දනන් හට - (விமதி தனன் ஹட்ட) - அறிவில்லாத மக்களுக்கு, කිසි ගුණකළ - (கிஸி குண கள) எந்த உபகாரமும், දියපිටැ ඇඳි ඉරක් ලෙද නැතිවේ යැ - (திய பிட்ட எத்தி இறக் லெத் நெத்திவேயே) நீரின் மேல் எழுதிய கோடுபோல மறைந்துவிடும். இப்பாடலில் கல்லின் மேல் எழுதிய எழுத்தும் நீரின்மேல் எழுதிய எழுத்தும் உவமானங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கல்லின் மேல் எழுதிய எழுத்து - அறிவுடையவருக்குச் செய்த உபகாரத்துக்கு உவமானமாகக் காட்டப்பட்டுள்ளது. நீரின்மேல் எழுதிய எழுத்து - அறிவில்லாதவருக்குச் செய்த உபகாரத்துக்கு உவமானமாகக் காட்டப்பட்டுள்ளது. மூதுரைப் பாடலில் வரும் இதே கருத்தையே சிங்கள சுபாஷித பாடலில் காண்கிறோம். அம்மூதுரைப்பாடல் பின்வருமாறு:

**நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்**
**கல்லின்மேல் எழுத்துப் போற் காணுமே – அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்**
**நீர்மேல் எழுத்திற்கு நேர்.**

சுபாஷித பாடலுக்கும் மூதுரைப் பாடலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அழகியவண்ணரும் தமிழ் ஔவைப்பாட்டியின் நீதிநூற் கருத்தை எதுவித மாற்றமும் இல்லாமல் சிங்களப் பாடலில் கையாண்டிருக்கிறார். ஔவையார் குறிப்பிடும் 'நல்லாரை' அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணர் නැණැති දනන් –(நெணெத்தி தனன்) அறிவுள்ளவர்கள் என்றும் ஈரமில்லா நெஞ்சத்தாரை විමති දනන් – (விமதி தனன்) - அறிவில்லாதவர்கள் என்றும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

இன்னொரு மூதுரைப் பாடலை எடுத்துக்கொள்வோம்:

**உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா**
**உடன்பிறந்தே கொல்லும் வியாதி – உடன்பிறவா**
**மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்**
**அம்மருந்து போல்வாரு முண்டு**

இப்பாடலில் உடலோடு கூடப்பிறந்த நோய் ஒருவனைக் கொல்லும். அதுபோன்று கூடப்பிறந்தவர்கள் இனத்தவர்கள் ஒருவனுக்குத் தீமையைச் செய்யக்கூடும். ஆனால், எவ்வளவோ தூரத்தில் பெரிய மலையிலுள்ள மருந்து நோயைக் குணப்படுத்தல் போல தூரத்தில் உள்ளவர்களுள்ளும் உதவி செய்பவர்கள் உளர். அவர்கள் இனத்தவராகவோ உடன் பிறந்தவராகவோ இல்லாமல் தூரத்தவராக இருக்கலாம். இதே மூதுரைப் பாடல் கருத்தைச் சுபாஷித ஆசிரியர் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

කුස ඔත සිය සොහොයුරු වුව ද තම හට
හිත නැත යෙහෙදුරු කළ පොකුරඹ ලෙ සට
තම ගත වාපිත් සෙම් කිපෙනුයැ මරට
වන ගත ඔසු වග හිත වෙයි සුව පතට

(43)

(කුසැ ඔත - குஸ ஒத என்ற பாடலின் பொருளைப் பார்ப்போம். කුස ඔත - (குஸ ஒத) ஒரே கருப்பையிலிருந்து, සොහොයුරුවුව ද - (ஸொஹொயுறு வுவத) பிறந்த சகோதரர்கள் ஆனாலும், තමා හට හිත නැත - (தமா ஹட்ட ஹித நெத்த) தமக்கு இனிமையாகமாட்டார்கள் - நல்லவர்களாகமாட்டார்கள், පොකුරු අඹ ලෙසට - (பொகுறு அம்ப லெஸட்ட) தாமரையிலை உடன்பிறந்த நீரையும் ஒட்டாது தள்ளி வைப்பதுபோல, දුරු කළ – (துறு கள) - தூரவைப்பது, යෙහෙ – (ஸெஹெ) - நன்மைதரும். තම ගත – (தம கத) தமது உடம்பிலே, වා පිත් සෙම් - (வா பித் ஸெம்) வாத பித்த சிலேஷ்டம் ஆகிய நோய்கள், මරට -(மறட்ட) மரணத்துக்கு ஏதுவான, කිපෙනු යැ – (கிபெனுய) - கோபக்காரர்களாவர். கொல்லும் வியாதிகள் ஆகும். වන ගත ඔසු වග – (வன கத ஒஸுவக) - காட்டில் உள்ள மருந்து வகைகள் (மூலிகை மருந்துகள்), සුව පතට හිත වෙයි -(ஸுவ பதட்ட ஹித வெயி) - நோயைக் குணப்படுத்துவதற்கு இதமானவைகளாகும்).

உடன்பிறந்தே கொல்லும் வியாதி, பிணிதீர்க்கும் மாமருந்து என்பன இரு பாடல்களிலும் உவமானங்களாகக் கையாளப்பட்டிருக் கின்றன. உடன் பிறந்தவர்கள் தாமும் தீமை செய்வார்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக் கருத்தும் இரு பாடல்களிலும் பொதுமையாக விளக்கப்படுகிறது. மாமருந்து போன்று ஆபத்து வேளையில் உதவும் மனிதர்களும் இருக்கிறார்கள். அவர்களை எந்தச் சமூகத்திலும் நாட்டிலும் காணமுடியும். இது எக்காலத்துக்கும் எந்த நாட்டுக்கும் பொருத்தமான நீதியல்லவா?

கண்டிக் காலத்தைச் சேர்ந்த றணஸ்கல்ல தேரர் செய்த **உலோகோபகாரய (ලෝකෝපකාරය)** என்ற நூலிலும் மூதுரை, திருக்குறள் நீதிநூற் கருத்துக்களை நிறையக் காணலாம். பின்வரும் மூதுரைப் பாடல் உலோகோபகாரயவில் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்ப்போம்.

மூதுரைப்பாடல் பின்வருமாறு:

**சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்**
**றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் – சீரிய**
**பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகு**
**மண்ணின் குடமுடைந் தக்கால்.**

இனி உலோகோபகாரயப் பாடலைப் பார்ப்போம்.

ඉසුරෙන් පිරිහුනත් - සුදනෝ තමන් ගුණ අඩු නොකරත්
බිඳුණත් රන් බඳුන - ඇති බර අගය අඩු නොවන මෙනි.

**ඉසුරෙන් පිරිහුණත්** – இஸுறென் பிறிஹுனத் - சீரியர் கெட்டாலும், **සුදනෝ තමන් ගුණ අඩු නොකරත්** – சுதனோ தமன் குண அடு நொகறத் - நல்லவர்கள் தங்கள் நற்குணங்களிற் குறைவுபடமாட்டார்கள்; அதாவது சீரியரே. எனவே, சீரியர் கெட்டாலும் சீரியரே என்றுதான் உலோகோபகாரய நீதி நூலும் கூறுகிறது. மூதுரையில் பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும். பொன் உடைந்தாலும் பொன்னே. விலையிலும் நிறையிலும் குறைவுபடாத பொன்னாகும். ஆனால், மண்ணாற் செய்த குடம் உடைந்தால் பயன்றற பொருளாய்ப் போய்விடும். சீரியரல்லாதவர்கள் கெட்டுப் போனால் மண்குடம் உடைந்தவாறு பயனற்றவர்களாவர். ஆனால், சீரியர் வறுமைப்பட்டாலும், நொந்துபோனாலும் பொற்குடம்போல் குணத்தில் கெடமாட்டார்கள். தருமச் செய்கைகளிலும் குன்றமாட்டார்கள். அதே கருத்தையே **රන් බඳුන** - (றன் பந்துன) - பொற்பாத்திரம் உடைந்துவிட்டாலும் நிறையிலும் மதிப்பிலும் குறையமாட்டாது என உலோகோபகாரய ஆசிரியர் பாடியிருக்கிறார்.

சிங்கள நீதி நூல்களில் தமிழ் நீதிநூற் கருத்துக்கள் எடுத்தாளப் பட்டிருப்பதற்கு இன்னும் பல உதாரணங்களை எடுத்துக்காட்டலாம். சுபாஷித, உலோகோபகாரய என்ற சிங்கள நீதி நூல்களில் வரும் பாடல்களை மூதுரை, நீதிவெண்பா, திருக்குறட்பாடல்களுடன் ஒப்பிட்டு நயங்கண்டு பயனடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# சமய கலாசாரப் பண்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய கலாசார ஒற்றுமை I

இலக்கியம் எம்மொழிகளில் அமைந்தாலும் அது எல்லார்க்கும் பொது. பல்வேறு இன மக்களிடையேயும் ஒருமைப்பாட்டிற்கு இலக்கியம் தொண்டாற்ற முடியும். அது இலக்கிய சேதுபந்தனம்; அதுவே இலக்கியப்பாலம். இந்த இலக்கியப் பாலத்தின் முக்கிய தூண்களாகச் சமய கலாசாரப் பண்புகள் விளங்குகின்றன. அப்பாலத்தின் பின்னணியாக - தளமாக வரலாறு நிற்கிறது. புத்தபகவானை வழிபடும் சிங்கள மக்கள் கதிர்காமத் தெய்வமாகிய முருகனையும் வழிபடுகிறார்கள். தமிழ் மக்கள் வணங்கும் கணபதி, சிவன் போன்ற தெய்வங்களுக்கு வழிபாடு செய்கிறார்கள். இராமாயண வரலாறோடு இலங்கையைத் தொடர்புபடுத்தும் விபீடணர் ஆலயத்திலும் வழிபாடு செய்கிறார்கள். சிங்களத் தூது இலக்கியங்களில் இத்தெய்வங்கள் போற்றப்படுகின்றன. இத்தூது காவியங்கள் போன்ற இலக்கியங்கள் சிங்கள மக்கள் கலாசாரத்துக்கும் தமிழ் மக்கள் கலாசாரத்துக்கும் சமய அடிப்படையிலுள்ள தொடர்பைத் தெளிவுபடுத்துகின்றன. இத்தொடர்பு நீண்டகாலத் தொடர்பு. இலங்கையில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் சிங்கள மொழித்தொடர்பு வளர்ந்து வந்திருக்கிறது. பல தமிழ்ச்சொற்கள் இன்றும் சிங்கள மொழியில் வழங்கி வருகின்றன. இவற்றையும் சிங்களத்தில் உள்ள சிறந்த இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழறிந்த ஸ்ரீ இராகுல தேரர் போன்ற கவிஞர்களின் இலக்கியப் படைப்புகளில் தமிழ் சமய கலாசாரப் பண்பாடுகள் பரிமளிக்கின்றன. செலலிஹினி சந்தேச என்ற நூல் சிறந்த சிங்கள தூது காவியம் எனப் போற்றப்படுகிறது. ஸ்ரீ இராகுல தேரர் இப்பிரபந்தத்தைப் பாடியிருக்கிறார். கவிஞர் நாகணவாய்ப்பட்சியைத் தூதாக அனுப்புகிறார். அப்பட்சி களனி என்ற நகரில் கோவில் கொண்டுள்ள விபீடண தெய்வத்திடம் தான் தூது கொண்டு செல்கிறது. ஒரு பிரார்த்தனையைத் தூதுச் செய்தியாகச் சமர்ப்பிக்கும் முறையில் காவியம் பாடியிருக்கிறார் கவிஞர். நாகணவாயை - பூவையை தூதுவிடுதல் தமிழ்க் கவி மரபுக்கும் பொருத்தமானது.

விபீடண தெய்வத்தைப் பற்றியும் பிரார்த்தனையையும் ஸ்ரீ இராகுல தேரர் பின்வருமாறு கூறுகிறார்.

දිත් රැපු කිරුළු මල්දම් සුවඳ මී වැ ස
නෙත් සිරිපා යුත් සුරිඳු නිතිලෝ ඇ ස
සිත් පිනවන ඇති ආසිරි නුවණය ස
පුත් රුවනක් සොඳ දුන මැනවි තිසි ලෙ ස

(103)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிங்களப் பாடல், நூல் முழுவதிலும் வந்துள்ள பாடல்களுள் மிகச் சிறந்த பிரார்த்தனைப் பாடலாகும். கவிஞர் பிரார்த்தனைப்படி உலகுடையதேவிக்குப் பிள்ளை வரம் கிடைக்கிறது. அரச பரம்பரைக்கு ஆண் மகவு பிறக்கிறது. வரலாற்றின்படி உலகுடையதேவி (ලෝකනාථාව – லோகநாதாவ) கோட்டை அரசன் ஆறாம் பராக்கிரமபாகுவின் மகள். அவள் நன்னூர்த் துணையார் (නන්නූර් තුනෛයාර් - நன்னூர்த் துணையார்) நல்லூர்த் துணைவன் என்ற தமிழ்ப் பெருமகனை மணந்திருந்தாள். இவ்விருவருக்கும் ஓர் ஆண் மகன் பிறந்து அரச பரம்பரையை விளக்கவே கவிஞர் பிரார்த்தித்தார். அப்பிரார்த்தனையை வைத்தே செலலிஹினி சந்தேசத்தைப் பாடி விபீடண தெய்வத்தை வணங்கினார். இனி இச்சிங்களத் தூது காவியத்தைத் தமிழிலே மொழி பெயர்த்துப் பூவைவிடுதூது செய்திருக்கிறார் நவாலியூர் சோ. நடராசன். அப்பாடலையும் பார்ப்போம்.

**கண்ணென வுலகமூன்றுங் கருதிடு மமரர் கோவே**
**நண்ணலர் மகுடத் தாம நறுமலர்த் தேறல் தோய்ந்த**
**வண்ணநற் பாதத் தண்ணல் வயங்கிடு மறிவு கீர்த்தி**
**திண்ணிய வாயுளோங்குந் திருமக வருளல் வேண்டும்.**

**(105)**

பாடலில் ஞானமும் (ඥානයද) கீர்த்தியும் (යසසද) நீண்ட ஆயுளும் (ආයුෂද) உடைய (ඇති) அழகிய புதல்வனைப் (පුත්‍ර රත්නයක්) பெறும் பேற்றை அருளல் வேண்டுமென்று பிரார்த்தனை செய்கிறார் புலவர். விபீஷண தெய்வத்தின் வர்ணனையை ஸ்ரீ இராகுலர் கூறுமாற்றை பொருணடையில் இன்னொரு முறை பார்ப்போம்.

**දත්රුපු(න්ගේ) කිරුළු(වල) මල් දම්(හි) සුවඳ මී වැස**
**නෙත් (වූ) සිරිපා යුත් (වූ) තිලෝ ඇස (වැනි) සුරිඳුනි**
**ආ(ද). සිරි(ද) නුවණ(ද) යස(ද) ඇති(වූ)**
**සිත් පිනවන සොඳ පුත් රුවනක් තිසි ලෙස දුන මැනවි.**

விபீஷணத் தெய்வத்திடம் **පුත් රුවනක්** - புத் றுவனக், **පුත්‍ර රත්නයන්** – புத்து றத்னயன் - புத்திர ரத்தினத்தை வேண்டுகிறார். அப்புத்திரன் **සිත් පිනවන** சித் பினவன - கண்டவர் மனத்தைக் கவரும் அழகுள்ள புத்திரனாக இருக்க வேண்டும். அத்துடன் **ආ(ද)** ஆ(த) - ஆயுளும், **සිරි(ද)** சிறி(த) - புகழும், **නුවණ(ද)** நுவண(த) - ஞானமும் நிறைந்த புத்திரனாகவும் இருக்க வேண்டும். இந்த வரத்தை விபீஷணத் தெய்வத்திடம் கேட்கிறார் புலவர். அந்த விபீஷணத் தெய்வத்தை மூன்று உலகுக்கும் கண்போன்ற தேவ சிந்தாமணியே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கிறார். அவருடைய திருப்பாதத்தில் பகைவர்களும்-பகையரசர்களும் விழுந்து வணங்குகிறார்கள். அப்பொழுது பகையரசர்கள் அணிந்திருக்கும் வாசனை பொருந்திய மாலைகளிலிருந்தும் தேன் வடிகிறது. මල්මාලාවන්ගේ සුවඳ මල්. පැණි වැස්සී තෙමුණු - மல்மாலைவன்கே சுவந்த மல் பெனி வெஸ்ஸி தெமுணு – ශ්‍රී පාද -சிறீ பாத - அவ்வாறு வடியும் தேன் விபீஷணத் தெய்வத்தின் பாதங்களை நனைக்கிறது. பகைவர்களும் வணங்கும் பெரிய தெய்வம் - அவர்களுக்கும் அருள் சுரக்கும் தெய்வம் - இந்த விபீஷணத் தெய்வம் என்பதை அழகாகக் காட்டுகிறார் ஸ்ரீ இராகுலர். இராமாயண இலக்கியத்தில் சிறீ இராமர் தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இராமரின் தூதன் அநுமானும் வழிபடு தெய்வமாகி யிருக்கிறான். இலங்கையில் இராமரின் நண்பன் දෙව් රම් මිතුරු – தெவி றம் மித்துறு - விபீஷணன் - இராவணனின் தம்பி விபீஷணன் தெய்வமாகப் போற்றப்படுவதைக் காண்கிறோம். உப்புல்வன் (விஷ்ணு) திருமால் என்ற தெய்வத்தைப் பாட்டுடைத் தெய்வமாக உடைய கோகில (குயில் விடுதூது) சந்தேசத்திலும் விபீஷணக் கடவுளின் கோயில் குறிப்பிடப்படுகின்றது. வாத்து விடுதூதிலும் தூதுவன் களனியிலுள்ள விபீடண தெய்வத்தை வணங்கும் சந்தர்ப்பம் குறிப்பிடப்படுகிறது.

செலலிஹினி சந்தேசத்தில் முருகன், சிவன் ஆகிய கடவுளர்களின் வழிபாடும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இப்பிரபந்தம் கூறும் பாக்கள் மூலம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஜயவர்த்தனபுரத்தில் இருந்த முருகன் ஆலயத்தையும் சிவன் ஆலயத்தையும் பற்றிய செய்திகளை அறிகிறோம். அக்காலத்தில் கோட்டை மன்னனாக விளங்கிய ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிச் சிறப்பைக் கண்டு பெருமைப்படுகின்றோம். அக்காலத்தில் விளங்கிய ஸ்ரீ இராகுல தேரர் போன்ற புலவர்களின் தமிழ்ப் புலமையை அவர் பாடிய காவியங்களின் சிறப்பைப் படித்து மகிழ்கிறோம். செலலிஹினி சந்தேசத்தில் முருகன் கோவில்பற்றி வரும் பாடல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ගනේ | මිණි බැබලිකිරණෝ'වි සත | පාය |
| රනේ | යට'ග සැවුලි'දු දද ගල | පාය |
| අනේ | ලකර කල පුරු අප නර | පාය |
| පෙනේ | දකුණු මහසෙන් දෙව් රද | පාය |

(26)

இப்பாடலில் முருகன் கோவில்தான் මහසෙන් දෙව් රද පාය – மஹஸென் தெவி றத பாய - என்று குறிப்பிடப்படுகிறது. මහ වූ සෙන් –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா வூ ஸெனா - என்பதுதான் මහසෙන් - மஹஸென் ஆகிறது. அதாவது பெரிய சேனையை உடையவர் என்பது கருத்தாகும். அது முருகக் கடவுளையே குறிக்கிறது. இனி அச்சிங்களப் பாடலைப் பொருளுக் கேற்பப் படித்தால்:

සතපා කිරණ-එවි. ගන මිණි බැබළි
රන් යටඅග සැවුලිඳු දද ගලපා
අනේ ලකර කළ. මහසෙන් දෙව් රද පාය අප
කරපා පුර දකුණැ පෙනේ.

முருகக் கடவுளின் கோயில் - மஹஸென் தெவ்றத பாய (මහසෙන් දෙව් රද පාය) - எங்கள் அரசரின் நகருக்குத் தெற்குப் - அப நறபா புற தக்குணு – (අප නරපා පුර දකුණැ) பக்கத்தில் காணப்படுகிறது. அங்கே சூரியனின் கிரணம்போல (සතපා කිරණ-එවි-හිරුරැස් වැනි) - ஸதபா கிறண-எவ்-ஹிறுறெஸ்வெனி - மணிக்கூட்டம் ஜொலிக்கிறது - பிரகாசிக்கிறது. (ගන මිණි බැබළි)- கண மிணி பெபளி - பொற்றூண்களில், (රන්යටි-අග)- றன்யட்டி-அக-சேவற் கொடிகள், - ஸெவுலிந்து தத (-சேவல்) பறக்கின்றன. அதுமட்டுமன்றி, வேறுபல அலங்காரங்களும் நிறைந்த தூண்கள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் கொண்டு விளங்குகிறது தேவசேனாதிபதியாகிய முருகக் கடவுளின் கோவில். பூவையே அதைக் காண்பாய் எனப் புலவர் தூதுப் புள்ளிடம் கூறுவதுபோல அமைந்திருக்கிறது அவ்வழகிய பாடல். முருகக் கடவுள் அவரது அழகான கோவில், அவரது சேவற்கொடி என்பன சொன்னயம், பொருணயம் நிறைந்த பாடலில் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இச்சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்புப் பாடலையும் பார்ப்போம்.

**செங்கதிர்க் கற்றைபோலத் திகழ்ந்திடு மணியின் கூட்டம்**
**தொங்கு பொற் கால்கள் தோறும் சேவலங் கொடிகள் தூங்க**
**எங்கணும் அணிகள்கால எழுந்திடு குமரன் கோட்டம்**
**நங்குல மன்னர்வாழு நகர்ப்புறந் தென்பாற் காண்டி.**

குமரன் கோட்டம் என்றது முருகன் கோவிலையே குறிக்கிறது.

இனி, ஸ்ரீ இராகுலர் சிவபெருமான் ஆலயத்தைப்பற்றியும் சிறப்பித்துப் பாடுகிறார். அக்கோவிலில் தமிழ்ப்பாக்களாகிய தேவாரம், திருவாசகம் ஒலிப்பதையும் குறிப்பிடுகிறார். கருப்பூர தீபத்தையும், தூப தீபங்களையும் காட்டுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

**කළුවැල්** **කපුරු දුමැ තුල ලෙලෙන දද පෙ** **ළ**
**සුවිසල්** **මිහිඟු සක් සන් මිණි හඬ වන** **ළ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කරළොල්        සතන් පවසන තියූ ගී දෙම        ළ
මනකල්        ඉසුරු කෝවිලැ ලගිනේ ලක        ළ

(22)

இப்பாடலில் (තෝ) - தோ, (ඉසුරුකෝවිලැ ලගිනේ) ஈஸுறுகோவிலே லகினே, அதாவது ஈசுரன் கோவிலில் சிறிது பொழுது தங்குவாய் எனக் கூறுகிறார் புலவர். அதன்மூலம் அக்காலத்தில் ஈசுரன் கோவில் - சிவன் கோவிலும் சிறப்புடன் இருந்ததென்பதை இப்பாடல் எடுத்துக் காட்டுகின்றது. அக்கோவிலில் அகிற்புகை (කළුවැල් දුම්–කළු අගිල්) களுவெல் தும் - களு அகில் எழுகின்றது. கருப்பூரத்தின் புகை (කපුරු දුම්) கப்புறு தும் எழுகின்றது. துகிற் கொடிகள் (දද පෙළ) தத பெள நிரை நிரையாக நின்று அசைகின்றன. முரசமும் - மேளமும் சங்கும் (මිහිඟු බෙර හඬ–සක් හඬ) மிஹிங்கு பெற ஹண்ட-ஸக் ஹண்ட முழங்குகின்றன. அவை மேகம்போல் முழங்குகின்றன. மணிகள் (මිණි හඬ) மிணி ஹண்ட இரட்டுகின்றன - அதாவது ஒலிக்கின்றன. பக்தர்கள் பண்ணமைந்த தமிழ்ப்பாடல்களைப் பாடுகிறார்கள். சிறப்பாக அக்கோவிலில் பூசைகள் நடக்கின்றன.

கோவிலிலே பாடும் பண்ணமைந்த பாடல் பறவைகளின் மனத்தையே கவர்கின்றன. அவை (සතන් ලොල් කැරළ කියූ ගී) - ஸதன் லொல் கெறெ கியூ கீ - அவ்வளவு இனிமையான பாடல்கள். அத்தகைய இனிமையான பாடல்கள் தூதுவனாகிய உன்னையும் கவரும் என்கிறார் புலவர். அந்த ஈசுரன் கோவில் (අලංකෘත ඊශ්වර දේවාලය) அலங்கிறுத ஈஸ்வர தேவாலய - அழகான கோவில் என வருணிக்கிறார். இச்சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

அகிற்புகை கருப்பூரத்தி னளாவிய புகையி னோடு
துகிற்கொடி நிரைகள் தூங்கத் துவன்றிடு முரசுஞ் சங்கும்
முகிற்குல மென்ன வேங்க முதிர்மணி யிரட்ட வன்பு
முகிழ்ந்திடத் தமிழ்ப்பா வோது முக்கணன் கோயில் சேர்வாய்

(24)

ஸ்ரீ இராகுலர் கூறும் மகேசனின் குமரன் கோட்டத்தை ஜெயவர்த்தனபுரத்தின் தெற்குப்பகுதியில் கண்டோம். இப்பாடலில் மகேசுவரரின் அழகிய கோவிலின் காட்சியைக் கண்டோம். இவையெல்லாம் இலக்கியங்கள் காட்டும் சமய கலாசார ஒற்றுமைகளைப் பிரதிபலிக்கின்றனவன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய கலாசார ஒற்றுமை II

வேத காலத்தில் இயற்கையை வழிபட்டார்கள். அக்கினி, வருணன், இந்திரன், யமன், உருத்திரன் ஆகியோர் தெய்வங்களாகப் போற்றப்பட்டார்கள். சங்க காலத்தில் முருகன், திருமால் போன்ற தெய்வங்கள் சிறப்பிக்கப்பட்டார்கள். இவ்வாறு வெவ்வேறு தெய்வங்கள் முக்கியத்துவம் பெறுவதை இலக்கியங்கள் காட்டுகின்றன. இந்த இலக்கியங்களே சமய கலாசாரத் தொடர்புகளுக்கும் ஊற்றாக விளங்கி நிற்கின்றன. இலங்கையில் சிங்கள தமிழ் மக்களின் வழிபாட்டிலும் முருகன், திருமால், சிவன், கணபதி, பத்தினி தெய்வம் முதலியன முக்கிய இடத்தை வகிக்கின்றன. விசேடமாகச் சிங்கள சந்தேச காவியங்களில் முருகன், சிவன், விபீஷணன், திருமால் முதலிய தெய்வங்கள் வர்ணிக்கப்படுகின்றன. இத்தெய்வங்களின் கோயில்கள் சிறப்பாக விளங்கியமையை இலக்கியப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே ஜயவர்த்தனபுர கோட்டையில் சிவன் ஆலயம் இருந்த செய்தியை செலலிஹினி சந்தேச பாடல்களில் காண்கிறோம். அன்றியும் புறா விடுதூது என்னும் பறவி சந்தேச போன்ற பிற சந்தேச காவியங்களிலும் சிவாலயங்கள் இருந்த இடங்கள் பற்றிய செய்திகளைக் காண்கிறோம். ஸ்ரீ இராகுலர் சிவாலயத்தில் தமிழ்ப்பாக்களாகிய தேவாரம், திருவாசகம் பாடப்படுவதையும் குறிப்பிடுகிறார். அக்கோவிலில் நடைபெறும் பூஜைகள், வழிபாடுகள் என்பனவற்றையும் அழகாக வர்ணிக்கிறார். சுவையான அப்பாடல்களில் பத்தி மணமும் கமழ்கிறது. அப்பாடல் ஒன்றினை முதலில் எடுத்துக் கொள்வோம்:

කළුවැල් කපුරු දුම්‍ැ තුළ ලෙලෙන දද පෙ ළ
සුවිසල් මිහිඟු සක් සත් මිණි හඩ වත ළ
කරලොල් සතන් පවසන තියු ගී දෙම ළ
මනකල් ඉසුරු කෝවිලැ ලගිනේ ලක ළ

(22)

இப்பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால் :

කළුවැල් (හා) කපුරු දුම් ඇතුලේ දද පෙළ ලෙලෙන. සුවිසල් මිහිඟු සක් සක් (හා) මිණි හඬ වතළ දෙමළ මනකල් සතන් ලොල් කරු තියුගී පවසන ළකළ ඉසුරු කෝවිලැ ලගිනේ. பாடலில் வரும் ஒரு அடியில் තෝ ඉසුරු කෝවිලැ ලහිනේ - தோ இஸுறு கோவிலே லஹினே - என்று ஈசுரன் கோவிலில் தங்கும்படி கூறுகிறார் புலவர். அவ்வாறு கூறுபவர் செலலிஹினி சந்தேச ஆசிரியர் ஸ்ரீ இராகுலர். அவர் யாரிடம் அவ்வாறு கூறுகிறார். விபீஷணத் தெய்வத்திடம் களனி நகரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி, தூது கொண்டு செல்லும் நாகணவாய்ப் பட்சியிடம் கூறுகிறார். இப்பாடல் வாயிலாக அக்காலத்தில் - கோட்டைக் காலத்தில் ஈசுரன் கோவில் - சிவன் கோவில் சிறப்புடன் இருந்ததென்பது விளங்குகின்றது. அச்சிவன் கோவிலில் (කළුවැල්-කළු අගිල්) களுவெல் - களு அஹில் அகிற்புகை எழுகின்றது. ( කපුරු දුම්- கப்புறு தும்) கர்ப்பூரப் புகை எழுகின்றது. தூப தீபங்கள் கோவிலில் காட்டப்படுவதால் புகை மணங்கமழுகிறது. (දද පෙළ - தத பெள) துகிற் கொடிகள் நிரை நிரையாக நின்று அசைகின்றன. (මිහිඟු බෙර හඬ - மிஹிங்கு பெற கண்ட) முரசமும் - மேளமும் (සක් හඬ - ஸக் ஹண்ட) சங்கும் முழங்குகின்றன. அவை சாதாரணமாக ஒலிக்காமல் மேகம் போல் பேரொலியோடு முழங்குகின்றன. (මිණි හඬ) - மிணி ஹண்ட) மணிகள் இரட்டுகின்றன - ஒலிக்கின்றன. பக்தர்கள் பண்ணமைந்த தமிழ்ப் பாடல்களைப் பாடுகிறார்கள். அக்கோவிலிற் சிறப்பாகப் பூசைகள் நடைபெறுகின்றன. கோவிலிலே பாடும் பண்ணமைந்த பாடல்கள் பறவைகளின் மனத்தையே கவர்கின்றன. பாடல்களோ தமிழ்ப்பாடல்கள். அவற்றைப் பாடுபவர்களும் அழகிய தமிழ்ப் பெண்கள். அவை (සතන් ලොල් කෙරෙ තියු ගී - ஸதன் லொல் கெறெ தியு கீ என்றால் கீதம். (සතන්- ஸதன்) என்றது பிராணிகளை யாகும். நாகணவாயும் பிராணிகளுள் அடங்குமன்றோ! அப்பாடல்கள் அவ்வளவு இனிமையான பாடல்கள் "அத்தகைய இனிய பாடல்கள் தூதுப் பறவையாகிய உன்னையும் நிச்சயம் கவரும்" என்கிறார் புலவர். இனி அந்த ஈசுரன் கோவில் (අලංකෘත ඊශ්වර දේවාලය) அலங்கிறுத ஈஸ்வர தேவாலய - அழகான கோவில் என வர்ணிக்கிறார். இச்சிங்களப் பாடலின் மொழி பெயர்ப்புப் பாடல் பின்வருமாறு:

**அகிற்புகை கருப்பூரத்தி னளாவிய புகையி னோடு**
**துகிற்கொடி நிரைகள் தூங்கத் துவன்றிடு முரசுஞ் சங்கும்**
**முகிற்குல மென்ன வேங்க முதிர்மணி யிரட்ட வன்பு**
**முகிழ்த்திடத் தமிழ்ப்பா வோது முக்கணன் கோயில் சேர்வாய்"**

**(24)**

இதே செலலிஹினி சந்தேசவில் வரும் இன்னொரு பாடலையும் பார்ப்போம்.

උදා ගිරි කසුන් රිටි වැට හිසැ බැබ ළි
එදා සහසකර සහනෙ'වි කරන හෙ ළි
යොදා නුවන් ඉසුරුට කරන පුදකෙ ළි
විදා පියා තිල'ඹරෙ යන් නොවි මැ ළි

(24)



49544i

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடல் வாயிலாகக் காலை வேளையில் ஈசுரனுக்குச் செய்யும் காலைப் பூசை வர்ணிக்கப்படுகின்றது. முதலில் இப்பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

උදාගිරි (නමැති) කසුන් රිටි වැට හිසැ බැබළි පහන-එව් සහසකර එදා හෙළි කරන. ඉසුරුට කරන පුදකෙළි නුවන්(හි) යොදා. මැළි නොවී පියා තිලඹරැ යන්.

උදාගිරි- කසුන් රිටි වැට හිසැ බැබළි පහන-එව් - உதாகிறி - கஸுன் றிட்டி வெட்ர ஹிஸ பெவளி பஹன எவ் - என்று கூறியதன் மூலம் காலைச் சூரியன் உதயகிரியில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்குப் போலப் பிரகாசிக்கிறான். மேலும், அந்த உதயகிரி தங்கத் தூண்களின் ஏற்றிவைக்கப்பட்ட விளக்குப் போல் உதயகிரியில் எழுகின்ற சூரியன் காட்சியளிக்கின்றது. இது நல்லதோர் உவமையணி. சூரியனைப்பற்றி வர்ணிக்கும்போது සහසකර - ஸஹஸகற - ஆயிரம் கதிர்களை யுடையவன் என்று கூறுகிறார். அருமையான சூரிய உதயக்காட்சியை ஸ்ரீ இராகுலர் எம் கண்முன் நிறுத்துகிறார். இவற்றையெல்லாம் வர்ணித்த புலவர் இந்தக் காலைவேளையில் ඉසුරුට කරන පුද කෙළි - இஸுறெட்ட கறன புதகெளி - ஈசுரனுக்குச் செய்யும் பூஜையை அதுவும் உதயகாலப் பூஜையைக் கண்டு வணங்குவாய்; 'நீ செல்லும் வழியில் சிவாலயத்தில் மகாதேவனுக்குச் செய்யும் பூஜையைக் கண்டபின்பே நீல வானத்தில் எழுந்து செல்வாய்' என்று பாடுகிறார். இப்பாடல் ஜயவர்த்தன புர கோட்டையின் கிழக்குப் பக்கத்தில் சிவாலயம் இருந்ததென்பதையும் அங்கு காலப்பூஜை தவறாது நடந்ததென்பதையும் தெளிவு படுத்துகின்றது. இச்சிங்களப் பாடலின் மொழிப்பெயர்ப்புப் பாடல் பின்வருமாறு :

**தங்கக்கால் நாட்டிவேலி சமைத்ததிற் பொலிந்து தோன்றும்**
**துங்கப் பொற் தீபம் போலச் சூரிய னுதயக் குன்றில்**
**தங்கிப் பொன் னொளியைக் காலச் சங்கரர்க் கெடுத்த பூசை**
**பொங்கிக் கண்டுவந்து போற்றிப் போகுவை சோர்விலாதே**

இம் மொழிபெயர்ப்புப் பாடல் நவாலியூர் சோ. நடராசனின் பூவை விடுதூதில் வருகின்றது. ஈசுரனுக்கு சங்கரன், மகாதேவன் என்றும் பெயர்கள் உண்டு. இச்சிங்களப் பாடல் ஆசிரியரின் சமயம், அவர்கால மன்னன் ஆட்சி, தூதின் தன்மை என்பவற்றை நுணுகி நோக்கும் போது அக்காலத்தில் நிலவிய சமய கலாசார ஒற்றுமைகள் தெளிவாகப் புலப்படும்.

பறவி சந்தேச என்னும் புறாவிடுதூது ஸ்ரீ இராகுலின் இன்னொரு படைப்பு இலக்கியம். அந்தச் சந்தேசவிலும் ஈசுரன் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்படுகிறது. ஜயவர்த்தன புர கோட்டையிலிருந்து தூதாகிய புறா தேவிநுவரை உப்புல்வனிடம் - திருமாலிடம் செல்லும் வழியில் இக்கோவில் வருகிறது. அக்கோவிலுள்ள ஈசுவரன் ඊශ්වරයා–සුදසුන්– ஈஸ்வரயா - ஸுதஸுன் என்று பாடலில் குறிப்பிடப்படுகிறார். அப்பாடல் பின்வறுமாறு :

තද තෙද   පැවැති යුගතග විලසින් නිබ   ද
සද නද   කරන විලසින් මද රද පබ   ද
බද අද   රින් වැඩ සිදුවන ලෙස ලොබ   ද
යැද සුද   සුන් දෙවිඳුට යාගන් සබ   ද

(52)

இப்பாட்டினைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால் :

යුගතග විලසින්, නිබද, තද තෙද,
මද රද විලසින්, සද නද කරන
සුදසුන් දෙවිඳුව, ලොබඳ වැඩ සිදුවන ලෙස,
බඳ අදරින් යැද, සබඳ යාගන්, යනු

**යුගතග විලසින්**-யுகதக விலஸின்- யுகாந்த கால அக்கினி போல், **නිබද**– நிவந்த - எப்பொழுதும், **තද තෙද**– தத நெத - ஒளிமயமானவன், **මදරද විලසින්** - மதறத விலஸின் - மன்மதன் போல் அழகானவன், அவற்றால் **සද නද කරන** - ஸந்த நத கறன - மனத்தை என்றும் மகிழ்விப்பான், இத்தகைய **සුදශ්න** -ஸுதர்ஸன - மகாதேவனுக்கு, (**ලොබද** – லொபந்த - உலகப் பிரசித்திபெற்ற, **වැඩ** - வெட - கைங்கரியத்தை (தூதாகிய வேலையை) நிறைவேற்றுதற் பொருட்டு, **බද අදරින්** - பந்த அதறின் - அன்போடு வணங்கி, **යාගන්** - பிரார்தித்து மித்திரனே, **යාගන්** – யாகன் - தூது, உன் யாத்திரையைச் செய்வாயாக என்பது இப்பாடலின் பொருளாகும். இப்பாடலின்மூலம் அக்காலத்திலே சுதர்ஷணன் ஆகிய சிவனுக்குக் கோவில் இருந்ததென்பது தெளிவாகிறது. அவருடைய அழகு, பெருமை என்பனவும் வர்ணிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்து, பௌத்த மக்களால் சிவனும் போற்றப்பட்ட வரலாற்றுச் செய்தியை அறிகிறோம். எதுகை நயம், சொன்னயம், பொருணயம் நிறைந்த இலக்கியப் பாடல்கள் பக்திச் சுவையையும் தந்து பரசவப்படுத்துகின்றனவன்றோ!

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய ஆர்வம்

இலக்கியங்கள் சமூகக் கண்ணாடி என்பர். மக்களின் வாழ்க்கை, கலை, கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் சமய வாழ்க்கை, கடவுள் வழிபாடு என்பவற்றையும் பிரதிபலிக்கின்றன. சைவம், வைணவம், கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய பல மதங்களையும் பிரதிபலிக்கும் சிறந்த இலக்கியங்கள் தமிழிலே உண்டு. அவ்வாறே பௌத்த மதத்தைப் பிரதிபலிக்கும் சிங்கள இலக்கியங்களும் மக்களால் விரும்பப்படும் சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இராகுலர், சந்தேச காவியங்களிலே பொதுமக்கள் விரும்பும் சமயத்தின் புது யுகமொன்றைத் தொடங்கி வைக்கிறார். **பறவி சந்தேச (புறா விடுதூது), செலலிஹினி சந்தேச (பூவை விடுதூது)** ஆகிய இரு பிரபந்தங்களிலும் பொதுமக்கள் வழிபடும் உப்புல்வன், விஷ்ணு, விபீஷணன் ஆகிய தெய்வங்களின் சக்தியையும் வீரத்தையும் புலவர் புகழ்கிறார். இராகுல தேரரின் காலத்தில் வாழ்ந்த புத்தசமயத்தவர்களிற் பெரும்பான்மையோர், இன்று போலவே இந்துமதத் தெய்வங்களையும் தமக்கு நன்மை செய்யுமாறு வணங்கினார்கள். வெகுசன இயக்கத்தின் செல்வாக்கு கிராமவாசிப் பிரிவுப் பிக்குக் கவிஞரின் பாட்டுகளிலும் பிரதிபலித்தது. இச் செல்வாக்கையே ஸ்ரீ இராகுல தேரரின் செய்யுள்களிலும் காண்கிறோம். இராகுலரின் தூதுப் பிரபந்தங்களில் வரும் நடனங்கள், நீர் விளையாட்டுகள் முதலியவற்றின் வருணனைகளில் ஒரோ வழிகாமச்சுவை இடம்பெறுவது உண்மை. எனினும், சில சமய இலட்சியங்களையும், மனப்பான்மைகளையும் புகட்டுவதே இலக்கியத்தின் முடிவான நோக்கம் என்பதை நாம் அவதானிக்கலாம். சந்தேச காவியங்கள் பெரும்பாலும் உலகியல்பற்றிய விடயங்களையே கூறும். ஆனாலும், சமூகத்தில் இழையோடியிருந்த ஆழ்ந்த சமய உணர்ச்சி இந்த இலக்கியங்களில் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. இவ்விலக்கிய மரபினையே இராகுலருக்குப் பின்வந்த எழுத்தாளர்கள், புலவர்கள் என்பவர்களும் பின்பற்றினர். இராகுலரின் ஆழ்ந்த சமய ஆர்வத்தைப் பின்வரும் **செலலிஹினி சந்தேச** பாடல் காட்டுகிறது.

දිය තෙක් පැතිර සිටි බුදු ගුණ කියා හැම
සග මොක් ලබනු වස් පියයුග ඔබා බිම
සිය සක් පුරා දුටු මෙන් තුටුවැ මුනි තුම
වඳු ලක් තිලකගෙයි වැඩැ උන් මහ පිළිම

(60)

புத்தபகவானின் ஒன்பது குணங்களைக் கூறும் நவமந்திரம் பற்றியும் இலங்காதிலகம் என்ற படிமக் கோவில் பற்றியும் இப்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. இப்பாடலைக் கருத்துக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

(තෝ) දිය තෙක් පැතිර සිටි හැම බුදු ගුණ කියා, සග මොක් ලබනු වස් (තගේ පිය බිම ඔබා, සිය සත් පුරා මුනිතුමා දුටුමෙන් තුටුවැ, ලක් තිලකගෙයි වැඩ උන් මහ පිළිම වඳු- பாடலில் - முனிதுமா என்பதே ஓசைநயம் நோக்கி මුනිතුම-முனிதும என நிற்கிறது. புலவர் நாகணவாய்ப் பட்சியிடம் கூறுகிறார். கோவிலைத் தரிசிக்குமாறும் புத்தபகவானை வழிபாடுசெய்யுமாறும் பாடுகிறார். දිය තෙක් පැතිර සිටි– திய தெக் பெதிற சிட்டி - உலகம் முழுவதும் பரவிய, හැම බුදුගුණ කියා–ஹெம புதுகுண கியா - புத்த பெருமானின் ஒன்பது குணங்களைக் கூறும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு, පිය යුග බිම ඔබා - பிய யுக பிம ஒபா - உனது இரண்டு சிறகுகளையும் நிலத்திலே பதித்து, මුනිතුමා දුටු මෙන් තුටු වැ - முனிதுமா துட்டு மென் துட்டு வெ - முனிராசனைக் கண்டவாறு மனமகிழ்ந்து அதுவும் எவ்வாறெனின், සිය සත් පුරා - ஸிய ஸக் புறா - உனது சொந்தக் கண்கள் நிறைய - கண்டவாறு போல் மனமகிழ்ந்து, ලක් තිලකගෙයි වැඩ උන් - லக் திலகெயி வெட உன் - இலங்கா திலக என்ற படிமக் கோவிலில் எழுந்தருளியிருக்கும், මහ පිළිම වඳු - மஹ பிலிம வந்து - படிமத்தை வணங்குவாயாக, තෝ. බුදුගුණ කියා. පියයුග බිම ඔබා. මුනිතුමා දුටු මෙන් තුටුවැ, මහ පිළිම වඳු. புத்த பகவானின் குணங்கள் எண்ணில்லாதவை. அதனையே (හැම බුදු ගුණ -ஹெம புது குண) புத்தரின் எல்லாக் குணங்களையும் என்கிறார். மேலும், புத்தபகவானின் ஒன்பது குணங்களைக் கொண்ட (නව බුදු ගුණ - நவ புது குண) நவமந்திரத்தை ஓதும்படி நாகணவாய்ப் பட்சியிடம் புலவர் கூறுகிறார். அந்த நவமந்திரத்தில் புத்தபகவானின் சிறப்புகளாகிய புனிதமானவன் - அருகன் தீர்க்கதரிசனமாக எல்லாம் அறிந்தவன் முதலாம் குணங்கள் அடங்குகின்றன.

சிவாகமங்கள் இறைவனை எண்குணத்தான் எனச் சொல்லும். திருவள்ளுவரும் எண்குணத்தான் தாளை வணங்காத்தலை என்கிறார். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருளுடைமை முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பன அவ்வெண்குணங்களாகும். புத்தபகவானின் நவமந்திரம் பின்வருமாறு:

ඉතිපිසෝ භගවා (1) අරහං (2) සම්මා සම්බුද්ධෝ (3) විජ්ජා චරණ සම්පන්නො (4) සුගතො (5) ලොකවිදූ (6) අනුත්තරෝ පුරිස ධම්ම සාරථි (7) සත්ථා දෙවමනුස්සානං බුද්ධෝ (9) භගවා (ති)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நவமந்திரத்தைச் சொல்லும்படியே நாகணவாய்ப்பட்சியிடம் கூறுகிறார். இதே சூத்திரத்தைத்தான் புத்தசமயத்தவர்கள் வணக்கத்தின் போது பெரும்பாலும் பாராயணம் செய்வார்கள். இவ்வாறு சந்தேச இலக்கியத்தில் சமயக் கருத்தையும் சமய வழிபாட்டுமுறையையும் வெளிப்படச் செய்திருக்கிறார் புலவர்.

இனி, இச் சிங்களப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பினைப் பூவைவிடு தூதில் பின்வருமாறு தருகிறார். நவாலியூர் சோ. நடராசன்:

**"எண்டிசை யிலங்குபுக ழீசனருள் கோயில்**
**கொண்டிடு மிலங்கதில கங்குறுகி யன்போ**
**டண்டருல கோடுநிரு வாணமரு ளென்றே**
**கண்டவகை யம்முனி கதிர்ப்படிம மேத்தாய்"**

**(62)**

எட்டுத் திசைகளிலும் பரந்த புத்தபெருமானின் ஒன்பது குணங்களைக் கூறும் மந்திரத்தை உச்சரிப்பாயாக; ஆகாயத்திலிருந்து கீழே இறங்குவாயாக. அவ்வாறு இறங்கி இலங்கதிலக என்ற படிமக் கோவிலைத் தரிசிப்பாயாக. அங்கே எழுந்தருளியிருக்கும் முனிராசனுடைய படிமத்தைக் காண்பாயாக. அங்கே அண்ணலை நேரிற் கண்டவாறு மகிழ்ச்சி அடைவாயாக. விண்ணவர் பதமும் நிருவாண நிலையும் அருள்க என்று வழிபாடு செய்வாயாக என்று புலவர் கூறும் விதத்தில் சமயக் கருத்துக்களைக் காண்கிறோம்.

பக்தி இலக்கியங்கள் பாமர உள்ளங்களையும் கொள்ளை கொண்டன. இந்த உண்மையைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பரக்கக் காண்கிறோம். வறியவர், அறிவற்றவர், உயர்ந்தவர், வலியவர் ஆகிய யாவரும் பக்தி மார்க்கத்தைக் கைக்கொள்ளலாம். இதே பக்தி மார்க்கத்தில் சிங்களப் புலவராகிய இராகுலருக்கும் நம்பிக்கை இருந்தது. அவருடைய சமய ஆர்வத்தைக்காட்ட செலலிஹினி சந்தேசவில் இன்னொரு பாடலை எடுத்துக் கொள்வோம்:

**දිගුනෙත් තිඹු'පුලෙ'ව් රත'දර පබළ රහ**
**සිරිමත් සුපුන් සඳ වැනි වුවන මනරහ**
**පහැපත් ලකල රන් වන් විලසින් ලොවග**
**වැදහොත් පිළිම හිමි වඳු පායැ පැළැ දිග**

**(64)**

முதலில், பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

**දිගුනෙත් උපුල් එව්. රතු අදර පබළ රහ**
**මන රහ වුවන් සඳ වැනි සිරිමත්**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ළකල රන්වන් විලසින් පැහැපත්
පැළදිග පායැ ලොවග (හුගේ) වැදහොත් පිළිම හිමි (තෝ) වඳු.

රත'දර-என்பது රතු අදර - றத்து அதற என்பதாகும். அதாவது சிவப்பு வாய் இதழ்கள். அவை පබළ රඟ - பவள றங்க - பவளம்போல் சிவப்பாக இருக்கின்றன. இங்கு රඟ - றங்க என்றால் போல என்ற பொருளில் நிற்கிறது. ஆனால் මනරඟ - மனறங்க என்றால் அழகான - மனத்தைக் கவரும் என்பது பொருளாகும். ලොවග - லொவக என்பது உலகின் மேலானவரான புத்தபகவானைக் குறிக்கும்.

பாடலில் மேற்றிசையிலுள்ள மணிமண்டபத்தில் பள்ளிகொள்ளும் புத்தபகவானுடைய படிமம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. புலவர் கையாண்டிருக்கும் உவமை அணிகள் புத்தபகவானுடைய அழகிய வடிவை எம் மனக்கண்முன் கொண்டுவருகின்றன.

දිගුනෙත්- திகுநெத் அவருடைய நீண்ட கண்கள்; නිල් උපුල් එව් - நில் உப்புல் எவ், நீலமலர் - நீலோற்பல மலர் போன்றன; රතු අදර- றத்து அதற - சிவந்த அதரங்கள், පබළ රඟ - பவள றங்க - பவளம் போன்றன; මනරඟ වුවන - மனறங்க வுவன - அழகு வளரும் முகம்; සුපුන් සඳ වැනි- ஸுபுன் ஸந்த வெனி - பூரண சந்திரன் போன்றது; ළකළ රන්වන් විලසින් - லகள றன்வன் விலஸின் - அலங்காரமான பொன்மயவொளியில்; පැහැපත් - பெஹெபத் - பிரகாசிக்கின்றவரும்; පැළැදිග පායැ ලොවග - பெலதிக பாயெ லொவக - மேற்றிசையுள்ள மணிமண்டபத்தில் பள்ளி கொள்பவருமாகிய எம்பெருமானுடைய; ලොවග = ලොවට අගවූයේ - லொவக - லொவட்ட அகவுயே - உலகில் மேலானவர்; වැද හොත් පිළිම හිමි - வெத ஹொத் பிளிம ஹிமி - படிமத்தை - (சிலையைக்) திருக்கோலத்தைக் கண்டு; වඳු - வந்து - வணங்குவாயாக. புத்தபகவானுடைய கண்களுக்கு நீல மலர்களும், வாய் இதழ்களுக்கு பவளமும், வதனத்திற்குப் பூரண சந்திரனும் உவமானங்களாகக் காட்டப்பட்டுள்ள சிறப்பையும் காண்கிறோம்.

இச் சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்புப் பாடலிலும் இவ்வழகு வர்ணிக்கப்படுவதனைப் பார்ப்போம்.

**நீல மலர் போலிலகு நீள்விழிக ளோடு**
**கோலவத ரம்பவள கோகயம் விளங்க**
**சீலம் வளர் செந்திரு திகழ்மதி முகத்தோ**
**டேலவளர் மேற்சபை யிலங்குரு வணங்காய்.**

(66)

இலக்கிய நயங்கள் நிறைந்த பாடல்கள் சமய உணர்ச்சியையும் வெளிக் காட்டுவனவாக அமைந்துள்ளன; இலக்கியமும் சமயமும் சங்கமமாகும் பாடல்கள் அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பனவாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் வழிபாடு

இலக்கியங்கள் சமய கலாசார விடயங்களை விளக்கிநிற்கின்றன. இலக்கியங்களில் வரும் காவியத் தலைவன் தலைவியர் தெய்வத் தன்மை பெற்றுள்ளனர். இராமாயணத்தில் வரும் இராமன் தெய்வமாகவே போற்றப்படுகிறான். இராமாயணத்தைத் தமிழிற் பாடிய கம்பரும் 'தெய்வமாக்கதை' என்றே குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகி, 'கண்ணகி தெய்வ' மாகப் போற்றப்படுகிறாள். அதே கண்ணகி தெய்வம் இலங்கையிலே பௌத்த மக்களின் 'பத்தினி தெய்யோ' வாக வணங்கப்படுகிறாள். இராமனின் நண்பனாகிய விபீஷணனும் தெய்வமாகப் பூசிக்கப்படுகிறான். இலங்கையில் புத்தபகவானை வழிபடும் பௌத்தமக்கள் வழிபடும் இன்னொரு தெய்வம் திருமால். இவரை விஷ்ணு, நெடுமால், உப்புல்வன் என்ற பெயர்களிலும் வழிபாடு செய்கின்றனர். கதிர்காமத்திலும் விஷ்ணு ஆலயம் உண்டு. தேவந்துறை என்னும் தேவிநுவரையில் திருமாலுக்கு விசேடமான ஆலயம் உண்டு. கதிர்காம பெரஹரா விழாவை அடுத்து இங்கும் சிறப்பாகப் பெரஹரா விழா நடைபெறுவது வழக்கம். சிங்கள தூது காவியங்களில் உப்புல்வன் பாட்டுடைத் தெய்வதாக - வரம் அருளும் தெய்வமாகப் போற்றப்படுகிறார். மேலும், சிங்கள மன்னர்களையும் புத்தசாசனத்தையும் காக்கும் கடவுளாகவும் பேசப்படுகிறார். ஸ்ரீ இராகுலதேரர் பாடிய **பறவி சந்தேச – புறா விடுதூது** எனும் நூலில் தேவிநுவரையிலுள்ள உப்புல்வன் எனும் தெய்வமே பாட்டுடைத் தெய்வம். இப்புறா விடுதூதில் உப்புல்வன் பலவாறு போற்றிப் புகழப்படுகிறான். கோட்டைக்கால மன்னனாக விளங்கிய ஆறாவது பராக்கிரமபாகுவிற்குச் சகல நலங்களையும் அருளுமாறு ஒரு புறா தூதாக விடுக்கப்படுகிறது. தூதாகிய புறாவும் கோட்டையிலிருந்து இலங்கையின் தென்பகுதியிலுள்ள தேவிநுவரை - உப்புல்வனிடம் தூது கொண்டு செல்வதாக இக்காவியம் அமைந்துள்ளது. ஸ்ரீ இராகுல தேரரின் முதற்படைப்பு இது. அவரது 15 ஆவது வயதில் பாடப்பட்டதாக வரலாறு கூறும். இது சிருங்காரரசம் நிறைந்த காவியம். இக்காவியத்தில் விஷ்ணுவின் அவதாரங்கள் கூறப்படுகின்றன; அத்தோடு பராக்கிரமபாகு மன்னனோடு ஒப்பிடவும்படுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| මින් | ඉබි කුරු වරා නරසි ගොපළු වෙ | ස |
| වෙන් | ගත් මෙඈ තන් විකරන් දැක සියැ | ස |
| පින් | වත් අප තිරිඳු වෙත පවති'තෙක ලෙ | ස |
| මත් | තොස් වෙමින් විසු සිරි සඳ ඇම දව | ස |

**(35)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது,

**මීන්. ඉබි. කුරු. වරා තරසී. ගොපලු වෙස. මෙඳ. වෙන්ගත්.**
**තන් විකරන් දැක එකලෙස. පවතින. පින්වන් අප නිරිඳු වෙත. සිරිසඳ ඇම**
**දවස. මන්තොස් වෙමින් විසු**

**මීන්** என்பது மச்ச அவதாரம்; **ඉබි** - கூர்ம (ஆமை) அவதாரம்; **වරා** – வரா (பன்றி) அவதாரம்; **තරසී**- நரசிங்க அவதாரம்; **ගොපලුවෙස** - கோபால - கண்ணன் அவதாரம் முதலாகிய அவதாரங்களை எடுத்தவர் விஷ்ணு. இந்த அவதாரங்களெல்லாவற்றையும் கண்ணாற்கண்டு களித்தவள் சிறிகாந்த எனும் இலட்சுமிதேவி. அவள் விஷ்ணுவின் மனைவி; செல்வத்தின் அதிதேவதை. விஷ்ணுவின் பத்து அவதாரங் களையும் புராணங்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் விஷ்ணு அவதாரம் எடுக்கிறார் என்று புராணங்கள் அறைகின்றன. புராணங்கள் கூறும் சமஸ்கிருத சுலோகம் பின்வருமாறு:

> **යස්‍යා ලියත සල්ක සිමිති ජලධිඃ පෘෂ්ඨෙ ජගන් මණ්ඩලං**
> **දංෂ්ට්‍රායාං ධරණී නඛෙ දිතිසුතාධිශඃ පදෙ රෝදසී**
> **ක්‍රෝධෙ ක්ෂත්‍ර ගණඃ ශරෙ දශ මුඛඃ පාණෞ ප්‍රලම්බා සුරඃ**
> **ධ්‍යානෙ විශ්ව මසාව ධාර්මික කුලං කස්මෙම විද්මසෙම නමඃ**

மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசுஇராமன், இராமன், பலராமன், புத்தர், கல்கி ஆகிய பத்து அவதாரங்களும் விஷ்ணுவுக்குரியவை. இவற்றையே ஸ்ரீ இராகுலரும் பறவி சந்தேசவில் குறிப்பிடுகிறார். இப்பத்து அவதாரங்கள்மூலம் விஷ்ணு தமது சக்தியையும் மகிமையையும் உலகத்திற்கு விளக்கினார். ஆனால், பராக்கிரமபாகு (ஆறாவது) மன்னனோ ஒரேயொரு சுய ரூபத்தில் தனது வலிமையையும் மகிமையையும் எப்பொழுதும் காட்டி நிற்கிறான். விஷ்ணு பத்து அவதாரங்களிலும் செய்த சாகசங்களைக் கூடவேயிருந்து கண்ணாரக் கண்டவள் இலட்சுமி. இன்று அந்த இலட்சுமியே எங்கள் மன்னனின் சாகசங்களை அவனது ஒரே பிறப்பிலே காண்கிறாள். ஆகையாற்றான் அவள் மனமகிழ்ந்து எங்கள் மன்னன் பராக்கிரமபாகுவின் அருகில் தினமும் வாசஞ் செய்கிறாள். மன்னன் இலட்சுமீகரம் நிறைந்தவனாக - செல்வம், அழகு என்பன நிறைந்தவனாக விளங்குகிறான் என்பதனையே இப்பாடல் விளக்குகிறது. இலட்சுமிதேவி பராக்கிரமபாகு மன்னனின் அருகில் இருப்பதற்கு இன்னொரு காரணத்தையும் கூறலாம். இம்மன்னன் திருமால் போன்றவன். மனுக்குலம் விளங்க வழிவழி வந்தவன். அறுபத்துநான்கு அணிகலங்களையும் முடியையும் சூடியவன். இவன் கண்ணாற் காணக்கூடிய திருமால் என்று ஸ்ரீ இராகுலதேவர் செலலிஹினி சந்தேசவிலும் வர்ணித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மொழி பெயர்ப்பை நவாலியூர் சோ. நடராசனின் பூவைவிடுதூதிலும் காண்கிறோம். அப்பாடல் பின்வருமாறு:

**மாவை குலம றாது வழிவழி வந்த செம்மல்**
**ஊனமி லறுபா னான்கா முயரணி மகுடஞ் சூடிக்**
**காணவோர் திருமால் போலக் கவினரி யிருக்கை மன்னும்**
**வானவன் பாதம் போற்றி வழங்குநல் விடைபெற் றேகாய்**

(22)

'காணவோர் திருமால் போல்' அந்த வானவன் பாதம் போற்றி' என மிகுந்த பொருத்தமாகவே பராக்கிரமபாகு மன்னன் திருமாலுடன் ஒப்பிடப்பட்டு வர்ணிக்கப்பட்டிருக்கிறான். சிங்கள இலக்கியங்களில் திருமாலின் சிறப்பையும் புலவர்கள் குறிப்பிடும் பாங்கினையும் கண்டு மகிழ்கிறோம்.

ஸ்ரீ இராகுலரின் பறவி சந்தேசவில் வரும் இன்னொரு பாடலில் விஷ்ணுவின் காதிலுள்ள குண்டலங்களும் முகத்தோற்றமும் வர்ணிக்கப் படுகின்றன. அவரது காதுகளிலுள்ள இரு தோடுகளும் இரண்டு சூரியர்கள் போலப் பிரகாசிக்கின்றன. அவரது முகம் செந்தாமரை மலர்போன்று இருக்கிறது. சூரியர் பிரகாசத்தால் முகத்தாமரை மலர்ந்திருக்கின்றது. இந்த உவமைநயம் நிறைந்த பாடலைப் பார்ப்போம்:

**රත්   මිණි තෝඩු යුග හිමි සවනත සොබ   න**
**වත්   සියපත් පොබයන ලෙසිනි ඇමැදි   න**
**පත්   රිවි යුග වැනි යයි කියනු මෙසෙයි   න**
**මත්   ගිජ්ඳුට නගුලිස සදිසි කළ මෙ   න**

(174)

இப்பாட்டைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

**හිමි. සවනත සොබන. රත්මිණි තෝඩු යුග. ඇමදවස. වත් සියපත්**
**පොබයන ලෙසිනි. වෙසෙසින. පත් රිවියුගය වැනි යයි. කියනු.**
**මත් ගිජ්ඳුට. නගුලිස. සදිසි නලවෙන. යනු**

இப்பாடலில் **හිමි**- ஹிமி - என்றது விஷ்ணுமூர்த்தியை; **සවනත** - ஸவனத என்றால் இரண்டு காதுகளிலும்; **සොබන** -ஸொவன - பிரகாசிக்கின்ற; **රත්මිණි තෝඩු යුග** - றன்மிணி தோடு யுக - சிவப்பு மாணிக்கத் தோடுகள் - குண்டலங்கள் இரண்டும் எப்பொழுதும்; **වත්සියපත්** - வத்ஸியபத் - செந்தாமரையை; **පෙබයන ලෙසිනි** - பெபயன லெஸினி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரச் செய்வதுபோல என்று கூறுகிறார். இங்கு அந்த இரண்டு தோடுகளும்; රිවියුගය වැනියයි - றிவியுகய வெனியயி என்கிறார். அதாவது, அவை அந்த இரண்டும் இரு சூரியர் போன்றிருக்கின்றன. சிங்களப் பாடலில் 'தோடு' என்ற தமிழ்ச்சொல் இடம்பெற்றிருப்பதையும் அவதானிக்கலாம். 'தோடுடைய செவியன்' என்ற தேவாரத்தில் குறிப்பிடப்படும் தோடு என்பதுதான் இச்சொல்லின் பொருளாகும். செந்தாமரையின் மலர்ச்சி ஒரு நாளுடன் முடிந்துவிடும். ஆனால், இந்த உத்பலவர்ணனின்-திருமாலின் முகமலர்ச்சி என்றும் ஒரே மாதிரியாக இருக்கிறது. இவ்வாறு திருமாலின் சிறப்பை விளக்குகிறார் ஸ்ரீ இராகுலர்.

பறவி சந்தேச - வேறொரு பாடலின் தேவிநுவரையில் எழுந்தருளியிருக்கும் திருமாலின் வரலாற்றையும் அவரது காத்தற் தொழிலையும் விளக்குகிறார். அவ்வரலாற்றின்படி இலங்கை மன்னர்களையும் புத்தசாசனத்தையும் காப்பது திருமாலின் கடமையே. ஆகையால், எங்கள் பராக்கிரமபாகு மன்னனையும் காத்துச் சகல நலன்களையும் அருளுவாயாக என்றவாறு புறாவாகிய தூது பிரார்த்தனை செய்வதாக அப்பாடல் அமைகிறது. இனி அப்பாடலைப் பார்ப்போம்:

කිහිරැලි උපුල්වන් දෙවුරජුනි ගිරි හෙළපු ර
මුනිඳුන් වදන් මුදුනෙන් ගත් සුරිඳුස ඳ
තිරිඳුන් මෙලක රකිනුව බුදු සසුන්සො ඳ
වරදුන් බැව් නොබට – මකියන සුදුසු තෙපලෙක

(187)

அதாவது,

ගිරිහෙළපුර. කිහිරැළි. උපුල්වන් දෙවුරජුනි. මුනිඳුන්. වදන්
මුදුනෙන්. ගත්. සුරිඳු සඳ. මෙලක. තිරිඳුන්. සොඳ බුදු සසුන්
රකිනුව. ඔබට. වරදුන් බැවින්. මකියන සුදුසු තෙපලෙක

எனப் பாடலைப் பொருளுக்கேற்பப் படிக்கலாம். இப்பாடலின் ஒரு பகுதியாகத் தூதுச் செய்தி அமைந்திருக்கிறது. இத்தூது தேவிநுவரையிலுள்ள உப்புல்வன் தெய்வத்திடமே விடுக்கப்படுகிறது. அந்த உப்புல்வன் தெய்வம் (திருமால்) ගිරි හෙළ පුර කිහිරැළි උපුල්වන් - கிறிஹெல புற கிஹிறெலி உப்புல்வன் எனக் கூறப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் மலயபர்வதத்தில் கிஹிறிகொட்டவில் (කිහිරි කොටයකට) எழுந்தருளியுள்ள திருமால்தான் தேவிநுவரைக்கு வந்து அங்குள்ள கோவிலில் வீற்றிருக்கிறார் என்பது புராண இதிகாச வரலாறாகும். அக்கதைத் தொடர்பையே பாடலிலும் குறிப்பிடுகிறார் புலவர். මුනිඳුන් වදන් - என்றது சாக்கிய முனியாகிய புத்தபகவானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளையாகும். இவ்வேண்டுகோளை உப்புல்வன் சிரமேற் கொண்டார் என்பதை அழகுற **ඉදුනේ ගත්** - எனக் குறிப்பிடுகிறார்.

இந்த இலங்கைநாட்டு மன்னர்களையும் (**නිරිඳුන් හා** - நிறிந்துன் ஹா) புத்தசாசனத்தையும் (**බුදු සසුන්** - புதுஸஸுன்) காத்தற்பொருட்டு புத்தபகவான் வரந்தந்தாரல்லவா? எனவே, பொருத்தமான எனது பிரார்த்தனையை (**සුදුසු තෙපලෙක**-ஸுதுஸு தெபலெக்க) உம்மிடம் வேண்டுகிறேன் என தமது தூதுச் செய்தியைக் கூறுகிறார் புலவர். திருமால் வரமருளும் தெய்வமாக காத்தற் கடவுளாகப் போற்றப்பட்டு வருவதை பறவி சந்தேசம், மயூர சந்தேசம், கோகில சந்தேசம், திஸர சந்தேசம் போன்ற சந்தேச காவியங்கள் விளக்குகின்றன. இதே திருமால் தமிழ் இலக்கியங்களிலும் போற்றப்படுவதையும் காத்தற் கடவுளாக வழிபாடு செய்யப்படுவதையும் காண்கிறோம். இவை போன்ற இலக்கியங்களில் சமய கலாசார பண்பாட்டு ஒற்றுமைகளைப் போற்றுவோமாக. அவற்றை ஆர்வமுடன் கற்று இன்புறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹசென் – கதிர்காமக்கந்தன்

இலக்கியங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு கடவுளர்களின் பெயர்கள் முக்கியத்துவம் பெறுவதை நாம் அவதானிக்கலாம். சிங்கள இலக்கிய வரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கதிர்காம மஹசென் மிகவும் வல்லமை நிறைந்த கடவுளாகப் போற்றப்படுகிறார். மஹசென் என்பது பெரிய சேனைகளுக்குத் தலைவனாகிய முருகனையே குறிக்கும். கண்டி வீரபராக்கிரம நரேந்திரசிங்கன் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 1707 - 1739) பாடப்பட்ட மாம்பழக்குருவி - மஞ்சள் குருவிதூது இலக்கியத்தில் கதிர்காமக் கடவுள் முக்கியத்துவம் பெறுகிறார். இத்தூதுப் பிரபந்தத்தில் කහ කුරුළු - மஞ்சள் குருவி (கஹ குருளு) சந்தேச பாடியவர் දික්වැල්ලේ සාමණේර යති තුමන් - திக்வெல்லே சாமணேற யதிதுமன்) அம்பலாந்தோட்டைக்கு அருகிலுள்ள கலகம என்ற இடத்திலிருந்து கதிர்காமத்திற்கு தூது கொண்டு செல்கிறது. கி. பி. 1788 இல் ஒரு காட்ட கிறிவி (කැට කිරිළි - இருவாட்சி) சிவனொளிபாதத்திலிருந்து கதிர்காமத்திலுள்ள மஹசென்னிடம் ஒரு பிரார்த்தனையைக் கொண்டு செல்கிறது. கி. பி. 1813 இல் பாடப்பட்ட கார் அன்னம் விடுதூதிலும் (தியவுல் சந்தேச) கதிர்காம மஹசென் பாட்டுடைத் தெய்வமாகிறார். 1815 இல் கண்டி அரசனின் பிரதம மந்திரியின் வேண்டுதலாக (கிரல சந்தேச) ஆட்காட்டி (Lapwing) விடுதூது அமைகிறது. இந்த ஆட்காட்டி விடுதூதில் எம்பெக்க என்ற இடத்திலுள்ள மஹசென் கடவுள் பாட்டுடைத் தெய்வமாகிறார். இலங்கையில் தமிழில் எழுந்த தூதுக்களிலும் முருகன் புகழ் பாடப்படுவதை நோக்கலாம். வெருகல் சித்திர வேலாயுதர் காதல் என்ற தூதுப் பிரபந்தத்தை தம்பலகமம் என்ற ஊரைச் சேர்ந்த வீரக்கோன் முதலியார் (கி. பி. 1686) பாடியுள்ளார். அத்தூதுப் பிரபந்தத்தில் வரும் ஒரு பகுதி பின்வருமாறு:

**செய்ய வெருகனகர்ச் சித்திரவே லாயுதர்மேல்**
**வைய மகிழு மதுரமொழிக் காதல் சொல்ல**
**மையனைய பூங்குழலான் மாதுபிடி யன்னநடை**
**ஐயைமலர்ப் பாதமதை யன்பாகப் போற்றிசெய்வாம்**

இத்தூதுப் பிரபந்தத்தில் கண்டியிலிருந்து அரசாண்ட இராசசிங்கன்(II) என்பவனும் புகழப்படுகின்றான்.

1785 ஆம் ஆண்டளவில் சந்திரசேகர பண்டிதர் என்பவர் நல்லூர்க் கந்தசுவாமிமீது ஒரு கிள்ளைவிடு தூது பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தமிழ்த் தூதிலும் முருகன் புகழே பாடப்படுகின்றது. அத்தூதுப் பிரபந்தத்தின் காப்புச் செய்யுள் பின்வருமாறு:

**விந்தை செறி நல்லூர் விரும்பியுறுங் கந்தன்பாற்**
**சுந்தரர் சேர் கிள்ளைவிடு தூதுக்குத் – தந்தவிசைச்**
**சீராம்ப லானனத்தான் சிந்திக்கு மோர்கோட்டுக்**
**காராம்ப லானனத்தான் காப்பு.**

தமிழிலே கிள்ளை விடு தூது இருப்பது போல சிங்களத்திலும் கிள்ளைவிடு தூது உண்டு. அந்தக் கிள்ளைவிடுதூது தமிழ் வளர்த்த தொட்டகமுவ பிரிவேனைபற்றிய வரலாற்றைக் குறிப்பிடுகிறது. மேலும், போதிசத்துவரான நாத தெய்வத்திடம் பிரார்த்தனை செய்வதாகவும் அமைந்திருக்கிறது. தமிழ்த் தூதாகிய கிள்ளைவிடு தூதில் நல்லூர் முருகன் புகழ் பாடப்படுகின்றது. அதற்கு பிள்ளையாரையே காப்புக் கடவுளாக வணங்குகிறார். புலவர். அப்பாடலில் ஓர் கோட்டு கார் ஆம்பல் ஆனனத்தான் ஒரு கொம்பினையுடைய கரிய யானை முகத்தையுடைய கடவுள் என வணங்கப்படுகிறார்.

கஹ குருளு சந்தேச எனும் மஞ்சட் குருவித் (மாம்பழக்குருவி) தூதுப் பிரபந்தத்தில் கதிர்காமக் கந்தக் கடவுள் புகழப்படுகிறார். கந்தக் கடவுள்- பெரிய சேனைகளுக்குத் தலைவனாகிய மஹசென்-மகாசேனன் என்றே போற்றப்படுகிறார். மகேசன் என்பது சிவனைக் குறிக்கும். மகா-ஈசன் என்பது பொருள். துட்டகைமுனு கதிர்காமக் கடவுளை வணங்கியதாகவும் காணிக்கை செலுத்தியதாகவும் வரலாறு கூறும். 15 ஆம் நூற்றாண்டளவில் (கி.பி. 1471-1485) பாடப் பட்ட மஞ்சட்குருவி தூதுப் பிரபந்தத்தில் பாடப்படும் முருகனின் வர்ணனைகளில் தமிழின் செல்வாக்கே மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம். இந்நூலில் கதிர்காமக்கந்த (කඳ කුමරු – கந்தக்குமரன்), (කඳ සුරනිඳු සම්මක – கந்த சுறநிந்து ஸம்மக்க-ஷண்முகன்). (සවත්, සිකියහන් සුර සවත් මිහිපති – ஸவத், ஸிக்கியஹன் சுர, ஸவத் மிஹிபதி) என்ற பெயர்களில் போற்றப்படுகின்றான். தமிழ்ப் புராணக் கதைகளில் வருவதுபோல அசுரர்களை வென்று தேவர்களைக் காத்த செய்திகளும் பாடல்களில் இடம் பெறுகின்றன. அத்தகைய பாடல் ஒன்று பின்வருமாறு:

තෙද    බල විකුම් පෑ දිතසෙත් මැඩ තෙද    ග
බඳ    හළ තමන් යස දද දස දිග යට    ග
නඳ    කර එපුර කිරණව දිසි තරිඳු ර    හ
කඳ    සුරනිඳු වැජඹෙති එපුර සිතුර    හ

(179)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலில் கதிர்காமக் கந்தன்(කඳ සුරනිඳු - கந்த சுறநிந்து) என்றே வர்ணிக்கப்படுகிறார். முதலில் பொருளுக்கேற்பப் பாடலைப் பிரித்துப் படித்தால்:

තෙදග දිනසෙන් මැඩ තෙද බල විකුම් පෑ
තමන් යස දද දස දිගු යටග බඳ හළ.
තරිඳු දිසි කිරණව රඟ එපුර නද කර.
කඳ සුර නිඳු සිතුරඟ වැජඹෙති.

வலிமை பொருந்திய அசுரர்களை வென்றவர் கந்தக்குமரன்: அவ்வாறு வென்று புகழாகிய வெற்றிக்கொடியை எங்கணும் பரப்பியவர். அந்நகர மக்கள் எல்லாரும் அவர் வரவால் மகிழ்ந்தார்கள். (තරිඳු දිසි කිරණව රඟ – தறிந்து திஸி கிறணவ றங்க) சந்திரனைக் கண்ட பாற்கடல் போல் மக்கள் மகிழ்ச்சியால் பொங்கினார்கள். இவ்வாறு மக்களை மனமகிழச் செய்து கந்தக்குமரன் கதிர்காமத்தில் உறைகிறான். மக்களின் மகிழ்ச்சியும் பொங்குகிறது-சந்திரனைக் கண்ட பாற் கடற் போலப் பொங்குகிறது என அழகான உவமையணி வாயிலாக மக்கள் மகிழ்ச்சியைக் காட்டுகிறார் புலவர். மேலும், கந்தக்குமரன் வதியும் கதிர்காமத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

சிங்களத்தில் மஹஸென் என்று அழைக்கப்பட்டவரே கந்தக்குமரன். "ஆறிரு தடந்தோள் வாழ்க, அறுமுகம் வாழ்க" என்று போற்றப்படுவது போலச் சிங்களத் தூதிலும் போற்றப்படுகிறார். அவ்வாறு போற்றும் பாடல் ஒன்றையும் பார்ப்போம்:

| | | | |
|---|---|---|---|
| තෙද | යසසින් | සුරසෙන් පිරිවර | නොමින |
| දිලි | සිහසුන් | පිට වැඩ උන් සක් | සෙයින |
| කඳ | කුමරුන් | වෙත ගොස් සිට මන | තුටින |
| අදර | බැතින් | නමඳුව ඒ හිමි | සරණ |

(210)

இப்பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

තෙද යසසින් නොමින පිරිවර සුරසෙන්
දිලි සිහසුන් පිට සක් සෙයින වැඩ උන්
කඳ කුමරුන් වෙත මන තුටින සිට
ඒ හිමි සරණ අදර බැතින් නම ඳුව.

තෙද යසසින்–தெத யஸஸின்-அழகிலும் புகழிலும் (சிறந்தவர்): නොමින පිරිවර සුරසෙන් - பிறிவற ஸுறஸென் - எதுவும் குறைவின்றி நிறைவுபெற்ற தேவசேனை (உடையவர்): දිලි සිහසුන් පිට-திலி ஸிஹ ஸுன் பிட்ர-ஒளிவீசுகின்ற சிங்காசனத்தின் மேல்: සක් සෙයින වැඩ උන්- ஸக் ஸெயின வெட உன் - சக்கர தேவன் - இந்திரன் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்கும்; කඳ කුමරුන් වෙත–கந்த குமறுன் வெத- கந்தக் குமரனிடம் சென்று: මන තුටින සිට- மன துட்டின ஸிட்ர-மனமகிழ்ச்சியோடு: ඒ හිමි සරණ - ஏ ஹிமி ஸறண-அந்தத் தெய்வத்தின் பாதங்களில்; අදර බැතින් නම දුව -அதற வெத்தின் தம துவ-அன்பான பக்தியோடு வணங்குவாயாக.

மஞ்சட் குருவியை ( மாம்பழக் குருவியை) கந்தக்குமரனிடம் தூதாக விடுக்கும் புலவர் கந்தக் குமரனின் சிறப்பை இவ்வாறு வர்ணிக்கிறார். அந்தக் கந்தக்குமரனின் பாதங்களில் விழுந்து வணங்கி வரத்தைப் பெறுமாறும் தூதிடம் கூறுகிறார். அக்காலத்திலும் சிங்கள மக்களிடமிருந்த வழிபாட்டு முறையையும் கதிர்காமக் கந்தனிடம் அவர்கள் வைத்திருந்த பக்தியையும் இலக்கியப் பாடல்கள் விளக்குகின்றன.

**கஹகுருளு சந்தேசவில்** வரும் இன்னொரு பாடலில் கந்தக்குமரனின் முகங்களின் அழகை வர்ணிக்கிறார் புலவர். கந்தகுமரனுக்கு இணையான தேவர்கள் வேறில்லை என்கிறார். கதிர்காமக்கந்தனின் அழகிய முகத்தைப் பூரண சந்திரனுக்குத்தான் ஒப்பிட முடியும். எனினும், பூரண சந்திரனில் சிறு கறை (கறுப்புப் பகுதி) உண்டல்லவா? கந்தப் பெருமானின் முகத்தில் சிறிது களங்கமும் இல்லையல்லவா? எனவே, பூரண சந்திரன் தானும் அவரது முகத்திற்கு ஒப்பாகமாட்டான் என்று கூறி, கந்தப் பெருமானின் முக அழகை உயர்வாகக் காட்டுகிறார், கஹ குருளு சந்தேசப் புலவர்.

கதிர்காமக் கந்தனின் அழகையும் சிறப்பையும் அருணகிரிநாதர் திருப் புகழிலே பாடியிருக்கிறார். "குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா" என்று கந்தப் பெருமானிடம் வரம்வேண்டுமாற்றை நினைவு கொள்கிறோம். இன்னொரு கணம் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் காட்டும் அறுமுகங்களினதும் பன்னிரண்டு கரங்களினதும் தொழிற்பாடுகளைப் படித்து நயக்கிறோம்.

**மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்**
**பல் கதிர் விரிந்தன்று ஒரு முகம்**

என்ற பாடற் பகுதியை ஒப்பிட்டுப் பார்க்கின்றோம். கந்தனின் மூவிரு முகங்களும் திருவருள் பொழிகின்றன. திருக்கைகளும் திருவருள் சுரக்கின்றன. சிங்கள தமிழ் இலக்கியங்களும் கலியுக வரதன் கந்தப் பெருமானைப் போற்றுகின்றன.

**மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி**
**ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்கள் – நாத தெய்வம்

இனிய இலக்கியங்கள் இன்சுவை நிறைந்தவை. படிக்குந் தோறும் நயம்பல தருவன. இதனையே 'நவில்தொறும் நூல் நயம்' என்று தெய்வத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். கலை கலாசாரப் பண்புகளையும் இலக்கியங்கள் விளக்கி நிற்கின்றன. இலக்கியம் பாடப்பட்ட கால மன்னர், வழிபடு தெய்வம் என்பவர்களின் வரலாற்றையும் அவை வர்ணிக்கின்றன. சிங்களத் தூது இலக்கியங்களுள் ஒன்றாகிய **கிரா சந்தேசம்** எனப்படும் கிளி விடு தூது இயற்கை வர்ணனை நிறைந்த நூலாகும். இந்நூலைப் பாடிய புலவரின் பெயர் தெரியவில்லை. எனினும், இராகுல தேரரில் மதிப்பு வைத்த பிக்கு ஒருவர் என்பது அறியக்கிடக்கின்றது. எவ்வாறெனில் ஸ்ரீ இராகுல தேரருக்குச் சகல நலங்களும் கிடைக்கவேண்டுமென நாத தெய்வத்திடம் தூது விடுப்பதாகவே பாடப்பட்டிருக்கிறது. **கஹகுருளு** (மஞ்சட்குருவி) சந்தேசத்தில் கதிர்காமக் கடவுள் பாட்டுடைத் தெய்வம் ஆகிறார். **மயூர சந்தேசம், திசற சந்தேசம்** என்பவற்றில் உப்புல்வன் எனும் திருமால் பாட்டுடைத் தெய்வம் ஆகிறார். ஆனால், **கிரா சந்தேசத்தில்** நாத தெய்வம் பாட்டுடைத் தலைவர் ஆகிறார். கண்டிப் பெரஹராவில் நாத தெய்வம் வலம்வருவதை நினைவு கொள்ளலாம். நாத தெய்வம் ஈசுவரானகிய சிவனையே சுட்டும். 'நாத விந்து கலாதி நமோ' என்று திருப்புகழிலும் போற்றப்படுகிறார் அல்லவா? எனினும், சிங்கள பௌத்தர்கள் அவரைப் போதிசத்துவரெனவே இலக்கியங்களிற் குறிப்பிடுகின்றனர்.

அவலோகிதேஸ்வர, நாத எனவும் அழைக்கப்படுவார். நாத தெய்வத்திற்குரிய பிரதான தேவாலயம் கண்டியில் உள்ளது. தலதா மாளிகைக்கு மேற்குத் திசையில் கோவில் அமைந்துள்ளது. தேரவாதரும் மகாயானரும் நாத தெய்வத்தை வழிபடுவர்.

சிங்கள கிளிவிடு தூதில் (கிரா சந்தேக) வரும் பாடல் ஒன்றை எடுத்துக் கொள்வோம்.

සමුදුර හිමි අවට – සව් සිරි සපිරි සිරිලක
අම්‍රාකර කිරණ සේ පිරිසුදු දිවැස
යොමා කුලුණු ගුණයෙන් දැක ඇම දවස
අමිතුරු විය වදන්–වෙසෙසින් අතුරුදන් කර

පන්වා රෝග බිය බිඳ උවදුරු දුර ට
පෙන්වා තමා බෝසත් බව මුළු ලොව ට
නොහැර විජය සුබ සිරි සැප දියුණු කො ට
නිතොර රකින ලෙස සහපිරිවරින් සි ට



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අදර සිතින් අයදින ලෙස යතිඳුහ ට
මිතුර තොසින් සැලකර ඒ යති සඳු ට

(251)

இப்பாடலில் சிறீ லங்கா தீவையும் பராக்கிரமபாகு மன்னனையும் காப்பாற்றுமாறு நாத தெய்வத்திடம் வேண்டுதல் செய்கிறார் புலவர். கிளியாகிய தூது வாயிலாகவே இப்பிரார்த்தனை நடைபெறுகிறது. பகைவர்களின் நச்சுப் பேச்சுகள் அழியவேண்டும்; நோய்ப்பயம் நீங்க வேண்டும்; துன்பம் மறைய வேண்டும்; வெற்றி, சுகம், செல்வம் வளர வேண்டும் என்றே வேண்டுதல் நிகழ்கிறது. சந்திர ஒளி போன்று குளிர்மையான திருக்கண் பார்வையைச் செலுத்தி அருளுமாறு நாத தெய்வத்திடம் பிரார்த்திக்குமாறு ஸ்ரீ இராகுல தேரரிடம் அறிவிக்குமாறு கிளியாகிய தூதிடம் கூறுகிறார் புலவர்.

මෙයින් කියැවුණේ පුවෝක්ත පරාක්‍රමබාහු රාජයා සහ ශ්‍රී ලංකාද්විපය දිවැසින් බලා සතුරන් ගේ විෂ වචන විශේෂයෙන් නැතිකොට රෝග භය නසා උවදුරු දුරලා තමාගේ බෝධිසත්ව භාවය ලොවට පෙන්වා විජය සුබ සිරි සැප දියුණු කොට නිතර රකින්නට නාථ දෙවෙන්ද්‍රයාට පිරිවර සහිතව සිට අයදින සේ ඒ (ශ්‍රී රාහුල) යතින්ද්‍රයන් වහන්සේට දන්වව යන අදහසයි.

**අවට සමුදුර හිමි**–அவட்ட ஸமுதுறு ஹிமி - நாலு பக்கமும் கடலாற் சூழப்பட்ட; **සව් සිරි සපිරි සිරිලක** - ஸவ் ஸிறி ஸபிறி ஸிறிலக்க இலங்கைத் தீவையும், பராக்கிரமபாகு மன்னனையும்; **අමාකර කිරණ සේ**–அமாகற கிறண ஸே-சந்திரன் ஒளிபோல் குளிர்மையான; **පිරිසිඳු දිවැස**– பிறிஸிது திவெஸ-கருணை நிறைந்த கண்களை; **යොමා**–யொமா-சார்த்தி (அருட்கண் சார்த்தி); **අමිතුරු විස වදන්**–அமிதுறு விஸ வதன்-பகைவர்களின் கொடிய நச்சு வார்த்தைகளின்; **උවදුරු**– உவதுறு - உபத்திரவங்களை-வேதனைகளை ஸ்ரீ இராகுல தேரரிடம் அறிவிக்குமாறு; **පන්වා**– பன்வா-போக்கி; **තමා**– தமா-அரசனது (தமது); **විජය සුබ සිරි සැප**– விஜய சுப ஸிறி ஸெப-வெற்றி, சுகம், செல்வம், ஆயுள் என்பவற்றை; **දියුණු කොට** – தியுணு கொட்ட-வளர்த்து; **නිතොර රකින ලෙස**–நித்தொற றக்கின லெஸ-நிதமும் காப்பாற்றுமாறு; **යතිඳු හට (අය දින ලෙස)**–நாத தெய்வத்திடம் அயதின லெஸ- வேண்டுதல் செய்யுமாறு; **ඒ යති සඳුට**– ஏ யதி ஸந்துட்ட-அந்த ஸ்ரீ இராகுல தேரருக்கு; **සැල කර**–செல கற-அறிவிப்பாயாக; **මිතුර කර**–மித்துற கற-கிளியாகிய நண்பனே நீ அறிவிப்பாயாக.

இப்பாடலுக்கு முன்னுள்ள பாடல்களில் ஆறாவது பராக்கிரமபாகு மன்னனின் புகழ் பலவாறு வர்ணிக்கப்பட்டுள்ளது. தூது செல்லும் கிளி வழியில் அம்பலம் என்னும் பொது இடத்திலும் தங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறது. அந்த அம்பலத்தில் பாண்டிய மன்னன் பற்றியும் ஆறாவது பராக்கிரமபாகு பற்றியும் சம்பாஷணைகள் நிகழ்கின்றன. இதுபோன்று பாண்டிய மன்னன் குணநல வர்ணனை சிலப்திகாரத்தில் இடம்பெறுகிறது. கோவலனும் கண்ணகியும் கவுந்தி அடிகளுடன் பாண்டி நாட்டை நோக்கிச் செல்கின்றனர். அவர்கள், இடையில் அம்பலம் ஒன்றில் இளைப்பாறுகின்றனர். அந்த அம்பலத்தில் கௌசிகன் என்னும் பிராமணர் பாண்டிய மன்னனின் புகழைப் பேசிக்கொண்டிருக்கிறார். அதனை, கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவருக்கும் கூறுகிறார். கடைசியில் அவர் மிகவும் பக்தியோடு பாண்டிய மன்னனை வாழ்த்துகிறார். சிலப்பதிகாரத்தில் காடுகாண் காதையில் வரும் பாடலின் பகுதி பின்வருமாறு:

வாழ்க எங்கோ மன்னர் பெருந்தகை
ஊழிதொ றூழிதொ றுலகங் காக்க
அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி
திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கண் ஆயிரத்தோன் திறல்விளங் காரம்
பொங்கொளி மார்பில் பூண்டோன் வாழி
முடிவளை உடைத்தோன் முதல்வன் சென்னியென்று
இடியுடைப் பெருமழை எய்தாது ஏகப்
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்து ஆண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி

(15–30)

இவ்வாறு கௌசிகன் என்னும் பிராமணர் பாண்டிய மன்னனை வாழ்த்துகின்றார். வாழ்த்திய கௌசிகன் இளமரக்காவின் கண் உள்ள மண்டபத்தில் (அம்பலமொன்றில்) கோவலன் ஆதியோரைச் சந்திக்கிறார். சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோ அடிகள் பாண்டிய மன்னனின் குணநலன்களைக் கௌசிகன் வாயிலாக எடுத்துரைக்கிறார். பாண்டிய மன்னன் வாழ்வானாக; பல்லூழி இவ்வுலகத்தை அவனே காப்பானாக. வடதிசைக் கங்கையும் இமயமும் வெற்றிகொண்டு தென்திசை ஆண்ட தென்னவன் வாழி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையினை விலங்கிட்டு ஆண்ட மன்னவன் வாழ்வானாக என்று பலவாறாகப் பாண்டியன் புகழைப்பாடி வாழ்த்த வைத்துள்ளார். பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் அம்பலத்தில் இக்காட்சி இடம்பெறச் செய்தவாறு, சிங்கள கிளிவிடு தூது ஆசிரியரும் அம்பலத்தில் மன்னன் குணநலம் பாராட்டும் காட்சியைப் புகுத்தியுள்ளார். இவற்றை நோக்கும்போது சிலப்பதிகாரத்திற்கும் கிரா சந்தேசத்திற்கும் ஒருவித சம்பந்தமிருப்பது தெளிவாகிறது. சிலப்பதிகாரத்தில் வரும் அம்பலத்தில் நிகழும் பாண்டிய மன்னன் குணநல வர்ணனையைப் படித்த கிரா சந்தேச (கிள்ளை விடுதூது) ஆசிரியர் தமது நூலிலும் அதுபோன்ற இராச குணநல வர்ணனையைப் பாடியிருத்தல் வேண்டும். இரு நூல்களிலும் காணப்படும் இவ் வர்ணனைகளை ஒப்புநோக்கும் போது அந்த உண்மை தெளிவாகிறது. இக்கருத்தினை பத்தினி தெய்யோ என்ற சிங்கள நூலைச் செய்த ஹிஸ்ஸல்லே தர்மரத்தின தேரர் அவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள். கிரா சந்தேசம் ஸ்ரீ இராகுலரின் தொட்டகமுவே விஜயபா பிரிவேனைபற்றியும் வர்ணிக்கிறது. அப்பிரிவேனையின் பாடத் திட்டத்தில் தமிழும் புகுத்தப்பட்டிருந்தது. எனவே, **சிலப்பதிகாரம், இராமாயணம்** போன்ற தமிழ் நூல்களை அவர்கள் கற்றிருக்கலாம். ஆகவே, தமிழின் செல்வாக்கு கவிஞர்கள் உள்ளத்தில் இடம் பெற்றதில் ஆச்சரியமில்லையல்லவா?

**கிரா சந்தேசத்தில்** வர்ணிக்கப்படும் அம்பலம் வெலிதோட்டையில் இருந்தது. அந்த அம்பலத்தில் சோழ நாட்டவர், பாண்டிய நாட்டவர், தெலுங்கு நாட்டவர், கேரள நாட்டவர் எனும் பல நாட்டவர்கள், பல இன மக்கள் வந்து கூடினர். அவர்கள் அம்பலத்தில் இளைப்பாறும்போது பல்வேறு உரையாடல்களில் ஈடுபட்டனர். இராம சீதைக் கதைகளையும் பேசினர். இந்து சமய சம்பந்தமான கதைகளையும் பேசினர். பின்வரும் சந்தேசப் பாடல்கள் இவற்றை விளக்குகின்றன.

අයෙක් මීස දිටූ ගත්
නොයෙක් කවිතළු රස දත්
පෙර තම තමනු ගත්
රාම සීතා කතා තෙප ළත්

**(114)**

පඬි තිරිඳු නැණ සක්
පැමුළු දෙරණ අණ සක්
දිනූවයි විරිඳු සක්
අයෙක් පවසති ඔහුගෙ වෙසෙ සක්

**(121)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සොළි පඩි ලා                රට
ගුජ්ජරතුළුර මහ              රට
තෙළිඟු වග රට               සිට
පැමිණි දන තම තමන්ගේ        රට

(122)

தமிழிலுள்ள அம்பலம் எனும் இடத்தைச் சிங்களத்தில் அம்பலம என்று வழங்குகிறார்கள். அம்பலத்தில் கூடியிருந்தவர்கள் රාම සීතා කතා - றாம ஸீதா கதா-இராம சீதைக் கதையைப் பேசுகிறார்கள். தமிழில் வழங்கிய கம்பராமாயணமே (கி.பி. 1841 இல்) சிங்கள உரைநடை நூலாக மொழிபெயர்க்கப்பட்டது என்பர். පඩි නිරිඳු - பண்டி நிறிந்து - பாண்டிய மன்னனின் புத்திக்கூர்மை - உலகம் முழுவதும் அவன் செலுத்திய ஆணைச்சக்கரம் பகைவர்களை வென்றமை ஆகிய விடயங்களையும் பேசுகிறார்கள். இவ்வாறான கதைகளும் பாடல்களும் தமிழின் செல்வாக்கையும் இலக்கியப் புலவர்களிலே காணப்படும் ஒருமைப்பாட்டினையும் விளக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

# வரலாற்றுக் கண்ணோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் கண்ணோட்டம் I

இனிமை தரும் இலக்கியங்களிற் சில வரலாற்று இலக்கியங்களாகவும் மிளிர்கின்றன. இலக்கியம் என்பது லக்ஷியம் என்ற வடசொல்லின் திரிபு என்பர். லக்ஷியம் என்பதற்கு நோக்கம் எனப் பொருள் கொள்ளலாம். எனவே, ஒரு நோக்கத்தோடு எழுதப்படுவதே இலக்கியம். தமிழர் இதனைப் பரந்த நோக்குடன் செய்யுள் என வழங்கினர் என்றார் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். விழுமிய கருத்துக்களை அவர் காலத்திற் சொல்லக் கேட்டவற்றோடு ஒழியாமற் பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு எந்த உருவத்தில் செய்யப்படினும் அதுவே செய்யுள் என்றும் அவர் கூறுகிறார். எனவே, பொய் கலவாது உண்மைகள் பலவற்றைச் செய்யுள்கள் கொண்டு விளங்குவன என நாம் கொள்ளலாம். இந்தக் கருத்தோடு சிங்கள இலக்கியங்களில் சந்தேச இலக்கியங்களையும் நோக்கும் போது சில வரலாற்று உண்மைகள் தெளிவாகின்றன. இவை தமிழ் மொழியின் தனிப்பெரும் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகின்றன. இந்து கலாசாரச் சிறப்புகளையும் விளக்குகின்றன. இலங்கையின் பல பாகங்களிலும் தமிழர் வாழ்ந்த இடங்கள் வழிபட்ட கோவில்கள் ஆகியன பற்றிய செய்திகளையும் சுவைபடத் தருகின்றன.

சந்தேச காவியம் என்னும் சிங்கள தூது இலக்கியங்களுள் **கோகில (குயில் விடுதூது) சந்தேச** என்பதும் பிரசித்தமான நூலாகும். மற்றைய சந்தேச காவியங்களிலும் பார்க்க நீண்ட பிரயாணத்தைக் குறிப்பிடும் சந்தேசம் இதுவாகும். இந்தத் தூதில் குரலுக்குப் பெயர் பெற்ற குயில் தூதாக விடுக்கப்படுகிறது. இலங்கையின் தென் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தூது செல்கிறது. இத்தூது இலக்கியம் போன்று தமிழ்க்கிராமப் பெயர்கள், இந்துக் கோவில்கள் என்பவற்றைப் பெருமளவில் குறிப்பிடும் வேறு சிங்கள தூதுக்கள் இல்லையெனலாம். 292 பாடல்களைக் கொண்ட இத்தூது இலக்கியத்தைப் பாடியவர் திலக பிரிவேனையைச் சேர்ந்த ஒரு பிக்கு எனவே அறியக்கிடக்கிறது. அவரின் உண்மையான பெயரைத்தானும் திட்டமாகக் கூறமுடியவில்லை. சபுமல் குமரயாவுக்கு ஆசீர்வாதம் வழங்குவதே நூலின் பிரதான நோக்கம். யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளை வென்று அரசாட்சி செய்த சபுமல் குமரயாவிடம் குயில் தூதாக விடுக்கப்பட்டதாகவே இந்நூல் பாடப்பட்டிருக்கிறது. இந்த சபுமல் குமரயா செண்பகப்பெருமாள் என்ற தமிழ்ப் பெயரை உடையவன். ஆறாவது பராக்கிரமபாகு மன்னனின் வளர்ப்புப் பிள்ளையாகப் பாராட்டப்பட்டவன். சபுமல் குமரயாவின் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து வந்த பணிக்கர் குல அரச குமரனின் மகன். சபுமல் குமரயாவின் தாய் ஆறாவது பராக்கிரமபாகுவின் இனத்தவர். இந்த முறையில் சபுமல் குமரயா ஆறாவது பராக்கிரமபாகுவின் இனத் தொடர்புமுள்ள வளர்ப்புப் பிள்ளை.

கோகில சந்தேசவில் வரும் பாடலொன்றில், (වැල්ලේ) வெல்லே மடம் கணபதி தெய்வத்திற்கு ஆண்டுதோறும் நிகழும் தீபாவளிக் கொண்டாட்டம் பற்றிய வர்ணனை வருகின்றது. அந்தக் காலத்தில் பல்வேறு இனங்களைச் சார்ந்த வியாபாரிகள் வெலிகாமத்தில் கூடியதாகச் சிங்கள சந்தேசங்கள் எல்லாம் குறிப்பிடுகின்றன. எனினும், தமிழ்ப்பண்டிதர்கள் அங்கே வாழ்ந்தார்கள் என்பதைக் குறிப்பிடும் ஒரே சந்தேசம் இக் **கோகில சந்தேசமே.** முதலில் பாடலைப் பார்ப்போம்.

නුවන් පිණන තැන තැන මිණි තොරණරැ සිත්
නොවන් වෙනස දිව රෑ දිලෙන එක ලෙ සිත්
සවන් පුරා පවසන දෙමළ ගිර සිත්
මෙවන් සොඳුරු මහ වැලිගමට වදු ගො සිත්

(55)

තැන තැන - அந்த அந்த இடங்களில் எல்லாம் இரத்தினங்களால் அமைந்த மகர தோரணங்கள் காட்சியளிக்கின்றன. அவைகள் ஒளி வீசுகின்றன. அவ்வழகிய காட்சிகள் எல்லாம் **(නුවන්)** கண்களை; **(පිණන)** பிரீதிப்படுத்துகின்றன. கண்களைக் குளிர்விக்கின்றன; **(දිව රෑ)** இராப்பகல் (இப்பிரகாசத்தால்); **(වෙනස නොවන්)** வேறுபாடின்றி விளங்குகின்றன. அதாவது பகலும் இரவும் **(එකලෙසින්)** ஒரேவிதமாகப் பிரகாசமாயிருக்கின்றன. **(දිලෙන ප්‍රදීප්දතවූ)** இரத்தினங்களின் ஒளியாற் பிரகாசிக்கின்ற; **(රසින්)** இரசனை இன்பத்தால்; **(සවන් පුරා)** காதுகள் எல்லாம் நிறைகின்றன; **(පවසන දෙමළ ගී)** பாடுகின்ற தமிழ்ப் பாடல்களின் இனிமை காதுகளை நிறைக்கின்றன. நீ தூது செல்லும்போது இவ்வாறு வர்ணிக்கப்பட்ட **(සොදුරු මහ වැලිගමට)** அழகிய மஹவெலிகமத்திலும் நுழைவாயாக என்று குயிலிடம் புலவர் கூறுகிறார். இவ்வாறு பையாகலை **(පයියාගල)** என்ற இடத்திலும் தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை இன்னொரு பாடல் தெரியவைக்கின்றது. அப்பாடல் பின்வருமாறு:

**වයියා කරණ තන්**
**දෙමළ කිවිවර රදනා**
**පයියාගල වෙහෙර**
**මුනිඳු දැක නැමද යව සතොසින්**

(95)

இப்பாடலில் **(වයියාකරණතන්)** 'வையாகரணன்' என்பதால் பல்வேறு இலக்கணங்களையும் அறிந்த தமிழ்ப் புலவர்கள் பையாகலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்பது அறியக்கிடக்கின்றது. பாடலில் (**දෙමළ කිවිවර** - தெமள கிவிவற) அதாவது தமிழ்ப் புலவர்கள் (**රෑනා** - றெந்தனா) தங்கியிருந்தார்கள் என்று புலவர் கூறுகிறார். இப்புலவர்கள் இருந்த பையாகலையில் விஹாரமும் இருந்தது. அந்த விகாரத்திலுள்ள (**මුනිඳු දැක නැමද** - முனிந்து தெக்க நெமத) சர்வஞ்ஞராகிய புத்த பகவானைத் தரிசித்து வணங்கி; (**සතොසින් යව**-ஸதொஸின் யவ) மனமகிழ்ச்சியோடு அப்பாற் செல்வாயாக என்ற குயிலாகிய தூதிடம் கூறுகிறார் புலவர்.

கோகில சந்தேசத்தைப் பாடிய இறுகல் (**ඉරුගල්**) குலதில பிரிவேனைப் பிக்குவும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர். இவரது சிங்கள சந்தேசப் பாடல்களில் தமிழ்ச் சொற்கள் பல இடம் பெறுவதை அவதானிக்கலாம். கோவில், கோயில் என்ற சொற்களில் கோவில் இறைவன் குடிகொண்டிருக்குமிடத்தைக் குறிக்கும்; கோயில்-அரச மாளிகையைக் குறிக்கும். தமிழில் கோவில் குறிக்கும் பொருளிலேயே கோகில சந்தேசப் பாடலிலும் நாக தெய்வத்தின் கோவிலைக் குறிக்கப் புலவர் இச்சொல்லைக் கையாண்டிருக்கிறார். அரசனது கோயிலைக் குறிக்க (**මාලිගා**) மாளிகை என்ற சொல்லைக் கையாண்டிருக்கிறார். தமிழின் நேரடியான செல்வாக்கைக் காட்டப் பல உதாரணங்களைக் காட்டலாம். 'கோவில்' என்ற தமிழ்ச் சொல் இடம்பெறும் **கோகில சந்தேசப்** பாடல் பின்வருமாறு:

සවන සවන සතියෙහි වැඩහි දින ලෙස
ලෙලෙන දරණ වැලලූ මුදලිඳු විලස
කරන පසිඳු පෙණ රැඳි නාරද සකස
සොවන නාග කෝවිල දකු මිතුරු තොස

(44)

இப்பாடலின் கடைசி அடியில் 'கோவில்' என்ற தமிழ்ச்சொல் **කෝවිල** என ஆளப்பட்டிருக்கிறது. இக்கோவில் நாகதம்பிரான் கோவிலாகும். **පෙණරැඳි** - படம் விரித்திருக்கின்ற **නාරද ඇති** - நாக ராஜன் வீற்றிருக்கின்ற நாக கோவில் என்றே வர்ணிக்கிறார் புலவர். அழகாக வீற்றிருக்கும் என்பதை **සොවන** என்று வர்ணிக்கிறார். குயிலாகிய தூதிடம் **මිතුරු** - நண்பனே! மனமகிழ்ச்சியோடு இக்காட்சியைக் காண்பாயாக என்று கூறுகிறார். நாகதம்பிரான் கோவிலினுள் பாம்பு படம் விரித்திருக்கும் காட்சியைப் புத்தபகவானின் பழைய வரலாறு ஒன்றுடனும் தொடர்புபடுத்துகிறார் புலவர். நாகபாம்பு நாதர் முடிமேல் இருக்கும் நல்ல பாம்பு என்று பாடப்பட்டிருக்கிறது. விஷ்ணு பாம்பின் அரவணையில் பள்ளிகொள்வதாகப் புராணக் கதையுண்டு. இவ்வாறு புத்தபகவானையும் முச்சலிந்த என்ற பெயருடைய நாகராஜன் தனது விரிந்த படத்தினால் மழையினின்றும் பாதுகாத்ததாக வரலாறு உண்டு. புத்தபகவான் ஞானவொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றபின் ஒவ்வொரு கிழமையும் ஒவ்வோர் இடத்தில் எழுந்தருளி வந்தார். ஆறாவது கிழமையில் (மிதெல்-මිදෙල්) மரத்தின்கீழ் எழுந்தருளியிருந்தார். அப்போது மின்னல் இடியோடு பெருமழை பொழிந்தது. அப்பொழுது முச்சலிந்த என்ற நாகராஜன் புத்தபகவான் மழையில் நனையாவண்ணம் குடைபோல் தன் படத்தை விரித்து நின்றது. புத்தபகவானுக்கு உதவிசெய்தபடியால் இன்றும் பௌத்தர்கள் நாகபாம்புக்கு மரியாதை செய்கிறார்கள். அந்த முச்சலிந்த நாகராஜன் போன்ற நாகதம்பிரான் கோவிலிலுள்ள பாம்பின் படமும் காட்சியளிக்கிறது என்று கோகில சந்தேசப் புலவர் வர்ணிக்கிறார்.

தமிழில் வழங்கும் 'வாயில்' என்ற சொல்லும் சிங்களத்தில் வாசல் என நிலைத்து நிற்கிறது. வீட்டு முகப்புக் கதவு வாயில் என வழங்கப்படும். முதலில் சாதாரணமாக வீட்டுவாயிலைக் குறித்த 'வாயில்' என்ற சொல் அரச மாளிகைக் கதவைக் குறிப்பதாயிற்று. இராசவாசல் முதலிய பணிகளும் பட்டங்களும் இவ்வாசல் என்ற வழக்கோடு வழங்கப்படுவதைக் காணலாம்.

எல்லாச் சிங்கள சந்தேசங்களிலும் குறிப்பிடப்படும் பாணந்துறை என்னும் இடம் **கோகில சந்தேசத்தில்** எவ்வாறு குறிப்பிடப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

බෝකර සුවද ගැනන රත් පානදුරේ
සේකර අඩෙව් දලනෙත් මද බාණදුරේ
ආකර වත් ළඳුන් රඳනා පාණදුරේ
යාකර මිතුර දැක ඉද මල් මුණතුරේ

(104)

இப்பாடலில் வரும் இரு அடிகளையும் எமது கவனத்திற்கு எடுத்துக் கொள்வோம்.

ආකර වත් ළඳුන් රඳනා පාණදුරේ
යාකර මිතුර දැක ඉද මල මුණතුරේ

**ළඳුන්**-மங்கையர்கள்; **රඳනා**-தங்கிவாழ்கின்ற; **ආකරයකට**-முறையில் சிறந்த; **පාණදුරේ** - பாணந்துறை என்ற **නිගම** - கிராமத்தை பலாமரச் சோலைகளிடையே தங்கியிருந்து கண்டுகொண்டு அப்பாற் செல்வாயாக என்று பாடும் புலவர் பாணந்துறை என்ற பெயரை **පාණදුරේ** எனக் குறிப்பிடுகிறார். அதன் கருத்து வியாபாரத்துறை என்பதாகும். **පාණදුරේ** என்பதன் பழைய பெயர் **පාණතොට** - பாணதெற என்பதாகும். **තොට** - தெற என்பது கரையைக் குறிக்கும். **මාතර, බෙන්තර, කළුතර**- மாத்தற, பெந்தற, களுத்தற என்ற பெயர்கள் போன்று இப்பெயரும் **පාණතොට** - பாணதெற என்றே இருந்தது. இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் தமிழர்கள் செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார்கள். பாணந்துறைக்கு அண்மையில் உள்ள ஊருக்கும் அவர்கள் நல்லூர் என்று பெயர் சூட்டினர். இந்நல்லூர் இன்றும் 'நல்லொறுவ' என வழங்குகிறது. පාණතෙර - பாணதெற என்ற இடத்திற்குத் தமிழர்கள் வைத்த பெயரே பாணந்துறை என்பதாகும். இத்தமிழ்ப் பெயர் பிற்காலத்தில் පාණදුරේ - பாணதுறே என சிங்களத்தில் வழங்கலாயிற்று. இவ்வாறே பண்டித டபிள்யூ. எவ். குணவர்த்தன வாசல முதலி அவர்களும் குறிப்பிடுகிறார்கள்.

தமிழ்ச் சொற்கள் நேரடியாகச் சிங்கள மொழியில் இடம் பெற்றமை தமிழின் செல்வாக்கை விளக்குகின்றது. இவ்வாறான உறவுகள் மக்கள் ஒன்றாக-ஒற்றுமையாக வாழ்ந்த நிலைமையையும் மன்னர்களும் புலவர்களும் அளித்த மதிப்பையும் பிரதிபலிக்கின்றன.

சிங்கள மொழியிற் கலந்துகொண்ட சில வடமொழிச் சொற்கள் கூட தமிழின் வடிவம்பெற்று தமிழ்மொழியினூடாகக் கலந்து கொண்டன. இதற்கும் கோகில சந்தேசத்தில் வரும் சொற்கள் பல சான்று பகருகின்றன. உதாரணமாக අටවි - அடவி என்ற ஆரியச் சொல் தமிழில் அடவியாகி (අඩවි-அடவி) சிங்கள மொழியில் අඩවිය - அடவிய என வழங்கி வருகிறது. 'තම්මැන්නා අඩවිය දැක-යන් එවිට - தம்மென்னா அடவிய தெக்க-யன் எவிட்ர என்று கோகில சந்தேசத்தில் பாடப்பட்டிருக்கிறது. 10ஆம் நூற்றாண்டு வதுளை ஏடு ஒன்றிலும் (බදුළු ලිපියෙහිද) ගම් අඩවිය අටදෙනා–கம் அடவிய அட்டதெனா என வருகிறது. இவ்வாறு தமிழின் செல்வாக்குப் பெற்ற கோகில சந்தேசத்தின் பாட்டுடைத் தலைவன் செண்பகப் பெருமாள் என்ற சபுமல் குமரயா ஆவான். சபுமல் என்று பாடல்களில் இடம் பெறுகின்றான். சபுமல் 6 ஆவது புவனேகபாகு என்ற பெயரோடு அரசு கட்டிலேறினான் என்பது வரலாறு. யாழ்ப்பாண நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கட்டியத்தில் 'மஹா தான சூரியகுல வம்சோத் பவ ஸ்ரீ ஜகத் சங்கபோதி புவனேகபாகு' எனக் குறிப்பிடப்படுபவனும் இச்சபுமல் குமரனேயாவான். பின்வரும் பாடலொன்றும் இவனைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

**இலகிய சகாப்த மெண்ணூற் றெழுபதா மாண்டி னெல்லை**
**அலர் பொலிமாலை மார்பனாம் புவனேகவாகு**
**நலமிகுந்திடு யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லைக்**
**குலவிய கந்தவேட்டுக் கோயிலும் புரிவித்தானே.**

சபுமல் குமரயாவுக்கு தேவந்துறை (தேவிநுவரை) உப்புல்வன் எனும் திருமாலின் ஆசிர்வாதத்தை அருளுமாறு பாடிய கோகில சந்தேசம் எனும் தூது இலக்கியம் தமிழ் சிங்கள உறவை விளக்கும் வரலாற்று இலக்கியமாகவும் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் கண்ணோட்டம் II

இலக்கியம் ஒரு சமூகக் கண்ணாடி என்பர். மக்களின் வாழ்க்கை, சமய கலாசாரங்கள், வரலாறுகள் என்பவற்றையெல்லாம் விளக்கி நிற்பதால் சமூகக் கண்ணாடியாகிறது. கண்ணாடி தன்முன்னுள்ளவற்றைப் பிரதிபலித்துக் காட்டுகிறது. அவ்வாறே இலக்கியமும் சமூக விடயங்களைப் பிரதிபலித்துக் காட்டுகிறது. இலக்கியங்கள் வரலாற்றுச் சான்று ஏடுகளாகவும் விளங்குகின்றன. இலக்கியப் புலவன் தான் வாழ்ந்த காலத்து வரலாறுகளையும் இலக்கியப் பாடல்களிற் பொறித்துவிடுகிறான். தமிழ் சிங்கள இலக்கியங்களிலிருந்து எத்தனையோ வரலாற்று உண்மைகளைக் கற்றுக்கொள்கிறோம். கற்பனையும் சுவையும் நிறைந்த கவிகளில் வரலாற்று உண்மைகள் நயம்படக் கூறப்படுகின்றன. அதன் காரணமாக அவ் வரலாற்றுச் செய்திகளும் அழகு பெறுகின்றன. ஒரு இலக்கியம் பல ஆண்டுகளுக்குமுன் படைக்கப்பட்டிருக்கலாம். எனினும், புலவன் அக்கால நிகழ்ச்சிகள், மன்னர்கள், வரலாற்றுச் சம்பவங்கள், பிரசித்திபெற்ற இடங்கள், தெய்வங்கள் என்பவற்றைப்பற்றிக் கூறத் தவறமாட்டான். சிங்கள சந்தேச காவியங்களிலே குறிப்பிடப்பட்ட பல இடங்கள் என்பவற்றின் வரலாற்றுத் தொடர்பை அறியப் பயன்படுகின்றன.

ஸ்ரீ இராகுலர் பாடிய **செலலிஹினி சந்தேசத்தில்** களனி ஜயவர்த்தன (சயவர்த்தன) புரம், நல்லூர் என்ற இடங்கள் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. விபீஷணத் தெய்வம் எழுந்தருளியிருக்கும் களனி நகரைப்பற்றிப் புலவர் கூறுவதை முதற்கண் பார்ப்போம்.

පව් රද කඳ නාලෝමුල් දිග'තුබ ර
ලෙව් තුරු සුසැදූ යසමිණි මුතු මල් පත ර
සව් සිරි පිරි සුර පුර වන් කැලණිපු ර
දෙව් මෙ හසුන් විබිසණ සුරිඳුට පව ර

(5)

இப்பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

පවුරද–කඳ. නාලෝ – මුල්. දිගු – අතුබර (ඇති)
ලෙව් – තුරු (තම) යස – මිණි මුතු මල් පතර සුසැදූ
සව් සිරි පිරි – සුරපුර වන් කැලණි පුර. පවර විබිසණ සුරිඳුට මෙහසුන් දෙව්

පවුරද-பவுறத என்றது மலைகளின் அரசனை, இங்கே அச்சொல் மகாமேரு மலையைக் குறிக்கிறது. දිගු - අතු திகு அத்து என்பதுதான் දිගතු - திகத்து எனப் புணர்ந்து நிற்கிறது. நீண்ட கிளைகள் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பொருள். යස–මිණි මුතු මල් පතර - யஸ மிணி முத்து பத்தற புகழாகிய மலர்ந்த மலர்க்கொத்து - உலகமென்ற மரத்தின் முதல்தான் ( පව්රද-பவ்றத) மகாமேருமலை அந்த மரத்தின் வேர்தான் (නාලෝ- நாலோ) நாகர் உலகம். அந்த மரத்தின் கிளைதான் திசைகள். அந்த உலகமென்ற மரத்தின் விரிந்த மலர்தான் உலகத்தின் புகழ். (යස -யஸ) எனவே, உலகமென்ற மரத்தில் புகழென்ற மலர் விரிந்து மலர்ந்து நிறைந்திருக்கிறது. இத்தகைய புகழையுடையவர்தான் விபீஷண தெய்வம். அவர் எழுந்தருளியிருக்கும் இடம் களனி நகர். கல்யாணபுரி. அந்நகர் சகல செல்வங்களும் நிறையப்பெற்றது. இந்திரனது நகராகிய அமராவதி போல் விளங்குகிறது. அந்தக் களனி நகரில் எழுந்தருளியிருக்கும் விபீஷண தெய்வத்திடம் இந்தச் செய்தியைக் கூறுவாயாக எனத் தூதாகிய நாகணவாய்ப் பட்சியிடம் கூறுகிறார் புலவர்.

இனி, இச்சிங்களப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பினையும் பார்ப்போம்.

**திசைகிளை பாதமூலம் செறிந்தபா தலமே மேரு**
**வசையிலா முதலா யோங்க வையகத் தருவிலீண்டி**
**இசைமலர் விரிக்குமையன் இந்திர புரிபோற் பூமி**
**மிசைவளர் களனி சென்று விபீடணர்க் குரைப்பாய் செய்தி**

**இவ்வாறு பூவைவிடுதூதில்** நவாலியூர் சோ. நடராசன் பாடுகிறார். உலகத்தை மரமாகவும் மகாமேருமலையை மரத்தின் தண்டாகவும் நாகலோகத்தை மரத்தின் வேராகவும், அட்ட திசைகளையும் மரத்தின் கிளைகளாவும் புகழை மரத்தின் மலர்ந்த மலராகவும் உருவகித்த நயத்தை இங்கு காண்கிறோம். மலர் மணக்கிறது - புகழ் மணக்கிறது - இவ்வாறு கூறும்போது புகழ் எங்கும் பரந்து வீசுகிறது என்பது பொருளாகும். அதுமாத்திரமன்றி அந்நாளில் களனி நகரின் சிறப்பையும் செல்வச் செழிப்பையும் காண்கிறோம். இந்திரபுரிபோல விளங்கிய களனி நகர் என்ற உவமை எம்மையும் களனி நகரின் வரலாற்றைக் கற்பனை செய்ய வைக்கிறது. இதுதான் இலக்கியம் காட்டும் வரலாற்று உண்மை. விபீஷண தெய்வம் கோயில் கொண்டுள்ள இன்றுள்ள களனி நகரத்தை அன்று கல்யாணபுரமாக விளங்கிய களனி நகருடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் இது உதவுகிறது.

இன்னும் களனி நகரின் வரலாற்றையும் சிந்திப்போம். இக்களனி என்ற கல்யாணபுரம் களனியாற்றின் கரையிலுள்ளது. கொழும்பிலிருந்து நாலுகல் தொலைவில் கண்டிப் பாதையிலுள்ளது. புத்த பிரான் வாழ்ந்த காலத்தில் களனி மணியக்கிகன் என்ற நாக அரசனின் இராசதானியாக விளங்கியது. இம்மன்னனின் வேண்டுகோளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணங்கிப் புத்தபிரான் களனிக்கு எழுந்தருளினார். அங்கு வந்து நாகர்க்குத் தருமோபதேசஞ் செய்தார். பின்னர் கி. மு. 3ம் நூற்றாண்டினிறுதியில் யசலாளக தீசன் என்ற சிங்கள மன்னன் களனியில் ஒரு நகரமைத்து ஆட்சி செய்தான். அப்பொழுது அவன் அந்நகரில் விகாரையையும் கட்டுவித்தான். இவனுக்குப் பின் களனித்தீசன் என்ற அரசன் அரசுக்கு வந்தான். (16 ஆம் நூற்றாண்டில் களனி போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டது) புத்தபிரான் எழுந்தருளிய நகரங்களில் களனி நகரும் ஒன்றானதால் புண்ணிய சேத்திரமாக விளங்குகிறது. இங்கே தான் இராமரின் நண்பனான விபீஷணர்க்கும் தேவாலயம் அமைந்திருக்கிறது.

இலக்கியம் காட்டும் இத்தகைய வரலாறு மகாவமிசமென்னும் வரலாற்று நூலில் இடம்பெற்றிருக்கிறது. ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் சிறப்பாய் விளங்கிய ஜயவர்த்தனபுரத்தின் வரலாற்றையும் சந்தேச இலக்கியங்கள் அழகுற வர்ணிக்கின்றன. இன்று இலங்கைப் பாராளுமன்றம் அமைந்துள்ள அதே ஜயவர்த்தனபுரத்தின் அழகையும் தியவன்னா சிற்றாற்றின் அழகையும் (දියවන්නා) செலலிஹினி சந்தேசத்தில் ஸ்ரீ இராகுலர் வர்ணிக்கிறார். அக்காலத்தில் ஜயவர்த்தனபுரம் செல்வத்திலும் அழகிலும் சிறந்து விளங்கியது. தேவருலகையும் தோற்கச்செய்து காட்சியளித்தது. அந்நகர்பற்றிய இன்னோர் அழகான வர்ணனை பின்வருமாறு:

සැදි රත තඹර පෙල රත තිසරුන් රුවැ'ති
විදි දිය දහර ලෙලදෙන දිගුතරු පටැ'ති
රැදි රළරැළැ'ති හොය දියවන්නා නමැ'ති
ඇදි පුර අඟන පටසළු සිරි රැපයි ' තිති

(8)

பாடலில், දියවන්නා හොය - தியவன்னா ஹொய என வருவது, தியவன்ன சிற்றாற்றைக் குறிக்கிறது. இது දියවඩනා தியவடனா- என்ற சொல்லின் வேற்று வடிவம். வெற்றிகள் மலிந்த என்ற கருத்துக்கொண்ட ජයවඩන- ஜயவட்டன என்ற சொல்லிலிருந்து பிறந்த சொல்தான் දියවඩනා- தியவடனா என்று கொள்வது பொருத்தமாக இருக்கும். செந்தாமரைமலர் வரிசை என்ற கருத்துள்ள රත් තඹර පේලි - றத்தம்பற பேலி என்ற தொடர் பாடலில் රත් තඹර පෙල றத்த தம்பற பெல - எனக் கூறப்பட்டிருக்கிறது. பொன் அன்னம் என்ற கருத்தைத் தரும் රන්–තිසරුන් - றன் திஸறுன் என்பதுதான் රන තිසරුන් - றன திஸறுன் என வருகிறது. තරුපට - நறுபட்ட என்பது கொய்சகத்தை (கொய்யகம்), විදි දියදහර - விதி தியதகற என்றது சிறிய நீர்வீழ்ச்சியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது பாடலைப் பொருளுக்கேற்பப் படித்தால்:

සැදි රත තඹර පෙල (හා) රනතිසරුන් රූ + ඇති.
විදි දිය දහර (නමැති) ලෙලදෙන දිගුනරුපට + ඇති.
රුදි රළ (නමැති) රුලි–ඇති. දියවන්නා නම + ඇති හොය.
පුර අඟන ඇදි පටසළු සිරි නිති ඇරුපැයි.

පුර අඟන - ஜயவர்த்தனபுரமென்ற நகரைப் பெண்ணாக-மங்கையாக உருவகிக்கிறார் புலவர். தியவன்னா சிற்றாறினை (දියවන්නා නම ඇති හොය - தியவன்னா நம எத்தி ஹொய) அந்த மங்கை அணிந்திருக்கும் பட்டுத்துகிலாக (පට සළු - பட்ட ஸலு) உருவகிக்கிறார். அந்தத் தியவன்னா சிற்றாறில் உள்ள (රත තඹර පෙල-றத்த தம்பற பெல) செந்தாமரைகளும் (රන තිසරුන්-றன திஸறுன்) பொன்னிற அன்னங்களும் (පට සළු සිරි - பட்ட ஸலு சிறி) அப்பட்டுத் துகிலின் கரைபோல் அழகுசெய்கின்றன (ඇරුපැයි - எறபெயி) வெளிப்படுத்துகின்றன. அந்த அருவியில் (විදි දිය දහර - விதி திய தஹற) வந்துவிழும் சுனைகள் உடுத்த பட்டுச் சீலையின் (නරුපට - நறு பட்ட) கொய்சகம் போன்றிருக்கின்றன.

செந்தாமரை மலர்களும் அன்னங்களும் நிறைந்துள்ள தியவன்ன எனும் சிற்றாறு ஜயவர்த்தனபுரத்தைச் சுற்றிவர அமைந்துள்ளது என்பதை இலக்கிய நயம்படப் பாடியுள்ளார் புலவர். இன்றுள்ள ஜயவர்த்தனபுரத்திற்கு இவ்வாறாய இலக்கியப் பெருமையும் வரலாற்றுப் புகழும் உண்டு. அச்சிங்களப் பாடலின் சிறப்பைப் பின்வரும் மொழிபெயர்ப்பிலும் காணலாம்.

**செந்தாமரை நிரையஞ்சிறை திகழன்னமொ டுறழ**
**வந்தோடிய சுனைநீரென வருகொய்யக மிளிர**
**நந்தா தலை தியவன்னமென் னதிகொண்டிடு கோலம்**
**சிந்தாமணி யனவிந்நகர்த் திருவின்துகில் போலும்**

ஜயவர்த்தனபுர நகராகிய இலக்குமியின் பட்டுச்சேலைபோல் தியவன்னச் சிற்றாறு விளங்குகின்றதென்பதை இப்பாடலிலும் வர்ணித்துள்ளார். இப்பாடல் பழைய வரலாற்றுப் பெருமையை நம்கண்முன்னே கொண்டுவருகிறது.

ஜயவர்த்தனபுரம் - முன்பு ஜயவர்த்தன கோட்டையெனவும் வழங்கி வந்தது. மூன்றாவது விக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் அவனது மந்திரியாகிய அழகக்கோனாரால் இந்நகர் கட்டப்பட்டது. இம் மந்திரி அழகேசுரன் எனவும் பெயர் பெறுவான். இவன் வீரமும் அரசியலறிவும் நிரம்பியவன். பின்னர், ஐந்தாம் புவனேகபாகு என்ற பெயருடன் அரசனானான். இக்கோட்டை நகரம், தாருகமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கிராமத்திலே கட்டப்பட்டது. இக்கிராமத்தை அடுத்துள்ள ஏரியை அழகேசுவரன் கோட்டையின் அகழியாக்கினான். அந்த அகழி நகரின் வலிமையுள்ள அரணாக விளங்கியது. தொன்புவான் தருமபாலன் காலம்வரை (கி. பி. 1597 வரை) இந்நகர் இலங்கையின் தலைநகராயிருந்தது. இப்போதும் இதுவே இலங்கையின் தலைநகராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. இலக்கியச் சிறப்பும் வரலாற்றுப் பெருமையுமுள்ள ஐயவர்த்தனபுரம் சகல வளங்களுடன் மிளிர்வதாக. இலக்கியங்கள் காட்டும் வரலாற்று உண்மைகளையும், இலக்கியச் சுவையோடு கற்று மகிழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர் வரலாறு

இலக்கிய ரசனைக்காக மட்டும் இலக்கியங்களைக் கற்பவர்களும் இருக்கிறார்கள். இலக்கிய ரசனை வாழ்க்கையின் பல அமிசங்களையும் அழகையும் இரசிக்க-நயக்க உதவுகின்றது. மணமும் தேனும் மகரந்தமும் நிறைந்த மலரின் அழகை இரசிப்பவர்கள் இவர்கள். வேறு சிலர், மலரின் இதழ், மகரந்தம் என்பவற்றை வேறு வேறாக்கி மலரை விமர்சிப்பதுபோல இலக்கியச் செய்யுள்களை விமர்சிப்பவர்கள். இன்னும் சிலர் இலக்கியத்தில் வரும் சொல்லமைப்பு, குறிப்புகள் என்பனவற்றைக்கொண்டு வரலாறு படைப்பவர்கள். பன்னூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இலக்கியங்கள், அக்காலச் சமூகத்தினர், மன்னர்கள் என்பவர்களைப்பற்றியும் அவர்கள் காலத்தைப் பற்றியும் அறிய உதவும் வரலாற்று நூல்களாகவும் பயன்படுகின்றன. சிலவேளைகளிற் பாடிய புலவர்களின் காலத்தை அறிவதற்கும் இலக்கியங்கள் துணைசெய்கின்றன. சிலப்பதிகார காலம், மணிமேகலை காலம் என்பனவற்றைக் காலவரையிட்டுக் கூறுதற்கும் அவற்றில் வரும் பாடல்கள் சான்று பகருகின்றன. கம்பராமாயணம் எக்காலத்தில் பாடப்பட்டது. கம்பராமாயணம் எந்த மன்னர் காலத்தில் பாடப்பட்டது? கம்பர் என்ற புலவரை ஆதரித்த வள்ளல் யார் என்ற விடயங்களை அறிதற்கும் இராமாயணப் பாடல்கள் துணை செய்கின்றன.

தமிழ்த்தூது காவியங்கள், சிங்களத்தூது காவியங்கள் குறிப்பிடும் வரலாற்று நிகழ்ச்சிகளில் அக்கால மன்னர்கள்பற்றி அவை என்ன கூறுகின்றன என ஆராய்வோம்.

தமிழிலே இலங்கையிலெழுந்த தூது காவியங்களில் '**சித்திர வேலாயுதர் காதல்**' என்பதும் ஒன்றாகும். இந்நூல் வெருகல் சித்திர வேலாயுதர் காதல் என அழைக்கப்படுகிறது. இந்நூல் திருக்கோணமலைக்குத் தென்பாலுள்ள வெருகற்பதி சித்திர வேலாயுத சுவாமியின் புகழைக் கூறுகிறது. இந்நூலைப் பாடிய புலவர் வீரக்கோன் முதலியார் ஆவர். இந்நூலில் கண்டியிலிருந்து அரசாண்ட இராசசிங்கன் என்பவன் புகழப்படுகின்றான். இவ்வரலாற்றைக் கொண்டு நூலாசிரியர் வாழ்ந்த காலமும் இராசசிங்கன் காலமெனக் (17 ஆம் நூ.) கொள்ளப்படுகிறது. அந்தத் தூதுப்பாடலின் ஒரு பகுதியை எடுத்துக் கொள்வோம்:

**"மெத்தப் புகழ் வாய்ந்த வெருகற்ப தியடையுஞ்**
**சித்திர வேலாயுதரின் சீரடியி லன்பு கொண்டு**
**மானமு டன்மிக்க வயனிலமுந் தோப்புகளும்**
**மானிய மாயீந்த மகராச ராசேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கம் வைத்திழைத்த வன்னப்ப தக்கமுடன்
பூணணிக வீந்து புகழ்படைத்த பூபாலன்
கண்டிநக ராளுங் கனகமுடி ராசசிங்கன்
தெண்டனிடும் போதெனது சேதியைநீ சொல்லாதை"

இந்தச் சித்திரவேலாயுதர் காதல் - (இத்தூது காவியம்) ஒல்லாந்தர் காலத்தில் பாடப்பட்டது. அக்காலத்தில் இரண்டாவது இராசசிங்கன் கண்டியிலிருந்து அரசாண்டுகொண்டிருந்தான். அந்த மன்னனும் இந்துமதக் கடவுளாகிய (முருகனிடம்) சித்திரவேலாயுதரிடம் அன்பு கொண்டவன். வேலாயுத சுவாமி கோவிலுக்குக் காணிக்கைகள் செலுத்தியவன், மானியங்கள் வழங்கியவன் என்ற இச் செய்திகளையெல்லாம் இலக்கியங்கள் தருகின்றன. பாடலில் மன்னன் 'கண்டி நகர் ஆளும் கனகமுடி ராசசிங்கன்' என்று புகழப்படுகிறான். 'அவன் தெண்டனிட்டு - விழுந்து வணங்கும்போது என் தூதுச் செய்தியைச் சொல்லாதை' எனப் புலவர் கூறுவதிலிருந்து அம்மன்னன் சிறப்பும் விளங்குகிறது. மேலும், அக்காலத்தில் இந்து சமயத்தை ஆதரித்த மன்னன் என்பதும் தெளிவாகின்றது.

இவ்வாறு சிங்கள இலக்கியங்களில் தமிழையும் இந்து சமயத்தையும் ஆதரித்த சிங்கள மன்னர்களின் வரலாறுகளையும் படிக்கின்றோம். ஆறாவது பராக்கிரமபாகு, முதலாம் இராசசிங்கன் என்போர் தமிழையும் இந்து சமயத்தையும் நன்கு ஆதரித்தார்கள் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் நிறைய உண்டு. செலலிஹினி சந்தேசத்தில் ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறான்.

සත නෙත දුන් රූ සිරි රස අඳුන්වන
පත නරලොව පුරඳර සිරි හඳුන්වන
විකුමෙන් දඹදිව නිරිඳුන් මුදුන්වන
අප පැරකුම් නිරිඳුට දු ලඳුන්වන

(99)

இப்பாடலில் கோட்டைக்கால மன்னன் ஆறாவது பராக்கிரமபாகுவின் சிறப்புகளைக் கூறுகிறார் ஸ்ரீ இராகுலர். அம்மன்னன் නරලොවට පත් පුරඳර ගේ සිරි හඳුන්වන - நறலொவட்ட பத் புறந்தறகே சிறி ஹந்துன்வன என்கிறார். அதாவது அம்மன்னன் பூலோகத்தில் அவதரித்த இந்திரன் என வர்ணிக்கிறார். அவன் பராக்கிரமத்தில் சம்புத்தீவிலுள்ள மன்னரிலும் மேலானவன் என்கிறார். அதனையே විකුමෙන් දඹදිව නිරිඳුන් ට මුදුන් වන - விக்குமென் தம்பதிவ நிறிந்துன் ர முதுன் வன என்று பாடியிருக்கிறார். அம்மன்னன் மிக அழகானவன். பார்ப்பவர்கள் கண்களுக்குக் குளிர்ச்சியானவன். கண்ணுக்குப் பூசிய மை (அஞ்சனம்) கண்ணுக்குக் குளிர்ச்சி தருவதுபோல் அவனது உடலழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பவர்கள் கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இதனையே ( තම - தம), (රූසිරි සත (න්ගේ) றூஸிறி ஸத, (නෙත(ට) දුන් රස අඳුන් වන් (වූ) - நெத்த துன் றஸ அந்துன்வன் என்று வர்ணிக்கிறார் புலவர். இனி இச்சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்பினைப் பார்ப்போம்.

'தேவருக் கிறைவன் பூமி சிறந்திட இவரீந்த தோற்றம்
யாவர்க்கும் நயனத்திட்ட வஞ்சனச் சாயலன்னான்
நாவலந் தீவில் மன்னர் சென்னியில் நயந்து சூட்டுங்
காவலன் பரகும் பாவின் காதனற் புதல்வி யாவாள்'

(101)

பாடல்மூலம் ஆறாவது மன்னர் வரலாறு மட்டுமன்றி அவனது மகளாகிய உலகுடையதேவி பற்றிய வரலாற்றையும் அறிகிறோம். அந்த உலகுடைய தேவிதான் சந்தேச காவியத்தின் பாட்டுடைத் தலைவி. அரச பரம்பரையில் தமிழ் சிங்கள மொழி உறவுபோல இன உறவும் நிலவியதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

காவியங்களைச் செய்த புலவர்கள் தங்களை ஆதரித்த புலவர்களை, வள்ளல்களை, மன்னர்களைக் கவிகளில் பாடி அவர்கள் பெயர்களை உலகத்தில் நிலைபெறச் செய்துவிடுவார்கள். கவிச் சக்கரவர்த்தி கம்பன், தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலைக் கம்பராமாயணப் பாட்டுகளில் நிலைக்க வைத்திருக்கிறார். வெண்பாவிற் சிறந்தவர் புகழேந்திப் புலவர். அவர் தம்மை ஆதரித்த வள்ளல் சந்திரன் சுவர்க்கியை நளவெண்பாப் பாட்டுகளிலே புகழுடம்புடன் வாழவைத்திருக்கிறார். அவ்வாறே சிங்களப் புலவர்களாகிய ஸ்ரீ இராகுலர், வெத்தாவ, அழகியவண்ண முகவெட்டி என்போரும் செய்திருக்கின்றனர். ஸ்ரீ இராகுலர் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனைத் தமது காவியசேகர, செலலிஹினி சந்தேச(ம்), பறவி சந்தேச(ம்) ஆகியவைகளிற் பலபடப் புகழ்ந்துள்ளார். வெத்தாவ என்பவர் தம்மை ஆதரித்த 'சடையப்பவள்ளலாகிய' சிலாபம் ஜயபால அமைச்சனைத் தமது குத்தில காவியச் செய்யுள்களிலே போற்றுகிறார். அழகியவண்ணமுகவெட்டி (අලගියවන්න මුකවෙටි) முதலாம் இராசசிங்க மன்னனை தமது குசஜாதக காவியச் செய்யுளிலே போற்றுகிறார்.

குச ஜாதக காவியத்தில் (කුස ජාතක කාව්‍යය) வரும் ஒரு பாடலைப் பார்ப்போம்:

රවිකුල කොත් ප          බඳ
රජසිහ රජුගෙ මන          නඳ
සිරි පද සෙවණ          සොඳ
වැඩුණ සැප සේ සව් ඉසුරු          විඳ

(8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் அழகியவண்ண முகவெட்டி என்ற புலவர் அக்காலத்திலிருந்த முதலாவது இராசசிங்கனை நூல் ஆரம்பத்தில் போற்றுகிறார். அம்மன்னன் රිවකුල පබඳ වූ - றிவிகுல பபந்த வூ - சூரிய குலத்தில் பிரசித்தி பெற்றவன். அவன் சூரிய குலக்கொழுந்தாவான். මනනද மனனத - எல்லோர் மனத்தையும் கவருந்தன்மையன், රජසිංහ රජුගේ - றஜசிங்ஹ றஜுகே - இராசசிங்க மன்னனின், සොඳ සිරිපද සෙවන- ஸொந்த ஸிறித ஸெவன - நன்மைதரும் பாதார நிழலில், සව් ඉසුරු විඳ- ஸவ் இஸுறு விந்த - சகல சம்பத்துக்களும் சௌபாக்கியங்களும் நிறைந்து, සැපසේ වැඩුණු - ஸெபஸே வெடுணு - நன்கு தழைப்பதாக என்று வாழ்த்துகிறார்.

குச ஜாதக காவியத்தைப் பாடிய அழகியவண்ணரும் தமிழிற் பாண்டித்தியம் பெற்ற புலவர். முதலாவது இராசசிங்கனும் தமிழ் முதலாம் பல மொழிகளைக் கற்றவன். அதனை, දසට දෙසෙහි බස සියබස මෙන් හසල - தஸட்ட தெஸெஹி பஸ ஸியபஸ மென் ஹஸல என சேவல் விடுதூதில் வரும் ஒரு பாடலில் அடி குறிப்பிடுகிறது. அம்மன்னன் 18 நாடுகளின் மொழிகளைச் சொந்த மொழிபோல் நன்கு அறிந்தவன். அதுமட்டுமன்றி இராசசிங்க மன்னனின் புலவர் சபையிலிருந்தோர் சிங்களம், பாளி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் மட்டுமன்றித் தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினார்கள். **சிங்கள சேவல் விடுதூது** என்னும் காவியத்தில் வரும் பின்வரும் பாடலும் அதனை உறுதிப்படுத்துகின்றது.

ගැඹුරු සකු මගද හෙළු දෙමළෙහි පුරු දී
සොඳුරු සඳ ලකර වියරණ දත් කිවි දී
මිසුරු අරුත් යොදමින් කවි බැඳි විරි දී
අතුරු නොව කියති සබතුරෙහි පරසි දී

ගැඹුරු සකු මගද හෙළු දෙමළෙහි පුරුදු - கெம்புறு ஸக்கு மகத ஹெளு தெமளெஹி புறுது - என்று கூறுகிறார்.

சமஸ்கிருதம், பாளி, சிங்களம், தமிழ் ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவுடையவர்கள். மிகப் பாண்டித்தியமும் பரிச்சயமும் உள்ளவர்கள் அப்புலவர்கள். அழகிய சந்தம், அணி, யாப்பு ஆகிய இலக்கணங்களைக் கற்ற புலவர்கள் அவர்கள். பொருள் மலிந்த இனிய கவிகளைப் பாடும் புலவர்கள் அவர்கள். சபையினில் சரளமாகக் கவிபாடிப் பிரசித்திபெற்றவர்கள் அப்புலவர்கள். இவ்வாறு அரசசபைப் புலவர்கள் விளங்க, மன்னர்களும் பாண்டித்தியம் பெற்ற புரவலர்களாக இருந்தார்கள். அதனாலன்றோ அன்றைய இலக்கியங்கள் ஒருமைப்பாடுகளை விளக்கும் இனிய சுவையான இலக்கியங்களாக விளங்குகின்றன. இவை வாழும் இலக்கியங்கள். அவற்றை இன்னும் பலகாலம் வாழவைப்பதும் எம் கடனன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV
# கவிதைப் பண்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வர்ணனை I

இலக்கியங்களிலே புலவர்கள் இயற்கையை வர்ணிக்கத் தவற மாட்டார்கள். இயற்கையை வர்ணிக்கும்போது உவமை, உருவகம் போன்ற அணிகளையும் கையாள்வார்கள். புலவர்களுக்கு இயற்கையை வர்ணிப்பதில் ஓர் மகிழ்ச்சி இருக்கும். அத்தகைய வர்ணனைகளைப் படிக்கும் வாசகர்களும் இன்பம் பெறுவார்கள். பாடல்களைச் சுவைத்துச் சுவைத்துப் படிப்பார்கள். சிங்களப் புலவர்களிலே ஸ்ரீ இராகுல தேரர் தலைசிறந்தவர். அவருடைய படைப்புகளாகிய **காவியசேகர, செலலிஹினி** சந்தேச என்னும் இரு நூல்களும் இயற்கை வர்ணனைகளை நிறையக் கொண்டுள்ளன. செலலிஹினி சந்தேசவில் (பூவைவிடுதூதில்) பூவையை வர்ணிப்பதை முன்னர் எடுத்து விளக்கினோம். அதனைப் படிக்கும்போது ஆங்கிலக் கவிஞர்களாகிய வோட்சுர்வோர்து, செல்லி, கீற்சு ஆகியவர்களின் நினைவும் எமக்கு வருகின்றது. ஸ்ரீ இராகுல தேரர் செலலிஹினி சந்தேசவில் **සැරද සුළ කල'කුරු – මියුරු තෙපලෙන් රදනා** - செறத ஸுல கள அக்குறு -மியுறு தெபலென் றந்தனா என்று பூவையை விளித்துத் தூதுவிடுகிறார். இதன் கருத்து: உன் பேச்சு மிக்க அலங்காரப் பண்பு நிறைந்தது; ஒலித் தூய்மை உடையது; இனிமை பொருந்தியது. உன் பேச்சு கேட்டோரை மகிழச் செய்கிறது என்பதாகும். ஆங்கிலக் கவிஞர் செல்லி (ஷெல்லி) வானம்பாடியைப் பார்த்து "முன்னெண்ணி முடிக்காத கலையாகிய உன்பாடலிலே உன் உள்ளத்தையெல்லாம் அள்ளிச் சொரிகிறாய்" என்று கூறுகிறார். இனிப் பாடலின் முற்பகுதியைத் தருகிறோம்.

**ஆனந்தப் புள்ளே, அழகியாய் நின்றன்**
**அகத்தினை விள்ளுக சிறிதே**
**தேனொன்று காதற் சீரின்பம் பிறிது**
**தெரிந்திலேன் உன்னிசை தவிர.**

வானம்பாடியை ஆனந்தப் புள்ளே-பறவையே என்று விளித்துப் பாடுகிறார். வானம்பாடி மனநிறைவோடு மகிழ்ச்சியாகப் பாடுகிறது. அப்பறவை பாடிப்பாடி உயரப் பறக்கிறது. அப்பாடலில் இன்பம் பொங்குகிறது. அந்த இன்பம், துன்பம் துளிகூட இல்லாத இன்பம். வானம்பாடியின் இசையில் கவிஞன் மயங்குகிறான். அப்பறவையைப் போற்றிப் பாடுகிறான். இந்த ஆங்கிலக் கவிஞன் செல்லியில் சுப்பிரமணிய பாரதியாருக்கும் ஈடுபாடு உண்டு. செல்லியின் இயற்கை வர்ணனைகளைப் பாரதியாரும் போற்றியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லியின் இயற்கை வர்ணனையின் சாயல் ஸ்ரீ இராகுல தேரரின் இயற்கை வர்ணனையிலும் அமைந்திருக்கிறது. செல்லி வானம்பாடி என்னும் பறவையை வர்ணித்தது போலச் சுப்பிரமணிய பாரதியார் சிட்டுக்குருவியை வர்ணிக்கிறார். சிட்டுக்குருவியின் சுதந்திரமான வாழ்க்கையை உவமானமாகக் காட்டுகிறார். அவ்வாறு காட்டும்போது சிட்டுக்குருவியின் இயல்பை-இயற்கை நிகழ்ச்சிகளைத்தான் கூறுகிறார். இனிப்பாடலைப் பார்ப்போம்.

**பல்லவி**

விட்டு விடுதலை யாகிநிற்பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போல

**சரணம்**

எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றிலே விரைவொடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னும் மதுவின் சுவையுண்டு (விட்டு)

(பாரதி பாடல்)

எல்லாத் திசைகளிலும் எப்பக்கத்திலும் விரும்பியவாறு சிட்டுக்குருவி பறக்கிறது. காற்றிலே உயர உயரப் பறக்கிறது. விரைவாக நீந்திப் பறக்கிறது. பரந்த ஆகாயம்-மட்டுப்படாத ஆகாய வெளிச்சம் பரந்து குவிந்து கிடக்கிறது. வானொளி நிறையக் கிடக்கிறது என்பதனையே எவ்வளவு அழகாக 'கொட்டிக் கிடக்கிறது' என்று பாடுகிறார் பாரதியார். அவ்வொளியை மதுவாக உருவகிக்கிறார். அம்மதுவின் சுவையை அருந்தி, காற்றிலே ஏறி மேலே மேலே செல்கிறாய் என்று சுவைபட வர்ணிக்கிறார். இங்கே ஆங்கிலப் புலவன் செல்லியின் வர்ணனைக்கும் பாரதியாரின் வர்ணனைக்குமிடையில் நிறைந்த ஒற்றுமைகளைக் கண்டு இரசிக்கிறோம். அவ்வாறே, பூவைவிடுதூதில் நாகணவாய்ப் பட்சியைச் ஸ்ரீ இராகுலர் வர்ணிப்பதிலும் ஒற்றுமைகள் இருப்பதனைக் காண்கிறோம்.

செலலிஹினி சந்தேசவில் புலவர் நாகணவாய்ப் பட்சியைத் தூதாக அனுப்புகிறார். நாகணவாயும் களனியாவிலுள்ள விபீஷண தெய்வத்திடம் வரம் வேண்டிப் பறந்து செல்கிறது. பறவை செல்லும் வழியில் பல இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன. பலவகை மரஞ்செடிகள் நிற்கின்றன. புலவர் அம்மரங்களின் காட்சியை வர்ணிக்கும் ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY

මග  නිලමින්  සිටිනා දොඹ නී පිය  ල
පිය  සලමින්  මලගෙහි කෙළැ රොනින'ව  ල
නතු  බලමින්  බිඳ විලිකුන් මියුරු ප  ල
ඉසුඹු  ලමින්  යාසැල දඹ පඳුරුව  ල

(35)

நீ செல்லும் வழியிலே நா(நாகம்) , தொம்ப(புன்னை), நீ(இருப்பை), பியல(பாலை) என்னும் மரங்கள் நிற்கின்றன. அவை நிரையாய் நிற்கின்றன. பச்சைப் பசேலென அழகு தருகின்றன. அந்த மரங்களில் பொன்மயமான பூக்கள் இருக்கின்றன. அவற்றின் மேல் பறந்து செல்வாயாக. அவ்வண்ணம் சென்று சம்புநாவற் காட்டில் இளைப்பாறுவாயாக. அங்கே அம்மரங்களின் பழங்களை உன் கூர்மையான அலகினால் கொத்தித் தின்பாயாக. அப்பழங்களை அலகாற் பிளந்து உள்ளேயிருக்கும் தீஞ்சுவைச் சாற்றை-இனிமையான சாற்றைப் பருகுவாயாக என்று அழகாகக் கூறுகிறார். கண்ணுக்குக் குளிர்ச்சியான மரங்கள், காட்சிக்கு அழகான பூக்கள், மனத்திற்கும் உடலுக்கும் இளைப்பாற அருமையான சம்புநாவற்காடு. வாய்க்கு உருசியான நாவற்பழங்கள்; ஒரு தூதுவனுக்குத் தேவையான வாடி வீடு, உணவு போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதுபோல கவிஞனும் தூதுக்கு வசதிகள் அமைத்துப் பாடியிருக்கிறார். இனி இப்பாடலின் மொழிபெயர்ப்புப் பின்வருமாறு:

புன்னையங் கானலோடு பூமலி நாகஞ் சூழ
மன்னிய விருப்பை பாலை மயங்கிட விருண்ட மார்க்கம்
துன்னிய மலர்த்தா தாடிச் சுவைமிகு கனிக ளுண்டு
பின்னரந் நாவற்காடு பிறங்கிடத் தங்கிச் செல்வாய்

(பூவை – 37)

இவ்வாறு இயற்கையாகக் காட்சிதரும் மரங்கள், மலர்கள், கனிகள் என்பனவற்றைப் புலவர் வர்ணிக்கிறார்.

இராகுலர் உருவகங்கள் உவமைகள் முதலிய அணிகளுக்கும் இயற்கையிடம் செல்கிறார். இயற்கையில் அவருக்கு நிறைந்த ஈடுபாடுண்டு. இயற்கையை அவர் நன்றாகக் கூர்ந்து அவதானிப்பவர் என்பது அவர் பாடல்களில் சிறப்பாக விளங்குகிறது. செலலிஹினி சந்தேசவில் வரும் இன்னொரு பாடலை எடுத்துக் கொள்வோம்.

සුනිල්  වලානව සඳ නිලුපුල්  පබළු
විමල්  සක් ගිජිඳු කුඹු සිරිවස  බැබළු
විපුල්  පුලින රඹ සිකිගල මුතු  ළදළු
ලකල්  රනලියන් සරනා බල  යහළු

(56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிங்களச் சந்தேசப் பாடலில் உவமைகள் பல வருகின்றன. இப்பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பினை முதலில் பார்ப்போம்.

**அஞ்சன மேக மந்திப் பிறையொடு பவள நெய்தல்**
**விஞ்சொளிர் தூய சங்கு வேழ மத்தக முடுக்கை**
**மஞ்சையின் கழுத்து மாண்ட கதலியின் தண்டி னோடு**
**மிஞ்சிய தளிரும் முத்தும் விளங்குபொற் கொடிகள் காணாய்**

பொற்கொடிகள் போன்ற பெண்கள் களனி நகரின் மாடங்களில் நிற்கிறார்கள். அவர்கள் அசைவது பொற்கொடிகள் போன்றிருக்கிறது. தூதாகச் செல்லும் நாகணவாய்ப் பட்சியிடம் இக்காட்சியைப் பார்க்கும்படி புலவர் கூறுகிறார். முதலில் நாகணவாயை வர்ணித்த முறையைப் பார்த்தோம். இங்கு களனி நகரப் பெண்களின் வர்ணனையைப் பார்க்கிறோம். ஒரு துறவியின்-பிக்குவின் கற்பனை இவ்வாறு இருக்குமா? என்று எண்ணுகிறோம். துறவியென்றாலும் கவிஞன் கவிஞனே என்ற முடிவுக்கு வருகிறோம். பெண்களின் அழகினால் உண்மையாகவே கவிஞரின் உணர்ச்சி தூண்டப்படுகிறது. எனினும், அது காம இச்சையில்லாத தூய அழகிய இன்பம். ஸ்ரீ இராகுலரின் கையிற் பெண்களின் உடல் கலையுருவமாக மாறிவிடுகிறது. மீண்டும் அச்சிங்களப் பாடல் காதில் ஒலிக்கிறது. அப்பாடலைப் பொருளுக்கேற்ப பிரித்துப் படித்துப் பார்ப்போம். அப்போது அதிலுள்ள உவமைநயம் விளங்கும்.

**සුනිල් වලා, නවසඳ, නිලුපුල්, පබළු විමල්, සක් ගිජිඳුකුඹු**
**බැබළු, සිරිවස, විපුල් පුළින, රඹ, සිකිගල, මුතු, ලදළු (යන මෙයින්)**
**ළකල් (ව) සරනා රනලියන් යහළු, (තෝ) බල.**

**යහළු තෝ රනලියන් බල** - யஹளு தோ றனலியன் பல-பூவையே பொற்கொடிகளாகிய பெண்களைப் பார்ப்பாயாக என்று கூறுகிறார் புலவர். அதனை, அவர் புதுவிதமாகக் கூறுகிறார். அதிற்றான் கவியின் அழகும் நயமும் இருக்கின்றன. கறுத்த மேகம், அந்திப் பிறைச் சந்திரன், கருநெய்தல் (கருங்குவளை), பவளம், வெண்சங்கு, யானையின் மத்தகம், உடுக்கை, கதலித்தண்டு, மயிலின் கழுத்து, இளந்தளிர், முத்து என்பனவற்றையுடைய பொற்கொடிகள் அசைகின்றன என்கிறார். பொன்னிற மேனியுடைய இளம் பெண்களைத்தான் பொற்கொடிகள் என்கிறார். அவர்கள் களனி நகர் மாடங்களில் நின்று நடை பயில்கின்றனர். அவ்வாறு, அவர்கள் அசைவது பொற்கொடிகள் ஆடி அசைவதுபோல இருக்கிறது. இளமங்கையர்களின் கூந்தல், நெற்றி, கண்கள், வாய், கழுத்து, மார்பு, இடை, தொடை, கால், கைகள், பாதங்கள், நகங்கள், உடல் என்பவற்றின் அழகையே புலவர் இவ்வாறு வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலில் புலவர் காட்டும் உருவகங்கள் பொருத்தமாக அமைகின்றன. வாசகர்கள் கண்டு கேட்டு அறிந்த இயற்கைப் பொருள்களைக் கொண்டுதான் உருவக அணியைக் காட்டுகிறார். கறுத்த மேகங்களைப் போல இளம் பெண்களின் கூந்தல் இருக்கிறது. பிறைச் சந்திரனைப் போல அவர்களது நெற்றி இருக்கிறது. கருங்குவளைபோலக் கண்கள் இருக்கின்றன. பவளம் போல வாய் இருக்கின்றது. வெண்மையான சங்குபோலக் கழுத்து இருக்கின்றது. யானையின் மத்தகம்போல மார்புகள் இருக்கின்றன. உடுக்கைபோல இடை இருக்கின்றது. கதலித்தண்டுபோல தொடைகள் இருக்கின்றன. மயிலின் கழுத்துப் போல கால்கள் இருக்கின்றன. இளந்தளிர்கள்போல் கைவிரல்கள், கால்விரல்கள் இருக்கின்றன. முத்துப்போல நகங்கள் இருக்கின்றன என உவமானம் உவமேயங்காட்டி உவமையணியாகக் கூறாமல் உவமானங்களை உருவகித்துள்ளார். இவையெல்லா வற்றையும் வைத்திருக்கின்ற இளம் பெண்களாகிய பொற்கொடிகள் என உருவகஞ் செய்துள்ளார் புலவர்.

இத்தகைய வருணனைகளில் புலவர்களின் கற்பனையை இரசிக்கின்றோம். உயர்வு நவிற்சியணி இயற்கை நவிற்சியை விழுங்கிவிடுகிறது. எம்மொழிகளில் இலக்கியங்கள் அமைந்தாலும் இவ்வாறான சுவையான ஒருமைப்பாடுகளைக் கண்டு இரசிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வர்ணனை II

இலக்கியங்களிலே இயற்கை வர்ணனைகள் அழகாகச் சித்திரிக்கப் படுவது வழக்கம். மரஞ் செடி கொடிகள், ஆறு, மலை, பறவைகள், விலங்குகள் என்பனவற்றைப் புலவர்கள் வர்ணிப்பார்கள். இயற்கைக் காட்சிகளை ஓர் ஓவியன் சித்திரத்தில் தீற்றிக் காட்டுவான். ஆனால், கவிஞன் அக்காட்சிகளைச் சொல்லோவியமாக-சொற்களால் தீற்றிக் காண்பிப்பான். உவமை உருவகம் போன்ற அணியலங்காரங்களையும் பயன்படுத்துவான். புலவனுடைய சொல்வண்ணத்தால் அவனது கவிகள் எங்கள் மனத்தில் பதிகின்றன. அக்கவிகளின் சிறப்பினை நாம் பாடிப்பாடி மகிழ்கிறோம். சுவைத்துச் சுவைத்து இன்புறுகிறோம்.

எமது நாட்டுப் புலவர் சின்னத்தம்பி புலவர். அவர் இயற்கையை ஒரு பாடலில் வர்ணிக்கிறார். அவரது பாடலின் வாயிலாக இயற்கைக் காட்சியை மனக்கண்ணால் கண்டு இரசிக்கிறோம். முகில்களைத் தொடும் மாடமாளிகைகள்; அங்கே உலாவுகின்ற மங்கையர்; தாமரை மலர்கள்; அந்தத் தாமரை மலர்களில் விளையாடும் அன்னங்கள்; நீரிலே ஓடுகிற சுறா மீன்கள்; பாய்ந்து திரிகிற சுறா மீன்கள் ; நீர்க் கரையிலே நிற்கிற பலா மரங்கள்; அவற்றிலே பழுத்துத் தொங்குகிற பலாப் பழங்கள்; இஞ்சி வேலி; மஞ்சள் தோட்டம் ஆகிய பல இயற்கைக் காட்சிகள் வருகின்றன.

அப்பாடல் பின்வருமாறு:

**மஞ்சளாவிய மாடங்கள் தோறும்**
**மயில்கள் போல்மடவார்கணஞ் சூழும்**
**அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை**
**அன்ன வன்னக் குழாம் விளையாடும்**
**துஞ்சி மேதி சுறாக்களைச் சீறச்**
**சுறாக்க ளோடிப் பலாக்கனி கீறி**
**இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்**
**ஈழ மண்டல நாடெங்கள் நாடே**

முகில்களைத் தொடும் மாடங்களிலே பெண்கள் கூட்டம் நிற்கிறது. அப்பெண்கள் மயில்களின் சாயலைப் போன்றவர்கள். இயற்கைக் காட்சிக்கு உவமையணியைப் பயன்படுத்துகிறார் புலவர். சரோருகம் என்றது தாமரையே. அத்தாமரைப் படுக்கையில் அன்னக்கூட்டம் விளையாடுகிறது. எருமைகள் நீரிலே நித்திரை செய்கின்றன. அவை எழுந்து மூச்சுவிடுகின்றன. அச்சத்தத்தால் சுறாக்கள் வெருட்சி கொள்கின்றன. அவ்வாறு வெருண்டு ஓடிய சுறாக்கள் மேலெழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்கின்றன. அவை பாய்ந்த பாய்ச்சலில் பக்கத்தில் நின்ற பலா மரங்களிலிருந்த பலாப்பழங்களைக் கிழிக்கின்றன-கீறுகின்றன. அவ்வாறு கீறிவிட்டு இஞ்சியை வேலியாகவுடைய மஞ்சள் தோட்டத்தில் போய் விழுகின்றன. சாதாரண நிகழ்ச்சிக்குக் கவிஞன் தனது கற்பனையால் மெருகூட்டியிருக்கிறான். காட்சி கண்ணுக்கு இனிதாய் இருக்கிறது. கவிதை இனிக்கிறது. சிங்கள காவியமாகிய காவியசேகரவில் வரும் இயற்கை வர்ணனை ஒன்றை எடுத்துக் கொள்வோம். அந் நூலாசிரியராகிய இராகுல தேரரும் எமது நாட்டுச் செடிகொடிகள், உயிரினங்கள் என்பவற்றின் அழகிலே மயங்கினார். காவியசேகர இந்திய சூழலைப் பின்னணியாகக் கொண்ட ஒரு கதையினையே கூறுகிறது. எனினும், இயற்கை வருணனைகளில் கவிஞர் தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கையின் அழகையே வர்ணிக்கிறார். ஆகவே, அவரையறியாமலே இந்நாட்டின் இயற்கை எழிலும் வண்ணமும் இனிய பாடல்கள்மூலம் வெளிப்படுகின்றன. இப்பாடல்கள் சிங்களச் செய்யுள் இலக்கியத்தில் ஒரு புதிய சந்தத்துடன் விளங்குகின்றன. இனி அவ்வாறான சிங்களப் பாடல் ஒன்றினைப் பார்ப்போம்.

පැන පැන යන වඳුරණ පල වගුරණ
ගුමු ගුමු නද බමරණ පිපි තඹරණ
බිය කර ගිරි දැදුරණ සිටි ගවරණ
සිය රුචි ලන සියුරණ මත මියුරණ

(සගිය 4–16)

ஒவ்வோர் அடியின் ஈறுதோறும் වගුරණ, තඹරණ, ගවරණ, මියුරණ- வகுறண, தம்பறண, கவறண, மியுறண என்றவாறு (இயைபுத் தொடை) எதுகைச் சொற்கள் பெற்று இன்னோசை தருகிறது. இப்பாடல், அடியின் இடையிலும் වඳුරණ, බමරණ, දැදුරණ, සියුරණ - வந்துறண, பமறண, தெதுறண, ஸியுறண என்ற எதுகைச் சொற்கள் வருகின்றன. வர்ணனை மட்டுமன்றி அருமையான சந்த ஓசை கொண்டது இப்பாடல். இப்பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்தால்:

පල වගුරණ, පැන පැන යන වඳුරණ
බමරණ, ගුමු ගුමු නද, පිපි තඹරණ
ගිරි දැදුරණ සිටි බියකර ගබරණ
පිය රුචි ලන, සියුරණ මත මියුරණ

வானரங்கள்-குரங்குகள் கிளையிலிருந்து கிளைக்குத் தாவுதலாற் பழங்கள் கீழே விழுகின்றன. மலர்ந்த தாமரைப் பூக்களின்மீது தேன் வண்டு (බමරණ - பமறண) மொய்த்துப் பாடுகின்றன. (ගුමු ගුමු නද -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமு குமு நத) வண்டுகள் ரீங்காரநாதம் செய்கின்றன. பயங்கரமான காட்டாக்கள் - காட்டுப் பசுக்கள் (බියකර ගවරණ -பியகற, கபறண) குன்றுகளில் சாரலில், (ගිරිදුදුරණ-கிறிதெதுரண) உலாவுகின்றன. இனிய குரலுடைய பறவைகள், (පිය රැවු ලන - பிய றெவு லன) ஒலிசெய்ய ஆண் மயில்கள், (මත මියුරණ -மத மியுறண) நடனமாடுகின்றன. இவ்வாறு குரங்குகள், தேன்வண்டுகள், காட்டாக்கள், பறவைகள், மயில்கள் என்பனவற்றின் இயற்கைக் காட்சியை அழகாக வர்ணிக்கிறார் சிங்கள காவியசேகர ஆசிரியராகிய இராகுல தேரர்.

இப்பாடலில் வரும் குரங்குகளின் செயல் புகழேந்திப் புலவரின் பாடலில் வரும் செய்தியை நினைவூட்டுகின்றது. அந்தக் குரங்குகள் தமிழ்நாட்டுக் குரங்குகள். அவை தமிழ்நாட்டின் இளநீரைப் பறித்தெறிகின்றன. புகழேந்திப் புலவர் இதற்குக் காரணகாரியங்களைக் கூறுகிறார். உழவர்கள் தாகசாந்தி செய்ய வேண்டியிருந்தது. அவர்களுக்குத் தண்ணீர்த்தாகம். அந்த உழவர்கள் வயலில் ஊருகின்ற சங்குகளை எடுத்துக் குரங்குகளுக்கு எறிகிறார்கள். அப்படி எறிவதற்கும் ஒரு சாட்டு வைத்துத்தான் எறிகிறார்கள். குரங்குகள் பலாப்பழத்தைப் பறித்ததென்பதுதான் அச்சாட்டு. அச்சாட்டை வைத்துக் குரங்குக்கு எறிகிறார்கள். குரங்குகள் சும்மா இருக்குமா? அவை இளநீரைப் பறித்து எறிகின்றன. உழவர்கள் இளநீரைக் குடித்துச் சாந்தி செய்கிறார்கள். இனிப்பாடலின் பகுதியைப் பார்ப்போம்.

"பங்கப் பழனத் துழுமுழவர் பலாவின் கனியைப்
பறித்த தென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண்
டெறியுந் தமிழ்நாடு"

இப்பாடல் தமிழ்நாட்டு வயல்களில் வளத்தை இவ்வாறு வர்ணிக்கிறது. பாடலினுள்ள பழனம்-வயல், உழவர், பலாப்பழம், சங்கு, குரங்கு, இளநீர் என்பன நாட்டின் வளத்தை விளக்கப் பயன்படுகின்றன. உழவர் எறியப் பயன்படுத்தியது சங்கு, குரங்கு பதிலுக்கு எறியப் பயன்படுத்தியது இளநீர். இச்செயல்கள் நாட்டின் வளத்தை விளக்குகின்றன. சிங்களப் பாடலில் குரங்குகள் கிளையிலிருந்து கிளைக்குப் பாயப் பழங்கள் விழுகின்றன என்றார் புலவர். இயற்கையை வர்ணிப்பதில் புலவர்களின் ஒத்த கருத்துக்களை இங்கே காண்கிறோம். மேலும், சிங்களப் பாடலில் பறவைகளின் பாட்டுக்கு ஏற்ப ஆண் மயில்கள் ஆடுகின்றன. கம்பராமாயணத்தில் முகில்கள் முழவம் ஒலிக்கச் சோலைகளில் ஆடும் மயில்கள் வருகின்றன. மருதம் என்னும் இளவரசி கொலு வீற்றிருக்க மயில்களின் நடனம் நடக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம் வீற்றிருக்கு மாதோ"

தண்டலை என்றது தண்ணிய சோலையை. கொண்டல்கள் என்றது முகில்களை. மருதம் என்றது வயல் நிலத்தை.

இனிப்பாடலில் புலவர் காட்டும் காட்சியைப் பார்ப்போம். தண்ணிய சோலைகளிலே மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. தாமரைகள் விளக்குகளை ஏந்துகின்றன. முகில்கள் முழவம் ஒலிக்கின்றன. குவளைகள் (குவளைப்பூக்கள்) கண்களை விழித்து அக்காட்சிகளை நோக்குகின்றன. தெள்ளிய நீர்த்திரை, காட்சிகளை மாற்றி மாற்றித் திரையிடுகின்றன. வண்டுகள் தேனிசை பிழிந்து மகரயாழ் வாசிக்கின்றன. இந்த வைபவங்களுக்கு நடுநாயகமாக மருதம் என்கின்ற இளவரசி கொலுவிருக்கிறாள்.

மருத நிலத்தை ஒரு இளவரசியாக உருவகித்திருக்கிறார் புலவர். அவர் ஒரு அரசசபைக் காட்சியைச் சித்திரிக்கிறார். மயில்கள் நடனம் ஆடுகின்றன. தாமரைகள் குவிந்திருக்கின்றன. முகில்கள் முழங்குகின்றன. குவளைகள் மலர்கின்றன. வயல்களில் நீர் நிறைந்திருக்கிறது. நீரில் திரைகள் அசைகின்றன. வண்டுகள் தேனெடுக்கின்றன. அப்போது ரீங்காரம் செய்கின்றன. இவை யாவும் மருத நிலத்தில் நிகழ்கின்றன. இச்செயல்களெல்லாம் நாட்டு வளத்தையும் அழகையும் எடுத்துக் காட்டுகின்றன. இவற்றையெல்லாம் அழகிய சொல்லோவியமாகத் தந்திருக்கிறார் கம்பர் எனும் கவிச்சக்கரவர்த்தி.

மயில்கள் நடனமாட மத்தளம், முழவு வேண்டுமல்லவா? மழை முகில்கள் முழங்குவதை அந்த முழவாகக் காட்டுகிறார். நடனசபைக்கு விளக்குகள் வேண்டுமல்லவா? குவிந்த தாமரைகள்தான் விளக்குகள். அவ்வாறு, பார்வையாளர்கள்தான் மலரும் குவளைப்பூக்கள். கண்களுக்குக் குவளைப் பூக்களை உவமை கூறுவது கவிமரபு. குவளைகள் மலர்வது பார்வையாளர்கள் கண்களை விழித்துப் பார்ப்பதுபோல இருக்கிறது. இவ்வாறு வயலிலுள்ள நீர்த்திரைகள் திரைச்சீலைகள் போன்றிருக்கின்றன. மயில்கள் நடனத்துக்கு மகர யாழை வண்டுகள் வாசிக்கின்றன என்று சொன்னயம் பொருணயம் சொட்டச் சொட்ட இயற்கையை வர்ணித்துக் காட்டுகிறார் புலவர். சிங்களப் பாடலில் පිය රැව් ලන සියුරණ මත මියුරණ - பிய றெவ் லன ஸியுறண மத மியுறண- எனப் பட்சிகளின் பாடலுக்கேற்ப ஆடும் மயிலையும், இங்கு வண்டுகள் இசைக்கு ஆடும் மயில்களையும் கண்டு மகிழ்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவமை அணி – உருவக அணி

தமிழ், வடமொழி இலக்கியங்களில் அணியலங்காரம் செய்யுள்களுக்கு மெருகூட்டி நிற்கின்றன. அவ்வாறே சிங்கள இலக்கியங்களிலும் அணிநயத்தைக் காணலாம். சிங்கள இலக்கணப் பெருநூலாக விளங்கும் 'சிதத்சங்கரா' எனும் நூலில் அணியிலக்கணம் ஆராயப்பட்டுள்ளது. இதில் உவமை, உருவகம் என்பவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. யாப்பும் அணியும் வடமொழியிலும் பாளியிலும் தனித்தனி இயல்களாக விளங்குகின்றன. ஆனால், சிதத் சங்கராவில் ஆசிரியர் தமிழ் மரபைப் பின்பற்றி அவற்றைப் புகுத்தியுள்ளார். எனினும், சிங்கள இலக்கிய அணிகள் சமஸ்கிருதப் பெயர்களிலே வழங்குவதையும் அவதானிக்கலாம்.

ஸ்ரீ இராகுல தேரரின் உவமைகளும் உருவகங்களும் அற்புதமாகச் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன. சிலவேளைகளில் அவருடைய உவமைகள் செயற்கையானவைபோலவும் தோன்றலாம். இவ்வகை உவமைகள் வடமொழிச் செல்வாக்கால் அமைந்தனவோவென்றும் எண்ணத் தோன்றும். பற்களை முத்துக்களுக்கும் கண்களை நீலோற்பல மலர்களுக்கும், முலைகளை அன்னங்களுக்கும் இதழ்களை அசோக மலர் மொட்டுக்களுக்கும், கூந்தலைக் கார்மேகங்களுக்கும், கால்களை வாழைத் தண்டுகளுக்கும் அவர் அடிக்கடி உவமிக்கிறார். எம்மொழியிலும் 'கவிஞன் கவிஞனே' என்பதை இவ்வுவமை நடை விளக்குகின்றது. செலலிஹினி (සැළලිහිණි සන්දේශය) சந்தேசம் என்ற பூவைவிடு தூதில் ஸ்ரீ இராகுல தேரர் காட்டும் உவமைகள் சிலவற்றைப் பார்ப்போம். தூது விடுக்கப்படும் பூவையை விளித்து அதன் பேச்சுவன்மையைப் புகழுகிறார். வள்ளுவர் காட்டும் அன்புடைமை, ஆன்றகுடிப் பிறத்தல், பண்புடைமை என்ற தூதின் பண்பை செலலிஹினி ஆசிரியரும் காட்டுகிறார். உயர்ந்த பூவையே என விளித்து உவமை அணியில் அவர்கூறுவது பின்வருமாறு:

> සැරදෙ සුලකල'කුරු – මියුරු තෙපලෙන් රදනා
> රජකුල රහසැ මැතිනිය – සියනි'හි සැළලිහිණි සඳ!
>
> (11)

ஓ உயர்ந்த பூவையே! உனது இனிமையான பேச்சு அழகாக உச்சரிக்கப்படும் அசைகளுடன் அமைந்திருக்கிறது. அரச குடும்பத்தின் இரகசியங்களைப் பற்றிய உனது அறிவு அமைச்சனின் அறிவுக்கு நிகரானது. நீ உனது சுற்றஞ்சூழ வாழ்வாயாக. பூவையின் அறிவை சிறந்த மந்திரியின் அறிவுக்கு உவமிக்கிறார் கவிஞர். රජකුල රහසැ මැතිනිය-றஜகுல றஹஸ மெத்தினிய என அதன் அறிவினை வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் தமது கற்பனை உலகைத் தெளிவாகவும் வளம் நிறைந்ததாகவும் செய்வதற்கு உவமைகளைக் கையாள்கிறார். இவ்வுவமை மூலம் அவர் காட்டும் பொருளின் தொடர்புகள் விளக்கம் பெறுகின்றன. இங்கே பூவையை - நாகணவாய்ப் புள்ளை வர்ணிக்கும் பாங்கினைப் பார்ப்போம்.

පුල් මල් කෙසරු මෙන් – රන්වනි තෙල සරණ යුග
සපුමල් කැලෙ'වි තුඩ මදරතිනි මනහ ර
නිලු'පුල් දෙලෙ'වි සම්වනි පිය පිය පත ර
මලින් කල රූ – එවි එබැවින් නුබින් එන'වර

(2)

இப்பாடல்,

(කාගේ) තෙල සරණයුග, පුල් මල් කෙසරු මෙන් රන්වනි
(තාගේ) තුඩ සපුමල් කැලි + එවි මදරතිනි මනහර (වේ)
(තාගේ) පිය පිය පතර නිල් + උපුල්දල + එවි සම්වනි
එබැවින්, මලින් කල රූ එවි

உன்னுடைய இரண்டு கால்களும் (පුල් මල් කෙසරු - புல் மல் கெஸறு) விரிந்த பூக்களின் மகரந்தம் (துகள்) போன்றவை. உன்னுடைய அலகோ சண்பகப்பூப்போல (සපුමල් කැලි - ஸபுமல் கெலி) சண்பக மொட்டு கருமஞ்சள் நிறம். உன்னுடைய அழகான இறகுகள் (නිල්- நில் உப்புல்) நீலோற்பல மலரின் இதழ்கள் போல நீல நிறமானவை. உன்னுடைய உடலோ (මලින් කල රූ - மலின் கள றூ) ஒரு மலர் போன்றது. இவ்வாறு நாகணவாயின் கால்கள், அலகு, இறகுகள், உடல் என்பனவற்றை வர்ணிக்க உவமைகள் சிறப்பாகக் கையாளப் பட்டிருக்கின்றன. கவிஞர் இவ்வளவில் நிறுத்திக்கொள்ளவில்லை. உயர்ந்த பறவையே! நீ ஆகாயத்தில் எனது தூதாகப் பறந்து செல்லும் வேளையில் ஆபத்தையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். எவ்வாறெனின், நீ அழகான மலர் போன்றிருப்பதால் விண்ணிடைச் சித்தமாதர் தமது கூந்தலில் அழகான மலராக அணிந்து கொள்ள நேரும். நீ நீலோற்பல மலர்-குவளைமலர் போன்றிருப்பதால் பண்பாடும் வண்டுகள் உன்னை வட்டமிட்டுக் கொள்ளக்கூடும். கவிஞனின் கற்பனை வளமும் இங்கு சிறகடித்துப் பறக்கிறது. உவமையணியின் உச்சியில் எம்மையெல்லாம் கொண்டு செல்கிறான் கவிஞன். இனி, இப்பாடலைத் தமிழில் பார்ப்போம்.

**விரிமலர்த் தாதுபோல விளங்குமவ் விருபொற் பாதம்**
**பெரிதுளங் கவருஞ் செவ்வாய் பிறங்குசண் பகத்தரும்போ**
**கரியநற் குவளைப் போதிற் கறுத்திருள் சிறகின் செவ்வி**
**தெரிவதோர் நீலவண்ணச் செழுமலா் உருவம் போலும்**

(2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் வந்த உவமை அணியில்,

பொற்பாதம்-உவமேயம்; விரிமலர்த்தாது-உவமானம்
செவ்வாய்-உவமேயம்; சண்பக அரும்பு-உவமானம்
சிறகு-உவமேயம்; குவளை-உவமானம்
உருவம்-உவமேயம்; நீலவண்ணப்பூ-உவமானம்

கவிஞர் பொருத்தமான-எமக்குப் பழக்கமான பொருள்களை உவமானங்களாகத் தெரிந்துள்ளார். அவை வாயிலாக நாகணவாய்ப் பட்சியின் அழகிய உருவத்தை எம்கண்முன் நிறுத்தும் சொல்லோவியம் நயக்கத்தக்கது; எவரும் இரசிக்கக்கூடியது.

இனி, குத்தில காவிய(ம்) என்ற சிறந்த காவியத்தில் உவமையணி யொன்றையும்-உபமா அலங்காரம் ஒன்றையும் எடுத்துக்கொள்வோம். இக் காவியத்தின் ஆசிரியரெனக் கருதப்படுபவரும் (வெத்தாவ) ஒரு புத்தபிக்கு ஆவார். மொழி வேந்தர் எனப் போற்றப்படுபவர். இவரது பாடல்கள் எளிமையும் சொன்னயமும் மிக்கவை. குத்திலனுக்கும் மாணாக்கனாகிய மூசிலனுக்கு மிடையில் நிகழ்ந்த வீணை இசைப் போட்டியைக் கவிஞர் வருணிக்கும் திறமை அபாரமானது. சொல்லணி, பொருளணிகள் மெச்சத்தக்கவை. அவரது உவமையணி நிகழ்ச்சிகளைத் தெளிவாக எம்கண்முன் நிறுத்தும் பாங்கினைக் காண்போம். அவை பல்வேறு உணர்ச்சிகளையும் மனவெழுச்சிகளையும் தூண்டுமாற்றையும் பாருங்கள்.

පිපි සමන් කුසුමන් පහන් තන රන් හසුන් මත් මෙන් බැදේ
ලඹ සවන් දිගු රන් පසින් දන නෙත් වුවන් බඳිමින් තදේ
මඳ පවන් වැද ලෙළ පහන් සිළු මෙන් රැ හුම් දෙන රත බදේ
දිලි ඔවුන් රූ සිරි තුවන් වන් බඹ වුවත් දැහැනින් මිදේ

(311)

விரிந்த மல்லிகை மாலை போன்ற அரம்பையர்கள்-தேவமாதர் களது அன்னம் போன்ற தனங்களில் (வாரணாசி) மக்களது மனமும் கண்களும் படிந்திருந்தன. அந்த நடன மாதர்களது கனகமணிக்குழைக் காதுகளிலும் மக்களது கண்கள் பதிந்திருந்தன. அத்தேவ மாதர்கள் வீசு தென்றல் ஆடிவர ஆடுகிற விளக்குப்போல-விளக்கின் சுடர் போல நடனம் ஆடினார்கள். அதனைக் கண்ட பிரமன்கூடத் தனது தவநிலையைவிட்டு அவர்களது தங்கமயமான பிரபையைக்கண்டு பிரமிப்பு அடைந்தான். **පිපි සමන් කුසුමන් රන් හසුන් වන් පහන් සිළු**-பிப்பி ஸமன் குஸுமன் றன் ஹஸுன் வன் பஹன் ஸிலு - மல்லிகை மாலை, அன்னம், சுடர் என்பன உவமானங்களாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. நடன மாதர்களது நடனத்தை, **මඳ පවන් වැද ලෙළ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පහන් සිළු මෙන් - மந்த பவன் வெத வெழ பஹன் சிளு மென் - அதாவது மெல்லிய தென்றற் காற்றுக்கு ஆடுகின்ற விளக்குச் சுடர்போல என உவமிக்கும் அழகே அழகு. இவ்வுவமையணி கொண்ட இப்பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

**விரிமலர் மல்லிகைமென் தொடையல் அன்னார்**
**அன்னம் அன்ன பயோதரத்தில் அமர்ந்து கொள்ள**
**பரும்பசிய கனகமணிக் குழைதாழ் காதிற்**
**படிந்திருந்த கண்படைத்தார் படிவாழ் மாந்தர்**
**அரம்பையர்கள் கறங்கினர், வீசுதென்றல்**
**ஆடிவர ஆடுகிற சுடரே போல**
**பெரும்பிரமன் கூடஅமர் யோகு விட்டுக்**
**பிரமிப்பான் தங்கஉருப் பிரபை நோக்கி**

**(311)**

உவமையணியில் போல, அன்ன என்பன உவமை உருபுகளாக வரும். பாடலில் விரிமலர் மல்லிகை மென் தொடையல் அன்ன- (போன்ற) தேவமாதர்; அன்னம் அன்ன-(போன்ற) பயோதரம் உடைய தேவமாதர் வீசுகின்ற தென்றல் ஆடிவர ஆடுகிற சுடரே போல ஆடினார் என உவமைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன. கவிஞனின் காட்சியை- அற்புதமான சிருட்டியை நாமும் மனக்கண்ணால் கண்டு களிக்கின்றோம்.

உவமையணிபோன்று புலவர்கள் கையாளும் இன்னோர் அணி உருவக அணி. இதனை வடநூலாரும் ரூபகாலங்காரம் என்பர். சிங்கள நூலாரும் அவ்வாறே வழங்குவர். உவமேயத்தில் உவமானத்தை ஒற்றுமையினாலாவது, அதன் செய்கையினாலாவது ஆரோபித்தலே உருவகம். ஸ்ரீ இராகுல தேரரின் செலலிஹினி, ஜயவர்த்தன கோட்டையிலிருந்து தூது செல்கிறது. ஆகாயத்திலிருந்தவாறே சிலாபக் கடலைப் பார்க்கச் சொல்கிறார் புலவர். செலலிஹினி சிறிது வடக்கே திரும்பினால் இக்கடலைக் காணும். கவிஞர் பின்வருமாறு தூதிடம் கூறுகிறார்.

| | | |
|---|---|---|
| වල | දින අදහසින් මෙන් සුරගහ අහ | න |
| නල | බල සසල දල රළ පෙළ නුබ නැගෙ | න |
| වෙල | ල'සැ ගැවසි මුතු සක් පබලු බබල | න |
| බල | මහ මුහුද එම සඳ උතුරෙන් පෙනෙ | න |

**(27)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுகள் எல்லாம் கடலின் மனைவியர் என்று கூறுவது கவி மரபு. கடல் திரைகளாகிய கைகளால் ஆகாய கங்கையை, සුර ගඟ - ஸுற கங்க -அணைப்பது போல இருக்கிறதாம். கடலின் திரைகள் ஆகாயத்தை நோக்கி மேலெழுகின்றன. ஆகாய கங்கையும் கடலின் மனைவியாகிறாள். அவளை அணைப்பதற்காகவே, සුර ගඟ -- අඟන වලඳින දෙහසින් මෙන් - ஸுற கங்க-அங்கன வலந்தின தெஹஸின் மென் - என உருவகிக்கிறார். இது ஓர் அருமையான உருவகம். இப்பாடல் தமிழ்ப் பூவை விடுதூதிலுள்ளவாற்றினைக் காண்போம்.

**வான்றரு கங்கையென்னு மாதினை யணைக்க வெண்ணித்**
**தான்தன திரைக்கைத் தண்கால் தழைத்திட வீசியார்த்தே**
**ஆன்றநற் பவளமுத்துச் சங்கிவை யள்ளியெற்றிக்**
**கான்றிடு கரைசேர் பௌவங் காணுதி வடபால் மன்னோ.**

**(29)**

ஆகாயகங்கை நாயகியல்லவா? அவளுக்கும் வேண்டும் ஆபரணங் களாகிய முத்து, பவளம், சங்கு என்பவற்றைக் கரையில் அள்ளி எற்றுகிறது கடலாகிய நாயகன். ஆகாய கங்கையைப் பெருங் கடலின் நாயகியாய் உருவகித்தது மல்லாமல் வேறு சிறப்புகளையும் காட்டும் புலவரின் கற்பனை எம்மனத்தை விட்டு அகலாது அன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணி – தற்குறிப்பேற்ற அணி

மகளிர் அணியும் அலங்காரப் பொருள்களை அணி என்போம். எனவே, அழகு செய்வதே அணியாகும். செய்யுள்களிலும் எடுத்த பொருளைப்பற்றி அழகாகவும் பொருள் வலிமையோடும் கூறுவது அணி எனப்படும். அது மோனை எதுகை போன்ற சொல்லணியாகவும் அமைவது வழக்கம். இலக்கியப் புலவர்கள் பொருளணியையே சிறப்பாக மதிக்கின்றனர். தமிழ்க் காவியங்களிலும் புலவர்கள் இத்தகைய பொருளணிகளைத் திறம்படக் கையாளுகின்றனர். அப்போது செய்யுள்கள் வாசகரின் சிந்தனைக்கு விருந்தாகின்றன. மேலும், வாசகர் மனத்திலே நன்கு பதிகின்றன.

சிங்கள, தமிழ் இலக்கியங்களில் கையாளப்படும் தற்குறிப்பேற்ற அணியிலும் ஒத்ததன்மைகளைக் காண்கிறோம். இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிக்குக் கவிஞன் ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும். இதனைச் சிங்கள, வடமொழி இலக்கணகாரர் உத்பிரேக்ஷா (උත්ප්‍රේක්ෂා) அணி என்று கூறுவர்.

'வெண்பாவிற் புகழேந்தி' என்று போற்றப்படும் புகழேந்திப் புலவர் பாடிய நூல் நளவெண்பாவாகும். அந்த நளவெண்பா எனும் இலக்கிய நூலில் ஒரு காட்சி வருகிறது. நளனின் தூதாகிய அன்னப் பட்சியைப்பற்றிய வர்ணனை அது. அன்னம் நளனுடன் பேசுகிறது. 'நாம் தாமரைப்பூக்களில் வாழுகின்ற புட்குலங்கள்; யாம் அன்னத்தொகுதி. யாம் தமயந்தி மனையில் வாழும் மயிற் குலங்களைப் போல்வோம். மன்மதனும் ஆயுதம் பயிலுவதற்கு அங்கே வந்தடைந்தான். நாமும் அங்கே வந்தடைந்தோம். ஏன் தெரியுமா? தமயந்தியிடம் நடை கற்றற்கே நாமும் வந்தடைந்தோம். இயற்கையான ஒரு நிகழ்ச்சிக்குப் புலவர் ஒரு காரணத்தையும் (இங்கு நடை பயிலுவதற்கென) கூறுவதைப் பாடலில் காண்போம்.

**பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்**
**மாமனைவாய் வாழு மயிற் குலங்கள் – காமன்**
**படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத**
**நடைகற்பான் வந்தடைந்தே நாம்**

பாடலில் நாம் (அன்னங்கள்) பைந்தொடியாள் நடைகற்பான் - நடைகற்க வந்தடைந்தோம் எனவரும் தற்குறிப்பேற்ற அணியின் சாயலை, இராகுல தேரரின் காவியசேகர (කාව්‍යශේඛර) என்னும் நூலில் வரும் செய்யுளிலேயும் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මිණ් සලඹෙහි දිගැ ස
කොලහල අසා රණහ ස
පස්සේ යන විල ස
උගන්නා මෙනි ගමන් එම ලෙ ස

(35)

இப்பாடலிலும் கவிஞர் அன்னங்கள் நடைகற்பதற்காகவே செல்கின்றன. **ගමන් උගන්නා මෙනි** - கமன் உகன்னா மெனி - என்று கூறுகிறார். இரு கவிஞர்களின் கற்பனையிற் காணும் ஒருமைப்பாடு இது. கவிஞன் கவிஞனே. முதற்கண் பாடலின் பொருளைப் பார்ப்போம். பின்னர் அணியின் சிறப்பைப் பார்ப்போம்.

நீண்ட கண்களையுடைய பெண்களின் காற்சிலம்புகளிலிருந்து ஒலி கேட்கிறது. அந்தச் சிலம்பொலி கேட்ட, **සලඹෙහි කොලහල**- சிலம்பெஹி கொலஹல - சுவர்ண அன்னங்கள், **රණහස ස්වර්ණ හංසයින්** -றணஹஸ ஸ்வர்ண ஹங்ஸயின் பெண்களைத் தொடர்ந்து பின்னே நடந்து செல்கின்றன. அவ்வாறு அன்னங்கள் செல்வது பெண்களின் அழகான நடையைக் கற்பதற்குச் செல்லுமாறுபோல இருக்கிறது.

நடையில் சிறந்த அன்னங்கள் பின்னே செல்கின்றன. (**පස්සේ යන විලස**- பஸ்ஸே யன விலஸ) ஏனென்றால் பெண்களின் அழகிய நடையைக் கற்பதற்காக. அப்பெண்களின் நடை விசேடமானது என்பதை அன்னங்கள் அறிந்துதான் செல்கின்றன. பெண்களின் நடையழகின் சிறப்பினைக் காட்டுதற்குக் கவிஞர் தற்குறிப்பேற்ற அணியைக் கையாளுகிறார். நளவெண்பாவில் வரும் அன்னங்கள் விதர்ப்பநாட்டு அன்னங்கள். அந்நாட்டரசனின் மகள்தான் தமயந்தி. அத்தமயந்தி 'அன்னத்தை முன்னே நடை வென்றவள்' என இன்னோர் பாடலில் குறிப்பிடப்பட்டவள். அன்னங்கள் அத்தமயந்தியிடம் நடை கற்கின்றன. சிங்கள காவியசேகரத்தில் சாவத்தி நகரப் பெண்களிடம் நடைகற்கும் அன்னங்களைக் காணுகிறோம். இரு புலவர்களின் தற்குறிப்பேற்ற அணியின் அழகையும் ஒருமைப்பாட்டையும் காணுகிறோம்.

சிங்கள காவியங்களின் மணிமுடியாக விளங்கும் **காவியசேகரவில்** ஒரு தற்குறிப்பேற்ற அணியலங்காரத்தைப் பார்த்தோம். ஸ்ரீ இராகுல தேரர் பாடிய செலலிஹினி சந்தேச **සැලලිහිණි සන්දේශය** - செலலிஹினி சந்தேசய எனும் நூலில் வரும் தற்குறிப்பேற்ற அணியையும் பார்ப்போம். கவிஞர் கற்பனையின் உச்சிக்கே கொண்டுசெல்லும் பாடல் இதுவாகும். செய்யுளில் உண்மையும் புராணக் கதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னப்பட்டிருக்கின்றன. தற்குறிப்பேற்ற அணியோடு வேறு அதிசயோக்தி (உயர்வு நவிற்சி அணி) உதாத்தாலங்காரம் (வீறுகோளணி) என்பனவும் கலந்து அணி செய்கின்றன.

இனி, பாடலைப் பார்ப்போம்.

උ ද ය' ග    පියුම්රා පැහැ වැද මෙන් රුදු    ණු
පෙර දි ග    පෙනෙන සඳ සඳ කැල්මෙන් දිලු    ණු
ම නර ඟ    එපුරු සඳකන ගෙහ'ඹින් වැඩු    ණු
සූ ර ග හ    පතිනිදම් රුකුමෙහි වැනි දැපු    ණු

(55)

கிழக்குத் திசையில் சந்திரன் எழுகின்றது. அதனது பிரகாசம் மாலைக்கால முகில்களின் நிறங்களினால் மேலும் அதிக பிரபை தருகிறது. அது உதயகிரியின் (கிழக்கு மலை) செங்கதிர்கள் விழுந்தது போல இருக்கிறது. அந்த அழகான நகரத்தின் மாளிகைகளில் சந்திரகாந்தக் கற்கள் பதிக்கப் பட்டிருக்கின்றன. அம்மாளிகைகள் ஆகாயத்தைத் தொடுகின்றன. சந்திரகாந்தக் கற்களிலிருந்து கசிகின்ற நீரால் ஆகாயகங்கை நிறைகிறது. இவ்வாறு மெய்சிலிர்ப்போடு - வியர்வையோடு கூடிய ஆகாயகங்கை கற்புள்ள பெண்போலக் காட்சியளிக்கிறது. அதாவது සූරගහ පතිනිදම් රුකුමෙහි දැපුණු වැනි (වේ) -ஸூறகங்க பதினிதம் றெக்குமெஹி தெப்புணு வெனி - ஆகாய கங்கை சமுத்திரத்தின் கற்பைக் காக்கும் மனைவி. சந்திரன் உதிக்கும் போது கணவனாகிய சமுத்திரமும் பொங்குகிறது என்பதையும் குறிப்பாக உணர்த்துகிறார். களனியாவிலுள்ள மாளிகையின் சிறப்பையும், கிழக்குத் திசையில் உதயமாகும் சந்திரனையும் கவிஞர் மிகச்சிறப்பாக வர்ணிக்கிறார். கவிஞர் பின்வரும் விடயங்களை வாசகர் மனத்தில் பதிக்க விரும்புகிறார்.

1. அந்தக்காலத்தில் களனியாவில் இருந்த மாளிகைகள் சந்திரக் கற்களால் ஆனவை.
2. அந்த மாளிகைகள் ஆகாயத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்தவை. ஆகாயகங்கைகூட அம்மாளிகைகளின் உச்சிக்குக் கீழாகப் பாய்ந்தது.
3. மாளிகையிலுள்ள சந்திரக் கற்களிலிருந்து கசியும் நீர் கீழே ஓடிக் கொண்டிருந்த ஆகாயகங்கையை நிரப்பியது.

இவற்றை வாசகர் மனத்திலே பதியவைப்பதற்குத் தற்குறிப்பேற்ற அணியை உபயோகிக்கிறார்.

සුරගහ - ஸூற கங்க என்றது ஆகாய கங்கையை. උදයග පියුම් රා පැහැ - உதயக பியும் றா பெஹெ - உதயகிரியின் செந்நிறம். උදය -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய - உதயம் அல்லது காலை என்பது பொருள். අග - அக. සඳකතගෙහි අඹින් වැඩුණුසුරගඟ - ஸந்த கன கெஹி - அம்பின் வெடுணு ஸுறகங்க - வீடுகளிலுள்ள சந்திரக் கற்களிலிருந்து கசிந்த நீரால் நிறைந்த ஆகாய கங்கை. ஆகவே, அந்த ஆகாய கங்கை கற்புள்ள பெண்போலக் காட்சியளித்தாள் என்றவாறாகும். இச்சிங்களப் பாடலின் தமிழாக்கத்தை நவாலியூர் சோ. நடராசன் பூவைவிடு தூதில் தருமாற்றையும் காண்போம். அப்பாடல் பின்வருமாறு:

**செக்கர்பெறு விண்முகில் செறிந்தகதிர் மண்டி**
**அக்கணம் கிழக்கிடை யலர்ந்த மதி கண்டே**
**மிக்குயரு மாளிகை நிலாமணி விளங்கக்**
**கக்குதுளி பெற்றநதி கற்புநெறி காட்டும்.**

இப்பாடலின் விளக்கத்தையும் பார்ப்போம்.

உதயகிரியிலிருந்து கிளம்பும் பதுமராகக் கிரணங்கள் அம்மலை மீது விழுந்தாற்போலக் கீழ்த்திசையில் எழும் திங்கள் மாலை மேகங்களின் பலவண்ண ஒளியினாலே சோபித்து விளங்கும். அப்பொழுது இவ்வழகிய நகரின் (களனியா) மாடமாளிகைகளிலமைந்த சந்திர காந்தக் கற்களிலிருந்து வடியும் நீர்த்துளி ஆகாய கங்கையை நிரப்ப அந்நதி தன் நாயகனான சந்திரன் வரவைப்பார்த்து மெய்சிலிர்க்கும் கற்புடைப் பெண்போலக் காட்சியளிக்கும்.

சந்திரகாந்தக் கல்லைப் புலவர் நிலாமணி என்று குறிப்பிடுகிறார். சிறப்புநிற முகிற்கூட்டங்களை செக்கர்பெறு விண்முகில் என்கிறார். கிழக்கிடை அலர்ந்த மதி கண்டே மாளிகை கக்கும்துளி பெற்ற நதி - அந்த ஆகாய கங்கை கற்புநெறி காட்டும் என அழகாக வர்ணிக்கிறார். கக்குதுளி பெற்ற ஆகாயகங்கை மெய்சிலிர்க்கும் கற்புடைப் பெண்போலக் காட்சியளிக்கிறது. பாடலில் கவிஞன் மிக ஆழமானதும் நுட்பமானதுமான கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறான். அதற்கு அணியலங்காரங்களைச் சொல் வண்ணத்தில் காட்டியிருக்கிறான். கவிதை புலவனுடைய அனுபவம். அதை அவன் கேட்போனுக்கு இனிமையாகப் புலப்படுத்துகிறான். இப்புலப்படுத்தும் முறை ஒரு கலை. பல்லலங்காரப் பண்புடையதுதான் கவிதை. இலக்கியங்களின் இவ்வலங்காரப் பண்புடையதுதான் கவிதை. இலக்கியங்களின் இவ்வலங்காரப் பண்பிலும் ஒருமைப்பாட்டினைக் கண்டு நயப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருவகம் - கம்பரும் இராகுலரும்

பழைய சிங்கள காவியங்களில் காவிய வருணனைகள் ஒரே மாதிரியில் அமைந்திருப்பதைக் காணலாம். காவியப் புலவர்கள் இயற்கையைப் பெரிதும் விரும்பினார்கள். எனினும், அவர்களது இலக்கியங்களில் எமது நாட்டுச் சூழல் பிரதிபலிக்கவில்லை. பெரும்பாலும் புலவர்கள் வடமொழிக்கருத்து வெளிப்பாட்டு முறைகளைப் பின்பற்றினார்கள். வடமொழி அலங்காரக் கோட்பாடுகளைப் பின்பற்றினார்கள். எனினும், கோட்டைக்காலம் என வழங்கப்படும் காலப்பகுதியில் செய்யுள் இலக்கியத்தில் புதுயுகம் பிறந்தது. சிறந்த இலக்கிய நூல்களான **காவியசேகர, குத்திலகாவிய, புதுகுணாலங்காரய, குசஜாதகய** என்பன தோன்றின. **பறவி** (புறா), **செலலிஹினி** (பூவை), **கிரா** (கிளி), **கோகில** (குயில்), **செவுல்** (சேவல்) ஆகிய தூது காவியங்களும் மலர்ந்தன.

சிறந்த காவியசேகர காவிய(ம்) குத்திலகாவிய, குசஜாதகய என்பனவற்றை எடுத்துக்கொண்டால், அவற்றின் கதைப்பொருள் ஜாதகக் கதைகளை அடியொற்றியமைந்திருப்பதைக் காணலாம். இவற்றுள் காவியசேகர என்றால் கவிதை மணி என்பது பொருளாகும். காவியசேகர எனும் நூலின் ஆசிரியரும் தமிழ் உட்பட ஆறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணி அலங்காரங்களை அழகாகக் கையாளுகிறார். காவியசேகர நூல் மற்றைய காவியங்கள் போன்று கடவுளர் வணக்கத்துடன் ஆரம்பிக்கிறது. முதலில் மும்மணிகளுள் புத்தரை வணங்குகிறார். அடுத்து தம்மம், சங்கம் என்பவற்றை வணங்குகிறார். பிரம்மா, இந்திரன், விஷ்ணு, பிரகஸ்பதி, விக்னேஸ்வரன், ஸ்கந்தா, சூரியன், சுக்கிரன், சந்திரன், சிவன் ஆகியோரையும் வணங்குகிறார். கடவுள் வாழ்த்துச் செய்யுள்களிலேயே உருவக அணியைக் கையாளுகிறார். புத்தபகவானை புத்தசாகரமாக-புத்தராகிய சமுத்திரமாக வர்ணித்துக் கூறுகிறார். அவரது உடம்பு மகாபுருஷலட்சணங்களாகிய அலைகள் நிறைந்தது. புத்தியாகிய மீன்கள் நிறையப்பெற்றது. காவியுடையாகிய பொன்னிற ஆகாயத்தையுடையது என வர்ணிக்கிறார். புத்த பகவானைச் சமுத்திரமாக உருவகித்தற்கமைய ஆறுகள், மீன்கள், ஆகாயம் என்பனவற்றையும் உருவகிக்கிறார். அப்பாடல் பின்வருமாறு:

සිරි සරසවිය ර ස
සුබ තරඟ නත මීන් රැ ස
රන් වණඹර තිවෙ ස
වඳිමි මුනිරජ සුයුර සහතො ස

(1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலைப் பொருளுக்கேற்பப் பிரித்துப் படித்துப் பார்ப்போம்.

සරසවිය රස පිරි. සුබ තරඟ. නතමින් රැස
රන්වණ ඔර නිවෙස මුනිරජ සයුර
සහතොස වදිමි.

சுவை நிறைந்த பேச்சுக்கள் நிறைந்த, மகாபுருஷலட்சணங்கள் நிறைந்த உடம்பினையும் அளவில்லாத புத்தியினையும் காவியுடையினையுமுடைய புத்தசாகரத்தை நான் சந்தோஷத்துடன் வணங்குகிறேன். நான் புத்தபகவானாகிய சமுத்திரத்தை வணங்குகிறேன் என்று கவிஞர் கூறுகிறார்.

'சுவையான ஆற்றுநீராகிய பேச்சுக்கள் நிறைந்த' என்பதைத்தான் සරසවිය රස පිරි- ஸறஸவிய றஸ பிறி - என்கிறார்.

'அலைகளாகிய புருஷலட்சணங்கள் நிறைந்த' என்பதை සුබ තරඟ ශෝභමාන දේහ ඇති - சுப தறங்க சோபமான தெஹ எத்தி எனக் - குறிப்பிடுகிறார்.

'அளவிறந்த மீன்களாகிய புத்தியுள்ள' என்பதை නත මින් රැස -நத மின் றெஸ என்று சொல்கிறார்.

'பொன் போன்ற ஆகாயமாகிய காவியையுடைய' என்பதனை රන්වණඔර නිවෙස - றன்வணம்பற நிவெஸ - என்று பாடியிருக்கிறார். இவற்றையுடைய புத்தபகவானாகிய சாகரம்-சமுத்திரம் என்பதனை මුනි රජ සයුර – සාගර රූපණියවූ මුනිරාජයා - முனிறஜ ஸயுற ஸாகற றூபணியவு முனிறாஜயா - என்கிறார். அப்புத்தபகவானாகிய சாகரத்தை மனமகிழ்ச்சியோடு வணங்குகிறேன் எனக் கடவுள் வாழ்த்துக் கூறுகிறார்.

கடலில் வந்து கலக்கும் ஆற்றுநீரை - பேச்சுகள் - அதாவது மொழிக்கும், கடலின் அலைகளை புருஷலட்சணங்களுக்கும், கடலிலுள்ள மீன்களைப் புத்திக்கும் பொன்னிற ஆகாயத்தைக் காவியுடைக்கும் உருவகித்தவாறு புத்தபகவானையும் சமுத்திரமாக உருவகிக்கிறார் புலவர். சொன்னயமும் பொருணயமும் சிறந்த இப்பாடலின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

**சித்தமகிழ் அமுத மொழியாந் தேனாறு பாய்ந்து நிறைக்க**
**உத்தமநற் புருஷ லட்சணமாம் எத்தும் அலைகள் ஆர்க்க**
**வித்தகமாய் விளங்கு புத்தியாம் தத்து மீனினம் பரக்க**
**சுத்தகாவி யும்பர மாகிடும் புத்த சாகரந் தொழுவாம்.**

புத்தபகவான் காவியுடை அணிந்திருக்கிறார். அது கடல் பொன்னிற ஆகாயத்தைப் போர்த்திருப்பதுபோல இருக்கிறது. புத்தபகவான் அறிவு, ஞானம் என்பனவெல்லாம் நிறைந்த கடல் என்பதைக்கூறி அவரை வணங்குகிறார் கவிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியசேகரம் 13 காண்டங்களைக்கொண்ட மகாகாவியம். வடமொழிக் காவிய விதிகளுக்கமைய எழுதப்பட்டது. போதிசத்துவ ரான சேனகர்பற்றிய ஜாதகக் கதையைக் (சத்துவஸ்த ஜாதக) காவிய வடிவில் ஸ்ரீ இராகுல தேரர் பாடியிருக்கிறார். சேனகர் என்பவரே காப்பியத் தலைவர். காப்பியக்கதை பின்வருமாறு:

ஓர் ஊரிலே ஒரு வயது முதிர்ந்த ஏழைப் பிராமணர் இருந்தார். அவர் பிச்சை எடுத்து வாழ்ந்துவந்தார். ஆயினும், பொன் நாணயங்களைச் சேர்த்து வைத்திருந்தார். அவர் வெளியூருக்கு யாத்திரை செல்லவேண்டியிருந்தது. பணத்தை இன்னோர் வறிய பிராமணர் குடும்பத்தின் பாதுகாவலில் விட்டுச் சென்றார். அம்முதிய ஏழைப் பிராமணர் சில நாட்களில் திரும்பி வந்தார். பாதுகாப்பிற்குப் பணத்தைக் கொடுத்துவைத்திருந்த குடும்பத்தினர் பணத்தைச் செலவழித்துவிட்டனர். அதனை அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாமல் இருந்தது. இதனை அறிந்த பிராமணர் மனம் வருந்தினார். எவ்வாறாயினும், அக்குடும்பத்தினர் நட்டஈடாகத் தங்களுடைய மகளை அவர் மணந்துகொள்ளலாம் என்று கூறினர். மகளோ வயதில் மிகவும் இளையவள். எனினும், கிழப் பிராமணர் அவளை மணஞ்செய்துகொண்டார். இளம் மனைவிக்குக் கிழவருடன் காலங்கடத்துவது துன்பமாக இருந்தது. இளம் மனைவி கள்ளக்காதலன் ஒருவனுடன் வாழ்க்கை நடத்த விரும்பினாள். எப்படியும், தன் கணவனான கிழப்பிராமணரை வெளியிலனுப்பத் திட்டமிட்டாள். தனக்கு ஒரு வேலையாளைப் பிடித்துத்தர வேண்டுமென்று பொய்ச் சாட்டுக் கூறினாள். ஏழைப் பிராமணருக்குப் பல துன்பமும் துயரமும் ஏற்பட்டன. இதனால் கடைசியில் ஏழைப் பிராமணரின் கடுந்துயர் அறிஞரான சேனகரினால் தீர்க்கப்பட்டது.

காவியசேகர என்னும் நூலின் காப்பியத் தலைவராகிய சேனகரின் தாயைப்பற்றி ஓர் அழகான வர்ணனை வருகிறது. அத்தாய் அழகான ஒரு காவியம் போன்றவள். மிக அழகானவள். அலங்காரம் நிறைந்தவள். இனிய பண்புடையவள் என வர்ணிக்கிறார் புலவர். கம்பராமாயணத்தில் கம்பர் எனும் கவிச்சக்கரவர்த்தி கவிதையை இராமருடைய அம்புக்கு ஒப்பிடுகிறார். இரு புலவர்களின் கற்பனையிலும் ஓர் ஒருமைப் பாட்டினைக் காணலாம். முதலில் காவியசேகரம் கூறுகிற வர்ணனை பின்வருமாறு:

ඵ බැමිණි දොසින් මු ත්
රූපේ ලකර සිරි යු ත්
මියුරු ගුණ රසව ත්
වියත් මහ කවි සබඳ තන්ප ත්

(ii – 40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளுக்கேற்பப் பாடலைப் பிரித்துப் படிப்போம்.

දොසින් මුත්. රූපේ ලකර සිරියුත්.
මියුරු ගුණ රසවත් එබැමිණි වියත්,
මහකවි සබඳතත් පත්

මහකවි-இந்தப்பாடல் குற்றமற்றிருப்பது போலச் சேனகரின் தாயும் எதுவித குற்றமுமற்றவள். சகல அலங்காரங்களும் நிறைந்தவள் எனச் சிலேடை அணியில் அழகாகக் கூறுகிறார் கவிஞர். "இந்தப் பிராமணப் பெண் சிறந்த கவி போன்று குற்றமற்றவள்" கவியில் அலங்காரம் இருப்பதுபோல் உருவத்தில் அலங்காரம் உடையவள்; அழகானவள். கவியில் இனிமை இருப்பதுபோல் இவளிடம் இனிமையான குணம் உண்டு. ஆகையால், இவளை ஒரு பெரிய கவிக்கு ஒப்பிடலாம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

அத்தாயானவள் குற்றங்கள் எதுவும் இல்லாதவள் என்பதை விளக்கவே குற்றமற்ற கவியை உவமிக்கிறார் கவிஞர். அதனை දොසින් මුත් - தொஸின் முத் என்கிறார். கவிக்கு உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற அலங்காரம் இருப்பது போல் அவளும் உருவத்தில் அலங்காரமுடையவளாய் அணி, அழகுடையவளாக விளங்குகிறாள் என்பதையே රූපේ ලකර සිරියුත් - றூபே லகற ஸிறியுத் - என்கிறார். கவி இனிமையாயிருப்பதுபோல அவளும் இனிய குணமுள்ளவளாக இருக்கிறாள் என்பதை මියුරු ගුණ. රසවත් - மியுறு குண, றஸவத் - என்று கூறுகிறார். குற்றங்கள் நீங்கிய பல்லலங்காரங்கள் கொண்ட இனிய கவிதை போன்றவள் அத்தாய் எனச் சிலேடைக் கருத்து விளங்க உவமித்திருக்கிறார்.

இனி கம்பராமாயணத்தில் கம்பர் காட்டும் பாடலைப் பார்ப்போம்.

**"நல்லியற் கவிஞர் நாவிற் பொருள் குறித் தமர்ந்த நாமச்**
**சொல்லெனச் செய்யுட் கொண்ட தொடையெனத் தொடையை நீக்கி**
**எல்லையில் செல்வந் தீரா இசையெனப் பழுதி லாத**
**பல்லலங் காரப் பண்பே காகுத்தன் பகழி மாதோ"**

பொருளுக்கேற்ப பிரித்துப் படித்தால்:

காகுத்தன் பகழி நல் இயல் கவிஞர் நாவில் பொருள் குறித்து அமர்ந்த நாம சொல்லென, செய்யுள் கொண்ட தொடை என தொடையை நீக்கி எல்லையில் செல்வம் தீரா இசை என பழுது இலாத பல் அலங்காரப் பண்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனது பகழி -அம்பு கவிபோன்று பல்லலங்காரமுடையது. கவி தொடுத்தல் போல் இராமனும் அம்பைத் தொடுக்கிறான். சொல்லமைப்பு, பொருளமைப்பு பல்லலங்காரப் பண்பு எல்லாம் தொடையின் பாற்படும். கூர்மையான தீஞ்சொல் செம்மையான நல்ல பொருளை வவ்விநிற்கும். அதுபோல, சீரிய கூரிய இராமபாணம் வில்லிலே ஏறியதும் நேராகச்சென்று பகைவர் உயிரை வவ்வி நிற்கும். தொடையோடு விடயம் முடியவில்லை. 'எல்லையில் செல்வந் தீரா இசையென' என்றும் கூறுகிறார். ஏனெனில், எவ்வளவு முறை சுவைத்தாலும் போதாது. மீட்டும் மீட்டும் சுவைக்கச் சொல்லும் இனிய இசையும் சேர்ந்தது தான் கவிதை. இவ்வாறு சொல், தொடை, இசை என்ற பல்லலங்காரப் பண்புடையதுதான் கவியென்னும் இராமபாணம். இது நமது முன்னோர் கண்ட இலக்கியத் திறன் ஆய்வு. இராமபிரான் நாணொலிசெய்து தொடுக்கும் அம்புபோல இலக்கிய உருவமும் பொருளும் அமைவதே சிறந்த காவியம் - இலக்கியம். இவ்வாறு செய்யப்படும் இலக்கியத்திற்குத்தான் ஆற்றல் உண்டு; சுவை உண்டு; இனிமை உண்டு. அவ்வாறாய இலக்கியம் நேரேபோய் உயிரை வாங்கிவிடும். இத்தகைய இலக்கியங்களே வாழும் இலக்கியங்கள். அவை எம்மொழியில் அமைந்தாலும் அவற்றின் ஒருமைப்பாடுகளைக் கண்டு இரசிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனின் உணர்ச்சிப் பெருக்கு

சிறந்த இலக்கியங்கள் காலத்தால் அழியாதன. அவை உயிருடன் - உயிர்த்துடிப்புடன் வாழ்ந்துகொண்டேயிருக்கும்; சுவை தந்து கொண்டேயிருக்கும். அதற்குக் காரணம், அந்த இலக்கியங்களில் வரும் பாட்டுக்கள் உணர்ச்சியும் கற்பனையும் நிறைந்து விளங்குவதாகும். மெய்ப்புலவன் உணர்ச்சி, கற்பனை செறிந்த பாட்டுக்களைத் தெள்ளத்தெளிந்த சொல் வடிவில் பொருத்தமான இசையோடு வெளிப்படுத்துகிறான். மெய்ப்புலவன் நுண்ணிய உணர்வு, அழகியல் நாட்டம், பரந்த அறிவு, கற்பனையாற்றல் முதலியன மிக்குடையவன். மெய்ப்புலவனுடைய உணர்ச்சிப் பெருக்கினையே பாரதியார் 'கவிதை வெறி' என்று பாடினார். உணர்ச்சிப் பெருக்கினாற் பிறந்த பாட்டுக்களே உயிருள்ள பாட்டுக்கள். இப்பாடல்கள் என்றும் அழியாமல் நிலைத்துநின்று அறிஞர்களுக்கு நல்லின்பத்தைக் கொடுக்கும். டாக்டர் இலீவிசு (Dr. Leavis) கவிஞர்களைப் பற்றிச் சொல்லும்போது:

"He (the poet) is unusually sensitive, unusually aware, more sincere, more himself than the ordinary man can be"

என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் பொருத்தமான கூற்றாக இருக்கிறது. புலவனின் பாடல்களில் சொன்னயம், பொருணயம் என்பவற்றுடன் நவரசங்களும் சொட்டும். சில பாடல்கள் சிரிப்பூட்டுவன. சில பாடல்கள் சோகத்தைத் தருவன. இன்னும் சில வீரத்தைப் பிறப்பிப்பன. வேறுசில அச்சம், பெருமிதம், கோபம், சாந்தம், பயம், சிருங்காரம் போன்ற சுவைகளைத் தருவன. 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்று பாரதியாரின் பாட்டைப் பாடும் போது எம்மை அறியாமலே வீர உணர்ச்சி பிறக்கிறது. 'பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் அலைந்தும் உலவா' என்று அரிச்சந்திர புராணத்தில் வரும் பாட்டைப் பாடும்போது சோகம் பிறக்கிறது.

ஸ்ரீ இராகுலரின் கவிதை மணிமுடியான காவியசேகரத்தில் வரும் ஒரு காட்சியை எடுத்துக்கொள்வோம். இங்கே இளைஞனாகிய சேனகன் நுட்பமாக வர்ணிக்கப்படுகின்றான். சிறுவன் தக்கசீலப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொள்வதற்காகப் பெற்றோரின் வீட்டைவிட்டுச் செல்கிறான். இதைச் ஸ்ரீ இராகுலர் பின்வருமாறு வர்ணிக்கிறார்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කැටුව ලා පිරිවර
සතහා මුදුන මනහර
බෝසත් විප් කුමර
යන්ට දුකයේ දුන්නු අවසර

දෙමව් පිය සිනෙහැති
වඳිනුව පා පියුම් පෙති
එ කුමරු නැම්ගති
මවුන් කඳුලින් පිට තෙම්ගති

(iii - 22, 23)

இளைஞனாகிய சேனகனை வழியனுப்புமுன் பெற்றோர் மிகவும் கவலைப்பட்டனர். මුදුන සතහා - முதுன ஸனஹா-உச்சி மோந்தனர். அவனது தலையை வருடினர். යන්ට දුකයේ අවසර දුන්නු - யன்ர துக்கஸே அவஸற துன்னு - போகத் துக்கத்துடன் விடை கொடுத்தனர். சிறுவன் பெற்றோரின் (දෙමව් පිය- தெமவ்பிய - பெற்றோரின்) தாமரை மலர் போன்ற பாதங்களைத் தொடக் குனிந்தான். පාපියුම් පෙති- பாபியும் பெதி - பெற்றோரின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர்த்துளிகள்; මවුන් කඳුලෙන් පිට තෙම් ගති- ஒவுன் கந்துலின் பிட்ட தெமி கதி -அவனது முதுகில் விழுந்து விழுந்து முதுகை நனைத்தன.

இங்கே கவிஞர் தம்மனத்தில் உணர்ந்த உருக்கமான உணர்ச்சியை தெளிவாக உணர்த்துகிறார். புலவரின் சொல்லாட்சியில் திறமை பளிச்சிடுகிறது. கற்பனை, உள்ளத்தைத் தூண்டுகிறது; உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பம் ஒன்றினை இச்செய்யுள் வெளிப்படுத்துகின்றது. පාපියුම් - பாபியும் - பாதகமலம்- பாதமாகிய தாமரை என்ற உருவக அணி பல உணர்ச்சிகளைக் காட்டுகின்றது. பெற்றோரின் பாதங்களைத் தொடுகையில் இச்சிறுவன் அனுபவிக்கும் பாசம், அன்பு, பிணைப்பு, ஆறுதல், இன்பம் ஆகிய உணர்ச்சிகள் தெளிவாகின்றன.

இதுபோன்று உணர்ச்சிதரும் பாடல் ஒன்றை இராமாயணத்தில் எடுத்துக்கொள்வோம். விசுவாமித்திர முனிவர் தனது வேள்வியைக் காக்க 'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' எனத் தயரதனிடம் கேட்கிறான். தந்தையாகிய தயரனது துயரத்தைக் கம்பர் பின்வருமாறு காட்டுகிறார்:

எண் இலா அருந் தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தா
லெனச் செவியில் புகுதலோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் நிலாவிய துயரம் பிடித்து உந்த
ஆர் உயிர் நின்று ஊசலாட
கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான்
கடுந் துயரம் கால வேலான்.

பெருந்தவத்தையுடைய விசுவாமித்திர முனிவர் தமது வேள்வியைக் காக்க இராமனைத் தம்முடன் அனுப்பும்படி தயரத மன்னனைக் கேட்கிறான். இராமனுக்கு விசுவாமித்திர முனிவரால் பல நன்மைகள் விளைய இருக்கின்றன. எனினும், அவர் கூறிய சொல் காதில் விழும்போது தந்தையாகிய தயரதனுக்கு வேதனையாக இருக்கிறது. வேல் துளைத்த புண்ணிலே நெருப்புக் கனல் நுழைந்தது போல் துன்பமளிக்கிறது. மனத்திலே ஆறாத் துயரம்; அத்துயரினாலே பிடித்துத் தள்ளப்பட்ட அரிய உயிர் ஊசலாடுகிறது. கொடிய வேலைக் கையிலேந்திய மன்னவன் அத்தயரதன். அவன் கடுந் துயரினாலே வருந்துகிறான். கண்ணில்லாத குருடன் ஒருவன் இடையில் கண்ணொளி பெற்று, பின்பும் அக்கண்ணொளியிழந்தால் எவ்வளவு துயரமாய் இருக்குமோ அதுபோன்ற துயரினால் வாடுகின்றான். இவ்வாறு உருக்கமான உணர்ச்சி நிலையைக் கம்பர் எனும் புலவர் சொல்லோவியத்தில் காட்டியிருக்கிறார். வாசகர்களும் அந்த உணர்ச்சி நிலையை உணர்கிறார்கள். இவ்வாறு உணரச் செய்யும் கவிஞரின் திறமையைத்தான் நாம் நயக்கிறோம்.

இப்பாடலில் இரு உவமைகளைக் கம்பர் காட்டுகிறார். விசுவாமித்திரரின் சொல் தயரதனின் காதில் நுழைந்தமைக்கு 'மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையில் கனல் நுழைந்தாலெனச் செவியில் புகுதலோடும்' என்று கூறுகிறார். அத்துடன் துன்பநிலையை உயிர் ஊசலாடுகிறது என அழகாக வர்ணிக்கிறார். அடுத்து இன்னோர் உவமை வாயிலாகத் துன்பத்தின் மிகுதியை விளக்குகிறார். தயரதன் நீண்டநாள் புத்திரன் இல்லாது பெற்ற புதல்வன் இராமன். மேலும், இராமன் முடிக்குரிய புதல்வன். இந்த நிலையில் அருமையான புத்திரனைப் பெற்றும் அவனைப் பிரிய வேண்டிய நிலை. தந்தையின் உணர்ச்சி எவ்வாறு இருக்கும்? இதனைக் கம்பர் படம்பிடித்துக் காட்டுகிறார். அதற்கு ஓர் உவமை அணியைப் பயன்படுத்துகிறார். 'கண் இலான் பெற்று இழந்தான் என உழந்தான் கடுந்துயரம்' என்றும் உவமை வாயிலாக விளக்குகிறார். வாசகர் மனத்திலும் அக்கடுந்துயர் பற்றிக்கொள்ளச் செய்திருக்கிறார். கம்பரின் இப்பாடல் சொன்னயம், பொருணயம், கற்பனைவளம் என்பன நிறைந்தது. அதுமட்டுமன்றித் துன்ப உணர்ச்சியையும், பாச உணர்ச்சியையும் விளக்குகிறது. பாடலின் சுவையை இரசிகர் மாந்தி மகிழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஸ்ரீ இராகுலரின் சிங்கள காவியசேகரத்தில் ஒரு பாடலை எடுத்துக் கொள்வோம். இளைஞனாகிய சேனகன் பெற்றோரிடம் விடைபெற்றுப் புகழ்பெற்ற தக்கசீலப் பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறான். அதனைக் கவிஞர் பின்வருமாறு வர்ணிக்கிறார்:

බැඳලා සිහාසු ග
ලෙළවා දෑත මනර ග
කුමරු මග යනර ග
බලා ඇද ගත හැකිද නෙත් යු ග

(iii – 25)

බලා - பலா என்பது பார்த்து; නෙත් යුග - நெத் யுக - இரண்டு கண்களை; ඇද ගත හැකි ද? - எத கத ஹெக்கித? - இழுக்க, வாங்க முடியுமா? இந்த அரசிளங்குமரன் மீது வைத்த கண்களை யாரேனும் வாங்க முடியுமா? දෑත මනරහ ලෙළවා - தெத மனறங்க லெளவா - இரண்டு கைகளையும் குதூகலமாக அசைத்துக் கொண்டு அவன் நடக்கிறான். සිහා සුහ – සිමාව - சிங்கா ஸுங்க - சீமாவ- அதாவது ஒரு சிறிய குடுமி. அவனது தலையில் ஒரு சிறிய குடுமி காட்சியளிக்கிறது.

இப்பாடலில் சொற்கள் உணர்ச்சிபாவத்துடன் பிரயோகிக்கப் பட்டுள்ளன. இவை மனத்திற் பல அழகிய உருவங்களைத் தோற்றுவிக்கின்றன. வாசகர் மனத்தில் இளமைநலம், அழகு, ஆற்றல், வீரம், மகிழ்வு, எழுச்சி, உற்சாகம், ஊக்கம் என்றின்னோரன்னவற்றைத் தூண்டுகின்றன. சிறுவனைப் பற்றிப் புலவரின் சொல்லோவியத்தின் அழகைக் காண்கிறோம். எதிர் காலத்தில் சேனகன் என்ற அச்சிறுவன் காவியத்தில் எப்பாகத்தை நடிக்கப்போகிறான் என்பதை இப்பாடல் ஊகித்து அறியவைக்கிறது. வருணனைகள் நிறைந்த தேனொழுகும் செய்யுளைப்படித்து இரசிக்கின்றோம்.

கம்பரது இராமாயணத்தில் இராமனின் இளமைக்கால நிகழ்ச்சி யொன்றையும் எடுத்துக்கொள்வோம். முனிவர்களிடம் கல்வி கற்றுவிட்டுச் சிறுவனாகிய இராமன் தம்பிமாருடன் வீடு திரும்புகிறான். வழியில் அவர்களை எதிர்ப்படுபவர்களின் முகங்கள் ஒளிவிடுகின்றன. அவ்வாறு எதிர்வருபவர்களின் சுகநலன்களை இராமன் விசாரிக்கின்றான். இவ்வாறாய சந்தர்ப்பத்தில் கம்பன் பாடிய கவிதையொன்றையும் பார்ப்போம்:

**"எதிர்வரு மவர்களை எமையுடை இறைவன்**
**முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா**
**எது வினை: இடரிலை: இனிதுநும் மனையும்**
**மதி தரு குமரரும் வலியர்கொல் எனவே"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமையுடை இறைவன் என்றது இராமனை. இராமனுடைய முகமாகிய தாமரை எதிரில் வருகின்றவர்களைக் காணுந்தோறும் மகிழ்ச்சியால் மலர்கிறது. கணவனாகிய சூரியனைக் கண்ட போது தாமரை மலரும். அதுபோல எதிர்வருபவர்களைக் கண்டபோது இராமனுடைய முகமும் மலர்கிறது. அவ்வாறு மலரும்போது கருணை முதிர்ந்து ததும்பி ஒளி விட்டுப் பிரகாசிக்கின்றது. எதிரில் வருகின்ற ஒவ்வொருவரையும் - எதுவினை - எப்படி உங்கள் முயற்சிகள்? இடர்இலை - சேமம் தானே? இனிது நும் மனையும்-உங்கள் மனைவியரும் நலங்களும் இனியவைதாமே. மதிதரு குமரரும் வலியர்கொல் - புத்திகூரிய-நன்மதிப்புக்குரிய நல்ல புதல்வர்களெல்லாம் ஆண்மையிலும், கல்வியிலும் வீரர்களாயிருப்பார்களே என்று சுகநலம் விசாரிக்கிறான் பால இராமன். நாட்டுப் பிரஜைகளிடம் அரசிளங்குமரன் காட்டும் அன்பு, கருணை என்பவற்றைக் கம்பன் சொல்லோவியத்திற் கண்டு இரசிக்கிறோம். அவனது ஆச்சிரமப்பள்ளிப் படிப்பின் பயனைப் பார்க்கிறோம். கம்பரது காப்பியமாகிய இராமாயணம் ஸ்ரீ இராகுலரின் காவியசேகரம் முதலிய இலக்கியங்கள் காட்டும் இலக்கியக் காட்சிகளிலும் உணர்ச்சிகளிலும் கற்பனைகளிலும் பல ஒற்றுமைகளைக் கண்டு இரசிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிருங்காரரசம்

இலக்கியங்களெல்லாம் இனிய சுவையைத் தந்து இன்பமாக வாழ வழிசெய்கின்றன. மெய்ப்புலவனின் கற்பனைவளத்தை அவனது எண்ணவண்ணங்களை - உணர்ச்சிப் பெருக்குகளைக் கவிதைகளிற் கண்டு நாமும் பாடல்களை நயக்கின்றோம். ஒரு செய்யுளின் உருவத்தில் சொல்நயம் ஒலிநயம் என்பன அடங்கும். அச்செய்யுளின் பொருள்களும் இருக்கும். அந்தச் செய்யுள் எம்மொழியிலமைந்தாலும் இம்மூன்று பொருள்களும் இல்லாத செய்யுள், செய்யுள் ஆகாது. சிறந்த பாட்டின் உயிர்நிலை கற்பனை என்று சொல்லலாம். அணியிலக்கணங்கள் கூறும் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் என்பனவெல்லாம் இக் கற்பனையின் படைப்புக்களாம். ஒரு காட்சியையோ நிகழ்ச்சியையோ காணும் புலவனது உள்ளத்தில் ஆழமான எண்ணங்களின் உயர்வையும் பொருத்தத்தையும் ஆராய்கின்றோம். அடுத்து இந்த எண்ணங்கள் புலவனுடைய உள்ளத்தில் உண்டாக்கும் உணர்ச்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை இரங்கல், உவகை, அச்சம், சிருங்காரம் முதலியனவாகப் பலதிறப்படுகின்றன.

ஸ்ரீ இராகுலர் பாடிய **பறவி (புறா) சந்தேசத்தில்** சிருங்காரரசம் நிறைந்த பாடல்கள் பல வருகின்றன. கம்பர் பாடிய இராமாயணத் திலும் சிருங்காரரசம் நிறைந்த பாடல்கள் பல வருகின்றன. இது கம்பரசமா காமரசமா என்று கூறுமளவுக்கும் சில பாடல்கள் இருக்கின்றன எனக் கூறியவர்களும் ஒரு காலத்தில் இருந்தனர். மாணிக்க வாசக சுவாமிகள் பாடிய பக்திச்சுவை நிறைந்த **திருக் கோவையாரில்** "ஆரணங்காண் என்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின் காரணங்காணென்பர் காமுகர் காமநன்னூலிதென்பர்" என்று பாடியிருக்கிறார். இவற்றை நோக்கும்போது இலக்கியங்களில் புலவர்களெல்லாரும் சிருங்காரரசத்தையும் கையாண்டிருப்பது தெளிவாகிறது. ஸ்ரீ இராகுலரும் புத்தபிக்குவாக - உலகத்தைத் துறந்தவராக இருந்தாலும் கவிஞரே. கவிஞர் என்ற நிலையில் கவி மரபைத் தழுவிக் கவிதை செய்திருக்கிறார். அவரது **பறவி சந்தேசத்தில்** வரும் பாடல் ஒன்று பின்வருமாறு:

**මදන දුවන් නිවෙසට එදින දිනැ පෙර**
**දුලන වටොර රන් රඹ තද අගැ සොඳුර**
**රදන ළකල් වැටූපෙව් දිගිනි මනහර**
**සිටින දෙතෙරු ළද අහනන් බල මිතුර**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මිතුර-மித்துற-நண்பனே புறாவாகிய தூதனை விளித்துப் புலவர் பாடுகிறார். අඟනන් බල - அங்கனன் பல-என்று கூறுகிறார். அணங்கனைய பெண்களைப் பார்ப்பாயாக. அவர்களை, ஆற்றங் கரையின் இருமருங்கிலும் நிற்கும் அணங்கனைய பெண்களைப் பார்ப்பாயாக எனக் கூறி அப்பெண்களை வர்ணிக்கிறார் புலவர். அவர்களின் වටොර - வட்டொற-தொடைகள் காண்பவர் மனதைக் கவர்வன. அத்தொடைகள் உருண்டு திரண்டு மழமழப்பாகவிருக் கின்றன. அத்தொடை ஒவ்வொன்றும் உச்சியில் விளக்கையுடைய රන් රඹ කද -றன் றம்ப கந்த - வாழையின் தண்டைப்போலக் காட்சியளிக் கின்றன. இங்கு வாழைக்குற்றியில் ஏற்றிய விளக்கையும் வாழைத் தண்டையும் உவமிக்கிறார். கார்த்திகைத் தீபகாலத்தில் வாழைக்குற்றியில் பந்தம் ஏற்றும் காட்சியைத் தமிழர் வீடுகளிலும் கோவில்களிலும் காணலாம். அத்தொடைகள் දුවන් නිවෙසට -துவன் நிவெஸட்ட-அல்குலாகிய மாளிகைக்கு மன்மதனை මදන-மதன வரவேற்க நிறுத்தப்பட்ட விழாக் கம்பங்கள் போல அவை தோன்று கின்றன. இப்பாடலில் ஆற்றங்கரையின் இரு மருங்கிலும் நிற்கிற பெண்களின் காட்சியையே புலவர் இவ்வாறு வர்ணிக்கிறார். ஸ்ரீ இராகுலர் காலத்தில் வடமொழி அலங்காரங்களைப் பின்பற்றல் கல்வியறிவின் அடையாளமாகக் கருதப்பட்டது; மதிக்கவும்பட்டது. எனவேதான் இத்தகைய வர்ணனைகள் சிங்கள பறவி சந்தேசத்திலும் விரவிக் காணப்படுகின்றன.

இனி, கம்பராமாயணம் எனும் காப்பியத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் காட்டும் இதேபோனற வர்ணனையைப் பார்ப்போம். இராமனது முடிசூட்டு விழாவிற்காக நகரை அழகுசெய்யும் பகுதியில் இப்பாடல் வருகிறது. அப்பாடல் பின்வருமாறு:

**மங்கையர் குறங்கு என வகுத்த வாழைகள் –**
**அங்கு– அவர் கழுத்து எனக் கமுகம் ஆர்த்தன**
**தங்கு ஒளி முறுவலின் தாமம் நான்றன**
**கொங்கையை நிகர்த்தன கனக கும்பமே**

(அயோ-மந்தரை சூழ்ச்சி 38)

முடிசூட்டு விழாவிற்காக நகரின் வீதிகளில் வாழைகள் நாட்டப் பட்டிருக்கின்றன. அவ்வாழைகள் (வாழைத்தண்டுகள்) பெண்களின் தொடைகள் போலக் காட்சியளிக்கின்றன. கமுகு மரங்கள் நாட்டப் பட்டிருக்கின்றன. அவை பெண்களுடைய கழுத்துப்போலக் காட்சி யளிக்கின்றன. மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. அவை பெண்களின் மெல்லிய சிரிப்புப்போல - புன்னகைபோல் காட்சி யளிக்கின்றன. வீதி எங்கணும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டிருக் கின்றன. அக்கும்பங்கள் மங்கையர் தனங்கள் போலிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பர் தனது கற்பனையில் உவமை அணிவாயிலாகச் சிருங்கார ரசத்தையும் உணரவைக்கிறார்.

ஸ்ரீ இராகுலரின் சிங்களக் கவிதையில் ஆற்றங்கரையில் நின்ற மங்கையர்களின் அவயவங்களுக்கு வாழை, விளக்கு உவமானங்களாகக் காட்டப்பட்டுள்ளன. கம்பரின் தமிழ்க் கவிதையில் இயற்கைப் பொருள்களாகிய வாழைகள், கமுகுகள், மாலைகள், கும்பங்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும், அவற்றிடையே காணப்படும் பொது அம்சத்திலும் இரசனையிலும் ஒற்றுமை காணப்படுகின்றன. பாடல்களும் அறிஞர்களுக்கு நல்லின்பத்தை அளிக்கின்றன.

ஸ்ரீ இராகுலரின் கவிதை முதிர்ச்சியைச் செலலிஹினி சந்தேசத்தில் காணலாம் என்று இரசிகர்கள் கூறுவார்கள். விபீஷணர் கோவிலில் அழகிய நடனமாதர் நடனமாடுகின்றனர். இனிய இசைப் பாடல்களும் ஒலிக்கின்றன. இக்காட்சியை ஸ்ரீ இராகுலர் வர்ணிக்கும் பாடல் பின்வருமாறு:

විදෙන ලෙළෙන නරුඹර පුළුළු'කුළැ රැ දි
හෙළන නගන අත නුවන'ග බැලුම් දි දි
රුවින දිලෙන අබරණ කැලුම ගතැයෙ දි
සැලෙන පහන සිළු වැනි රඟන ලිය සැ දි
(74)

நடனத்திற்கேற்பச் சொல்லோசை அமைந்த பாடல் இது.

විදෙන ලෙළෙන, හෙළන නගන, රුවින සැලෙන-விதென, லெலென, ஹெலன நகன, றுசின செலென என்றும் රැදි, දිදි, යෙදි, සැදි -றெந்தி, திதி, யெதி, ஸெதி என்றும் அடிதோறும் எதுகைச் சொற்கடைமைந்து பாட்டிற்கு இன்னோசை தருகின்றன. முதலில் பொருள்கேற்பப் பிரித்துப் படித்தால்:

වි(හි)දෙන ලෙළෙන, නරුඹර පුළුල් + උකුළැ රැදි,
නුවන් + අග බැලුම් දිදි අත හෙළන නගන,
අබරණ කැලුම ගතැයෙදි රුවින් දිලෙන,
සැදි රඟන ලිය(හු) සැලෙන පහන සිළු වැනි (වෙත්)

நடனமாதர் விளக்குச்சுடர் போல ஆடுகின்றனர். நடனமாதருடைய நடனத்தைப் பார்த்தால் ஒளிபொருந்திய விளக்குச்சுடர் ஆடுவதுபோல இருக்கிறது. ஒருவரன்றிப் பல மாதர் வரிசையாக நின்று ஆடுகின்றனர். (අත හෙළන-அத்த ஹெளன) அவர்கள் ஆடும்போது கையசையும் திசையெல்லாம் கண்கள் (නුවන් අග බැලුම් දිදි-நுவன் அக பெலும் திதி) செல்கின்றன. இவ்வாறு ஆடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனமாதர்களின் இடையிலே (නරුබර පුළුල් උකුලැ රැඳි විහිදෙන ලෙලෙන- நறுபற புளுல் உக்குலெ றெந்தி விஹிதென லெலென) பொன்னரிமாலை கிடந்து (ලෙලෙන-லெலென) அனுங்குகிறது. மெல்லிய ஓசை தருகிறது. அவர்களின் ஒளிவீசும் (ආබරණ කැලුම- அபறண கெலும) அணிகலங்களின் (ගතැයෙදි, රුවින දිලෙන - கதெயெதி, றுவின திலென) பிரகாசத்தால் அங்கமெல்லாம் ஒளி வீசுகிறது. ஆகையாற்றான் (සැලෙන පහන් වැනි-ஸெலென பஹன் வெனி) ஒளிவீசும் ஒளிச்சுடர் ஆடுவது போல் நடனமாடும் நடனமாதர்களும் ஒளிவீசுகிறார்கள். இந்த உவமை அணிமூலம் பெண்களின் அழகையும் நடனச் சிறப்பையும் விளக்குகிறார் புலவர். சிருங்கார ரசத்தைத்தரும் நடனக் காட்சியை தூது இலக்கியத்தில் இரசிகர்களும் நயக்க வைத்திருக்கிறார்.

சுவைமிக்க இந்தச் சிங்களப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பை பூவைவிடு தூது ஆசிரியர் நவாலியூர் சோ. நடராசன் பின்வருமாறு கூறுகிறார்:

**ஐயவிர் கனகமாலை யணியிடை சூழ்ந்தனுங்கக்**
**கைவழி நயனஞ் செல்லக் கதிர்விடு கலன்களூடே**
**மெய்யொளி ரழகு தூங்க விளக்கலை சுடர் போலாடும்**
**பொய்யெனு மிடையா ராடல் புரிந்திடு வரிசை காணாய்**

**(76)**

பாடலின் நடனத்தின் நுணுக்கமும் சிறப்பும் விளங்க 'கைவழி நயனஞ் செல்ல, சுடர்போல் ஆடும் ஆடல்' என்று கூறியிருக்கிறார். கைகளின் அசைவிற்கேற்பக் கண்களும் அசைவதிற்றான் நடன நுணுக்கம் இருக்கிறது. ஸ்ரீ இராகுலரும் பரதநாட்டியத்தின் நுணுக்கத்தை அறிந்தவராக விளங்குகிறார். விபீஷண ஆலயத்தில் தமிழ்ப்பாக்கள் ஓதப்படுவதை இன்னோர் பாடலில் கூறியிருக்கிறார். தமிழ்க் கோவில்களிலேயே நடனம் நடைபெறுவது வழக்கம். கலைகளில் ஒன்றாகிய நடனமும் கலாசாரத் தொடர்பை விளக்கும் ஓர் அம்சமாக மிளிர்கிறது. பாடலில் நடனமாதரின் நடனத்தை மட்டும் கூறுவதோடு நின்றுவிடவில்லை. நடனமாதரின் அணிகலங்களாகிய பொன்னரி மாலை, பிரகாசம் பொருந்திய ஆபரணங்களைப் பற்றியும் வர்ணிக்கிறார். அந்த ஆபரணங்கள், கதிர்விடு கலன்கள். அவை நடன மாதரின் உடம்பின் அழகுக்கு அழகு செய்கின்றன. அதனாலேயே, நடனமாதர் விளக்குச் சுடர்போல் பிரகாசமாயிருக்கிறார்கள். அவ் விளக்குச் சுடர்போல் ஆடுகிறார்கள் என மிக அழகாக வர்ணிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமும் அந்நடனத்தை மனக்கண்ணில் கண்டு நயக்கிறோம்.

ஸ்ரீ இராகுலர் நடனமாதரின் நடனத்தைப் பற்றிக் கூறும் சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்புப் பாடலை மட்டும் பார்ப்போம்.

**மின்னிய மணிகள் சூழ்ந்த மேகலை யல்குலார்ப்பப்**
**பொன்னவிர் சிலம்பு பாதப் போதிடைப் பொலிந்தலம்பப்**
**பன்னிய விசையினோடு மலர்ப்பதம் பெயர்த்த தரங்கில்**
**வன்னமா மகளி ராடும் வனப்பினைப் பெரிதுங் காணபாய்**

**(77)**

இப்பாடலிலும் நடனமாதரின் அணிகள் சிலவற்றைக் கூறுகிறார். 'பன்னிய இசையினோடு மலர்ப்பதம் பெயர்த்து அரங்கில் வன்னமா மகளிர் ஆடும் வனப்பு' என்று மிக அழகாக வர்ணித்துப் பாடியிருக்கிறார். சங்கீத இசைக்கு ஏற்ப ஆடுகிறார்கள். தாமரை மலர் போன்ற பாதங்களை (පද කමල් - பத கமல்) எடுத்து வைத்து ஆடுகிறார்கள் எனச் சொல்லோவியத்தின் வாயிலாக அழகு சொட்ட - இரசனை சொட்ட வைக்கிறார். நடனமாதர் அல்குற்றடத்தில் மாணிக்க மேகலை, ( මිණිමෙවුල් - மிணி மெவுல்) பாதங்களிலே (රන් සළඹ - றன் சலம்ப) பொற்சிலம்பு அணிந்திருக்கிறார்கள் என்று கூறுகிறார். இவற்றைக்கொண்டு அக்காலத்திலிருந்த நடனமுறை, இசை, அணிகலன்கள் என்பனபற்றியும் அறிந்துகொள்கிறோம். இலக்கியங்கள்தரும் ஒருமைப்பாட்டு நிகழ்ச்சிகளையும் கண்டு இன்புறுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைக்கால வர்ணனை

அழகியற் கலைகள் யாவற்றுக்கும் கற்பனை அவசியம். அதுவே அக்கலைகளின் உயிர்நிலை. பொதுவாக இலக்கியத்திலும் சிறப்பாகப் பாட்டுக் கலையிலும் கற்பனை உச்சநிலை அடைகிறது. படிக்கப் படிக்கப் புதுமையும் நினைக்க நினைக்க இன்பமும் தருவது கற்பனை. அக்கற்பனையைச் சிறப்பாக அமைக்கும் ஆற்றல் பெற்றவர்கள், புலவர்கள். பாட்டுக்கு இசை போன்று கற்பனை விந்தையும் இன்றியமையாதது என்று பாரதியார் கூறுகிறார். பாட்டென்பது கற்பனையின் புலப்பாடே (Poetry is the expression of imagination) என்று செல்லி (Shelley) எனும் புலவரும் கூறியுள்ளார். இவ்வாறுதான் கற்பனை செய்ய வேண்டுமென நியதி இவ்வுலகில் இல்லை. காலைக் காட்சி, சூரிய உதயம், மாலைக் காட்சி, சூரியாஸ்தமனம், சந்திர உதயம் என்பவற்றைக்காணும் புலவர்கள் அவற்றோடு ஒன்றுபட்டுச் செய்யும் கற்பனைகள் பலவகை. சந்திரனைப் பற்றித் தமிழ் சிங்களப் புலவர்கள் சிலர் படைத்த கற்பனைகளில் ஒற்றுமைகளைக் காணலாம். சந்திரனுக்குத் திங்கள், மதியம் என்ற பல பெயர்கள் உண்டு. திங்களைப்பற்றி **வில்லிபுத்தூராழ்வாரின்** கற்பனையைப் பார்ப்போம்.

**கானெலா மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தன்ன**
**வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற**
**வேனிலான் விழவின் வைத்த வெள்ளி வெண்கும்ப மென்னத்**
**தூனிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற் றம்மா.**

வில்லிபுத்தூராழ்வாரின் பாரதத்தில் இப்பாடல் வருகிறது. பிரகாசமான மதியம் -சந்திரன் கிழக்குத் திசையில் உதயமாகிறது. இக்காட்சியைத்தான் புலவர் கற்பனை வர்ணிக்கிறார். தூநிலா மதியம் குணதிசை வந்து தோன்றியது என்று புலவர் கற்பனை செய்கிறார். பூரணசந்திரன் மாசுமறுவின்றி வெளிச்சந்தந்து உதயமாகிறது. ஆகாயத்தில் நட்சத்திரங்கள் பளிச் பளிச்சென்று மின்னுகின்றன. அவை வரிசை வரிசையாகத் தோன்றுகின்றன. இவை சாதாரணமாக - இயற்கையாக நிகழும் நிகழ்ச்சிகள். நாங்கள் பூரணை நாளிற் காணும் பொருள்கள். இவற்றைக்கொண்டு புலவர் புதுப்படைப்பினை ஆக்கியிருக்கிறார். உவமை அணியைத் தமது கற்பனைக்குப் பயன்படுத்தியிருக்கிறார். ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்களுக்குக் காட்டில் மலர்ந்த முல்லைப்பூக்களை உவமானமாகக் காட்டுகிறார். அதனையும் அழகாகக் கூறுகிறார். அந்த முல்லைப்பூக்கள் ஆகாயத்திற்கு எழுந்து வந்துள்ளன என்று கூறுவதிற் சிறப்பைக் காண்கிறோம். கானெலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த முல்லை மீதில் (ஆகாயத்தில்) எழுந்தது அன்ன என்று பாடுகிறார். அதற்கு ஏற்ப நட்சத்திரங்கள் - அதாவது தாரைகள் (தாரகைகள்) நிரை நிரை மலர்ந்து தோன்றுகின்றன எனப் பாடுகிறார். புலவரின் ஆக்கக் கற்பனை இன்னும் மேலே செல்கிறது. பூரணசந்திரனுக்கு வெள்ளி வெண் கும்பத்தை உவமானம் காட்டுகிறார். முல்லைப்பூநிரை, வெள்ளி, வெண்கும்பம் என்பனவற்றிற்குக் காரண காரியத் தொடர்பையும் நிறுவுகிறார் புலவர். அது அழகினைப் படைத்து உணர்ச்சியைத் தூண்டி இன்பத்தை ஊட்டுகிறது. ஒரு விழாவிற்குத்தான் இந்த ஏற்பாடு என்கிறார். வேனிலான் விழாவுக்குத்தான் இந்த வெள்ளி வெண் கும்பம் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். வேனிலானாகிய மன்மதனுக்குரிய மாலைக்காலம்; அவனுடைய மலர் அம்புகளுக்கு விருப்பமான முல்லைப் பூக்கள். இவற்றையெல்லாம் தொடர்புபடுத்தும் புலவரின் கற்பனையே கற்பனை. பாட்டை மீண்டும் மீண்டும் படிக்க விரும்புகின்றோம். 'வேனிலான் விழவின்வைத்த வெள்ளி, வெண்கும்பம் என்ன, தாநிலா மதியம் வந்து குணதிசை தோன்றிற்று' எனப் பாடுகிறோம். இது போன்ற கற்பனையொன்றைச் சிங்களத் தூது இலக்கியத்தைப் பாடிய ஸ்ரீ இராகுல தேரர் பூரண சந்திர உதயத்தைப் பின்வருமாறு கற்பனை செய்கிறார்.

උදුළ සොමි කැලුම් තිසයුරු හිමි පුව ළ
පහළ වන බැවින් තව වෙත තිස'ඹු දො ළ
ලකළ ගුවන් තල සිරි යහනැ තිකස ළ
අතුළ කුසුම් විලසින් සැදෙත තුරු වැ ළ

(51)

கருத்திற்கேற்பப் பாடலைப் பிரித்துப் படித்தால்:

සොමි කැලුම් (+ ඉන්) උදුළ පුවළ තිසයුරු
හිමි තම වෙත පහළ වන බැවින් දොළ(වූ) තිසා
අඹු නි තිකසළ ලකළ ගුවන් තල
සිරි යහනැ අතුළ කුසුම් විලසින්. තුරු වැල සැදෙත:

இப்பாடல் பூரண சந்திர உதயத்தையே வர்ணனை செய்கிறது. நீல வானம், பூரண சந்திரன், நட்சத்திரங்கள், மலர்கள், இராக்காலம் எனும் இயற்கைப் பொருள்களையே புலவர் தமது கற்பனையில் புதுமையாகப் படைத்திருக்கிறார். பாடலில் பூரண சந்திரனை, පුවළ තිසයුරු – හිමි- புவள நிஸயுறு-ஹிமி என்று குறிப்பிடுகிறார். பூரண சந்திரனாகிய இரவெனும் பெண்ணின் தலைவன், නිසාකර - நிஸாகற-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாளிச்சொல்தான் சிங்களத்தில், නිසයුරු -நிஸயுறு என்று வந்திருக்கிறது. இரவை உண்டாக்குபவன் என்பது அதன் பொருளாகும். பகலை உண்டாக்குபவன் , දිවාකර - திவாகற (சூரியன்) என்றதுபோல இரவை உண்டாக்குபவன், නිසාකර - நிஸாகற- (சந்திரன்). இரவைப் பெண்ணாகவும் சந்திரனை இரவெனும் பெண்ணின் கணவனாகவும் வர்ணிக்கிறார் புலவர். எனவே, නිසා අඹු නිසඹු -நிஸா - அம்பு நிஸம்பு அதாவது இரவாகிய பெண் என்கிறார். ஆகாயத்தை அழகான கட்டிலாக உருவகிக்கிறார். ගුවන් තල-සිරියහනැ - குவன் தல-சிறியஹன என்பது ஆகாயமாகிய அழகிய படுக்கை என்பது கருத்தாகும். ஆகாயத்தில் காணப்படும் நட்சத்திரங்களின் கூட்டம் ஆகாயக் கட்டிலில் பரப்பிய பூக்கள் போலக் காட்சியளிக்கின்றன. තුරු වැල - துறு வெல என்ற நட்சத்திரங்களின் வரிசை තාරාවලී – தாறாவலி என்ற பாளிச் சொல்லே சிங்களத்தில் තුරුවැල – துறுவல என - வந்திருக்கிறது. අතුළ කුසුම් විලසින් තුරුවැල සැදෙන – அத்துள குஸும் விலசின் துறுவெல ஸெதென - பரப்பிய மலர்கள் போல நட்சத்திரக் கூட்டம் வரிசை வரிசையாகக் காட்சி தருகின்றன. இப்போது பாடலின் பொருளை நோக்குவோம்.

சூரியன் மறையும் நேரம்; ஆகாயத்தில் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன. அவை பூக்கள் போலப் பரக்கின்றன. ஆகாயமாகிய படுக்கையில் பரப்பிய பூக்கள் போலப் பொலிவுறுகின்றன. இந்தப் படுக்கையை இரவாகிய பெண்ணே விரித்து வைத்திருக்கிறாள். தனது கணவனாகிய பூரணசந்திரனின் வரவை எதிர்பார்த்து அவனை ஆவலுடன் வரவேற்கிறாள் அந்த இரவாகிய பெண். இச் சிங்களப் பாடலின் மொழி பெயர்ப்பைப் பூவைவிடு தூது ஆசிரியர் பின்வருமாறு பாடுகிறார்.

**விண்ணகம் எனும்திரு விளங்கு சய னத்தே**
**தண் மலர் விரித்தெனவத் தாரகைகள் வீசிக்**
**கண்ணினிய காதலன் கதிர்முழு மதிப்பேர்**
**அண்ணல் வருமென்று இரவு அரம்பை எதிர் நிற்கும்**

**(53)**

'விண்ணகம் எனும் சயனம்' என ஆகாயத்தைப் படுக்கையாக உருவகித்திருக்கிறார் புலவர். இரவு அரம்பை என இரவைப் பெண்ணாக உருவகித்திருக்கிறார். இவற்றிற்கு இயைய, சந்திரனை மதிப்பேர் அண்ணல் என, இரவின் தலைவன் என உருவகித்திருக்கிறார். இவ்வாறு உருவக அணி, உவமை அணி என்பன புலவரின் கற்பனைக்கு அலங்காரம் செய்துநிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு தமிழ்ப்பாடலில் வரும் சூரிய அஸ்தமனக் காட்சியைப் பார்ப்போம். இது 'வெண்பாவிற் புகழேந்தி' என்று போற்றப்பட்ட புகழேந்திப் புலவரின் பாடல். அப்பாடலில் சூரியன் மறைவால் ஏற்படும் சில இழப்புகளையும் துன்பநிலையையும் காண்கிறோம்.

"வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்ப – பையவே
செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய விரிகதிரோன் வெற்பு"

வையம்-பூமி பகற்பொழுதை இழக்கிறது. வானம்-ஆகாயம் ஒளியை இழக்கிறது. பொய்கை-குளங்கள் தம்முடன் நீண்ட பகல் முழுதும் நீங்காதிருந்த பறவைகளை இழக்கின்றன. அவைகள் குளத்தை விட்டுப் படுக்கைக்குச் சென்றுவிடுகின்றன. சிவந்த வாயையுடைய அன்றில் எனும் பறவையும் தனது துணையாகிய பெடை அன்றிலை இழக்கின்றது. பிரிவின் காரணமாகத் துணையை இழக்கிறது. இவ்வாறாய பல இழப்புகள் நிகழ, கொடிய வெப்பத்தையுடைய விரிந்த கதிர்களையுடைய சூரியன் வெற்பை - மலையைச் சென்று அடைகிறான். மேற்கு மலையில் மறைகிறான் என்பது பொருள். சூரியனது மறைவுதான் இவ்விழப்புகளுக்குக் காரணம் என்பது புலவரின் கற்பனை. இத் தமிழ்ப்பாடலின் கருத்தோடு பொருத்தமான சிங்களப் பாடலை எடுத்துக்கொள்வோம். ஸ்ரீராகுலர் பாடிய செலவிஹினி சந்தேசவில் வரும் அப்பாடல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| මහනුන් | හසළ නමහට යසපිහිට ලෙ | ස |
| තියතින් | නොහළ යුතු බව පැමිණෙන වෙහෙ | ස |
| සුදනන් | පැවති සිරිතැයි දන්වන විල | ස |
| නුබමින් | සමග ගෙවෙනුව දහවල් දව | ස |

(49)

දහවල් දවස ගෙවෙනුය -தஹவல் தவஸ கெவெனுய - என்பது දහවල් දවස ගෙවෙන්නේ - தஹவல் தவஸ கெவென்னே என்பதை நிகர்க்கும். அதாவது பகற்பொழுது கழியும் என்பது கருத்தாகும். නුබමින් - நுபமின் - என்பது (නුබ - நுப - ஆகாயம்), නභොමණි - நபொமணி ஆகும். அது சூரியனைக் குறிக்கும். සුදනන් - ஸுதனன் - நல்லோர், සිරිතැයි- සිරිතය කියා - ஸிறிதயி-ஸிறிதய கியா - அதாவது அவர்களது கொள்கையாகும்; வழக்கமாகும். உயர்ந்த குணமுடைய நல்லவர்கள் தமக்கு உறுதுணையாயிருந்து நன்மை செய்தவர்கள் துன்பமடையும் போது அவர்களைக் கைவிடார்கள். இந்த உண்மையை எடுத்துக் காட்டுவதுபோல சூரியன் மறையும்போது-விழும்போது அதனோடு දහවල් දවස - தஹவல் தவஸ - பகற்பொழுதும் வீழ்ந்தது; மறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தவர்களுடைய நல்ல குணத்தைப் பகற்பொழுதுக்கு உவமான மாகக் காட்டியிருக்கிறார் புலவர். புலவரின் கற்பனையில் உயர்ந்த உண்மைகளும் சிறப்புப் பெறுகின்றன. இச்சிங்களப் பாடலின் தமிழ் மொழி பெயர்ப்புப் பாடல் பின்வருமாறு:

உத்தமர் உயர்ந்தோர் தங்கட்கு உறுதுணை புரிந்த மேலோர்
பத்தியில் இடும்பை உற்றுப் பருவரல் உழக்குங் காலை
நித்தியம் நிலையில் நீங்கா நெறியினைக் காட்டுமா போல்
அத்தமது அடையும் ஞாயிறு அதனொடு பகல்வீழ்ந் தன்றே

(51)

புகழேந்திப் புலவர் பாடலில் வையம் பகலிழப்ப வானம் ஒளி இழப்ப விரிகதிரோன் வெற்பைச் சென்றடைந்தான். ஸ்ரீ இராகுலரின் பாடலில் ஞாயிறுடன் பகல் வீழ்ந்தது. இரு பாடல்களிலும் வரும் பிரிவுகள் இழப்புகள் துன்பச் சுவையைத் தருவன. இயற்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு புலவர் தமது கற்பனைவளத்தால் எங்களையும் துன்பச் சுவையுள் ஆழ்த்திப் பாடலைச் சுவைக்க வைக்கின்றனர். புலவர்களது கற்பனைகளிலும் ஒருமைப்பாடுகள் ஒளிர்விடுகின்றன. நாமும் உள்ளத்து ஒளிபெற்று வாக்கினிலும் ஒளி பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் புலவர்களும் அவையடக்கமும்

தமிழ் இலக்கிய உலகில் **கம்பர், வள்ளுவர், இளங்கோ** ஆகிய புலவர்கள் சிறப்பாகப் பாராட்டப்படுபவர்களாவர். 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று புரட்சிக்கவி பாரதியாரே போற்றியிருக்கிறார். **இராமாயணம்** எனும் காவியத்தைப் பாடியவர் கம்பர். தெய்வக்குறளாம் **திருக்குறளைப்** பாடியவர் திருவள்ளுவர். நெஞ்சைஅள்ளும் **சிலப்பதிகாரத்தைப்** பாடியவர் இளங்கோ.

சிங்கள இலக்கிய உலகில் புகழ்பெற்ற **காவியசேகர, செலலிஹினி சந்தேச(ம்)** முதலிய காவியங்களைப் பாடியவர் ஸ்ரீ இராகுல தேரர். அவரது காவியசேகர எனும் காவியம் கவிதை மணிமுடி எனப் போற்றப்படுகிறது. **குத்தில காவிய(ம்)** எனும் சிறந்த காவியத்தைப் பாடியவர் வெத்தாவ எனும் தேரர். இவர் ஸ்ரீ இராகுலரின் மாணாக்கர். **புதுகுண அலங்கார(ய)** என்ற காவிய நூலைப்பாடியவர் வனவாசப் பிரிவைச் சேர்ந்த புத்தபிக்குவாகிய வீதாகம மைத்திரியர்.

சிங்களப் புலவர்களிலே ஸ்ரீ இராகுலர் தலைசிறந்து விளங்குகிறார். அவருடைய எதிரிகளாகிய வனவாசப் பிக்குகளுமே அவரது புலமையைப் புகழ்ந்துள்ளனர். இராகுலர் காலத்தில் வாழ்ந்த புலவர் ஒருவர் அவரது கல்வியறிவைப் பின்வருமாறு கூறுகிறார்.

**ගැඹුරු විජම් පෙළ කිරි සයුර ඇම විට**
**සොඳුරු නුවණ මෙර පහරින් සකොබ කොට**
**මියුරු පද අරුත් අම ගෙන දෙන ලොවට**
**කවුරු සදිසි වෙති මෙකලට එ යතිඳුට**

**(கிரா சந்தேச 234)**

இப்பாடலில் இந்த (இராகுல) தேரருக்கு இணையானவர் யார்? (**කවුරු සදිසි වෙති** - கவுறு ஸதிஸி வெதி) அபிதம்ம என்ற (**විජම් පෙළ** -விஜம் பெள) பாக்களைத் (**කිරි සයුරු** - கிரி ஸயுறு) தமது நுண்ணறிவு என்னும் மகாமேரு மத்தினாற் கடைந்து (**මියුරු පද අරුත් අම** - மியுறு பத அறுத் அம) மிகச் சிறந்த சொற்பொருளென்னும் தேவாமிருதத்தை வழங்குகிறார் என்று கூறுகிறார்.

இனி, தமிழ் சிங்களப் புலவர்கள் தாம் பாடும் காவியங்களில் அவையடக்கம் கூறும் மரபில் உள்ள ஒற்றுமைகள் சிலவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போம். பொதுவில் எல்லா இலக்கியங்களிலும் இம்மரபு பின்பற்றப்பட்டு வருவதைக் காணுகிறோம். கவிச்சக்கரவர்த்தி கம்பரும் இராமாயணத்தில் அவையடக்கம் கூறிய பின்பே காவியத்தை ஆரம்பிக்கிறார். அவையடக்கம் என்பதில் அவை என்றால் சபை; அடக்கம் என்றால் அடங்குதல் என்றும் அடக்குதல் என்றும் கூறுகிறார் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். சபைக்கு அடங்கும் முகமும் ஒருவாறு சபையை அடக்கும் முகமும் ஆகிய இரு முகங்கொண்டது என்று விளக்கிக் கூறுகிறார். கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் அவையடக்கம் பின்வருமாறு:

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

பாற்சமுத்திரம் ஓசையால் உயர்ந்து அதிர்கின்ற பெரிய சத்தத்துடன் அலை புரண்டெழுவது. இப்படிப்பட்ட பாற்சமுத்திரம் எங்கே? அற்பப் பூசை எங்கே? பூசை என்றால் பூனையை. அடுப்பங்கரைப் பூனைக்கும் நாராயணமூர்த்தி அறிதுயில் செய்யும் பாற்கடலுக்கும் என்ன சம்பந்தம். அற்ப சிறிய பூனை பாற்கடலில் தெறிக்கின்ற ஒரு துளி பாலைத்தானும் தொட்டுப்பார்க்கவும் அருகதையற்றது. அப்படிப்பட்ட பூனை பாற்கடல் முழுவதையும் நக்கி நக்கிக் குடிக்கப் போனால் எப்படி இருக்கும். அவ்வாறு நினைப்பதும் செய்வதும் அதனுடைய அறியாமையைத்தான் காட்டும். ஸ்ரீ இராம சரிதம் பரிசுத்த சமுத்திரம். காசில்லாத சமுத்திரம். காசு என்றால் மாசு; மறு. எனவே, அது மறு இல்லாத சமுத்திரம். இராமனோ வெற்றியுடையவன்; மனத்தூயன்; அவனுடைய கதையும் அவ்வளவு பரிசுத்தமானது. நானோ ஆசைப் பூசை. ஆசை வெட்கம் அறியாது அல்லவா? நானும் ஆசைபற்றி அறையலுற்றேன்; பாடத் தொடங்கினேன். நான் ஒரு பூனை. என்னை மன்னியுங்கள் என்று சபைக்கு அடங்கி மிகப் பணிவோடு பாடுகின்றார் கம்பர். அதுமட்டுமன்றி ஸ்ரீ ராம கதையோ மாக்கதை-மகாகதை-மிகப்பெரிய கதை. அந்த மகிமை பொருந்திய கதையை முதல் சமஸ்கிருத மொழியில் செய்தவர் வான்மீகி. அவர் மகா முனிவர். நான் தமிழிலே விருத்தப்பாவிலே பாடுகின்றேன். வான்மீகி சொன்னவற்றையே சொல்கிறேன். இத் தமிழ் இராமாயணத்தில் குற்றம் இருந்தால் அது என்குற்றம் அன்று. வான்மீகியின் குற்றமே என்று கூறித் தம்மில் குற்றங்கண்டுபிடிக்காதவாறு அவையை அடக்கியும் விடுகிறார். தமிழ் இலக்கிய மரபில் அவையடக்கம் கூறும் மாதிரியைக் கண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, இம்மரபு சிங்கள இலக்கியங்களிலும் எவ்வாறு போற்றப் பட்டிருக்கிறதென்பதையும் பார்ப்போம். குத்திலகாவிய ஆசிரியரான வெத்தாவ என்பவர் பின்வருமாறு அவையடக்கம் கூறுகிறார்:

පරසතු මලින් පුද
ලද මුනිසඳුට දිය
වන පස මලින් පුද
කළ'යි පවසනු කවර වර දද

குத்தில காவியத்தைப் பாடத் தொடங்கிய வெத்தாவ மிகவும் அடக்கத்துடன் தான் காப்பியத்தைத் தொடங்குகின்றார். புத்தபெருமானின் போதனைகளைக் கவிதையாக்க முனைகிறோம் என்ற அடக்க வார்த்தைகள் கவிதையில் பிரதிபலிக்கின்றன. புத்தபகவானைக் குறிப்பிடுகையில் පරසතු මලින් පුද ලද මුනි සඳුට- பறஸத்து மலின் புத லத முனி ஸந்துட்ட - என்று கூறுகிறார். அதாவது தெய்வமலரைப் பீடிகையாக உடைய புத்தபகவான். மலர்மிசை ஏகினான் என்பதற்கு மலர்மிசை நடந்த புத்தபகவான் என்று கருத்துக் கொள்ளலையும் கவனிக்கலாம். அவர் உலகையே (දිය නද- திய நந்த) மகிழ்விப்பவர். இவ்வாறு தெய்வாம்சம் பொருந்தியவரைக் ( වන පස මලිනි-வன பஸ மலினி) காட்டுப்பூக்களைக் கொண்டு அர்ச்சித்தால் எவ்வாறு இருக்கும்? வெத்தாவ தன்னடக்கத்துடன் கூறும் இச்சிங்களப் பாடலின் மொழிபெயர்ப்புப் பாடல் பின்வருமாறு:

"தெய்வநாள் மலர்ப் பீடிகை யானுக்கு
வையமே மகிழ் வானருள் வேந்துக்கு
கைநிறைந்த பூக்காட்டிலே கொய்து நான்
பெய்து தாழின் பெரியர் முனிவரோ"

வெத்தாவ தனது பாடல்களைக் காட்டில் மலர்ந்த பூக்களுக்கு ஒப்பிடுகிறார். காட்டுப்பூக்கள் மணம் குணமில்லாதனவாக இருக்கலாம். அழகற்ற பூக்களாக இருக்கலாம். இவை என் சொந்தத் தோட்டத்து மணமுள்ள மல்லிகையோ, முல்லையோ அல்ல; செந்தமரையோ குவளைப்பூவோ அல்ல. காட்டுப்பூ - அதுவும் அந்தப் பூக்களை மலர்ப் பீடிகையானின் பாதங்களில் வைத்து வணங்குகிறேன். அன்போடு கைநிறையப் பறித்துவந்து தருகிறேன். எனது அறியாமையை அறிந்த பெரியோர் என்மேல் கோபங்கொள்ளமாட்டார்கள். எனது கவிதைகளை ஏற்றுக்கொள்வார்கள்.

இச்சிங்களப் பாடலில் வரும் அவையடக்கம் கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் இன்னோர் அவையடக்கப் பாடலின் சாயலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திருக்கிறது. தரையிலே பிள்ளைகள் சித்திரம் வரைகிறார்கள். அச்சித்திரம் ஒரு வீட்டின் மாதிரிப்படம், அறை, ஆடல் அரங்கு என்பவற்றைப் பொருத்தமற்ற முறையில் வரைகிறார்கள். அவ்வாறு வரைவதைப் பிள்ளைகளின் தந்தை பார்க்கிறார். வரைபடம் பிழையாக இருக்கிறதென்று கோபிப்பாரா? என்று அப்பாடலில் கூறுகிறார். அந்தப்பாடல் பின்வருமாறு:

"அறையும் ஆடரங்கும் படப் பிள்ளைகள்
தரையிற் கீறிடிற் தச்சரும் காய்வரோ
இறையும் ஞானமும் இலாத என் புன்கவி
முறையில் நூல் உணர்ந்தாரும் முனிவரோ"

இப்பாடலில் கல்வியிற் பெரியன் கம்பன், கவிச்சக்கரவர்த்தி என்றவாறெல்லாம் புகழ்பெற்ற கம்பர் மிகவும் தாழ்த்தி அவையடக்கம் கூறுகிறார். தமது கவியை- உலகமே புகழும் கவியை புன்கவி - சிறுமையான கவி என்கிறார். இறையும் ஞானமும் இல்லாதவர் என்று தம்மையே கூறிக்கொள்கிறார். எனினும், முறையாக நூலைக்கற்ற அறிஞர்கள் தன்னைக் கோபிப்பார்களா? என்று வினாவுகிறார். நிச்சயம் கோபிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவருக்குண்டு. அதற்கு ஓர் உவமானத்தையும் காட்டுகிறார். 'அறையும் ஆடரங்கும் படப்பிள்ளைகள் தரையிற் கீறிடில் தச்சரும் காய்வரோ? - கோபிப்பார்களோ? - கோபிக்கமாட்டார்கள். அதுபோல என் புன்கவியைப் படித்து முறையில் நூல் உணர்ந்தவர்கள் கோபிக்கமாட்டார்கள். சிங்களப் பாடல் ஆசிரியர் வெத்தாவ, கைநிறைந்த பூக்காட்டிலே கொய்து நான் பெய்து தாழில் பெரியர் முனிவரோ என்று கூறியதிலும் ஒருவகை ஒப்புமை இருக்கின்றதல்லவா? நாம் படித்து இரசிக்க வேண்டிய கவிதைகள் இவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவையடக்கமும் கவிமரபும்

கவிதை மணிமுடியாகிய காவியசேகரவின் ஆசிரியர் சிறந்த கல்வியாளர். தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர். வடமொழி, பிராகிருதம் மாகதி, பைசாசி, சௌரசேனி, அபப்பிரம்ச ஆகிய ஆறு மொழிகளிலும் விற்பன்னர். ஆகையால் அவர் ஷட்பாஷா பரமேஸ்வரர் எனப் போற்றிப் புகழப்பட்டவர். காவியசேகர என்ற காப்பியமே அவரது ஆழமான கல்வியை விளக்கிநிற்கிறது. தோட்ட கமுவவிலுள்ள விசயபா பிரிவேனாவின் தலைமைக் குருவாக விளங்கியவர். அக்காலத்திலேயே **காவியசேகர** என்ற நூலை எழுதினார். முன்கூறிய புலவர்கள் போலன்றி அவர் தமது கல்வியையும் புலமையையும் தற்புகழ்ச்சிபோன்று தோற்றும் வகையிலே வர்ணிக்கிறார்.

அவரது பாடல் பின்வருமாறு:

සව් සත කෙළ පැමිණි
ගුරුවත් දෙරන සපැමිණි
පිරිසිදු සිල් ගිහිණි
සියල් ලොවැ වියතුනට සිළුමිණි
(24)

அவர் எல்லாக் கல்வித்துறைகளிலும் திறமை பெற்றவர். பூமியில் (දෙරන -தெறன) வியாழபகவானை (ගුරුවත් - குறுவன்) நிகர்த்து (සපැමිණි - ஸபெமிணி) விளங்கினார். அவர் தருமத்தின் கோட்பாடுகளை පිරිසිදු සිල් ගිහිණි - பிறிஸிது ஸில் கிஹிணி நன்கு கடைப்பிடித்தார். உலகிலுள்ள கல்விமான்களில் සියල් ලොව – වියතුනට සිළුමිණි - ஸியல்-லொவ - வியதுனட்ட முடிமணியாகவுந் திகழ்ந்தார். இவ்வாறு இராகுலர் தம்மையே உயர்த்திப் பாடியிருக்கிறார். தமிழ்ப் புலவர்களது அவையடக்கத்துக்கும் சிங்களப் புலவர்கள் சிலரது அவையடக்கத் திற்குமிடையில் காணப்படும் சிறு வேறுபாடு இது.

காவியசேகர ஆசிரியர் மட்டுமன்றி அக்காலச் சிங்களப் புலவர்கள் வேறு சிலரும் தங்கள் கல்வியையும் புலமையையும் புகழ்ந்திருக்கிறார்கள். இது அப்புலவர்களின் அந்நாளிற் பொதுவழக்காய் இருக்கலாம்.

இதே மரபை **'கிவிலக்குணு மிணிமல்'** என்ற நூலில் வீதாகம மைத்திரேயர் என்ற சிறந்த புலவரும் பின்பற்றியிருக்கிறார். வீதாகம மைத்திரேயரின் பாடல் ஒன்றையும் பார்ப்போம்.

පසක් තුන් ලෝ සිදු
බඳු බුදු රදුන් වදහළ
නෙවලා සයුරු කුඹුයොන්
සිරිනි ගත් තිය අන්ලෙන්

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுமுனியாகிய அகத்தியர் குடங்கையில் எல்லாக் கடல்களையும் அடக்கினார். කුඹුයොන් තෙවළා සයුරු - கும்புயொன் தெவளா ஸயுறு அதுபோன்று மைத்திரேய மகாதேரர் தமது மனதில் புத்தரின் முப்பெரும் බඳු බුදු රදුන් වදහළ- பந்து புது றந்துன் வதஹள பரிசுத்த போதனைகளைக் கொண்டிருந்தார். மகிழ்ச்சியும் நேர்மையும் நிறைந்த இப்பெருந் தேரர் மூவுலகிற்கும் පසක් තුන් ලෝ සිඳු - பஸக் துன் லோ ஸிந்து - நற்சேவை செய்தார். தமிழ் இலக்கணத்தை முதலில் செய்தவர் அகத்திய முனிவர். இதனால் தமிழ் நூல்களிற் பெரிதும் போற்றப்படுபவர். அவர் குறுகிய வடிவினராகையால் குறுமுனியென்று அழைக்கப்பட்டார். குடத்தில் அவதரித்தவர் என்பதால் கும்பமுனியென்றும் பெயர் பெற்றார். அவர் தமது சிறங்கையில் எல்லாக் கடல்களையும் எடுத்து உண்டவர் என்பது புராணக் கதை. அதனையே சிங்கள நூலிலும் மைத்திரேய மகாதேரர் குறிப்பிடுகிறார். இங்கே குறிப்பிட்ட உவமையணி அகத்தியரின் பெருமையை விளக்குவதுபோல் மைத்திரேய மகாதேரரின் கல்வியறிவையும் விளக்குகிறது. இதே மரபைச் **சந்தகிருந்துருத கவ** என்ற நூலில் ஆசிரியர் **வில்கம்** முல மகாதேரரும் பின்பற்றுகிறார். அவருடைய புகழை அவரே கூறும் பாடல் பின்வருமாறு:

වසන පිළිවෙත් සරු
සහ ගණ සමඟ පිය කරු
සදහම් දැරු ගරු
සියල් සතරෙහි සුර ඇදුරු සුරු

வினயத் திருமுறையின் விதிகளைப் கண்டிப்பாய்ப் பின்பற்றியவர். எல்லாவகை அறிவுத்துறைகளிலும் வியாழபகவானுக்கு இணையாக விளங்கினார்.

அவையடக்கம் கூறும் மரபில் சில சிறப்புகளையும் காண்கிறோம். கம்பராமாயணத்தில் பல தனிச்சிறப்புகள் உள. இந்நூல் வான்மீகி இராமாயணத்தின் தழுவலாக இருந்தாலும் இராமாயணத்திலே தமிழ் மரபுகள் பல தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. மொழிபெயர்ப்பு, தழுவல் நூல்கள் செய்யும் அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களைக் கம்பனே முன்மாதிரியாகக் காட்டியிருக்கிறான். கம்பன் தன்னை மிகவும் தாழ்த்தி அவையடக்கம் கூறுகின்றான். அதே நேரத்தில் மூலநூலாசிரியராகிய வான்மீகியை உயர்த்திக் கூறுகிறான். "நானும் ஒரு இராமாயணம் பாடத் தொடங்கிவிட்டேன் என்னை? என் அறியாமை இருந்தபடி என்னை? கொல்ல தெருவிலே ஊசி விற்கிற செயல், என்செயல்". அவன் புகழ்ந்த நாட்டை-மகிமை வாய்ந்த ஸ்ரீராம காதையை எவ்வாறு பாடுவேன் என்கிறார். இனி அவருடைய பாடலைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கரும் பாத நான்கும் வகுத்த வான்மீகி என்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் பேசலுற்றேன்.

வான்மீகியின் கவிகள் தித்திக்கின்ற தேன்கவிகள். பூலோகத்தவர்கள் மட்டுமன்றித் தேவர்களும் செவிகளாரப் பருகி இனிக்கின்றார்கள். நானோ அன்பெனும் நறவம்-கள்ளை நிறையப் பருகி மதிமயங்கி உளறியிருக்கிறேன். மூங்கையான் பேசினால் அல்லது பாடினால் எப்படியிருக்கும் என்று கம்பர் அவைக்கு அடங்கிக் கூறியிருக்கிறார்.

கம்பர் சபையை அடக்கும் விதத்தையும் பார்ப்போம். நவநாகரிமான உத்தியைக் கையாளுமாறு இதுவாகும்.

தேவபாடையில் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவி னார்உரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னாலிஃது ணர்த்திய பண்பரோ

தேவ பாடையென்றது ஆரிய மொழியை. அது சமஸ்கிருதம் எனவும் வடமொழி எனவும் படும். ஆரிய மொழியில் ஸ்ரீராமகதை செய்தவர்கள் மூவர். அவர்கள் வான்மீகி, வசிட்டர், போதாயனர் என்னும் முனிவர்களாவர். மூன்று முனிவர்களுள்ளும் முதன் முதல் இராமாயணம் பாடியவர், வான்மீகி. அவர்தான் முந்திய நாவினார் என்று கூறப்பட்டிருக்கிறார். நான் தமிழிலே - விருத்தப்பாவிலே இந்த இராமாயணத்தைப் பாடியிருக்கிறேன். 'நான் வான்மீகியின் உரையின்படியே பாடியிருக்கிறேன். இந்தத் தமிழ் இராமாயணப் பண்பு வான்மீகி இராமாயணப் பண்பேயாகும்' என்று வான்மீகி மீது பொறுப்பைச் சுமத்தியிருக்கிறார். நூலில் குற்றம் இருந்தால் அது என் குற்றம் அன்று. அக்குற்றம் வான்மீகியின்மீதே சாரும் என அவையை அடக்கியிருக்கிறார். கம்பரில் குற்றம் கண்டாலும் உயர்ந்த வான்மீகியில் எம்மால் குற்றம் காணமுடியாதல்லவா? கம்பர், கையாண்ட உத்தியால் தப்பித்துக்கொள்கிறார்.

அவை அடக்கம் கூறுவதும் இலக்கிய மரபு. அவ்வாறே, மூலநூல் வழிநூல் என்பவற்றைக் கூறுவதும் கவிமரபு. ஆராய்ச்சியாளர், திறனாய்வாளர் அனைவருக்கும் இது பெருந்துணையாகவுமிருக்கும். சிங்களப் புலவர்களாகிய **அழகியவண்ண முகவெட்டியும் தர்மத்துவஜ பண்டிதரும்** தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள். அதனை அழகிய வண்ணர் செய்த சுபாஷித என்ற நீதி நூலே நிறுவுகிறது. அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத பாளி நீதி நூல்களை மட்டும் தழுவிப் பாடவில்லை. தமிழ் நீதி நூல்களையும் கற்று அவற்றைத் தழுவிப் பாடியிருக்கிறார். நூலின் தொடக்கத்திலே அதனைப்பற்றி அழகியவண்ணரே குறிப்பிடுவதால் வேறு ஆராய்ச்சிகள் தேவையில்லை. ஔவையார் பாடிய மூதுரை, நல்வழி என்ற நீதி நூல்களில் வரும் கருத்துக்கள் சுபாஷித என்ற சிங்கள நீதி நூலில் வருகின்றன. இந்த உண்மையை, அழகியவண்ணர் கூறும் சிங்களப் பாடல் - பின்வருமாறு:

පහළ පොරණ ඉසිවර මුවෙනි මනත ද
දෙමළ සකු මගද නොහසළ සතට ද
පුවළ නිති සත ගතැ පද අරුත් ලෙ ද
සිහළ බසින් සැකෙවින් කියමි පද බැ ද
(5)

நீதி நூல்களை පුවළ නිති සත ගත - புவள நீதி ஸத கத- என்கிறார். அதாவது பெரிய நீதி நூல்கள்; அவற்றிலே சொல்லப்பட்ட கருத்துக் களை அப்படியே පද අරුත් ලෙද - பத அறுத் லெத - கருத்து மாறு படாமல் கூறுகின்றேன் என்கிறார். சிங்கள மொழியில் நன்றாகப் பாடுகிறேன் என்பதனையே සිහළ බසින් සැකෙවින් කියමි - ஸிஹல பஸின் ஸெகெவின் கியமி - என்கிறார். கம்பர் கூறியதுபோன்று அட்சர சுத்தமாகப் பாடுகிறேன் என்பதால் அவர் தழுவிய நூல் தமிழ் நீதிநூல் என்பது தெளிவாகிறது. பழைய முனிவர்கள் வாயில் தவழ்ந்த - அதாவது පහළ පොරණ ඉසිවර මුවෙනි මනතද - பஹள பொறண இஸிவற முவெனி மனனந்த என்கிறார். ஔவையார் போன்ற புலவர்களையே அவர் அவ்வாறு குறிப்பிடுகிறார். දෙමළ - தெமள - தமிழ், සකු - ஸக்கு - சமஸ்கிருதம், මගද - மகத - பாளி, නොහසළ- நொஹஸல - ஆகிய மொழிகள் தெரியாத - சிங்கள பாமர மக்களுக்காகச் சிங்கள மொழியில் சுபாஷித என்ற நீதிநூலைப் பாடுகிறேன் என்கிறார் அழகியவண்ணர். அவரது நீதிநூற் பாடல்கள் பல தமிழ் மூதுரை நல்வழிப் பாடல்களின் கருத்தையே கொண்டிருக்கின்றன. கவிஞர் போற்றிய கவி மரபும் கவிஞன் உள்ளத்தின் உண்மையும் ஒளிர்வதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V

# சிறந்த காவியங்கள், இலக்கியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது காவியங்கள்

தமிழிலே சங்ககாலந்தொட்டுத் தூதுப் பாட்டுக்கள் இருந்து வருகின்றன. **கிள்ளை விடுதூது, மான் விடுதூது, தமிழ் விடுதூது, நெஞ்சு விடுதூது, விறலி விடுதூது, கிருஷ்ணன் தூது** முதலிய பல தூதுக்கள் தமிழிலே உண்டு. தூது இலக்கியம் பிரபந்த வகைகளுள் ஒன்றாக வைத்து எண்ணப்படுகிறது. உயர்திணைப் பொருள்களையும் அஃறிணைப் பொருள்களையும் அன்பர்பால் தூது அனுப்பும் முறையில் அமைந்த பாட்டு தூதுப்பாட்டு ஆகும். தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளில் சிறந்த தூது காவியங்கள் உள. சிங்கள மொழியில் **செலலிஹினி சந்தேச** (பூவை விடுதூது), **கோகில சந்தேசம்,** (කෝකිල සන්දේශය). **ஹம்ஸ சந்தேசம்,** (හංස සන්දේශය). **கிரா சந்தேசம்,** (ගිරා සන්දේශය). என்பன சிறந்த தூது காவியங்களாக விளங்குகின்றன.

இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலே தமிழில் தூதுப்பாட்டுப் பாடப்பட்டிருக்கிறது. அப்பாட்டு **புறநானூறு** என்னும் சங்ககால நூலில் இடம்பெற்றிருக்கிறது. அப்பாட்டைப் பிசிராந்தையார் எனும் புலவர் பாடியிருக்கிறார். கோப்பெருஞ்சோழனுக்குப் பிசிராந்தையார் என்ற புலவர் ஓர் அன்னத்தைத் தூது அனுப்புவதாக அமைந்தது அப்பாட்டாகும்.

இதனைவிடப் பிற்காலத்தில் சத்தி முற்றப்புலவரின் **நாரை விடு தூதுப்** பாடல் நாடறிந்த பாடலாகும். புலவர் தமது மனைவியிடம் நாரையைத் தூது அனுப்புவதாக அமைவது அப்பாடலாகும். நாரையின் சிறப்பையும், புலவரின் துன்பமான நிலையையும், மனைவியின் மனநிலையையும், குடும்பத்தின் வறுமையையும், நாரை செல்லவேண்டிய வழிச் செலவையும் அழகாகச் சித்திரிக்கின்றது அப்பாடல்.

இனி அப்பாடலைப் பார்ப்போம்.

**"நாராய் நாராய் செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்து அன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்**
**நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரிஆடி**
**வடதிசைக்கு ஏகு வீராயின்**
**எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி**
**நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு பார்த்து இருக்கும் எம்மனை வியைக்கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே".

தூதுப்பாட்டின் இலட்சணத்தை இப்பாடல் ஒன்றே காட்டும். தூது சென்றவர் யார்? தூது விடுத்தவர் யார்? தூதின் நோக்கம் என்ன? தூது சென்ற வழி எது? தூதின் பயன் என்ன? இன்னோரன்ன தகவல்களை நாங்கள் அறிய முடிகிறது.

அடுத்து உவமை போன்ற அணிகள், இலக்கிய நயங்கள், வர்ணனைகள் என்பனவற்றையும் இரசிக்கலாம். நாரையின் அலகுக்கு பிளந்த பனங்கிழங்கை உவமையாகக் கூறுகிறார் புலவர். மேலாடையின்றிக் குளிரில் நடுங்கிப் படுந்துன்பத்தை பேழை - சிறு பெட்டியுள்ளிருக்கும் பாம்பிற்கு உவமையாகக் காட்டுகிறார். புலவரது வறிய வீடு நனை சுவர்க்கூரை கனைகுரல் பல்லி கொண்டது. ஓலைவீடு-மழை ஒழுக்கு-இவற்றால் சுவர் நனைந்திருக்கிறது. இந்த வீடு பல்லி வாசஞ் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கின்றது. பல்லியின் ஓசைக் குரலை இன்னது என்று மனைவி எதிர்பார்த்திருக்கிறாள். ஓட்டை ஓலைக் குடிலாயிற்றே. நாரை மேலே பறந்தவண்ணமே ஓட்டைகளூடாக வீட்டுள்ளே உள்ள புலவரின் மனைவியைக் காணவும் முடியும் என்ற நுட்பமான பொருளையும் பாட்டிலே காணலாம். இது புலவனின் வெறுங் கற்பனையன்று. அறிவியல் சார்ந்த கற்பனை. ஏழைப் புலவனை பாண்டியனுடைய மதுரையில் கண்டனம் என்று சொல் என நாரையிடம் கூறித் தூது விடுக்கின்றார். இதேபோல வடமொழியிலும் தூது காவியம் பிரபல்யம் பெற்று விளங்கியது.

சத்திமுற்றப் புலவர், எம்மூர்ச் சத்திமுத்த வாவியுள் தங்கி எம் மனைவியைக் கண்டு எமது நிலையைச் சொல்லு என்று நாரையிடம் கூறுகின்றார். இதுபோன்ற நிகழ்ச்சி ஒன்று மேக தூதத்தில் வருகிறது. மேகத்தைத் தூது போக்கியவன் (குபேரனின் ஏவற்காரனாகிய) இயக்கன் என்பவன். அவ்வியக்கன் மேகமாகிய தூதுவனிடம் தனது வீட்டடையாளம் கூறுகின்றான். வீட்டிலுள்ள வாவியையும் பின்வருமாறு வர்ணிக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

वापी चास्मिन्मरकतशिलाबद्धसोपानमार्गा
हैमैश्छन्ना[1] विकचकमलैः[2] स्निग्धवैदूर्यनालैः[3] ।
यस्यास्तोये कृतवसतयो मानसं संनिकृष्टं
नाध्यास्यन्ति[4] व्यपगतशुचस्त्वामपि प्रेक्ष्य[5] हंसाः ॥ १६ ॥

१ स्फीता. २ विकचकुसुमैः, कमलमुकुलैः. ३ दीर्घ. ४ ध्यास्यन्ति, ध्यायन्ति ५ प्राप्य.

குபேரனுடைய ஏவற்காரனாகிய என்னுடைய வீட்டிலே இருக்கும் வாவி-நீர்நிலை மிகவும் செழிப்பானது. அதில் எப்போதும் நீர் நிறைந்திருக்கும். தாமரைப்பூக்களும் மலர்ந்திருக்கும். எனவே, அன்னங்கள் அந்த வாவியை விட்டு விலக மனம் இல்லாமல் அங்கேயே இருக்கும். அதேபோல் புகழ்பெற்ற மானச வாவியும் சிறப்புப் பெற்றது. மேலும், மேகமாகிய உன்வரவால் மேலும் சிறப்புப் பெறும் என்ற கருத்தைக் **காளிதாச மகாகவி** அழகான முறையில், சொல்நயம் பொருள்நயம் மிளிர முன்கூறிய சுலோகத்தில் எடுத்து விளக்குகிறார்.

இந்தச் சுலோகத்தின் கருத்தைத் தமிழ்ப்பாடலாக நவாலியூர் சோ. நடராசன் பாடியிருக்கிறார். அப்பாடலையும் பார்ப்போம்.

**"மரகத மணியிற் செய்த படித்துறை மலியும் வாவி**
**உருகெழு வயிரத் தாளி லுயர்ந்தபொற் கமலம் பூக்கும்**
**மருவுநின் வரவு நோக்கி மானச மடுவை நீத்துக்**
**குருகினம் உவகை பொங்கிக் குலவிடும் மதுவுங் காண்டி"**

**(82)**

மேகமாகிய உன்வரவால் மானசவாவி நிறைய நீர் பெறலாம். நீர் நிறைந்த வாவிகளை நாடுதல் அன்னங்களின் சுபாவம். எனினும், இயக்கன் வீட்டிலுள்ள வாவிகளில் என்றும் குறையாது நீர் உண்டு. அதிலே பொற்றாமரைகளும் விரிந்திருக்கும். மரகத மணியால் அமைந்த படிகளையுடைய அந்த வாவியையும் காண்பாயாக.

சங்ககாலப் பாடல், பிற்காலச் சத்திமுற்றப் புலவர் பாடல், மேகதூதக் காவியப் பாடல் என்பவற்றைப்போல பரம்பொருளாகிய இறைவனை நாயகனாகவும் அவனது பக்தரை நாயகியாகவும் பாவித்துப் பாடிய தூதுப் பாடல்களைத் **தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி** என்பவற்றில் காணலாம். திருவாசகத்தில் தும்பியைத் தூது விடுகிறார் மாணிக்கவாசகர். "சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பி" என்று பாடுகிறார். சிங்கள இலக்கியத்தின் பொற்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் போற்றப்படும் கோட்டைக் காலத்தில் ஸ்ரீ இராகுல தேரர் பாடிய **செலலிஹினி சந்தேசய, (සැළලිහිණි සන්දේශය).** **பூவை விடுதூது** ஒரு சிறந்த தூது காவியமாகும். இத்தூது காவியம் அரசனது தலை நகராகிய ஜயவர்த்தனபுரத்தையும் அதைச் சூழ்ந்த தென்னிலங்கைப் பகுதியையும் அழகுற வர்ணிக்கிறது. தமிழ்க் காவியங்களில் வரும் வர்ணனைகள் பல உள. ஆறாவது பராக்கிரமபாகு மன்னனின் மகள் உலகுடையதேவி. அவள் அமைச்சராகிய நல்லூர்த் துணைவனை மணந்திருந்தாள். இவ்விருவருக்கும் ஆண்மகன் பிறந்து அரச பரம்பரையை விளக்க வேண்டும். இப் பிரார்த்தனையை உள்ளடக்கியது இக்காவியம். புலவர் களனியிலுள்ள இராஜமகா விகாரையில் அமர்ந்திருக்கும் விபீடணக் கடவுளிடம் செலலிஹினியை, பூவையை - (நாகணவாயை)த் தூதாக அனுப்புவதாக அமைவது இக் காவியம். செலலிஹினி காவியத்தின் வாயிலாகத் தமிழர்கள் வாழ்ந்த இடங்கள், வழிபட்ட கோவில்கள், பண்பாடுகள் என்பனவற்றை அறியலாம்.

இத்தூது காவியத்தின்படி சயவர்த்தனபுரத்தில் முருகவேளுக்குக் கோட்டமும் சிவபெருமானுக்குத் திருக்கோயிலும் அமைந்திருந்தன. காலையில் இக்கோவில்களில் தேவகன்னியர் தேவார திருவாசகம் பாடி, நடனமியற்றி அஞ்சலி செய்தனர். ஏனைய ஆகம வைதீகப் பூசை முறைகளும் நடைபெற்றன. இவற்றைப் பின்வரும் கவி விளக்குகிறது:

කළුවැල් කපුරු දුමැ තුළ ලෙළෙන දද පෙ ළ
සුවිසල් මිහිඟු සක්සන් මිණි හඬ වත ළ
කරළලොල් සතන් පවසන තියු ගී දෙම ළ
මනකල් ඉසුරු කෝවිලැ ලගිනේ ලක ළ
(22)

இப்பாடலில் அகிற்புகை, கர்ப்பூரப்புகை வீசுவது வர்ணிக்கப்படுகிறது. கொடிகளும் அசைகின்றன. முரசும் சங்கும் ஒலிக்கின்றன. அவை மேகம்போல முழங்குகின்றனவென உவமைநயம் விளங்கக் கூறுகிறார். **මිණිහඬ** - மிணிஹண்ட அதாவது மணிகள் ஓசை செய்கின்றன. பண்ணமைந்த பாடல்களை அன்பர்கள் பாடுகிறார்கள். இவையெல்லாம் **මනකල් ඉසුරු කෝවිලැ** - மனகல் ஈசுறு கோவிலே - அழகுடன் விளங்கும் மகேசுவரன் கோவிலிலே திகழுகின்றன. **ලගිනේ-තෝ** -லகினே தோ-பூவையாகிய நீ சிறிது பொழுது தங்குவாய் என்று மிக அழகாக வர்ணிக்கிறார் புலவர். இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் நவாலியூர் சோ. நடராசன் அவர்கள். அந்த நூலின் பெயர் பூவை விடுதூது. இப்பொழுது இடம்பெற்ற சிங்களப் பாடலைப் பூவை விடுதூதில் இவ்வாறு காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகிற்புகை கருப்பூ ரத்தி னளாவிய புகையி னோடு
துகிற்கொடி நிரைகள் தூங்கத் துவன்றிடு முரசுஞ் சங்கும்
முகிற்குல மென்ன வேங்க முதிர்மணி யிரட்ட வன்பு
முகிழ்த்திடத் தமிழ்ப்பா வோது முக்கணன் கோயில் சேர்வாய்"

(24)

தமிழ்ப்பா ஓதும் முக்கணன் கோயில் என்ற அடியால் மகேசுரன் கோவிலில் விளங்கிய சிறப்பை இப்பாடலிலும் காண்கிறோம். இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் சயவர்த்தனபுரத்தில் விளங்கிய சிவபெருமான் ஆலயத்தைச் செலலிஹினி சந்தேசம் சிறப்பித்துக் கூறுகிறது. பாடும் ஓசைநயமும் பொருள்நயமும் உவமைநயமும் மிக்கதாகப் பாடப்பட்டிருக்கிறது. தமிழ்மொழியை மட்டுமன்றி இந்துப் பண்பாட்டையும் நன்கு அறிந்தவராகக் கவி ஸ்ரீ இராகுல தேரர் விளங்குகிறார்.

ஆறாவது பராக்கிரமபாகு மன்னனின் நகருக்குத் தெற்கே குமரன் கோவில் - முருகன் கோவில் இருந்தது. அதனையும் செலலிஹினி சந்தேசம் அழகாக வர்ணிக்கிறது. இப்பாடலைப் பார்ப்போம்.

ගනේ මිණි බැබළි කිරණෝ'වි සත පාය
රනේ යට'ග සැවුලි'ඳු දද ගල පාය
අනේ ලකර කළ පුරා අප නර පාය
පෙනේ දකුණෑ මහසෙන් දෙව් රද පාය

(26)

இப்பாடலில் **මහසෙන්** - மஹஸென் என்றது மகா சேனையையுடைய கதிர்காமக் கந்தனை. **දෙව්රද පාය** - தெவிறத பாய என்றதனால் குமரக் கோட்டம் என்பது விளங்குகிறது. **සැවුල් දද** -செவுல் தத என்பதனை சேவற் கொடியினைச் சிறப்பாக **සැවුලිඳු දද** - செவுலிந்து தத எனப் புலவர் கூறுகிறார். மேலும் **සැවුල්** - செவுல் என்ற சிங்களச் சொல் சேவல்- சாவல் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்த சொல்லாகும்.

இனிப் பூவை விடுதூதில் வரும் இப்பாடலின் மொழிபெயர்ப்புப் பாடலைப் பார்ப்போம்.

"செங்கதிர்க் கற்றை போலத் திகழ்ந்திடு மணியின் கூட்டம்
தொங்குபொற் கால்கள் தோறும் சேவலங் கொடிகள் தூங்க
எங்கணும் அணிகள்கால எழுந்திடு குமரன் கோட்டம்
நங்குல மன்னர்வாழு நகர்ப்புறத் தென்பாற் காண்டி!"

இவ்வாறு தமிழ்மக்கள் கலாசாரத்துக்கும் சிங்கள மக்கள் கலாசாரத்துக்கும் சமய, மொழி அடிப்படையிலுள்ள நீண்ட தொடர்பைத் தூது காவியங்கள் தெளிவுபடுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிமேகலை

தமிழ் இலக்கிய வானில் திருக்குறள் ஒரு கதிரவன். மணிமேகலை ஒரு பால் நிலா எறிக்கும் தண்மதியம். சிலப்பதிகாரம் பன்மணி ஒளிவீசும் ஒரு வானவில், சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் சேணில் நிலவும் ஒளிக்கோளங்களாகிய விண்மணிகள் என்று பன்மொழிப் புலவர் ஒருவர் (கா. அப்பாதுரையார்) கூறினார். ஐம்பெருங்காப்பியங்களாகிய **சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** ஆகியன தமிழ் அன்னையை ஐந்து அணிகலங்களாக அலங்கரிக்கின்றன. இவற்றுள் சிந்தாமணி தலையணி. சிலப்பதிகாரம் சிலம்பாகிய கால் அணி. மணிமேகலை - மேகலையாகிய இடையணி. வளையாபதி கையணி. குண்டலகேசி - குண்டலமாகிய காதணி. இன்று வளையாபதி, குண்டலகேசி என்பன நூல் வடிவில் இல்லாதன; இவை பௌத்த சமய நூல்கள் எனக் கருதப்படுகின்றன. வழக்கிலுள்ள மணிமேகலையும் பௌத்த மதக் கொள்கைகளை விளக்கும் சிறந்த தமிழ்க் காப்பியமாகும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தொடர்புள்ள இரட்டைக் காப்பியங்கள். சிலப்பதிகாரத் தலைவனாகிய கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் கதையைக் கூறுவது மணிமேகலை எனும் காப்பியமாகும். மேலும், மணிமேகலையில் பௌத்தமதத் தத்துவங்கள் அழகாகத் தமிழில் விளக்கப் பட்டிருக்கின்றன. பௌத்த மதம் பன்னிரண்டு நிதானங்களை உடையது. நிதானம் என்பது காரணம் ஆகும். இந்நிதானங்களைத் தமிழில் பன்னிரு சார்புகள் என்பர். இச்சார்புகளை அறுத்து வீடு பெறுவதே பௌத்தர்களின் நிர்வாண மோட்சமாகும். இச் சார்புகளைப்பற்றித் தெய்வத் திருவள்ளுவர் சொல்வதனைப் பார்ப்போம்.

> **"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்**
> **சார்தரா சார்தரும் நோய்"**
>
> **(மெய்யுணர்தல் – 9)**

எல்லாப் பொருளுக்கும் சார்பான செம்பொருளை உணர்க. செம்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு. அச்செம்பொருளே முத்தி நிலைக்குக் காரணம். செம்பொருளை உணர்ந்தால் பற்றுக்கெடும். அப்போது சார்வதற்குரிய துன்பங்கள் வந்து அடையா. மேலே குறிப்பிட்ட திருக்குறள் பாடலின் சிங்கள மொழி பெயர்ப்பினையும் பார்ப்போம்.

හැසට මැ පිහිට වන – මහසත හැදිනැ ලොබ හළ
දන හට බැඳුම් හැම බිඳැ – දුක් සිඳැ දැකියැ හැකි මොක්

(– සිරිගිය – ශ්‍රී චාල්ස් ද සිල්වා)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறளில் 'බැඳුම් හැම බිඳැ' என்கிறார். பற்றுக்கள் எல்லாம் அறுந்தால் என்பது அதன் பொருளாகும். நோய்-துன்பம் என்பதனை 'දුක්' என்றே குறிப்பிட்டு காணக்கூடியது என்ன? ஒன்றுமில்லை என்று அழகாகக் குறிப்பிடுகிறார். பிறவித்துன்பத்திற்கு அறியாமை காரணம் என்றதை திருவள்ளுவரும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலே கூறிய பன்னிரு சார்புகளும் பாளி மொழியில் - விநய பிடகத்தில் எவ்வாறு கூறப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்வோம். பாளி மொழியிலுள்ள அதே கருத்துக்களை மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் எவ்வாறு தமிழிற் பாடியிருக்கிறார் என்பதனையும் காண்போம். பன்னிரு சார்புகளும் பிறவாமையாகிய இன்பத்திற்குக் காரணங்களும் பாளி மொழியில் பின்வருமாறு கூறப்படுகின்றன:

අවිජ්ජායතවේව අසෙස
විරාග නිරෝධා, සංඛාර නිරෝධා
විඤ්ඤාණ නිරෝධෝ, විඤ්ඤාණ නිරෝධා, නාමරූප නිරෝධෝ නාමරූප
නිරෝධා, සළායතන නිරෝධෝ සළායතන නිරෝධා, ඵස්ස නිරෝධෝ
ඵස්ස නිරෝධා, වේදනා නිරෝධෝ වේදනා නිරෝධා, තණ්හා නිරෝධෝ
තණ්හා නිරෝධා, උපාදාන නිරෝධෝ උපාදාන නිරෝධා, හව නිරෝධෝ
හව නිරෝධා, ජාති නිරෝධෝ ජාති නිරෝධා ජරා මරණං සෝක පරිදේව
දුක්ඛ දෝමනස්ස පායාසං නිරුජ්ඣන්ති එව මෙතස්ස කෙවලස්ස
දුක්ඛන්ධස්ස නිරෝධෝ හෝතීති.

அவிஜ்ஜா யதவேச அஸேஸ
விராக நிரோதா ஸங்க்கார நிரோதோ
ஸங்க்கார நிரோதா விஞ்ஞான நிரோதோ
விஞ்ஞான நிரோதா நாமரூப நிரோதோ
நாமரூப நிரோதா ஸளாயதன நிரோதோ
ஸளாயதன நிரோதா பஸ்ஸ நிரோதோ
பஸ்ஸ நிரோதா வேதனா நிரோதோ
வேதனா நிரோதா தண்ஹா நிரோதோ
தண்ஹா நிரோதா உபாதான நிரோதோ
உபாதான நிரோதா பவ நிரோதோ
பவ நிரோதா ஜாதி நிரோதோ
ஜாதி நிரோதா ஜராமரணம் ஸோக
பரிதேவ துக்க தோமனஸ்ஸ பாயாஸம் நிருஜ்ஜந்தி

இதனை மொழிபெயர்த்துச் சாத்தனார் மணிமேகலையிற் பின்வருமாறு பாடியிருக்கிறார். அவிஜ்ஜா என்பதைப் பேதமையென்றே ஆரம்பிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேதமை மீளச் செய்கை மீளும்**
**செய்கை மீள உணர்ச்சி மீளும்**
**உணர்ச்சி மீள அருவுரு மீளும்**
**அருவுருமீள வாயில் மீளும்**
**வாயில் மீள ஊறு மீளும்**
**ஊறு மீள நுகர்ச்சி மீளும்**
**நுகர்ச்சி மீள வேட்கை மீளும்**
**வேட்கை மீளப் பற்று மீளும்**
**பற்று மீளக் கருமத் தொகுதி**
**மீளும் கருமத் தொகுதி மீளத்**
**தோற்றம் மீளும் தோற்றம் மீளப்**
**பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்**
**சாக்காடு அவலம் அரற்றுக் கவலை**
**கையாறு என்றிக் கடையில் துன்பம்**
**எல்லாம் மீளும்**

**(மணி. 30. 119–133)**

அவிஜ்ஜா-பேதமை, ஸங்க்கார-செய்கை, விஞ்ஞான-உணர்வு, நாமரூப-அருவுரு, ஸளாயத்தனா-வாயில், பஸ்ஸ-ஊறு, வேதனா-நுகர்வு, தண்ஹா - வேட்கை, உபாதான-பற்று, பவம்-பவம், ஜாதி-தோற்றம், ஜரா மரணம்- வினைப்பயன், - மூப்புச் சாக்காடு என்று பௌத்த தத்துவத்தையே சிறந்த சமய இலக்கியமாக - காப்பிய இலக்கியமாகத் தமிழில் படைத்திருக்கிறார் மணிமேகலை ஆசிரியர் சாத்தனார்.

உயிர்கள் வாழ்வதற்கு மழை வேண்டும். மழையின்றேல் நீர் இல்லை; பயிர் இல்லை; நீர் இல்லை. எனவே, உயிர்கள் வாழ முடியாது. இத்தகைய உலகத்து உயிர்களெல்லாம் மண்ணாள் வேந்தனில் தங்கியிருக்கின்றன என்ற அருமையான கருத்தைக் காரண காரியங்களுடன் சாத்தனார் மணிமேகலையிற் பாடியிருக்கிறார். மணிமேகலையில் துயிலெழுப்பு காதையில் வரும் பாடற்பகுதி பின்வருமாறு:

**கோல் நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்**
**கோள் நிலை திரிந்திடிற் மாரிவறம் கூரும்**
**மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை**
**மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்**

**(மணி–துயிலெழுப்பிய காதை – 7)**

அரசனது செங்கோல் நிலை திரிந்து போயினால் கோள்கள் நிலைமாறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள்களின் நிலை திரிபடைந்தால் மழை பெய்யாது. மழையில்லா விட்டால் உலகத்து உயிர்கள் வாழமாட்டா; அழிந்துபோகும் மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் என்று கருதிக் காவல்செய்ய வேண்டிய மன்னவனின் தகைமையும் இல்லாமற் போய்விடும்.

'மணிமேகலை எனும் மாதவி மகள்மீது வைத்த தீய விருப்பத்தைக் கைவிடுவாயாக' என்று மணிமேகலா தெய்வம் உதயகுமாரன் என்ற அரசகுமரனுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். இப்பாடலில் வரும் கருத்தினைச் சிங்கள காவியமாகிய **புதுகுண அலங்காரத்தில்** (බුදුගුණාලංකාර) காண்கிறோம். இப்புதுகுண அலங்காரத்தைப் பாடியவர் வீதாகம மைத்திரிய தேரர் (වීදාගම මෛත්‍රිය හිමි) இத்தேரரும் கோட்டைக்காலத்தை அலங்கரித்த சிறந்த பண்டிதர். வீதாகம மைத்திரியரும் தமிழிலே பாண்டித்தியம் பெற்றவர். அவர் பாடிய **புதுகுண** அலங்காரவில் வரும் பாடல்கள் பின்வருமாறு:

මෙලෙසින් අදහම ට
තිරිඳුන් ලොව පැමිණිවි ට
එරජුන් නතු රට ට
හමයි විසමව පවන් දැඩි කො ට

(107)

රිවි සඳ හද නො සේ
යන මග නොයති පෙර සේ
එසුරන් වත ඒ සේ
නැතිව වැසි සස් කලට නොපැ සේ

இப்பாடல்களில், நாட்டை ஆளுகின்ற மன்னன் தர்மத்தை - அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அறநெறியில் ஆட்சி செய்யாவிட்டால் அவனுடைய நாட்டிலே வீசுகிற காற்றும் முறைமாறிப் பலமாக வீசும். சூரிய சந்திரரும் வழிதவறிச் செல்வர். 'රිවි සඳ යන මග නොයති'- ரிவி சந்த யன மக நொயதி - என்றார். அதுமட்டு மல்லாமல் மழையின்றித் தானியங்கள்-பயிர்கள் காலாகாலத்தில் அதாவது (කලට නො පැසේ- கலட்ட நொ பெசே) முற்றி விளைந்து பயன்தரமாட்டா என்று தேரரும் சொன்னயம் பொருணயம் விளங்க அழகாகக் கூறுகிறார்.

கோல் நிலை திரிந்திடில் - என்ற பகுதியை மணிமேகலா சம்பு (මණිමේඛලා චම්පූ - மணிமேகலா சம்பு) என்ற உரையிடையிட்ட செய்யுள் நூலில் பண்டித ஹிஸ்ஸெல்ல தர்மரத்தின தேரர் பாடியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்புப் பாடலையும் பார்ப்போம்.

රදකුල කොතබු මිණිවත් රජ කුමා　　රය
රද දම් බිදෙත් ගහකැත් සෙද සවා　　රය
මාරුව දිවෙයි ඉත් වැසිපල හමා　　රය
ඉත් ලෝසත නැසෙයි දුක් විඳ දිවා　　රය

மன்னன் அறநெறி தவறினால் ගහකැත්–ග්‍රහරාසින්ගේ - கஹகென் அதாவது கிரகங்களின் - கோள்களின் සවාරය–සඤ්චාරය - சஞ்சாறய-சஞ்சாரம், මාරුව- மாறுவ-மாறும் என்று மணிமேகலையிற் கூறியவாறு அழகாகக் கூறுகிறார்.

இலக்கிய நயமும் காப்பியச் சிறப்பும் கொண்ட மணிமேகலை காப்பியத்தை - பொதுமக்கள் காப்பியத்தை சாத்தனார் பாடியிருக்கிறார்.

**தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்**
**பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றதும்**
**இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப**
**வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்**
**மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு**
**ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்**

**(மணிமேகலை)**

சொல்வளமும் பொருள்வளமும் நிறைந்தது மணிமேகலை எனும் காப்பியம். மணிமேகலையின் துறவு என்பதனைக் குறித்தே இந்நூல் பாடப்பட்டது. இளங்கோ அடிகள் சிலப்பதிகார நூலைச் செய்தவர். கூலவாணிகன் சாத்தன் சொல்ல இளங்கோ அடிகள் கேட்டனர் என்ற பழைய வரலாறும் மணிமேகலையின் சிறப்பைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY

# சிலப்பதிகாரமும் பத்தினி வழிபாடும்

தமிழிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் சிறந்த காப்பிய இலக்கியமாகத் திகழ்வது சிலப்பதிகாரம். ஒரு காவியத் தலைவியாகிய கண்ணகி தெய்வத்தன்மை பெற்று, கண்ணகி அம்மனாக விளங்கும் பெருமையும் இக்காவியத்திற்குரியதாகும். இக்கதை பத்தினி காவியமாக, பத்தினி தெய்யோவாகச் சிங்கள பௌத்தர்களிடையேயும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. கண்ணகியின் கற்பும்-பதிவிரதா தர்மமும் தெய்வீகத் தன்மையும் பௌத்த மக்களின் பக்தியை வளர்த்து நிற்கிறது. கண்டிப் பெரஹறா போன்ற பௌத்த விழாக்களில் பத்தினி தெய்யோவும் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இலங்கை வரலாற்று நூல்களாகிய இராஜாவளி, கஜபா கதாவ, இராஜரத்னகர ஆகிய சிங்கள நூல்களும் இலங்கையிலே பத்தினி வழிபாடு தோன்றிய வரலாற்றைக் குறிப்பிடுகின்றன.

சேரன்செங்குட்டுவன் சேர நாட்டில் கண்ணகிக்கு விழா எடுத்தான். கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும் அங்குச் சென்று விழாவைச் சிறப்பித்தான். பின்னர் கயவாகு வேந்தன் ஆடி மாதந் தோறும் தலைநகரிற் பத்தினிக்குப் பெருவிழா எடுத்துவந்தான். இதுவே கண்டி மாநகரில் இன்று நடைபெறும் 'எசல பெரஹறா' என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எசல என்பது ஆடி மாதத்தைக் குறிக்கும். 'ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடிவிழா' பற்றிச் சிலப்பதிகாரமும் கூறுகிறது.

கஜவாகு காவியத்திலும் (ගජබා කාව්‍යය) சிலப்பதிகாரக் கதையின் சாயலைக் காணலாம். கஜபாகு காவியத்தில் மன்னன் கஜபாகு சோழ நாட்டிற்குச் சென்றிருந்த வரலாறு கூறப்படுகிறது. அம்மன்னனின் படைவீரனாகிய நீலன், சோழ நாட்டை வென்ற வரலாறும் வர்ணிக்கப்படுகிறது. கயபாகு காவியம் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உடுவே கிவியற என்பவரால் (උඩුවේ කිවියර) பாடப்பட்டது. பத்தினி வழிபாட்டை இலங்கைக்குக் கொண்டுவந்த கயவாகு மன்னனின் தொடர்பு சிலப்பதிகார காவியத்திலும் வருகிறது. இவ்வரலாற்று உண்மையை வலியுறுத்தும் சிங்களப் பாடலை கஜவாகு காவியத்தில் பார்ப்போம்.

පෑ බල සොළී පු ර
කෝළහල කර එතුව ර
තිලයෝදය ති ර
ලැබී රජුගෙන් තොයෙක් තනතු ර



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ நாட்டை வென்று இலங்கைக்கு மீண்ட நீலனுக்கு மன்னன் கஜபாகு உயர் பதவிகளையும் பரிசுகளையும் கொடுத்தானாம். 'நிந்தகம்' வழங்கினானாம்.

சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தை-நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனச் சுப்பிரமணியபாரதியார் புகழ்ந்து பாடும் காப்பியத்தைப் பாடியவர் இளங்கோவடிகள். சிங்கள நாட்டுக் கயவாகு மன்னனும் மற்றைய அரசரும் கண்ணகி விழாவிற் கலந்துகொண்டமையை இளங்கோவடிகள் பின்வருமாறு கூறுகிறார்.

**வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி**
**உலக மன்னன் நின்றோன் முன்னர்**
**அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்**
**பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்**
**குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்**
**கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்**
**எந்நாட் டாங்கண் இமைய வரம்பன்இந்**
**நன்னாட் செய்த நாளணி வேள்வியில்**
**வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்**
**தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்**

**(சிலம்பு. வரந். 155–164)**

இப்பாடலில் கூறப்பட்ட கயவாகு மன்னன் அநுராதபுரியைத் தலை நகராகக் கொண்டு கி. பி 2 ஆம் நூற்றாண்டிலே இலங்கையை ஆட்சி செய்தவன். கயவாகு மன்னன் கொண்டுவந்த கண்ணகி வழிபாடு மட்டக்களப்புப் பகுதியில் பல இடங்களில் பரவியிருக்கின்றது. கோயில் உள்ள ஊர்களிலெல்லாம் அங்கங்கே கண்ணகியம்மன் குடிபுகுந்திருக்கிறாள். **மட்டக்களப்புத் தமிழகம்** என்னும் நூலில் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் இப்பழைய வரலாற்றினை விரிவாக விளக்கியிருக்கிறார்.

கண்ணகை அம்மன் வழிபாடு தொடர்பாக இலங்கையில் தோன்றிய காவியம் **கண்ணகி வழக்குரையே.** மட்டக்களப்புப் பகுதிகளில் **கண்ணகி வழக்குரை** என வழங்குகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் **கோவலன் கதை** என வழங்குகிறது. இவை வருடந்தோறும் வைகாசித் திங்களில் கோவில்களில் படிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் சிலப்பதிகாரத்தைப் பின்பற்றியபோதிலும் பெரும்பாலான இடங்களில் கதை விலகிச் செல்கிறது. கதையும் மதுரையை எரிப்பதோடு நிறைவுபெறுகிறது. இவ்வகையான ஒருமைப்பாட்டினைச் சிங்கள நாடோடிக் காவியமான **(පාලඟ හෑල්ල)** பாலங்க ஹேல்லவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(පත්තිනි හෑල්ල) பத்தினி ஹேல்லவிலும் காண்கிறோம். சிங்கள காவியத்தில் கோவலன் பாலங்க என அழைக்கப்படுகின்றான். கண்ணகி-பத்தினி என அழைக்கப்படுகிறாள். முதலில் வழக்குரை காதையில் வரும் ஒரு பாடலைப் பார்ப்போம். கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து செல்கிறான். மாதவி துன்பப்படுகிறாள். மாதவி பட்ட காதற்துன்பம் பின்வருமாறு பாடலில் வர்ணிக்கப்படுகிறது.

**கானிரங்கு தொடைமார்பன் காவிரிசூழ் வளநாட்டில்**
**வானிரங்கு புகழ்கொண்ட மாசாத்தர் கோவலர்க்காய்த்**
**தேனிரங்கு மொழிமடவார் சேயிழையார் மாதவியார்**
**தானிரங்கு கதைபாடத் தரணியுள்ளோர் கேளுமெல்லாம்**

இது இலக்கியச் சுவைநிறைந்த பாடல்.

வழக்குரை காதை கண்ணகி தேவிக்கும் பாண்டிய மன்னனுக்கும் நடந்த நீதிப் போராட்டத்தைக் கூறுகிறது. மதுரை மாநகரில் கோவலன் கொலையுண்டு இறக்கிறான். செய்திகேட்ட கண்ணகியின் மனத்தில் சோகம் எழுகிறது; நெஞ்சிலே கோபக்கனல் எழுகிறது. நாக்குழறுகிறது; பதைபதைக்கின்றாள். அவளது கண்களில் பாண்டிய மன்னனின் அரண்மனை எவ்வாறு காட்சியளிக்கிறது என்பதைப் பின்வரும் வழக்குரை காதைப் பாடல்கள் காட்டுகின்றன.

**கண்டனளே நெஞ்சத்தே கடுங்கோபங் கனலெழவே**
**தொண்டையது பதைபதைக்கத் துடியிடையா ளிதுரைப்பாள்**
**கொண்டலெனக் கொடைபடைத்த கோவலரைக் கள்வனென்று**
**விண்டுரையால் வெட்டுவித்த மீனவன்றன் வாசலிதோ**
**(33)**

**மீனநெடுங் கொடிவிளங்க வென்றிமன்னர் புடைசூழச்**
**சோனைமத கரிபரியும் துங்கமணித் தேர்ப்படையும்**
**தேனமரும் தொடை புனைந்து செங்கனக முடியிலங்க**
**மானபங்கம் பாராத வழுதிதிரு வாசலிதோ**
**(34)**

மீனவன் தன்வாசல் வழுதி திருவாசல் என்பன பாண்டிய மன்னனின் அரச வாயிலைக் குறிக்கின்றன. இப்பாடல்கள் கண்ணகி தேவியின் வீரக்கற்பினை எமக்குத் தெளிவுறுத்துகின்றன.

வழக்குரை காதையில் வரும் இக்காட்சியை, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் இவ்வாறு காட்டுகிறார். கணவனாகிய கோவலன் கொலையுண்டமையால் வருந்திய கண்ணகி பாண்டிய மன்னனின் வாயிற்காவலனை விளித்துப் பின்வருமாறு கூறுகிறார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாயிலோயே வாயிலோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே"

(சிலம்பு)

பாடலிலேயே கற்பின் கனல் வீசுகிறது. பொன் செய்கொல்லன் தன் சொற்கேட்ட மன்னன் அல்லவா அவன். மன்னன் செங்கோல் தவறியது; நீதி நிலை சாய்ந்தது. அதனால், இறைமுறை பிழைத்தோன் ஆயினான். அத்தகைய மன்னனது வாயிலைக் காப்பவனே என்று மனத்தில் அனல் கக்கக் கண்ணகி பேசுகிறாள். அவளது வழக்குரை பின்னர் மன்னனையும் 'யானோ அரசன் யானே கள்வன்' என்று கூறி மயங்கி விழவைக்கிறது.

இனி, சிலப்பதிகாரக் கதையின் செல்வாக்கினைப் பெற்ற சிங்கள பாலங்க ஹேல்லவில் (හැල්ල) நாட்டார் கவிதையில் கூறப்பட்ட பாங்கினைப் பார்ப்போம்.

රැකවල් ලා තව තරකරව න්නේ
කොතන සිටද ආවේ අහප න්නේ
හිමියන් මැරුවේ කව්ද බොල න්නේ
ජී වග ඇසුමට ආමි කිය න්නේ

(304)

குற்றமற்ற என் கணவனைக் கொன்றவர் யார்? அக்கொலைக்குப் பொறுப்பானவர் யார்? இதனைக் கேட்கவே வந்தேன்; හිමියන් මැරුවේ කව්ද? - ஹிமியன் மெறுவே கவ்த என்று வினாவுகிறாள் கண்ணகி. பாண்டிய மன்னனிடம் கண்ணகி தன் பெயரைக் கூறுகிறாள். கொலையுண்ட கோவலன் மனைவி என்பதையும் கூறுகிறாள். கோவலன் கள்வன் அல்லன். அவன் என் காற்சிலம்பையே விற்க மதுரை வீதிக்கு வந்தான். இதோ எனது மற்றைய சிலம்பு என்று வாதாடினாள். எனது அரசி கோப்பெருந்தேவியின் சிலம்பின் பரல்கள், முத்துக்கள் என்றான். அப்போது கண்ணகி எனது சிலம்பின் பரல்கள் மாணிக்கக் கற்கள் என்றாள். கண்ணகி தனது சிலம்பை அரசன் முன்னிலையில் உடைத்து உண்மையை நிறுவினாள். பாண்டிய மன்னன் தன்நீதி பிழைத்தது என்று மயங்கி வீழ்ந்தான். இதனைச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் பின்வருமாறு கூறுகிறார்:

**கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப**
**மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பத்தினி ஹேல்ல (හෑල්ල) - ஆசிரியர் கூறும் சிங்கள நாட்டார் பாடல் பின்வருமாறு:

මෙලොව මෙලෙස වූ කල සේ පිට පිට එන ලෙස සෙලවූ නි
පත්තිනි තම බල පෑ සේ සලඹ බිඳි වැගිර එයි නි
රුවන් ගිගිරි තොලහල සේ ඉන්ම නික්ම රජුන් වැදූ නි
ගැසූ සලඹ මිහිකල සේ හකු පිට වැදි ලේ සෙලවූ නි

(99)

கண்ணகியின் காற்சிலம்பிலிருந்து தெறித்த மாணிக்கக் கற்களை (රුවන්) என்கிறார். සලඹ - ஸலம்ப என்பது சிலம்பு. மாணிக்கக் கற்கள் தெறித்து வாயில்-கொடுப்பில் விழுந்தன. அம்மட்டன்றி இரத்தமும் பாய்ந்தது என்பதை (හකු පිට වැදි ලේ සෙලවුනි -ஹக்கு பிட்ர வெதி லே ஸெலவுனி) என்று அழகாகவும் நயமாகவும் பாடியுள்ளார்.

பாலங்க ஹேல்லவும் பத்தினி ஹேல்லவும் கண்ணகி மதுரை மாநகரைத் தீமூட்டிய செய்தியுடன் முடிவடைகின்றன. மட்டக்களப்பில் வழங்கும் வழக்குரை காதையின் கதையும் அவ்வாறே முடிவடைகிறது. எமது நாட்டில் பத்தினி தெய்வம் பரவித்தொழும் 'தெய்யோ'வாக, அருள்பொழியும் அம்மனாக விளங்குகிறது. மழைவளம் சுரப்பதாக; வளர்பயிர் செழிப்பதாக; வெம்மை தணிவதாக; நோய் நொடி, துன்பம் நீங்குவதாக என வாழ்த்துகின்றன நூல்கள்.

වැසි වැසපුවා සේ
වැසි ගිනි නිවුවා සේ
ලෙඩ දුරු උනා සේ
රකින් බෝවා කලක් සැප සේ

(145)

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்"

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குத்தில காவியம் (ගුත්තිල කාව්‍යය)

கவிதைத் திருநாடாகிய இலங்கை நாட்டில் தமிழ் சிங்கள காவியங்களுக்குக் குறைவில்லை. சிங்களத்தில் காவியஞ் செய்தோர்களில் நால்வர் மேம்பட்டு நிற்கின்றனர். அவர்களுள் '**கவி சிலுமின**'வின் ஆசிரியர் 2 ஆம் பராக்கிரமபாகு வேந்தன் மிகச் சிறந்தவர் என்பர். எனினும், அக்கவிஞனின் படைப்பு, கற்றோர்க்கே எளிதில் விளங்கும். **காவியசேகரத்தைப் படைத்த ஸ்ரீ இராகுல தேரர், மயூர சந்தேசத்தைத் தந்த கவீஸ்வரர், குத்தில காவியம் படைத்த வெத்தாவ** ஆகியோர் மற்றைய சிறந்த புலவர்களெனப் போற்றப்படுகின்றனர். காவியசேகரம் பெயருக்கேற்பச் சிங்கள இலக்கியத்தின் மணிமுடியாக விளங்குகிறது. வடமொழிக் காவிய விதிகளுக்கமைய எழுதப்பட்டது இந்நூல். **குத்தில காவியம்** பொதுவாகக் குத்திலய என வழங்கப்படும் காப்பியமாக விளங்குகின்றது. இக்காப்பியம் சிங்களக் கவிதை நேயர்களின் வற்றாத மகிழ்வூற்றாகும். கவியிசை அழகு மிக்கது; கருத்தியற் புதுமை நிறைந்தது; சொற்சிறப்பு வாய்ந்தது; யாப்புத்திறன் படைத்தது. இத்தகைய காப்பியத்தின் கதைப்போக்கைச் சற்றுச் சிந்திப்போம்.

குத்திலன், பிரமத்த வேந்தனின் அரசவைப் பாடகன். அவனிடம் இசை கற்றுக்கொள்ள மூசிலன் என்னும் உதேனி நகர இளைஞன் வந்தான். குத்திலனின் குருட்டுப் பெற்றோருக்கு மூசிலனிடம் விருப்பம் பெருகியது. இப்பெற்றோர்களின் கட்டாயத்தின் பேரில் குத்திலன் மூசிலனுக்கு வீணை பயிற்றுவித்தான். இசை நுணுக்கம் எல்லாவற்றையும் கற்றுக் கொண்ட மூசிலன் தலை மாணாக்கன் ஆனான். குத்திலனின் உதவியோடு வேத்தவையிலும் இடம் பிடித்துக் கொண்டான். காலப்போக்கில் ஆசிரியனாகிய குத்திலனுடன் போட்டி போடவும் ஆரம்பித்தான். குருவே தெய்வம் என்பதை மறந்தான். இக் குருத்துரோகச் செயலை அறிந்த குத்திலன் மனவேதனையுற்றான். இந்திரன் குத்திலனின் கதி கண்டு இரங்கினான். குத்திலன் இசைப்போட்டியில் மூசிலனைத் தோற்கடிக்க உதவி செய்தான். இந்திரன் அருளால் வாரணாசி மக்கள் அரம்பையரின் நடனம் ஒன்றையும் கண்டுகளித்தனர். போட்டியின் இறுதியில் தேவமகளிர் முன்னிலையில் வீணை இசை பொழிய இந்திரபுரிக்கு வருமாறு குத்திலனை இந்திரன் அழைத்தான். இதுதான் காப்பியத்தின் கதை.

புத்தபெருமானின் போதனைகளைக் கவிதையில் தருகிறார் கவிஞர். எனவே, மிகவும் அடக்கத்துடன் வெத்தாவ தன் காப்பியத்தைப் பின்வருமாறு தொடங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெய்வநாண் மலர்ப் பீடிகை யானுக்கு
வையமே மகிழ் வானருள் வேந்துக்கு
கைநிறைந்த பூக்காட்டிலே கொய்து நான்
பெய்து தாழின் பெரியர் முனிவரோ"

மலர்ப் பீடிகையானாகிய புத்தபிரான், குத்திலன்-மூசிலன் போட்டி பற்றிக் கூறுவதாகவே காப்பியம் நடத்திச் செல்லப்படுகிறது.

உதேனி நகரத்தில் விழாக்கோலம் களைகட்டுகிறது. நகர மக்கள் தெருவெங்கும் திரள்கின்றனர். சல்லரி கிலுங்குகிறது: கிண்கிணி சிலம்புகிறது: பாடடொலி பரக்கிறது; கள்ளுண்டு களிப்போரின் கரடொலி நிரம்புகிறது: இவையெல்லாவற்றையும் கவிஞன் தனது ஈடிணையில்லாத செய்யுள்களிலே படம் பிடித்துக் காட்டுகிறான். அசுரரை வென்ற நாளில் அமரரும் இவ்வாறே களித்திருப்பார் என்று கற்பனை நயத்துடன் கூறுகிறான் கவிஞன்.

வாரணாசி வணிகர்களும் மகிழ்ச்சியை நாடுகின்றனர். இசைக் கலைஞன் மூசிலனை இசை வழங்கும்படி அழைக்கிறார்கள். அவ்வணிகர்கள் தம் அரசவை இசைக்கலைஞனான குத்திலனது இசையைக் கேட்டுப் பழக்கப்பட்டவர்கள். அவர்களுடைய காதுகளில் பாவம், இந்த நகரத்துக் கலைஞனின் இசை கன்னகடூரமாக ஒலிக்கிறது. மூசிலனும் பல்வேறுபண்களை இசைத்து இசைத்துப் பார்க்கிறான். ஆனாலும், அவனது இசை எப்படி இருந்தது தெரியுமா? அதனைக்கவிஞன் வெத்தாவ பின்வருமாறு கூறுகிறான்:

සැයට ලං නොවන
ලිහිණියකු අත් පසුරේන
ගනිම් යි තැත් කරන
එකකු මෙන් ගායනා කෙරෙමින
(140)

அம்புக்குத் தவறிய பறவையைப் பிடிக்க ஒருவன் கைவிரல் நீட்டுகிறான். அதுபோல மூசிலன் கைவிரலால் வீணை வாசிப்பதும் இருக்கிறது என உவமை நயத்துடன் கூறுகிறார்.

இச்சிங்கள பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பினையும் காண்போம்.

"அம்பு பாய அதற்குத் தவறியே
எம்பி ஏகும் பறவையைப் பற்றிட
நம்பி நீட்டிய கைவிரல் போல்வன
தம்பி வீணை தடவிய வீண்செயல்"

இப்பாடலின் வாயிலாக இசையின் இலக்குத்தவறிய பாங்கினைக் கவிஞர் அழகாகச் சித்திரிக்கிறார். 'தம்பி வீணை தடவிய வீண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்' பறவையைப் பற்றிட தம்பி நீட்டிய கைவிரல் போல்வன எனக்காட்டிய உவமைநயம் சிறப்பாக இருக்கின்றதல்லவா?

வாரணாசி வணிகர் மூலம் குத்திலனின் பெருமையை மூசிலன் அறிகிறான். குத்திலனிடம் சென்று இசைப்பயிற்சி பெறுகிறான். குருவின் இடத்தில் தானே அரசவை இசைக்கலைஞனாக வரமுயல்கிறான். அரசவையில் குருவுடன் இசைப்போட்டி போட ஆயத்தமாகிறான். மன்னனும் இசைப்போட்டியை ஒழுங்கு செய்கிறான். இசையில் யாராலும் எதிர்க்கப்படாதவன் குத்திலன். ஆனால், இன்று சொந்த மாணாக்கனுடன் போட்டிபோட வேண்டியவனாகின்றான். குத்திலன் மனத்தில் ஒரே கவலை; துயரத்தால் வாடுகின்றான். இந்த மனக்கவலையைக் குத்தில காவியக் கவிஞன் பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகிறான்.

දුරු කැරැ හිරි ඔතප්
පෙන්වී යැ දුදන ගුණ ගප්
මොහුට අප දුන් සිප්
පෙවූ කිරි වැන්නැ විස ගොර සප්

(200)

**දුදන ගුණ පෙන්විය** - துதன குண பென்வீ ய - மூசிலன் தனது துர்க்குணத்தைக் காட்டிவிட்டான். பழியச்சம். வெட்கம் மறந்தான். 'கெட்ட இச்சீடனுக்கு இசைக்கலையைக் கற்பித்தேனே! பாம்புக்குப் பால்பருக்கி வளர்த்தேனே' என்று குத்திலன் இரங்குகிறான். **විස ගොර සප් පෙවූ කිරි වැන්න** - விஸ கொற ஸப் பெவூ கிரி வென்ன- அதாவது கொடிய விஷப்பாம்புக்குப் பால் வார்த்தது போல என அருமையான உவமானத்தைக் காட்டுகிறார். இப்பாடலில் வரும் அடி பழமொழியாகி, இன்று பேச்சுவழக்கிலும் இரண்டறக் கலந்து நிற்கிறது. சொற்களோ பேச்சுவழக்கில் உள்ளவை; மிக மிக எளியன. குத்திலன் உள்ளத்திலுள்ள உணர்ச்சிகளை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. இப்பாடலில் தமிழ் மொழிபெயர்ப்புப் பாடல் பின்வருமாறு:

**"ஆலமொத்த தீய அழகில்லா நெஞ்சத்தின்**
**மேலிருக்கும் வெட்கம் பழியச்சம் நீங்கியது**
**சீலமற்ற சீடனுக்கென் செய்யகலை கற்பித்தேன்**
**பால் பருக்கி அன்றோ நான் பாம்பை வளர்த்துவிட்டேன்"**

பாடலில் குத்திலனின் கசப்பு, சினம், விரக்தி, அநீதி ஆகிய உணர்ச்சிகள் பிரதிபலிக்கின்றன. அவனது கையறு நிலையையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞன் விளங்க வைக்கிறான். 'சீலமற்ற சீடனுக்கென் செய்ய கலை கற்பித்தேன்' என்று இரங்குகின்றான்.

இசைப்போட்டி தொடங்குகிறது. இரு இசைஞர்களும் கந்தருவர் போன்று சங்கீதம் பொழிகின்றனர். அப்போது தேவேந்திரனின் அருள் குத்திலனுக்குக் கிடைக்கிறது. குத்திலன் வீணையின் தந்தியை அறுத்து விடுகிறான். அறுந்த தந்தியிலிருந்து அமரகானம் எழுகிறது. குத்திலன் தந்தியை ஒவ்வொன்றாக அறுக்கிறான். தெய்வீக கானத்தின் ஓசை மேலும் மேலும் பெருகி ஒலிக்கிறது. உலகே இயக்கமிழந்து நின்றுவிடுகிறது. இக் கட்டத்தில் குத்திலன் தேவேந்திரன் கொடுத்த மூன்று குளிகைகளைக் காற்றில் வீசுகிறான். அக்கணமே அரம்பையர் தேவலோகத்திலிருந்து இறங்கி வந்து ஆடுகிறார்கள். குத்திலனது இசைக்கேற்ப அவனுக்குக் கவிதாவேசம் வந்துவிடுகிறது. இச்சந்தர்ப்பத்தில் கவிஞனின் பாடல்களைப் பார்ப்போம்.

රූරැ සේ අඳිනා ලෙසේ අත් ලෙල දිදි විදුලිය පබා
රන්රසේ එක් වන ලෙසේ වෙණ නාදනු පා තබා
කම්පසේ දෙන සර ලෙසේ දෙසැ බල බලා නෙතගින් සබා
මම කෙසේ පවසම් එසේ වර සුර ළඳුන් දුන් රඟ සුබා
(309)

පැළඳුල් සිතියම් ලෙසින් සිටිනේ සුරන් සහ සත් නුබේ
රුතිමල් සුරලිය නොසින් බැසැ රඟ කෙරෙත් නර රජ සබේ
මිරිකල් නත් සුන් වෙණින් බෝසත් ඔවුන් කරවයි ලොවේ
මේසියල් විසිතුරු උතුම් එක තැනැ දැකුම් කිකලෙක ලැබේ
(313)

அரம்பை மாதர்களின் நடனத்தை எவ்வாறு வர்ணிப்பேன் - සුර ළඳුන් දුන් රඟ සුබා එසේ වර මම කෙසේ පවසම් ஸுற லந்துன் துன் றங்க ஸுபா எஸே வற மம கெஸே பவஸமி - தந்தியில்லா வீணைதந்த இசை வெள்ளம் என்னே! என்னே! இசையையும் அரம்பையர் நடனத்தையும் ஓரிடத்தில் கண்டுகளிக்கும் வேறு இடம், வேறு காலம் கிடைக்குமா என்று களிப்படைகிறார்கள். இப்பாடல்களின் தமிழாக்கப் பாடல்கள் பின்வருமாறு:

"ஓவியத்தைத் தீட்டுகிற கைகள் போலே
ஒயிலாக அலைவீசி ஒளிர்ந்த கைகள்;
பாவகத்தின் பல்வேறு தன்மைக்கேற்பப்
பசும் பொன்னின் பிரபையோடு பதறும் தாள்கள்
தேவநடம் செய்தவரின் சிமித்த பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய மதன் கணைநிகர்த்து மண்டபத்து
மேவு சுவர் தடவிவந்து சுழலும் அம்மா
விளம்புதற்குச் சொல் உண்டோ? கலையால் ஆமோ?

இந்திரனும் தேவர்களும் விண்ணில் தோன்றி
எழில் வண்ணக் கோலம் ஒன்றை இயற்றினார்கள்
வந்திருந்த மாந்தர்களோ அரம்பை மாதர்
வழங்கிய கண் அமிழ்துண்டு மகிழ்ந்து போனார்
தந்தியில்லா வீணைதந்த இசைவெள் ளத்தின்
தடையறியாப் பிரவாகம் சொல்லற் பாற்றோ?
இந்த விதம் ஒருபேறு வேறு யாரே
எங்குறுவார் இப்புவியில் இனிமேல் அம்மா"

இப்பாடல்கள் அருமையான காட்சியை எம்கண்முன் நிறுத்துகின்றன. மிவிற்றன் சொன்னவாறு கவிதையில் எளிமை மிளிர்கிறது. புலநெருக்கமும் உணர்ச்சிப் பொங்கலும் இருக்கின்றன. குத்தில காவியத்தின் கவிதைச் சுவையும் காட்சிகளின் வருணனையும் இரசிகர்களுக்கு நல்விருந்தன்றோ! இலக்கியங்களில் வரும் கவிதைக் காட்சிகளில் பல ஒருமைப்பாடுகளையும் கண்டுநயப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்மபதமும் திருக்குறளும்

தெய்வப்புலவர் திருவள்ளுவர் செய்த திருக்குறள் தமிழிலுள்ள மிகச் சிறந்த இலக்கியநூல். அறம், பொருள், இன்பம் என்பனவற்றை விளக்கி வீடுபேற்றுக்கு வழிகாட்டும் இலக்கிய நூலாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இந்நூல் அழியாப்புகழ் பெற்றுக் காலத்தை வென்று விளங்குகிறது. திருக்குறளின் பெருமையால் பல மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இத்தகைய திருக்குறள், (உபநிடதக் கருத்துக்களைக் கொண்ட) **பகவத் கீதை** போன்ற நூல்களிற் காணப்படும் கருத்துக்கள், பாளி மொழியிற் செய்யப்பட்ட **தம்மபதம்** என்னும் நூலிலும் காணப்படுகின்றன. இத்தம்மபதம், திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களிலும் பார்க்கக் காலத்தால் முந்தியது. மேலும், தம்மபதமும் உலக இலக்கியத்திலே சிறந்த நூலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நூலிலே புத்தபகவானின் அறத்தை-அவரின் அருள்வாக்குகளை விரிவாகக் காணலாம். தம்ம என்பது தருமம் - அறம்; பதம் - வழி என்பதாகும்.

தம்மபதம் என்றால் அறவழி; இந்நூல் பௌத்த பிடகங்களில் ஒன்றான சுத்த பிடகத்தைச் சேர்ந்த குத்தக நியாயம் என்ற நூலின் ஒரு பகுதியாகும். இந்நூல், பாளி மொழியில் 423 சூத்திரங்களைக் கொண்டது. 26 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பௌத்தர்களால் இது பெரிதும் போற்றப்படுகிறது. இது புத்த சமயத்தவரின் பாராயண நூலாகவும் பிரமாண நூலாகவும் அமைகிறது.

தம்மபதம் என்ற நூலில் திருக்குறளில் வரும் அதிகாரங்கள் போன்ற அதிகாரங்களும் வருகின்றன. உதாரணத்திற்கு அவா அறுத்தல், மடியின்மை, வெகுளாமை, தீவினையச்சம் என்பவற்றைக் குறிப்பிடலாம். முதற்கண் மனத்தைப்பற்றித் தம்மபதத்திலுள்ள மனஇயலில் வரும் சூத்திரம் ஒன்றைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| மனோ புப்பங்கமா தம்மா | Mano pubbangamā dhammā |
| மனோ ஸெட்டா மனோமயா | Mano Setthā Manaomayā; |
| மனஸா சே பதுட்டேன | Manasā ce padutthena |
| பாசதி வா கரோதி வா | Bhāsati vā karoti vā |
| ததோ நங் துக்கம் அன்வேதி | Tato nan dukkham anveti |
| சங்கங் வா வஹதோ பதங் | Cakkan va vahato padan |

**(யமக வக்க – 1)**

இப்பாசுரத்தில் மனத்தினது இயல்பை அழகாக எடுத்துக் கூறுகிறார். மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தியில்லாவிட்டால் ஏற்படும் தீமையையும் விளக்குகிறார். துன்பம் தொடர்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் உவமானத்தையும் கையாள்கிறார். 'துக்கம் அன்வேதி' அதாவது துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும். எவ்வாறெனின் - 'சக்கங்வா வஹதோ அன்வேதி' - வண்டிச் சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வதுபோல என்று நல்லதோர் உவமானத்தை - கருத்தாழத்தோடு காட்டுகின்றார். இனி, பாசுரத்தின் முழுக் கருத்தினையும் பார்க்கலாம்.

சித்தத்தின் நிலைகளுக்கு எல்லாம் மனமே முன்னோடி. அவை மனத்திலிருந்து உண்டானவை. மனமே எல்லாவற்றிற்கும் மேலாக நிற்கிறது. தீய எண்ணத்தோடு ஒருவன் பேசினாலென்ன செயல் புரிந்தாலென்ன வண்டிச்சக்கரம் மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வது போலத் துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.

இனி, மனத்தைப்பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்தினைப் பார்ப்போம்:

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற"**

**(அறன்வலியுறுத்தல்–4)**

இக்குறட்பாவில் ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க, அறம் அவ்வளவே. மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை; அவை அறச்செயல்கள் ஆகமாட்டா எனத் திருவள்ளுவர் கூறுகிறார். 'மனசா சே பதுட்டேன பாசதி' - என்று தம்மபதத்தில் வரும் கருத்து திருக்குறளில் மனத்துக்கண் மாசு (இலன் ஆதல்) என அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்திருக்குறளின் மொழிபெயர்ப்பை **"சிறி கீய"** **(සිරි ගීය)** நூலாசிரியர் சிறீ சாள்ஸ் த சில்வா பின்வருமாறு கூறுகிறார்.

**කෙලෙස් මල මනසින් – දුරු කැර රකිනු ගුණ දම්**
**නියම සිල් නම් එම වේ – නැති නිසි වැඩෙන් පෙනුමෙන්**

**(சிறி கீய – 34)**

இவ்வாறு அறத்தை ගුණදම් - குணதம-வலியுறுத்துகிறார். அதுவே மாசில்லாத மனம் නියම සිල් - நியம ஸில் - அதாவது உண்மையான அறம் என்றும் கூறுகிறார்.

தூய மனத்தோடு ஒருவன் பேசவேண்டும். செயல்புரிய வேண்டும். அப்போதுதான் சுகமும் நிழல்போல் தொடரும் என்கிறது தம்மபதம். எனவே, தீயவழியிற் செல்லும் உள்ளத்தைத் திருத்துதல் எமது கடமை. திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மைசெய்ய வேண்டும் என்கிறார் அப்பரும். பகைமையைப் பகையால் வெல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினாலேதான் பகையையும் வெல்லலாம். இதனைத் தம்மபதம் பாளி மொழியிற் பின்வருமாறு கூறுகிறது.

| | |
|---|---|
| ந ஹி வேரேன வேரானி | Nahi verena Verāni |
| சம்மன்தி இத்த குதாசனங் | Sammanti'dha kudācanan |
| அவேரேனாச சம்மன்தி | Averena ca sammanti |
| ஏச தம்மோ சனாந்தனோ | Esa dhammo sanāntano |

இப்பாசுரத்தில் புத்தபகவான் இன்சொல்லையும் அன்பினையுமே அருளுகிறார்.

எக்காலத்தும் பகைமை பகைமையால் தணிவதில்லை; அன்பினாலே தான் அது தணியும். இதுவே காலங்கடந்த கோட்பாடு; சனாதன தருமம் என்கிறார்.

இதனைத் தெய்வத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய் கவர்ந் தற்று"**

**(இனியவை கூறல்–100)**

இக்குறட்பாவில் கனிகள் இருக்கும்போது காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது என்று திருவள்ளுவர் உவமானமும் காட்டி நயமாகக் கூறுகிறார். வன்சொல் வழங்குவதாற் பயனில்லை என்பது அவர் கருத்து. இன்சொல் வழங்குக என்றே அறிவுரை கூறுகிறார்.

இனிய உளவாக என்ற திருக்குறட் கருத்தை றணஸ்கல்ல தேரர் **(රණස්ගල්ලේ හිමි)** தமது **'உலோகோபகாறய'** என்ற சிங்கள நீதிநூலில் எடுத்தாண்டுள்ளார். அவர் பாடிய பாடலையும் பார்ப்போம்.

**අමයුරු වදන් හැර – තද කුරිරු බස් දෙන දුදනයෝ**
**විලිකුම් පල දමා – තිරස පල බුදින්නන් යුරුවන්**

**(உலோகோபகாற–182)**

இவ்வாறு **අමයුරු වදන්** - அமயுறு வதன் - இன்சொல் இனிது; **තද කුරිරු බස්** -தத துறிறு பஸ்- வன்சொல் கொடிது என்றுதான் **உலோகோபகாறய** என்ற நூலும் கூறுகிறது. வள்ளுவரைப் போன்று நல்ல பழம், காய் என்பனவற்றையும் உவமைகாட்டி விளக்குகிறார்.

ஔவையார் பாடிய நல்வழியில் வன்சொற்கள், வெட்டெனவை என்றும் இன் சொற்கள் மெத்தனவை என்றும் குறிப்பிடப்படுகின்றன. வன் சொற்கள் இன் சொற்களை வெல்லமாட்டா. இதனை நல்ல இரு உவமைகளைக் காட்டி ஔவையார் பாடிய நல்வழிப் பாடலையும் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல் பஞ்சில் பாயாது – நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

(நல்வழி–33)

இப்பாடலில் யானையின் மேல் தைத்து உருவிப்போகின்ற அம்பு பஞ்சில் பாயாது. இருப்புப் பாரைக்கும் பிளவுபடாத கருங்கற் பாறை, பசுமரத்தின் வேருக்குப் பிளவுபடும் என்னும் இரு உவமானங்கள் எடுத்தாளப்படுகின்றன. இவை வன்சொல்லிலும் இன்சொல்லே வலியது என்பதை விளக்குகின்றன.

பிறப்பால் எவரும் உயர்ந்தவராவதில்லை. அவரவர் செய்கையாலேயே ஒருவர் உயர்ந்தவராக மதிக்கப்படுகிறார். அந்தணர் என்போர் யாவர்? அழகிய தண்ணளியை உடையவர்களே அந்தணராவர். அவர்களே அறவோர். மேலான ஒருவரையே அந்தணர் என்கிறோம். இக்கருத்தைத் தெய்வத் திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

(நீத்தார் பெருமை–30)

எல்லா உயிர்களிடத்தும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுபவரே அந்தணர் என்கிறார் வள்ளுவர். இக்கருத்தினையே தம்மபதம் என்னும் அறவழி நூலும் பின்வருமாறு கூறுகிறது.

| | |
|---|---|
| "நச அஹங் பிராக்மணங் புறூமி | na C'āhan Brāhmanam brūmi |
| யோனியங் மத்தி சம்பவங் | Yonijan matti sambhavan; |
| போவாதி நாம ஸோ ஹோதி | Bhovādi nāma so hoti, |
| சசே ஹோதி சகிஞ்சனோ | Sace hoti sakiñcano |
| அகிஞ்சனங் அனாதானங் | Akiñcanan anādānan |
| தம் அஹங் புறூமி பிராக்மணங்' | tam ahan brūmi Brāhmanam |

(பிராக்மணவக்க–396)

பிராமண யோனியிற் பிறந்தவன், பிராமணத்தாய் வயிற்றில் உதித்தவன் என்பதால் மாத்திரம் ஒருவனை நான் அந்தணன் என்று கூறமாட்டேன். அவன் களங்கமுடையவனானால் போவாதி- பேச்சளவில் மாத்திரம் அந்தணன் என்பேன். களங்கமற்ற பற்றில்லாதவனையே அந்தணன் என்பேன் என்கிறார் புத்தபகவான். இக்கருத்தினையே 'வசலசுத்தவிலும்' அவர் அழுத்திக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ந ஜக்ச வஸலோ ஹோதி
ந ஜக்ச ஹோதி பிராக்மணோ
கம்மேன வஸலோ ஹோதி
கம்மேன ஹோதி பிராக்மணோ"

பிறப்பால் ஒருவன் 'பிராக்மணோ ந ஹோதி' பிராமணன்-அந்தணன் ஆவதில்லை. 'கம்மேன' செயலாலேயே ஒருவன் பிராமணன்-அந்தணன் ஆகிறான்.

இனி, முன்னர் கூறிய திருக்குறளின் சிங்கள மொழிபெயர்ப்பினைப் பார்ப்போம்.

මුනි යන උතුම් නම – සව්ලෝ සතුන් වෙතැ වෙන
පැ තවුසනට සිල්වත් – සැබැවින් දෙවේ එ හෙයින්

(சிறி கீய–30)

மக்கள் நல்லொழுக்கத்தையே கடைப்பிடிக்க வேண்டும். தீய ஒழுக்கம் இடும்பை-துன்பம் தரும். தவ வேடத்தில் மறைந்து வாழ்தல் கூடாது. மனத்தில் மாசு இல்லாத வாழ்வே உத்தம வாழ்வு. பொய் ஒழுக்கம் கூடாது. உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டுவிடல் வேண்டும். தலையை முண்டிதம் செய்வதாலோ தாடியை வளர்த்தலாலோ சடை வளர்த்தலாலோ - தலைமுடியை நீட்டிக்கொள்வதாலோ எவரும் துறவியாவதில்லை. உள்ளத் துறவே உயர்ந்த துறவு. இதனைத் தம்மபதம் பின்வருமாறு கூறும்.

| | |
|---|---|
| ந முண்டகேன சமணோ | Na munda kena Samano |
| அப்பதோ அலிகம் பணங் | Abbatō alikam bhanan |
| இச்சா-லோப-ஸமாபன்னோ | Icchā-lobha Samāpanno |
| சமணோ கிம் பவிஸ்ஸதி | Samano Kim Bhavissati |

(தம்மட்ட வக்க–264)

புலனடக்கமின்றிப் பொய் பேசித் திரிபவன் இச்சை, லோபம் என்ற குணங்கள் நிறைந்தவன் எவ்வாறு தன்னைச் சமணன் என்று கூறுவது. இக்கருத்தினைத் திருக்குறள் பின்வருமாறு கூறுகிறது.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

(280)

இத்திருக்குறட் பாடலின் சிங்கள மொழிபெயர்ப்பினையும் காண்போம்.

හැඩපළු ගෙතුමෙනුත් – මුඩු කැරුමෙනුත් කිමැ හිස
ගැරැහූ කමින් පඩිදන – වැළැකුම පමණි දන හට

(சிறி கீய–280)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறியவாறு திருக்குறள், தம்மபதம் ஆகிய இலக்கிய நூல்களில் இலக்கிய உறவினை-ஒருமைப்பாட்டினை விளக்கும் பாடல்கள் பல உள. அவற்றை நாம் ஒப்புநோக்கி நயங்கண்டு இரசிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கண நூல்கள்

சிங்கள இலக்கிய வளர்ச்சிக்குத் தமிழ் பெரிதும் வளமூட்டியுள்ளது. தமிழின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் சிங்கள இலக்கியங்கள் பல உள. அவற்றையெல்லாம் எமது கடந்த கட்டுரைகளிலே எடுத்துக் காட்டினோம். சிங்கள இலக்கிய நூல்களில் மட்டுமன்றி இலக்கண நூல்களின் ஆரம்பகால வளர்ச்சியிலும் இதனைத் தெளிவாகக் காண்டல்கூடும். சிங்கள இலக்கியங்களிற் பொருளிலோ, நடையிலோ, அமைப்பிலோ, அலங்காரத்திலோ ஏதோ ஒருவகைப் பொதுமை யிருப்பதைக் காணலாம். இன்னொரு கோணத்தில் நோக்கின், தமிழறிந்த சிங்களக் கவிஞர்களும் அறிஞர்களும் செய்த ஆக்கங்களாகச் சில மிளிருகின்றன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து திரிபிடகம் என்று சொல்லப்படும் புத்த ஆகம நூல்களுக்குப் பாளி மொழியில் உரைசெய்த **புத்தகோச மகாதேரர்** பிறப்பால் பிராமணரே. புத்த மதத்தவர்களாற் பெரிதும் போற்றப்பட்ட **புத்ததத்த மகாதேரர்** (கி. பி. 5ம் நூற்றாண்டு) ஒரு சோழ நாட்டுத் தமிழர். இவர், பாளி மொழியில் இனிய கவிகள் பலவற்றை இயற்றியவர். திரிபிடகத்தின் சூத்திரபிடகத்தில் சில பகுதிகளுக்கு உரையெழுதிய **தருமபாலர்,** திருநெல்வேலி-தஞ்சை நகரைச் சேர்ந்தவர். இவர் பாளி மொழியையும் பௌத்த நூல்களையும் நன்கு கற்றறிந்தவர். பழைய சிங்கள இலக்கண நூலாக இன்று விளங்குவது **'சிதத் சங்கராவ'** (සිදත් සඟරාව) என்ற நூலாகும். இதனைச் செய்தவர் **'அனவம தர்சி'** என்று சிலரும் (අනවම දර්ශි) **வேதேக** (වේදේහ) என்று சிலரும் கருதுகிறார்கள். எவ்வாறாயினும், இருவரும் பிராமண குலத்தவர்களென்பதில் ஆராய்ச்சியாளர்களிடையே சந்தேகமில்லை. மேலும், இவ்விலக்கண நூல் தமிழ் **வீரசோழியத்தின்** தழுவல் எனவும் கருதப்படுகின்றது.

**சிதத் சங்கரா** என்பது வடமொழியில் **'சித்தாந்த சங்கிரக'** என்ற சொல்லுக்குச் சமானமானதாகும். இச்சொற்றொடரின் கருத்து 'சூத்திரக் கொத்து' என்பதாகும். இந்நூல் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் எழுதியதாகக் கருதப்படுகிறது. மேலும், வழக்கிலுள்ளதுமான ஒரேயொரு சிங்களப் பெருநூலாகவும் விளங்குகிறது. இதே காலத்திலெழுந்த இன்னொரு சிங்கள இலக்கண நூலாகிய வேதேக தேரரின் **'சீகள சத்தலக்கணம்'** இன்று வழக்கில் இல்லாது மறைந்துவிட்டது.

தம்பதேனியய காலத்தில் ஆக்கப்பட்ட ஒரேயொரு சிங்கள நூல் இச் சிதத் சங்கரவேயாகும். இதற்கும் தமிழ் வீரசோழியத்திற்கு மிடையில் பல ஒற்றுமைகளைக் காணலாம். வீரசோழியம் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண நூல் வீர ராஜேந்திர சோழனின் வேண்டுகோளின் பேரில் **புத்த மித்திரர்** என்னும் பௌத்த பிக்குவால் (துறவியால்) 11 ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்டது. இந்த இலக்கண நூல் தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல், வடமொழி இலக்கண நூல் என்பனவற்றைப் பின்பற்றியாக்கப்பட்ட நூலாகும். கந்தபுராணத் தொடக்கச் செய்யுளாகிய 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்ற செய்யுளின் 'திகடசக்கரம்' என்ற தொடரின் சந்தி இலக்கணத்தை இந்நூலிற்றான் காணலாம். திகழ்-தசக்கரம் என்ற இரு சொற்கள் புணரும்போது திகடசக்கரம் என்று அமையும் என்பதற்கு வீரசோழியந்தான் இலக்கணம் வகுக்கின்றது. இத்தகைய சிறப்புகளமைந்த தமிழ் இலக்கண நூலைப் பின்பற்றித்தான் சிதத் சங்கரா எழுந்தது என்பது பலரின் வாதம். வீரசோழியத்தினை முற்றாகத் தழுவியதுதான் சிங்கள சிதத்சங்கராவ என்பது சிலரின் வாதம். வீரசோழியத்தை நன்கு அறிந்திருந்தவரின் படைப்பு என்பது பொதுவான கருத்து. இவ்வாறு கருத்து வேறுபாடுகள் பல இருப்பினும் இரு நூல்களிடையேயும் பல பொது அமிசங்களைக் காண்டல் கூடும். 'சிதத் சங்கரா' ஆசிரியர் சாந்திராயணரின் சமஸ்கிருத இலக்கணத்தையும், மொக்கல்லாயனின் பாளி இலக்கணத்தையும் பின்பற்றியுள்ளார். அவர் **வீரசோழியம்** எனும் தமிழ் இலக்கண நூலையும் அறிந்திருந்தாரென்பதும் தெரிகிறது என சீ. ஈ. கொடகும்புற (ගොඩකුඹුර) அவர்கள் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு நோக்கற்பாலதாகும்.

சிதத் சங்கரா சிங்கள மொழி வளர்ச்சியிற் குறிப்பிடத்தக்க ஒரு சாதனை. சிங்கள மொழியானது ஆதி மகதியினின்றும் பிறந்தது என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கொள்கை இந்நூலிலே பரவலாகக் காணப்படுகிறது. "மகத் சக்கு ஆ பண" என்னும் தொடரில் மகதம்பற்றி அவர் குறிப்பிட்டுள்ளமை இக்கருத்துடன் இசைந்துள்ளது.

இனி, **வீரசோழியத்தையும் சிதத் சங்கராவையும்** ஒப்பு நோக்குவோம். இரு நூலாசிரியர்களின் நோக்கத்தை முதலிலே பார்ப்போம். அந்தந்த மொழிகளுக்கு முழுவடிவான இலக்கணங்களை அமைப்பது அன்றி இலக்கிய மொழிக்கு ஏற்ற இலக்கணங்களைச் செய்வதே இரு நூலாசிரியர்களின் நோக்கம் என்பது தெளிவாகிறது.

வீரசோழியத்தில் 5 முக்கிய அதிகாரங்களும் 7 படலங்களுமாக மொத்தம் 12 அதிகாரங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே சிங்கள சிதத் சங்கராவிலும் 12 அதிகாரங்கள் காணப்படுகின்றன. சிதத் சங்கராவில் சன் (வரைவிலக்கணங்கள்), சந்த (புணர்ச்சி), லிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பால்), விபத் (வேற்றுமைகள்), சமஸ் (தொகைகள்), வெசெசுன் வெசெஸ் (பெயர்ச்சொற்கள், பெயரடைவுகள் பற்றிய ஒத்திசைவு), கிரியா (வினை), பசருத் (தத்திதாந்தம்), வுத் அவுத் (எழுவாயும் செயற்படுபொருளும்), கிரிய கரு பத (வேற்றுமைகளின் உபயோகங்கள்), இட்டு அனிட்டு (யாப்பும் செய்யுட்குற்றமும்), லகர (அணி) என்னும் 12 அத்தியாயங்கள் காணப்படுகின்றன.

தமிழ் வீரசோழியத்தில் வரும் பொருளதிகாரம் சிதத் சங்கராவில் இடம் பெறவில்லை. ஏனெனில், பொருளதிகாரம் தமிழ் இலக்கணத்திற்கு மட்டும் உரியதாகையால். வீரசோழியத்தில் முடிவுச் சூத்திரம் ஐந்தாகும். சிதத் சங்கராவில் அவ்வாறான முடிவுச் சூத்திரங்கள் ஐந்து வருகின்றன. வீரசோழியத்தில் காட்டப்பட்ட உதாரணச் செய்யுள்கள் பெரும்பாலும் புத்தபகவானின் குணங்களை வர்ணிப்பனவாக விளங்குகின்றன. ஆனால், சிதத் சங்கராவில் புத்தபகவானின் குணங்களை வர்ணிக்கும் உதாரணச் செய்யுள்கள் ஆங்காங்குமட்டுமே எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இங்குதான் நூலாசிரியர்கள் பற்றி நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. தமிழ் வீரசோழியத்தைச் செய்தவர் பௌத்தத் துறவியாகையால் அவர் கையாண்ட உதாரணங்கள் பௌத்த மதம் பற்றியனவாக விளங்குகின்றன. சிங்கள சிதத் சங்கராவைச் செய்தவர் பிராமணராகையால் பௌத்தமதக் கருத்துக்கள் கொண்ட உதாரணங்கள் சிலவாக அமைந்துள்ளன.

இரண்டு இலக்கண நூல்களும் அவ்வவ் மொழிகளுக்குரிய சிறப்புத் தன்மையை விளக்குகின்றன. உதாரணமாக பால் வேற்றுமையை அதாவது ஆண், பெண் பால் வேற்றுமையை விளக்குவதை எடுத்துக் கொள்வோம்.

சிதத் சங்கரா சிங்கள மொழிப் பால் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

සද සත් අනුසෙරෙන් – ඇතද සදනට ලිඟුබේ
නො පැනේ වහර වෙසෙසෙක් – පුම ඉතිරි ලිඟු දෙක විනා

இச்சூத்திர வாயிலாக சிங்கள மொழியின் பால் வேறுபாட்டை ஆசிரியர் விளக்கியிருக்கிறார். சமஸ்கிருத மொழியில் பால் மூன்று. (ஆண் பால், பெண் பால், அலிப் பால்) தமிழில் பால் ஐந்து. (ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால்). ஆனால், சிங்கள மொழியில் சிதத் சங்கரா காட்டியவாறு பால் இரண்டு (ஆண் பால், பெண் பால்). இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்கலாம். சிதத் சங்கரா ஆசிரியர் வடமொழி இலக்கணத்தையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கணத்தையோ அப்படியே பின்பற்றாமல் சிங்கள மொழிக்குரிய முறையில் பாலை வகுத்திருக்கிறார். எனினும், வீரசோழியத்தின் கருத்து ஆசிரியரின் மனத்தில் நன்கு ஊன்றியிருந்ததென்பதும் தெளிவாகிறது.

இவ்வாறு பால் பாகுபாட்டிலுள்ள வேறுபாட்டால் தமிழ்மொழி கற்கும் சிங்களவர்களும், சிங்களமொழி கற்கும் தமிழர்களும் முதலில் தடுமாறுவதையும் நாம் அவதானிக்கலாம். வீட்டில் நாய் இருக்கிறானா? நாய் போறான் என்று சிங்கள மொழியறிந்தவர்கள் பேசுவதையும் எழுதுவதையும் அவதானிக்கிறோம். බල්ලා ගෙදර ඉන්නවාද? பல்லா கெதற இன்னவாத? என்றதைத்தான் வீட்டில் நாய் இருக்கிறானா என்றும் බල්ලා යනවා - பல்லா யனவா என்பதைத்தான் நாய் போறான் என்றும் கூறுகிறார்கள். அவ்வாறே தமிழறிந்தவர்கள் முதலில் சிங்களம் கற்கும்போது බල්ලා ගෙදර තියෙනවාද / තිබෙනවාද / බල්ලා තිබේ - பல்லா கெதற தியெனவாத/திபெனவாத/பல்லா திபே என்றும் கூறுகிறார்கள். இந்த மயக்கத்திற்குத் தமிழில் அஃறிணை ஒன்றன் பாலாக உள்ள நாய் என்ற சொல் (பால் பகா அஃறிணைச் சொல்). சிங்களத்தில் உயர்திணை ஆண் பால் வகுப்பில் வழங்கப்படுவதுதான் காரணம். சிங்களத்தில் மக்கள், மிருகங்கள், பறவைகள் என்ற உயிருள்ளனவெல்லாம் ஒரு திணையில் அடங்கும் என்பதை அவதானிக்கலாம்.

தொல் காப்பியம், நன்னூல் போன்ற தமிழ் இலக்கண நூல்களுக்கு உரைகள், விருத்தியுரைகள் இருப்பதுபோல சிதத் சங்கராவிற்கும் விபரமான இரு உரைகள் உண்டு. அவற்றுளொன்று **சிதத் சங்கராலியன சன்னய**, மற்றது **சிதத் சங்கரா கியனசன்னய**. இவற்றை விட **புராண சன்னய** அல்லது **மகா சன்னய** எனப்படும் மூன்றாம் விளக்கவுரையொன்றும் உண்டு. தமிழ் இலக்கண ஆசிரியர்கள் போன்று சிதத் சங்கராஆசிரியரும் இலக்கண நெறிகளை உருவாக்குவதில் வழக்காற்று மரபுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். முதலாம் சூத்திரத்திலேயே 'மரபிற்கேற்ப அமைத்தல்' (வஹரணு செரென் சபயா) என்பதன் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்நூலாசிரியர் '(புணர்ச்சி) என்பதற்கு வரைவிலக்கணம் கூறும் முறை தமிழ் இலக்கண நூலாகிய வீரசோழியத்திலுள்ள வரைவிலக்கணத்துடன் ஒத்திருக்கின்றது.

ஆசிரியர் பன்னிரண்டாம் அத்தியாயத்தில் அணியிலக்கணம் பற்றி ஆராய்கின்றார். யாப்பும் அணியும் வடமொழியிலும் பாளி யிலும் தனித்தனித் இயல்களாகும். ஆனால், சிதத் சங்கராவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தமிழ் மரபைப் பின்பற்றி அவற்றைத் தமது இலக்கண நூலிற் புகுத்தியுள்ளார். தமிழ் இலக்கண ஆசிரியர்கள் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவுகளாக இலக்கணத்தை ஆராய்வதை இங்கு ஒப்புநோக்கலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலே வழக்கிலிருந்த சிங்கள மொழிக்கேற்ப எழுதப்பட்ட சிதத் சங்கராவ ஒரு தற்கால இலக்கண நூலின் சிறப்பியல்புகளை உடையதாக அமையாதிருக்கலாம். எனினும், வீரசோழியம் போன்ற தமிழ் இலக்கணத்துடன் ஒப்பிடக்கூடிய பல அம்சங்களையும் கொண்டது என்பது தெளிவு.

* * * * * * *

நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்
ஏன்ற ஞகாரம தாகும், பதினைந்தொ(டு) எண்ணிரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகாரம் வரினிரண் டுந்தொடர்பால்
ஆன்றவைந் தாமுடல் ஆம்; முன்பி லொற்றுக் கழிவுமுண்டே

(செய்யுட்டொகை – 181 – வீரசோழியம்
யாப்பு – கட்டளைக் கலித்துறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள பொதுச் சொற்கள் – வைத்திய நூல்கள், ஜாதகக் கதைகள்

சிங்கள இலக்கியத்தில் தமிழின் செல்வாக்கு என்ற பேச்சுத் தொடரில் சந்தேச காவியங்களிலும் பத்தினி வழிபாட்டிலும் நீதியிலக்கியங்களிலும் தமிழின் செல்வாக்கை ஆராய்ந்தோம். தமிழின் செல்வாக்கு இவற்றுடன் நின்று விடவில்லை. வைத்திய நூல்களிலும் பிற நூல்களிலும் பரந்துள்ளது.

தமிழ் நண்பரொருவர் சிங்கள மக்கள் வாழும் கிராமம் ஒன்றிற்குத் தொழில் காரணமாகச் சென்றிருந்தார். அவருக்குச் சிங்கள மொழி தெரியாது. அவர் அக்கிராமத்திலே தங்கியிருந்த காலத்தில் சிறு சுகவீனம் ஏற்பட்டது. அவர் ஒரு சிங்கள ஆயுர்வேத வைத்தியரிடம் சென்றிருந்தார். அந்த வைத்தியர் குடிநீர் தயாரித்துக் குடிக்கும்படி ஒரு பட்டோலை போட்டுக் கொடுத்தார். அதில் எழுதி வாசித்துக் காட்டிய பல சரக்குகளின் பெயர் தமிழ்ச் சொற்களாகவே இருந்தன. கொத்தமல்லி, திப்பிலி, நீர்முள்ளி என்ற பெயர்கள் மஞ்சாடி என்ற அளவுப் பெயர்களை அவர் குறிப்பிட்டார். நண்பருக்கு ஆச்சரியமாகவிருந்தது. அப்போது அவருடன் சென்றிருந்தவர் இவை மட்டுமல்ல இன்னும் அநேக தமிழ்ச்சொற்கள் சிங்கள வைத்திய நூல்களில் இருக்கின்றனவென்பதை விளங்க வைத்தார். பொட்டணி (පොට්ටනි) பத்தியம் (පත්තියම්) சிந்தூரம் (සින්දූරම්) நெல்லி (නෙල්ලි) சாதிலிங்கம் (සාදිලිංගම්) சரக்கு (සරක්කු) பல்மாணிக்கம் (පල්මාණික්කම්) கள்ளிப்பாக்கு (කල්ලිප්පාක්කු)ஆதிய நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்கள் சிங்கள வைத்திய நூல்களில் உள்ளன. இவை அன்றும் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. இவை தமிழில் பேச்சு வழக்கிலுள்ளவாறே சிங்கள நூல்களில் இடம்பெற்றிருக்கின்றன. பெரும்பாலும், அவை இலக்கணப் பிழைகள் உள்ளனவாகக் காணப்படுவதால் பேச்சுவழக்குச் சொற்கள் என்பது உறுதி. தமிழ்ச் சொற்கள் சிங்கள வைத்திய நூல்களில் எவ்வாறு புகுந்தனவென்பதை ஆராய்வோம்.

தமிழ் மொழியில் **'வைத்திய சிந்தாமணி'** என்ற நூல் வழக்கிலிருக்கிறது. இது சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது தமிழ்ப் பதங்கள் இருந்தவாறே சிங்களத்திலும் உபயோகிக்கப்பட்டன. இவ்வாறுதான் தமிழ் மருத்துவச் சொற்கள் சிங்களத்தில் நுழைந்தன. இந்த நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்தவர் **ஷேலசிங்க** என்ற தமிழ் வைத்தியராவார். இவர் சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் கோட்டைக் காலத்தில் இலங்கையில் வந்து சேர்ந்த சந்திரசேகர பண்டிதரின் சீடருமாவார். ஷேலசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியர் செய்த இத்தொண்டு பெருந்தொண்டாகும். நூலின் தொடக்கத்தில் அவர் குறிப்பிடுவதை நோக்குவோம்.

"නොයෙක් ග්‍රන්ථ ටීකාදියෙන් සමලඞ්කෘතවූ මේ ආයුර්වේදය............ චන්ද්‍රසේකර නම් පණ්ඩිතෝත්තමයා කෙරෙන් උගත් පමණින් ශෛලසිංහ නම් මා විසින් පූර්වයෙහි ද්‍රවිඩ භාෂාවෙන් පැවැතියා වූ මෙම – වෛද්‍ය චින්තාමණි භෛෂජ්‍ය සංග්‍රහය නම් ප්‍රකරණය සිංහල භාෂාවෙන් ගෙන හැර දක්වමිහ"

"நொயெக் கிரந்த ரிகாதியென் ஸமலங்கிறுதவூ மே ஆயுர்வேதய............ சந்திரஸேகற நம் பண்டிதோத்மயா கெறென் உகத் பமணின் ஸேலஸிங்க நம் மா விஸின் பூர்வயெஹி திரவிட பாஷாவென் பெவெதியா வூ மெம வைத்திய சிந்தாமணி பைஸஜ்ய ஸங்கிரஹய நம் பிரகறணய ஸிங்கல பாஷாவென் கென ஹெற தக்வம்ஹ"

தமிழிலிருந்தே சிங்கள நூலைச் செய்தார் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறதல்லவா? எனவே, சிங்கள வைத்திய சாஸ்திர வளர்ச்சிக்கு தமிழ் வைத்திய நூல்கள் ஆதாரமாகவிருந்தனவென்பது வெளிப்படை.

இக்காலத்திலும் இந்நிலை நீடித்துவருவதைச் சில வைத்திய நூல்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. 1905 ஆம் ஆண்டில் ஜே. எம். விக்ரமசிங்ஹ வெத அப்புஹாமி என்பவர் **ත්‍රයෝදශ සන්නිපාතාදි කෝල වලිප්පු සන්නි සංග්‍රහය** - திரயோதஸ ஸன்னி பாதாதீ கோல வலிப்பு ஸன்னி ஸங்கிரஹய என்ற நூலை எழுதும்போது தமிழ் வைத்திய நூல்கள் உசாத்துணையாகப் பயன்பட்டனவென்பதை ஒரு பாடல் குறிப்பிடப்படுகிறது.

நான்கு மொழிகளில் மருந்துகளின் பெயர்கள் குறிக்கப்பட்ட 'பைஸஜ்ய தர்ப்பய' (**භෛසජ දර්පය**) என்ற ஒரு வைத்திய நூல் 1908 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. அதில் தமிழிலும் மருந்துகளின் பெயர் குறிக்கப்பட்டுள்ளதாக ஒரு பாடல் சுட்டுகிறது.

**දෙමළ සකු මගද හෙළු සිව් බසින් යු තු**
**පුවල ඔසු දපන මෙම පොත නිතු පව තු**

தெமள ஸக்கு மகத ஹெளு ஸிவ் பஸின் யுது
புவல ஔஸுத பன மெம பொத்த நிது பவது

கபிரியல் குணவர்தன என்பவர் எழுதிய "**திரவிய குண நிகண்டில்**" தமிழிலுள்ள மருந்துகளின் பெயர்கள் சிங்களத்தில் வழங்கும் முறையைக் குறிப்பிடுகின்றார். அவற்றுள் ஆடாதோடை, கஞ்சா, முருங்கை, பற்படாகம், அமுக்கிராய், கைப்பு ஆதியன சில. முருங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(මුරුංගා) என்ற சொல்லைப்பற்றி கபிரியேல் குணவர்தன பின்வருமாறு கூறுகிறார்.

"මේ වර්ගයට අන්‍ය සිංහල නාමයක් නැති බැවින් ද්‍රවිඩයන් ලක්දිවට එන්නට පටන් ගත් කාලයෙන් පසු ඔවුන් විසින් මේ වර්ග ලක්දිවට ගෙනවුත් බෝ කරන්නට ඇත"

"மே வர்க்கயட்ட அந்ய ஸிங்ஹல நாமயக் நெத்தி பெவின் திரவிடயன் லக்திவட்ட என்னட்ட பட்டன் கத் காலயென் பஸு ஒவுன் விஸின் மே வர்க்கய லக்திவட்ட கெனவுத் போ கறன்னட்ட எத்த".

"இந்த வகைக்கு வேறு சிங்களச் சொற்கள் இன்மையால், தமிழர் இலங்கைக்கு வரத்தொடங்கிய காலத்தின் பின் அவர்களால் கொண்டுவரப்பட்டு பயிரிடப் பட்டிருக்கலாம்" என்கிறார்.

வைத்திய நூல்கள் கொண்டுவரப்பட்டது போன்று மருந்து வகைகளும் மருந்துச்செடிகளும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன என்பது இதனால் விளங்குகிறது. கபிரியல் குணவர்தன தமிழ் உட்பட பல்வேறு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று வைத்திய சாஸ்திரத்திற்கு அளப்பரிய சேவை செய்தார் என்பதை நாங்கள் மறந்துவிடலாகாது.

சிங்கள மொழியில் புத்தரது அவதாரங்களைக் கூறும் **ஜாதகக் கதைகள்** பிரபலியமானவை. மக்களால் விரும்பிப் படிக்கப்படுவன. இந்நூல்கள் பொது மக்களின் மொழியில் எழுதப்பட்டிருப்பதால் அவை அவர்களைக் கவருவதில் ஆச்சரியமில்லையல்லவா? அத்தகைய ஜாதகக் கதைகளிலும் தமிழின் செல்வாக்குச் சென்றிருக்கத்தான் செய்கிறது. தமிழ்ச் சொற்களும் தமிழ் வாக்கிய அமைப்பும் செறிந்து காணப்படுகின்றன. மகாவம்சம், 4 ஆவது பண்டித பராக்கிரமபாகு சோழ தேசத்திலிருந்து இங்கு வந்திருந்த தேரரிடமிருந்து ஜாதகக் கதைகளைத் தமிழிற் கேட்டுக் கற்றிருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. இதில் தமிழ் உச்சரிப்போடு சேர்ந்த சொற்கள் பல காணப்படுகின்றன. உதாரணத்திற்கு: தலைக்கட்டு - තලක්කට්ටුව, அங்காணி (அங்காடி) අංගානි, பரக்கு (பராக்கு) (පරක්කු) விளக்கு - (පහන) விலக்கு ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம். மகாபதறங்க **ஜாதகவில்** வரும் எல்லாப் பெயர்களும் தமிழ்ப் பெயர்களென்பதும் ஈண்டு மனங்கொள்ளத்தக்கது.

கோட்டைக் காலத்தில் மன்னரது அவையை அலங்கரித்த வீதாகம (විදාගම) மைத்திரீய தேரர் இயற்றிய புதுகுணாலங்காரய (බුදුගුණා ලංකාරය) என்ற நூலில் வரும் வர்ணனைகளில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மணிமேகலையின் செல்வாக்குப் படிந்திருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். மணிமேகலை என்ற காவியத்தில் துயிலெழுப்பிய காதையில்:

"கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயியரெல்லாம் மண்ணாள் வேந்தன்"

என்ற பகுதி செங்கோல் கோடினால் நிகழ்வனவற்றை எடுத்தியம்புகிறது. இதே கருத்துக்களை, 'புதுகுண அலங்காரய' என்ற நூலில் வரும் பின்வரும் கவிகள் எமக்குத் தருகின்றன.

| | | |
|---|---|---|
| මෙලෙසින් අදහම | ට | மெலெஸின் அதஹமட்ட |
| නිරිඳුන් ලොව පැමිණිවි | ට | நிறிந்துன் லொவ பெமிணிவிட்ட |
| ඒ රජුන් නතු රට | ට | ஏ றஜுன் நத்து றட்டட்ட |
| හමයි විසමව පවන් දැඩි කො | ට | ஹமயி விஸமவ பவன் தெடி கொட்ட |

(107)

| | | |
|---|---|---|
| රිවි සඳහුද නො | සේ | றிவி ஸந்த ஹுத தொ ஸே |
| යන මග නොයති පෙර | සේ | யன மக நொயதி பெற ஸே |
| එසුරන් වත ඒ | සේ | எஸுறன் வத எ ஸே |
| නැතිව වැසි සස් කලට නොපැ | සේ | நெத்திவ வெஸி ஸஸ் கலட்ட நொபெ ஸே |

(109)

மணிமேகலையில் சமயக்கணக்கர் தந்திறம் கேட்ட காதையில் (27 ஆவது காதை) பிரம, சைவ, வைஷ்ணவ, ஆஜீவக, நிகண்ட, வைதிக வாதிகளிடம் சென்று அச்சமயங்களைக்கற்று மணிமேகலை அவற்றின் கொள்கைகளைக் கண்டித்திருக்கிறாள். அதே பாணியில் வீதாகம தேரரும் தமது 'புதுகுணாலங்காரய' என்ற நூலில் பிராம்மண, சைவ, வைஷ்ணவ ஆதிய சமயங்களைப் பரிகசிக்கிறார்.

வீதாகம தேரரின் இன்னோர் நூலாகிய 'தஹம் கெற்ற மாலய' (දහම් ගැට මාලය) என்ற நூல், உலகத்தில் பிறப்பின் அநித்தியத்தை வெளிப்படுத்துகிறது. இந்நாலிலுள்ள பல பாடல்களில் தமிழ் உச்சரிப்புடன் கூடிய சொற்களும், வாக்கியங்களும் மலிந்து கிடக்கின்றன. இரண்டு (2) செண்டு (பின் சென்று என்ற பொருளில்) மாண்டு (இறந்து என்ற பொருளில்), காவல் (பாதுகாப்பு) கொண்டை (කොණ්ඩේ). தெல்ல (තැල්ල) தாலி (තාලිය) என்ற பொருளில்) ஒன்பது (ඉන්පදු) வாசல் (වාසල්) (கோபுரம் என்ற பொருளில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியன சுத்த தமிழ்ச் சொற்கள் அப்பாடல்களில் இடம்பெறுவதை உதாரணமாக எடுத்துக் காட்டலாம்.

කන්දේ කෙටුවයි සේනේ **ඉරණ්ඩු**
මුල් බිජු වපුල පළමුව පත් **ඉරණ්ඩු**
යන්ම යන තුරා රූකලා කළ **සෙණ්ඩු**
යන්ට යන දාට යයි දැයි **මාණ්ඩු** – 33

අඳුරකි දුරකි දුරු කතරකි **කාවල කි** – 27

සකදා ඇඳපු ඔලියල්වට කැදැල් ලයි
එකදා ඇඳපු **කොණ්ඩේ** මල් කැරුල් ලයි
සකදා කරලන්ට පඩුකාර **තැල්** **ලයි**
මලදා ඉතින් පණුවන් කුණු කැදැල් ලයි – 8

උඩරට පාත රට කොට සතර දැන ගෙන
**ඔන්පඳු** සය මතක්කර සිත තබා ගෙන – 58

සතර **වාසලට** පුලු දොර සතක් ඇති – 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை ஊற்றுக்கள்

பத்தாம் நூற்றாண்டுவரை சிங்கள இலக்கியத்தில் பாளி, சமஸ்கிருத மொழிகளின் செல்வாக்கைப் பெரிதும் காண்கிறோம். புலவர்களும் அறிஞர்களும் பாளி, சமஸ்கிருத மொழிகள் மூலமே தம் கருத்தை வெளிப்படுத்தினர். ஆனால், பத்தாம் நூற்றாண்டில் சிங்கள இலக்கியத்தில் மறுமலர்ச்சி தோன்றியது. சிங்களம், அறிஞர்களதும் பொது மக்களதும் பொதுமொழியாகவும் மாறியது. பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கை சோழ மன்னர்களின் ஆட்சிக்கு வந்தது. பொலன்நறுவை தலைநகராக விளங்கிய இக்காலம் பொலன்நறுவை யுகமாக விளங்கியது. பாளி இலக்கிய மூலம் தமிழர்கள் சிங்கள இலக்கியத்துக்கு அருந்தொண்டாற்றினர். ஆனால், தமிழரினதும் தமிழ் இலக்கியத்தினதும் நேரடித் தொடர்பு சோழ மன்னர் ஆட்சிக்குப் பின்னரே தெளிவாகத் தெரியக் கூடியதாக இருக்கின்றது. இவைபற்றி எமது கடந்த கட்டுரைகளில் ஆராய்ந்து வந்துள்ளோம்.

தம்பதெனியாவிலிருந்து அரசாண்ட பண்டித பராக்கிரமபாகு சிறந்த இலக்கியகர்த்தாவாகவும் விளங்கினான். **கவிசிலுமின** என்ற சிறந்த இலக்கியத்தைப் படைத்தவன் இவனேயெனக் கருதப்படுகிறது. தமிழில் கம்பராமாயணத்தைப் போல் சிங்களத்தில் கவி சிலுமின மதிக்கப்படுகின்றது. தம்பதெனியாக் காலத்தில் இரண்டாவது பராக்கிரமபாகு மன்னன் ஆட்சியிற்றான் **சரசோதி மாலை**யென்னும் (கி.பி. 1310 இல்) கட்டடக்கலை பற்றிய நூல் தமிழில் இயற்றப்பட்டது. அக்காலத்தில் இலங்கையின் தலைநகரங்கள் தோறும் எழுந்த கட்டடங்களில் தமிழரின் கட்டடக்கலை நுட்பங்கள் பளிச்சிட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தமிழர் பலர் இலங்கையில் இரும்பு வேலையில் தலைசிறந்திருந்தனரென மானாபர்ணனின் கல்வெட்டும் கூறுகிறது.

15ஆம் நூற்றாண்டளவில் கோட்டைக் காலம் சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் என்பதையும் அக்காலத்தில் தமிழ் பலவகையிலும் போற்றப்பட்ட செய்திகளையும் அதன் செல்வாக்கினையும் எமது முன்னைய கட்டுரைகளில் ஆராய்ந்தோம்.

ஸ்ரீ இராகுல தேரரின் மறுமலர்ச்சிக் காலத்துக்குப் பின்பும் சிங்கள மக்களுடன் தமிழ் ஆந்திரப் பிராமணர்களின் தொடர்பு வளர்ந்து வந்திருக்கிறது. அவர்களிற் பெரும்பாலானோர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்தனர். அவர்களிடையே கதைஞர்களும் சுவைஞர்களும் இருந்தார்கள். அவர்கள் கூறிய கதைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக் கதைகளும் பிரபலமான சிங்களக் கவிதை வடிவெடுத்தன. கால வெள்ளத்தில் அவை அழிந்துவிடாது வாழும் இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

அவற்றுள் **மகாபாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், வேதாளம் சொன்ன கதைகள், சாரங்கதரா கதைகள், ஈசுரமாலை** என்பன அடங்கும்.

முதலில் மகாபாரதக் கதை சிங்களத்தில் இடம்பெற்றமையை நோக்குவோம். மகாபாரதக் கதை சிறந்த வடமொழிக் காவியம். தமிழிலும் செய்யப்பட்டிருக்கிறது. இதனைச் சிங்களத்தில் பாடிய ஒரு புத்த துறவிப் புலவர் (**කිරිමැටියාවේ කිවිඳු**) தமிழிலிருந்தே கதைக் கருவூலத்தை எடுத்திருக்கின்றார். இதனைப் புலவரே தமது கவியில் கூறுகின்றார். எனவே, வடமொழியிலிருந்து கருவூலத்தைப் பெறவில்லை என்பதும் தமிழ்க் கதையிலிருந்து கருவூலத்தைப் பெற்றார் என்பதும் ஐயந்திரிபின்றித் தெளிவாகின்றன.

දෙමළෙන් කිවි පොර ණ
සිංහල බසින් මකිය න
දුටු වරදක් නොරෝ න
ඉවසූ මැන ගරුතර නැණැති දන

என்று புலவர் பாடியிருக்கிறார்.

மேலும், வடமொழிப் பெயர்கள் தமிழ் வடிவம் பெற்றபின் சிங்களத்திற்குப் பெயர்க்கப்பட்டிருப்பதும் தெளிவாகிறது. காவிய கதாபாத்திரங்களின் பெயர்கள்கூட முதலில் தமிழ் வடிவம் பெற்றிருந்தமையை அவதானிக்கலாம். உதாரணமாக, **துர்யோதனன்** என்பது வடமொழி வடிவம். **திரியோதனன்** அல்லது **துட்டோதனன்** என்பது தமிழ் வடிவம். இத்தமிழ் வடிவமே சிங்களத்தில் கையாளப்பட்டிருக்கிறது. இப்படியான சொற்களும் தமிழ் மகாபாரதக் கதையிலிருந்தே சிங்கள மகாபாரதக் கதை பிறந்ததென்பதற்குச் சான்றாகின்றன. **சிங்கள மகா பாரதத்தைப் பாடியவர் கிரிமெற்றியாவே கிவிந்து** என்னும் புலவராவர்; கண்டிக்கு அண்மையிலுள்ள கொப்பகடுவ என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். அவர் 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 1514 (நாலடிப்) பாடல்களில் சிங்கள மகாபாரதத்தைப் பாடினார். புலவர் மகாபாரதக் கதையை ஒரு ஜாதகக் கதை வடிவிலேயே அமைத்திருக்கிறார். அக்காரணத்தினாற் போலும் பாண்டுவின் மூத்த புதல்வனாகிய யுதிஷ்டிரன் அல்லது தர்மராசனை தர்மஞான அல்லது தர்மபுத்தி என்ற போதிசத்துவரின் பாத்திரமாகப் படைத்திருக்கிறார். அக்காலச் சிங்கள மக்களின் மனத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவருவதற்காகவே புலவர் காவியத்தை ஜாதகக் கதை வடிவில் வடித்திருக்கிறாரெனக் கருத வேண்டியிருக்கிறது. இக்காவிய நூல் **மகா பதறங்க ஜாதக (මහා පදරංග ජාතක)** எனப் பெயர் பெற்றது. இது சிங்களத்திலுள்ள மிகப்பெரிய நூலாகக் கருதப்படுகிறது.

அடுத்து **'வேதாளம் கத்தாவ'** என்ற நூலும் கிரிமெற்றியாவே கிவிந்து என்பவரால் செய்யப்பட்டதாகும். இவ்விலக்கிய நூலும் தமிழிலுள்ள **வேதாளம் சொன்ன கதையையே** பின்பற்றிச் செய்யப் பட்டது. 'வேதாள பஞ்ச விசதிகள்' (වේතාලපඤ්චවිසති) - வேதாளஞ் சொன்ன கதையாக வழங்கி வந்தது. தமிழ்க் கதையை மூலக் கதையாகக் கொண்டே சிங்களப் புலவர் **'வேதாளம் கத்தாவ'** என்ற நூலை ஆக்கியுள்ளார்.

இதனை நூலாசிரியர் தமது நூல் ஆரம்ப அறிமுகக் கவிகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

| | |
|---|---|
| **පොරණ මෙකතා** | **වස** |
| **දෙමළෙන් තුබූ කතා** | **බස** |
| **පෙමසින් ඉතා** | **මය** |
| **කියමි වේතාලන් කතා** | **වය** |

தமிழிலுள்ள பழைய வேதாளம் சொன்ன கதையை அன்புடன் **(පෙමසින් කියමි)** பாடுகிறேன் என்று கூறுகிறார் புலவர்.

இன்னும், தமிழில் வழங்கிய **கம்பராமாயணம்** கி. பி. 1814 ஆம் ஆண்டில் சிங்கள உரைநடை நூலாக மொழிபெயர்க்கப்பட்டது. வடமொழியில் இராமாயணக் கதை செய்யுள் வடிவில் வெவ்வேறு உருவங்களில் உண்டு. துளசி இராமாயணம், வான்மீகி இராமாயணம், போதாயனர் இராமாயணம் என்பன கதை அமைப்பிலேயே சில மாற்றங்களைக்கொண்டு விளங்குகின்றன. சிங்களத்தில் வழங்கும் இராமாயணக் கதை தமிழிலுள்ள இராமாயண மொழிபெயர்ப்பாக இருந்தபோதிலும் சில முக்கிய அமிசங்களில் வேறுபட்டும் நிற்கிறது. கதாநாயகியாகிய சீதையைப் பற்றிக் கூறும் பகுதியிற் கூட வேறுபட்ட அமிசம் காணப்படுகிறது. ஓர் இடத்தில் சீதை தெய்வமாகக் கூறப்படுகிறாள். அவள் தனது தோழிகள் அறுவருடன் ஒரு குளத்தில் நீராட இறங்கியபோது விஷ்ணுவினால் (இராமர்) சிறைப் படுத்தப்பட்டாள். இன்னோர் இடத்தில் ஹனுமானின் பாத்திரத்தை வாலி செய்வதாகக் கூறப்படுகிறது.

இன்னோர் நூலாகிய **'ஹரிச்சந்திர கத்தாவ'** என்ற 'தொடம்வெல கிவிந்து' **(දොඩම්වල කිවිදු)** என்பவரின் நூலும் தமிழ் அரிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையின் மொழிபெயர்ப்பாகும். 409 செய்யுள்களைக் கொண்ட இந்நூல் கி. பி. 1726 இல் செய்யப்பட்டது. **தொடம்வெல கிவிந்து** தமிழ் சிங்கள மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சத்தியத்தைத் தன்னுயிராக மதித்த (தமிழிலிருந்த) அரிச்சந்திரன் கதை புலவரைக் கவர்ந்தது. ஆகையாற்றான் அதனைச் சிங்கள இலக்கிய நூலாகச் செய்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

**'வள்ளி மாதா காவியம்'** தமிழ்க் கடவுள் முருகனின் இச்சா சக்தியாகிய வள்ளியின் சரிதையைக் கூறுகிறது. வள்ளி, முருகன் ஆகிய தெய்வங்களிடம் அதிக பக்திகொண்ட **அபயக்கூன் விஜயசுந்தர முதலி** என்பவர் இந்நூலைத் தமிழிலிருந்தே மொழிபெயர்த்துள்ளார்.

இனி **'சாரங்கதரா கத்தாவ'** என்ற இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும் அதுவும் தமிழ் மூலத்திலிருந்தே மொழி பெயர்க்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்த இலக்கியநூலும் நாலடிப் பாடல்களைக்கொண்டு விளங்குகின்றது. இதனைப் புலவர் **தென்னக்கூன்** கி. பி. 1738 இல் சிங்களத்திலே செய்தார்.

கதைக் கருவைப் பார்க்கும்போது மாற்றம் எதுவும் இல்லை. தமிழிலுள்ளவாறே கதைக்கரு சிங்களத்திலும் காணப்படுகின்றது. கதையில் அரசன் திக்விஜயத்தை முடித்துக்கொண்டு திரும்புகிறான். நற்குணங்கள் நிரம்பிய அரசிளங்குமரனைத் தன்வசப்படுத்த முயல்கிறாள் சிற்றன்னை. அவ்வாறு முயன்றும் ஏமாற்றமடைந்த சிற்றன்னை அவனைப்பற்றி அரசனிடம் பொய்யாகக் குற்றஞ்சாட்டுகிறாள். அவளது குற்றச்சாட்டுக்கு ஆளாகவே அரசிளங்குமரனின் தாய் அவனைத் தென்னிந்தியாவிலுள்ள எல்லாத் தலங்களுக்கும் எடுத்துச் செல்கிறாள். ஈற்றில் சிவன்தோன்றி அரசிளங்குமரனுக்கு அருள்செய்கிறார். அரசிளங்குமரன் பழையபடி கைகால்கள் பெற்று மகிழ்ச்சியடைகிறான்.

இவைபோன்று, தமிழ்க் கதைகள் ஊற்றிற்றோன்றிய பல சிங்களச் செய்யுள்களும், இலக்கியங்களும் சிறந்த இலக்கிய நூல்களாக மிளிர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VI
# மொழிபெயர்ப்பு நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ், சிங்கள இலக்கியப் பரிவர்த்தனை

"பரிவர்த்தனம்" (පරිවර්තනම්) என்ற வடமொழிப் பதம் பண்டமாற்றைக் குறிக்கிறது. பண்டங்களை-பொருள்களை மாற்றுவது பண்டமாற்று. அப்பண்டங்கள் உடற்தேவைகளுக்கு - வயிற்றுப் பசிக்குத் தேவைப்படுகின்றன. வயிற்றுப் பசியிலும் மேலான பசிதான் அறிவுப்பசி-அறிவுத் தாகம். இன்று அறிவுப்பசி அல்லது அறிவுத்தாகம் கொண்ட மக்கள் பெருகி வருவதை நாகரிக உலகெங்கணும் காணுகின்றோம். அத்தகைய அறிவுப்பசியும், தாகமும் கொண்டோர் பிறமொழியிலுள்ளவற்றையும் அறியத் துடிக்கின்றனர். அத்தகைய பிற மொழி இலக்கியங்கள், அறிவியல் நூல்கள், தத்துவங்கள், ஆன்மீக அறிவு அனைத்தையும் அறிய அவாவுதல் இயற்கையே. இவ்வாறு ஒரு நாட்டவரது கலை, இலக்கியங்களையோ இன்னொரு மொழியிலுள்ள கலை இலக்கியங்களையோ அறிய மக்கள் அவாவுகின்றனர். இவ்வாறு ஒருவர் இலக்கியத்தை இன்னொருவர் அறிய வாய்ப்புக் கிடைக்கும்போது இலக்கியப் பரிவர்த்தனை உண்டாகிறது. ஆகவேதான் இலக்கியப் பரிவர்த்தனையும் பண்டமாற்றுப் போன்றது. அது ஒரு வழிப்பாதையன்று; இரு வழிப்பாதை. அவ்வாறு பரிவர்த்தனை நிகழும்போதுதான் இலக்கியப் பரிவர்த்தனையின் நோக்கம் குறைவற நிறைவேறுகிறது.

ஒவ்வொரு நாட்டிற்கும் சிறப்பான இலக்கியங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இனத்துக்கும் பாரம்பரிய இலக்கியங்கள் இருக்கின்றன. ஒரு நாட்டில் வாழுகின்ற தேசிய இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதற்கு இலக்கியம் பெரும் பங்களிப்புச் செய்யமுடியும். இனத்தால், மதத்தால், மொழியால் வேறுபட்ட மக்களையும் இலக்கியம் ஒன்றிணைக்க முடியுமென அறிஞர்கள் கருதுகிறார்கள். அவ்வாறாயின், ஓரினத்தின் இலக்கியப் பரிவர்த்தனையை விடச் சிறந்த சாதனம் வேறில்லை.

அந்நியராட்சியில் பிறநாட்டு இலக்கியங்களைக் கற்பதில் நம்நாட்டு மக்கள் ஆர்வம் காட்டினர். ஆங்கிலேய நாட்டு இலக்கியங்களை ஆங்கில மொழியிலே கற்று நயக்கவும் முனைந்தனர். அதனால், செகப்பிரியர், மில்டன் போன்றோரின் இலக்கியங்களைச் சுவைத்த அளவுக்கு நமது நாட்டு இலக்கியங்களும், மொழியும் புறக்கணிக்கப்பட்டும் வந்தன. நல்ல காலமாக தமிழ்மொழிப் பற்றுள்ளோர் ஆங்கிலம், இலத்தீன் போன்ற மொழிகளில் திருவாசகம், திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்த்து இலக்கியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவர்த்தனையில் ஈடுபட்டனர். இத்துறையில் ஜீ. யு. போப், எட்வேட் டேவிற், றொபின்சன் உழைத்தனர். தாகூரின் கீதாஞ்சலி எனும் நூலும் மொழிபெயர்க்கப்பட்ட பின்பே உலகப்புகழ் பெற்றது. இவ்வாறு இந்திய தத்துவஞானங்கள் மற்றும் அறிவுச் செல்வங்கள் மொழிபெயர்க்கப்பட்ட பின்னரே மேனாட்டார் அவற்றிற்கு மதிப்பு அளிக்க வாய்ப்பு நேர்ந்தது. இவற்றிலிருந்து ஒரு விடயம் நமக்குப் புலனாகிறதல்லவா? ஒரு நாட்டு இலக்கியத்தையோ ஓரினத்தின் இலக்கியத்தையோ கற்றுக்கொள்வதாயின் அந்தந்த இலக்கியம் அமைந்த மொழியைக் கற்று அறிதல் எல்லோருக்கும் முடியாது. உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தில் அமைந்தால் ஒரு குறிப்பிட்ட சிறிய வீதத்தினர் மட்டும் அவற்றைக் கற்றுக்கொள்ள முடியும். ஆகவேதான், இலக்கியப் பரிவர்த்தனையில் மொழிபெயர்ப்பு முக்கிய இடம்பெறுகிறது. அப்போது, குறிப்பிட்ட மொழி பேசும் இனத்தினர் இன்னொரு மொழி பேசும் இனத்தவரது இலக்கியத்தைக் கற்றுச் சுவைக்க முடியும். தமிழிலோ சிங்களத்திலோ செகப்பிரியரின் நாடகங்களையோ இலக்கியங்களையோ, பிரான்சு, ருசியா மொழி இலக்கியங்களையோ கற்றுக் கொள்ளும் வாய்ப்பு இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த வகையில் பிற மொழி இலக்கியங்கள் பல தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. மொழிபெயர்க்கப்பட்டும் வருகின்றன. அறிஞர் பலரின் முயற்சியால் இன்று இலக்கியப் பரிவர்த்தனை இரு வழிப்பாதையில் நடைபெறுகிறதெனக் கூறலாம்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் இந்நாட்டுத் தேசிய இனங்களுக்கிடையே இலக்கியப் பரிவர்த்தனை எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்கிறதென்பதை ஆராய்தலே நமது நோக்கம். இந் நாட்டிலே வாழுகின்ற சிங்கள, தமிழ் தேசிய இனங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்வோம். பழைமையும், இலக்கியப் பாரம்பரியமும் படைத்த தமிழின் செல்வாக்கு சிங்கள மொழியில் செறிந்திருக்கிறது. உச்சரிப்பு, எழுத்து, சொல், வாக்கியமைப்பு ஆகியவற்றில் சிற்சில பொதுமைகள் காணக்கிடக்கின்றன. கலை, கலாசாரம், வரலாறு என்பற்றில் நெருங்கிய தொடர்பைக் காணமுடிகிறது. ஆனாலும், இவற்றை அறிந்து ஒரு இனத்தை இன்னொரு இனம் மதிக்கும் அளவிற்கு அல்லது ஒருவர் மொழியை இன்னொருவர் மதிக்கும் அளவிற்கு அல்லது ஒருவர் கலை, கலாசாரத்தில் உள்ள பாரம்பரியத்தையோ பொதுமையையோ கண்டுநயக்கும் அளவிற்கு இலக்கியப் பரிவர்த்தனை நடைபெறவில்லையென்றே இரு இனத் தவர்களும் கூறிக்கொள்கிறார்கள். ஒரு நாட்டிலேயே அயலவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுபவர்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ளாத நிலையிற்றான் நாட்டு நடப்பு நகர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றின் விளைவைத் தான் கடந்த காலத்தில் நிகழ்ந்த இனக்கலவரங்கள் பிரதிபலித்தன. நல்ல காலமாக இன்றைய அரசும் மக்களும் இன ஒற்றுமை, தேசிய ஒற்றுமை என்பனதான் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலும் என்பதை உணர்ந்து பணியாற்றுகிறார்கள். நாட்டின் இனஒற்றுமைக்கும் அபிவிருத்திக்கும் இலக்கியப் பரிவர்த்தனைதான் சிறந்த பாலம். இலக்கியப்பாலம் செவ்வனே அமைந்துவிட்டால் மக்களிடத்தே அறிவுச் செல்வம் பெருகி ஆன்மநேய ஒருமைப்பாடு வளர்ச்சியுறும். அப்போது மற்றைய செல்வங்களும் மலிந்து, நாடும் வளமுறும்.

முதற்கண் தமிழிலிருந்து சிங்களத்திற்கு இதுவரை காலத்தில் மிகவும் குறைந்தளவு நூல்களே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம், லத்தீன், ருசிய மொழிகளில் செலுத்தப்படவில்லையென்பது கவலைக்குரிய விடயம். இது அந்நியர் தாக்கம்; அந்நியரின் கீழ் எமது அடிமை வாழ்வு அளித்த விளைவு. வரலாற்று ரீதியில் பார்க்கின்ற போது பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் அண்மைக் காலத்திலேயே பெயர்க்கப்பட்டன. அவைதானும் பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. தினகரன் பத்திரிகாசிரியர் 5. 1. 1980 ஞாயிறு தினகரனில் (எங்கள் கருத்து) அளித்த கருத்தையும் இங்கே நாம் கருத்திற்கொள்ளல் சாலவும் பொருத்தமானதே. அவரது கருத்துப்படியும் அண்மைக் காலத்தில் தனிப்பட்ட முயற்சிகளே காணப்பட்டன. இவை பரந்த அடிப்படையில் மேற்கொள்ளப் படவில்லை. தமிழ் இலக்கியத்தைச் சிங்களத்தில் கொடுக்கவும் எவரும் முன்வரவில்லை. இத்தகைய குறைபாடுகளினால் இரு சாகியத்துக்குமிடையே ஒற்றுமை இயல்புகள் இருந்தும் வேற்றுமையே வளர்ச்சிகண்டது. இணைப்பு மொழிப்பாடம் இரு இனத்தவர் களிடையே உறவை வளர்க்கவும் ஒருவர் இலக்கியங்களை மற்றவர் கற்று நயக்கவும் மதிக்கவும் துணைபுரியுமென எதிர்பார்க்கப்பட்டது.

இலக்கிய வகையில் சிலப்பதிகாரம் "**பத்தினி தெய்யோ**" என்ற பெயரிலும் மணிமேகலை "**மணிமேகலா சம்பு**" என்ற பெயரிலும் ஹிஸ்ஸல்லே ,தர்மரத்ன தேரோ அவர்களால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை இரண்டும், உரையும் பாட்டும் கலந்த சம்பு காவியங்களாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. திருக்குறளை **சிறி கீய** என்ற பெயரில் சாள்ஸ் த சில்வா என்பவரும் மொழிபெயர்த்திருக்கிறார். இவரது '**மூதுரை**' மொழி பெயர்ப்பை இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ளது. **திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி, கொன்றை வேந்தன்** என்பவை மிஸிகாமி கொறக்கொட என்னும் அம்மையாரால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை வகையில் **ராஜாஜீ கதைகளை (17) குலகீனயோ** என்ற பெயரில் திரு. டீ. டீ. நாணயக்கார மொழிபெயர்த்திருக்கிறார்.

திரு. ச. கணேசலிங்கனின் கதைகளை **"அஞுச்சட்டன்பாட"** என்ற பெயரில் றஞ்சித் பெரேரா மொழிபெயர்த்திருக்கிறார்.

திரு. த. கனகரத்தினம் பிரபலமான 12 தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களின் 12 சிறுகதைகளை **"தெமள கெற்றி கதா"** என்ற நூலாக மொழிபெயர்த்திருக்கிறார். இதில் வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், தாளையடி சபாரத்தினம், வரதர். சு. வேலுப்பிள்ளை, டொமினிக் ஜீவா, வ. அ. இராசரத்தினம், கனக செந்திநாதன், நீர்வை பொன்னையன், கே. டானியேல், எஸ். அகஸ்தியர், புலோலியூர் க. சதாசிவம் ஆகியோரின் கதைகள் அடங்குகின்றன. **'உறுமய'** சிறுகதைத் தொகுப்பை மடுளுகிரியே விஜேரத்ன (1996) செய்திருக்கிறார். நாவல் இலக்கிய வகையில் வரதராசனின் **"கள்ளோ காவியமோ"** என்ற நூலை **"நாரி சுராவ"** என்ற பெயரில் எம். சீ. எம். சாயிறு, பீ. ஏ. விஜயதாச என்பவர்கள் கூட்டாக மொழிபெயர்த் திருக்கிறார்கள். அருள் சுப்பிரமணியத்தின் **'அவர்களுக்கு வயது வந்துவிட்டது'** என்ற நாவலைச் சிங்களத்தில் பெயர்த்தவர் திக்வல்லை சாஹீர். ஜனாப் எஸ். எம். ஹனிபா எழுதிய **மகாகவி பாரதி** என்ற நூலை கே. ஜீ. அமரதாச மொழி பெயர்த்திருக்கிறார். **"உவைஸ் சிறித்த"** என்ற சிங்கள நூலையும் ஜனாப் எஸ். எம். ஹனிபா வெளியிட்டுள்ளார். மடுளுகிரியே விஜேரத்ன கே. டானியலின் **'கானல்'**, **'தண்ணீர்'** ஆகிய நாவல்களைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இளைப்பாறிய ஆராய்ச்சி உத்தியோகத்தர் டி. பேமதாஸ அவர்களின் மொழிபெயர்ப்பில் **காஞ்சிப் பெரியார்** பற்றிய நூல் **(ආචාර්යවර්යාගේ භව)** சிங்களத்தில் வெளியிடப்படுகிறது.

கவிதையில் இலங்கை இந்திய கவிஞர்களிற் சிலரின் பாடல்களை பராக்கிரம கொடிதுவக்கு என்ற சிங்களக் கவிஞர் மொழிபெயர்த்து **"இந்து சஹ இலங்கா"** என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறார். திக்குவலை கமாலின் **"எலிக்கூடு"** என்ற கவிதைத் தொகுப்பை பண்டிதர் ரத்னவன்ஸ தேரோ மொழிபெயர்த்துள்ளார். 'எதிரொலி' என்ற கவிதைத் தொகுதியை **'தோங்காரய'** என்ற பெயரில் சீதா ரஞ்சனி செய்துள்ளார்.

சமய நூல் வகையில் நாவலரின் முதலாம் **சைவ வினாவிடையைச்** சிங்களத்தில் **டீ. டீ. நாணயக்கார** மொழிபெயர்த்திருக்கிறார்.

மொழிபெயர்ப்புத் துறையில் காலஞ்சென்ற கே. ஜீ. அமரதாச அவர்களின் பணி பாராட்டுக்குரியதாகும். பத்திரிகைகளில் வெளிவந்த பாடல்கள், கட்டுரைகள் நூலுருப் பெறல் வேண்டும்.

**முன்னேஸ்வர வரலாறு** என்ற நூலை டீ. டீ. நாணயக்கார, த. கனகரத்தினம் ஆகிய இருவரும் கூட்டாக மொழிபெயர்த்திருக் கிறார்கள். இந்நூல் இப்போது அச்சாகிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடும் பொறுப்பை நூலாசிரியர் வீ. சிவராமகிருஷ்ண சர்மா ஏற்றிருக்கிறார். தில்லை நடராசாவின் சிறுகதைகளை **(நிர்வாணம்)** எஸ். சிவகுருநாதன் மொழிபெயர்த்துள்ளார்.

மேலும், தமிழறிந்த சிங்கள அறிஞர்களுள் டி. பேமதாஸ, விஸ்வநாத் வஜிரசேன, வஜிரப்பிரபாத் விஜயசிங்ஹ, எஸ். பீ. புஞ்சி ஹேவா, சுனில் சிரிவர்தன ஆகியோரின் பல்வகை மொழிபெயர்ப்புப் பணிகளும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கன.

கட்டுரை ஆசிரியரின் வேறு சமயக்கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியவற்றை திவயின, லங்காதீப, எத்த, நுவண (கல்வி வெளியீட்டுத் திணைக்கள சிங்கள மாதாந்த சஞ்சிகை) ஆகிய பத்திரிகைகள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத் தமிழ்ப் பாடநூல்கள் வெளியிட்டுள்ளன. ஒரு காலகட்டத்தில் **அம்புலிமாமா** என்ற சிறுவர் மாத இதழ் சிங்களத்திலும் வெளிவரத் தொடங்கியது.

நா. சுப்பிரமணியம் அவர்களின் வானொலிப் பேச்சுக்கள், "**සිංහල සාහිත්‍යයේ ද්‍රවිඩ ප්‍රභාවය**" என்ற பெயரில் 1991 இல் வெளிவந்துள்ளது. பேராசிரியர் சுனில் ஆரியரத்தின **தமிழ் இலக்கிய வரலாற்றைச்** சிங்களத்தில் வெளியிட்டுள்ளார். இவர் சிற்றிலக்கியங்களின் பெயர்த்தொகுதியையும் (**දෙමළ චූල සාහිත්‍ය කෘතිනාම කෝෂය** (1991) வெளியிட்டுள்ளார். கலாநிதி எம். எச். பீட்டர் சில்வா தமிழிலிருந்து சிங்களத்திற்குச் சில மொழி பெயர்ப்புக்களைச் செய்துள்ளார். இவர் **வீரசோழியம்** எனும் இலக்கண நூலைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இனி, சிங்களத்திலிருந்து தமிழிற்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களை ஆராய்வோம்.

| **சிங்களத்தில் கவிதை** | **தமிழில்** |
|---|---|
| செலலிஹினி சந்தேச<br>(இராகுல தேரர்) | பூவைவிடு தூது<br>(நவாலியூர் சோ. நடராசன்) |
| அத்வெலக் தனமு அப்பி<br>ரோஹண லக்ஷமன் பியதாச | இணைப்போம் கரங்கள்<br>மடுளுகிரியே விஜேரத்ன<br>த. கனகரத்தினம், எஸ். சத்தியமூர்த்தி |

**சிறுகதை**

| | |
|---|---|
| 1. குமாரதுங்க முனிதாஸாவின் "மங்குல் கேம" | கல்யாணச் சாப்பாடு<br>சரோஜினி அருணாசலம் |
| 2. 'ஹத்பண' | செத்துப் பிழைத்த சின்னச்சாமி<br>சரோஜினி அருணாசலம் |
| 3. 'ஹீன் சரய' | மெலியார் மிடுக்கு<br>சரோஜினி அருணாசலம் |
| 4. 12 சிங்களச் சிறுகதை ஆசிரியர்களின் 12 சிறுகதைகள் | சேது பந்தனம்*<br>த. கனகரத்தினம் |
| 5. லீல் குணசேகராவின் 'பெத்சம' | ஜுனைதா ஷெரீப் |
| 6. 'வலை' | மடுளுகிரியே விஜேரத்ன |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்

| | |
|---|---|
| 1. கே. ஜயதிலகாவின் | மூன்று பாத்திரங்கள் |
| 'சரித துனக்' | தம்பிஐயா தேவதாஸ் |
| 2. ரி. பி. இலங்கரத்னாவின் | இணைபிரியாத் தோழர் |
| 'அம்ப யாளுவோ' | சரோஜினி அருணாசலம் |
| 3. கருணாசேன ஜயலத்தின் | நெஞ்சில் ஓர் இரகசியம் |
| 'கொளு ஹதவத' | இறைவன் வகுத்த வழி |
| | தம்பிஐயா தேவதாஸ் |
| 4. மார்டின் விக்கிரசிங்ஹவின் | கிராமப்பிறழ்வு |
| 'கம்பெரலிய' | கலாநிதி ம. மு. உவைஸ் |
| 5. குணதாச அமரசேகரவின் | தந்தகோபுரத்திலிருந்து |
| 'எக்டெமின் பொலவட்ட' | மண்ணுக்கு..... |
| 6. அனுலா விஜயரத்தினமனிக்கேயின் | வரண்ட பசி |
| நாவல் 'வடபாகின்ன' | சரோஜினி அருணாசலம் |
| 7. மார்டின் விக்கிரமசிங்ஹவின் | சுந்தரம் சௌமியன் |
| 'மடொல் தூவ', 'விராகய' | |
| 8. கல்வி வெளியீட்டுத் திணைக்களத் | மொழிபெயர்ப்பு |
| தமிழ்ப் பாடநூல்களில் 'வஹலு', | த. கனகரத்தினம் |
| ஜாதகக் கதைகள் | |
| மகதனமுத்தாவின் கதைகள் | |
| 9. இலங்கை நாட்டார் | த. கனகரத்தினம் |
| கதைகள் | எஸ். சிவகுருநாதன் |

சிறுவர் இலக்கியம்

| | |
|---|---|
| 10. வலஸ் புஞ்சா | கரடிக்குட்டி |
| | இ. முருகையன் |
| 11. சந்திரா பர்ணாந்துவின் | |
| சுத்தம் சுகம் தரும் | த. கனகரத்தினம் |
| 12. சிறில் வெதக்ஹேயின் | |
| 'சிறுவர் நாம் தங்கம்தான்' | மடுளுகிரியே விஜேரத்ன |
| குண்டோதரப் பணியாரம் | |
| 13. சிங்கள-தமிழ் அகராதி | தமிழ்-சிங்கள அகராதி |
| | கே. என். டீ. பீரிஸ் |

பொது

| | |
|---|---|
| 14. லாம்சன் வீரசேகரவின் | 'காப்புறுதி' |
| 'றக்ஷணய' | த. கனகரத்தினம் |

நாடகம்

| | |
|---|---|
| 15. எஸ். கருணாரத்னவின் | ஆற்றுக்கு மேலாகக் கொக்குப் |
| 'கங்கட்ட உடின் கொக்கு கியா' | பறந்தது. |
| | மடுளுகிரியே விஜேரத்ன |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மல்லிகை, வீரகேசரி, தினகரன்** ஆகிய பத்திரிகைகள் சில சிங்களக் கதைகள், கவிதைகள் என்பனவற்றைத் தமிழில் வெளியிட்டுள்ளன. கே. ஜீ. அமரதாச எச். எம். எச். ஷம்ஸ், எஸ். எம். ஜே. பைஸ்தீன், சுந்தரம் சௌமியன், நீள்கரைநம்பி, மடுளுகிரியே விஜேரத்ன , சீதா ரஞ்சனி, இப்னு அஸூமத், நிலார் காசிம், ராகுலன் என்பவர்களின் மொழிபெயர்ப்புக்கள் குறிப்பிடத்தக்கன.

**விவரணய, ராவய, எத்த, திவயின** என்ற சிங்களப் பத்திரிகைகள் தமிழ்க்கதைகள், கவிதைகளின் மொழிபெயர்ப்பைத் தமிழ் மொழி அறியாதவர்களுக்கு அறிமுகஞ்செய்துள்ளன.

இலக்கியப் பரிவர்த்தனையைப் பற்றிச் சிந்திக்கையில் தமிழ் சிங்கள இலக்கியச் செல்வாக்கையும் நாம் கருத்தில் கொள்ளல் பொருத்தமானது. தம்பதெனியாக் காலத்தில் (13 ஆம் நூற்றாண்டு) செய்யப்பட்ட **சிதத் சங்கராவ** என்ற இலக்கண நூல் வீரசோழியத்தின் மொழிபெயர்ப்பை உடையதெனக் கருதப்படுகிறது. கோட்டைக் காலத்தில் ஷேலசிங்க என்ற சிங்கள வைத்தியர் தமிழில் வழங்கிய வைத்திய சிந்தாமணி "**பைஸஜ்ய ஸங்கிரஹம்**" என்ற நூலைச் சிங்கள மொழியிற் பெயர்த்தார். இவற்றைவிட அழகியவண்ண முகவெட்டியின் சுபாஷித என்ற நீதி நூலில் மூதுரை, நல்வழி, நீதிவெண்பா, என்பவற்றின் செல்வாக்கும் றணஸ்கல்ல பிக்குவின் (சுவாமியின்) "உலோகோபகாரய" என்ற நீதி நூலில் திருக்குறளின் செல்வாக்கும் மலிந்து விளங்குகின்றன.

சிலப்பதிகாரக் கதையின் செல்வாக்குச் சிங்களத்திலுள்ள **பத்தினி ஹெல்ல, பாலங்க ஹெல்ல** என்ற நூல்களில் மிளிர்கின்றது. மேலும், சிங்கள மக்களிடையே கண்ணகி வழிபாடு, பத்தினி தெய்யோ வழிபாடாக நடைபெறுகிறது. இவ்வாறு இலக்கியப் பரிவர்த்தனை இலக்கிய உறவோடு நில்லாமல் கலாசார உறவையும் வளர்த்திருக்கிறது என்பதற்குச் சான்றுகள் பலவுள.

ஒருநாட்டில் வாழும் இரு இன மக்களிடையே உறவும் ஒற்றுமையும் நிலைத்துநிற்க இலக்கியப் பரிவர்த்தனை நல்லெண்ணத்தோடு - பரந்த அடிப்படையில் வளர வேண்டுமென்பது எமது கருத்து. நல்ல இலக்கியங்களே பரிவர்த்தனை செய்யப்படல் வேண்டும். பரிவர்த்தனைப் பண்டம் தரம் குறைந்ததாகவோ, ஒரு இனத்தை அவதூறு செய்வதாகவோ அமைந்தால் அதனால் அனர்த்தனங்கள் பல விளையலாம் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. இலக்கியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவர்த்தனையில் இடம்பெறும் மொழிபெயர்ப்பாளரின் பணி மகத்தானது. கடினமான இலக்கிய வேலைகூட. இங்கு மொழிபெயர்ப்பைப் பற்றி அறிஞர்கள் கூறிய கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கது.

நாட்டிலுள்ள மக்களும் பல்வேறு சங்கங்களும் விழிப்பாயிருந்து தொண்டாற்றினால் தரமான இலக்கியங்கள் பரிவர்த்தனை செய்யப்படலாம். இத்தகைய மகத்தான பணிக்குக் கலாசார அமைச்சு போன்ற அரச நிறுவனங்கள் ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து ஆவனசெய்யுமென எதிர்பார்ப்போமாக.

மொழிபெயர்ப்புமூலம் எழுத்தாளர்களையும் வாசகர்களையும் ஊக்குவித்து, நூல்களை வெளியிட்டு இலக்கிய உறவை வளர்ப்பதில் **மக்கள் எழுத்தாளர் முன்னணி (ජනතා ලේඛක පෙරමුණ) கொழும்புத் தமிழ்ச்சங்கம்** என்பன நல்லபணியாற்றி வருகின்றன; பணி பாராட்டுக்குரியதாகும்.

---

* சேதுபந்தனம் என்ற சிங்களச் சிறுகதைத் தொகுதியில்,

1. மார்டின் விக்ரமசிங்ஹ
2. குணதாச அமரசேகர
3. ஒஸ்டின் த சில்வா
4. மடவளை ரத்னாயக்கா
5. கே. ஜயத்திலக
6. ஈ. ஆர். சரத்சந்திரா
7. குணசேனவிதான
8. ஏ. வி. சுரவீர
9. வில் குணசேகர
10. ஜயலத் மனோரத்ன
11. லக்ஷ்மி போம்புவல
12. டீ. டீ. நாணயக்கார

ஆகியோர்களின் கதைகள் மொழிபெயர்ப்புப் பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


## தமிழ்

நல்வழி

மூதுரை

நீதிவெண்பா

திருக்குறள்

நாலடியார்

அறநெறிச்சாரம்

சிலப்பதிகாரம்

சீவக சிந்தாமணி

மணிமேகலை

நன்னூல்

தொல்காப்பியம்

வீரசோழியம்

இராமாயணம்

கம்பராமாயணக்காட்சிகள் – பண்டிதமணி

இலக்கியவழி

மகாபாரதம்

பூவைவிடு தூது – சோ. நடராசன்

கல்வி நூற்றாண்டு மலர்

ஈழத்துக் கவிதைக்களஞ்சியம்

பாரதி பாடல்

தம்மபதம்

A Short History of Sinhalese Literature - Newton Pinto

Literature of Sri Lanka C. E. Godakumbura

## சிங்களம்

සුභාෂිතය

ලෝකෝපකාරය

සිංහලයේ ද්‍රවිඩ බලපෑම

බුදුගුණාලංකාරය

පාලඟ හැල්ල–සහ

පත්තිනි හැල්ල

මණිමේකලා චම්පු

සිදත් සඟරාව

ගුත්තිල කාව්‍යය

කාව්‍යශේඛරය

කුස ජාතකය

සැළලිහිණි සන්දේශය

පරවි සන්දේශය

ගිරා සන්දේශය

තිසර සන්දේශය

හංස සන්දේශය

කෝකිල සන්දේශය

මහාවංසය

දීපවංසය

රාජාවලිය

පූජාවලිය




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
3-7-1998
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

495441

UNIVERSITY OF PER
3-7-1998
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වි. කනකරත්නම් මහතා යාපනයේ කිරිමලයට යාබද, මයිලංකුඩල් නම් ගමේ උපන්නේය. දෙමළ, සිංහල, ඉංග්‍රීසි, හින්දි සංස්කෘත පාලි සහ මල්යාලම් භාෂා උගතකු වන මොහු දෙමළ ලේඛකයන්ගේ කෘතීන් සිංහල බසට ද සිංහල ලෙඛකයන්ගේ කෘතීන් දෙමළ බසට ද නැගීමෙන් සිංහල සහ දෙමළ භාෂා පුනරුදයට ඉමහත් සේවයක් කරයි.



සිංහල දෙමළ නිර්මාණ සාහිත්‍ය කෘතීන් මගින් ජාතික සමගිය ගොඩ නැංවීමට, උත්සාහ දරන වි. කනකරත්නම් මහතා ලක් මවට ආඩම්බර විය හැකි පුතෙකි.

මෙය මෙම කතුවරයා විසින් කරන ලද ගුවන් විදුලි කතා 31ක් ග්‍රන්ථයක් ලෙස ඉදිරිපත් කිරීමයි.

ගුණසේන විතාන
Chairman, National Book Development Council of Sri Lanka.

புலவர் த. கனகரத்தினம் அவர்கள் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் மட்டுமன்றி மனித உறவுகள் மேலோங்க வேண்டுமென்பதிலும் முனைப்பான ஆர்வங் கொண்டவர். அவர் தமிழ், சிங்களம், சமஸ்கிருதம், பாளி, ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். தமிழ்க்கதைகளைச் சிங்களத்திலும் சிங்களக் கதைகளைத் தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார். உலகம் ஒரு கிராமமாகி வருவதாகக் கூறப்படும் இக்காலத்தில் சிங்கள தமிழ்ச் சகோதரர்கள் ஒருவரையொருவர் தக்கமுறையில் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில், இரு பண்பாடுகளுக்கிடையில் ஒரு பாலமாக உதவவல்ல புலவர் த. கனகரத்தினம் தமிழ் சிங்கள இலக்கிய உறவு குறித்து எழுதமுற்பட்டமை உவகையளிப்பதாகும்.

கலாகீர்த்தி, பேராசிரியர் சி. தில்லைநாதன்.
தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Mr. T. Kanagarathnam is an author of several books in Tamil. He has specilised in the teaching of Tamil to Sinhala students and also has a deep interest in both Tamil and Sinhala literature.

As a result of study and research on this subject he has written a monograph on Tamil Sinhala literary relationship and interaction.
(தமிழ் சிங்கள இலக்கிய உறவு)

**K. Shanmugalingam**
Director
Dept. of Hindu Religious & Cultural Affairs

495441

**ISBN - 955-96153-1-9**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org